# கல்வி வரலாறு

(முதல் பகுதி)

## இந்தியக் கல்வி வரலாறு

HISTORY OF EDUCATION - PART-I

(INDIAN EDUCATION)

எஸ். சந்தானம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—703

# கல்வி வரலாறு

(முதல் பகுதி)

## இந்தியக் கல்வி வரலாறு

ஆசிரியர்
எஸ். சந்தானம், எம்.ஏ., பி.டி.,
முதல்வர்,
அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
புதுக்கோட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1976

T.N.T.B.S. (C.P.) No. 703

© Government of Tamilnadu

**HISTORY OF EDUCATION (Part I) — INDIAN EDUCATION**

S. SANTHANAM

**Price Rs. 4-95**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

*Printed by:*
Parker Press,
1, Bunder Street,
-600 001

# பதிப்புரை

கல்வி வரலாறு (முதல் பகுதி) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 703ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 738 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின் கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

# பொருளடக்கம்

பக்கம்

1. அறிமுகம் ... 1

கல்விச் செயல்முறை—பள்ளிகளது பணிகள்—ஆசிரியக் கல்வியில் செயல்களும் கோட்பாடுகளும்—கல்வி வரலாற்றறிவின் பயன்கள்—ஆதிகாலக் கல்விமுறை.

2. வேதகாலக் கல்வியும் பண்டைய தமிழகக் கல்வியும் ... 9

வேதகாலச் சமுதாயம்—பிராம்மணக் கல்விமுறையின் தொடக்கமும் வளர்ச்சியும்—குருகுலக் கல்வி முறையின் பொது இயல்புகள்—நல்லியல்புகள்—குறைபாடுகள்—பொது மதிப்பீடு—பண்டைய தமிழரது கல்விமுறை—சமுதாயமும் இலக்கியங்களும்—கல்வியின் நோக்கங்களும் கல்வி ஏற்பாடும்—கற்பித்தல் முறைகளும் கல்விக்கூடங்களும்—பொதுப் பண்புகள்—பண்டைய தமிழகக் கல்வியும் பிராம்மணக் கல்விமுறையும்.

3. பௌத்தக் கல்விமுறையும் இஸ்லாமியக் கல்விமுறையும் ... 26

பௌத்த சமயத்தின் கோட்பாடுகள்—பௌத்தக் கல்வியும் பிராம்மணக் கல்வியும்—பௌத்தக் கல்வியின் பொது இயல்புகள்—பௌத்தக் கல்வியின் வளர்ச்சி—மதிப்பீடு—இஸ்லாமியக் கல்விமுறையின் வளர்ச்சி—மக்தாபுகளும் மதரசாக்களும்—இஸ்லாமியக் கல்விமுறையின் வளர்ச்சி—மதிப்பீடு.

4. நாட்டுக் கல்வி ... 37

நாட்டுக் கல்வியின் அமைப்பு—மன்ரோ ஆய்வு—எல்பின்ஸ்டன் ஆய்வு—ஆதமின் ஆய்வு—நாட்டுக் கல்வியின் பொதுப் பண்புகள்—நாட்டுக் கல்வியின் மறைவுக்கான காரணங்கள்.

பக்கம்

5. ஐரோப்பியர்களது தொடக்ககாலக் கல்விப் பணிகளும் கிழக்கிந்தியக் கம்பெனியின் முயற்சியும் ... 45

*கிறித்துவ சமயப் பரப்பாளர்களது முயற்சிகள்—கிழக்கிந்தியக் கம்பெனியின் முயற்சி—கீழ்த்திசை—ஆங்கிலக் கல்விமுறைகள் பற்றிய கருத்துவேறுபாடு—மெக்காலேயின் கல்விக் குறிப்பு—பெண்டிங்கு பிரபுவின் தீர்மானங்கள்—ஆக்லெண்ட் பிரபுவின் கல்விக் கொள்கை—1833 முதல் 1853 வரையிலான கல்வி வளர்ச்சி.*

6. உட் கல்வி அறிக்கை (1854) ... 59

*முன்னுரை—பரிந்துரைகள் — மதிப்பீடு—உட் அறிக்கையின் விளைவுகள்—ஸ்டான்லி பிரபுவின் அறிக்கை.*

7. இந்தியக் கல்விக்குழுவின் பரிந்துரைகள் (1882) ... 65

*முன்னுரை—ஹண்டர் கல்விக்குழுவின் பரிந்துரைகள்—விளைவுகள்.*

8. கர்சன் பிரபு ... 72

*முன்னுரை—இந்தியப் பல்கலைக்கழகக் குழு (1902)—இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் (1904)—கர்சன் பிரபுவின் கல்விக் கொள்கை—மதிப்பீடு.*

9. சுதேசி இயக்கமும் கல்வியும் ... 78

*சுதேசி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்—கோகலேயின் கல்விப் பணிகள்—கல்விக் கொள்கை பற்றிய அரசின் அறிக்கை.*

10. கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழு (1917-18) ... 82

*முன்னுரை—ஸேட்லர் குழுவின் பரிந்துரைகள்—மதிப்பீடு.*

பக்கம்

11. ஹார்டாக் அறிக்கையும் (1929) உட்-ஆபட் அறிக்கையும் (1936-37) ... 86

அரசியல் சீர்திருத்தங்கள்—இரட்டையாட்சி முறை—இரட்டையாட்சியில் கல்வி வளர்ச்சி—ஹார்டாக் கல்விக்குழு—பரிந்துரைகள்—மதிப்பீடு—சாப்ரு குழு அறிக்கை—மையக்கல்வி அறிவுரை வாரியம்—உட்-ஆபட் அறிக்கை.

12. சில இந்தியப் பெரியோர்களது கல்விக் கருத்துகள் ... 99

முன்னுரை—சுவாமி தயானந்தர்—சுவாமி விவேகானந்தர்—மகான் அரவிந்தர்—கவி இரவீந்திரநாத தாகூர்—மகாத்மா காந்தி—சில பொதுக் கருத்துகள்.

13. மாகாண சுயாட்சிக் காலத்தில் இந்தியக் கல்வி ... 118

மாகாண சுயாட்சி அமைப்பு—கல்வி வளர்ச்சி—நரேந்திரதேவர் கல்விக்குழுவின் கருத்துகள் (1939) — சார்ஜென்ட் திட்டம் — சார்ஜென்ட் திட்டம் பற்றிய மதிப்பீடு.

14. பல்கலைக்கழகக் கல்வி ஆய்வுக்குழு (1949) ... 128

ஆய்வுக்குழு அமைப்பு—ஆய்வுக்கு விடப்பட்ட பிரச்சினைகள்—பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கங்கள்—முக்கியப் பரிந்துரைகள்—மதிப்பீடு—பல்கலைக்கழக மானியக்குழு.

15. உயர்நிலைப்பள்ளிக் (செகண்டரி) கல்விக் குழுவின் அறிக்கை (1953) ... 140

கல்விக்குழு அமைப்பு—ஆய்வுக்கு விடப்பட்ட பிரச்சினைகள்—உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் குறைபாடுகள்—கல்வி அமைப்பு—கல்வி ஏற்பாடு பற்றிய பரிந்துரைகள்—பாடநூல்கள்—கற்பித்தல் முறைகள்—தேர்வுமுறை—உடற்கல்வி—ஒழுக்கக் கல்வி—வழிகாட்டுதலும் அறிவுரை பகர்

பக்கம்

தலும்—ஆசிரியர்கள்—பிற பரிந்துரைகள்—மதிப்பீடு.

16. கொத்தாரிக் கல்விக்குழுவின் பரிந்துரைகள் (1964-'66) 155

கொத்தாரிக் கல்விக்குழுவின் அமைப்பு—கல்விக்கான தேசியக் குறிக்கோள்களும் நோக்கங்களும்—கல்வியமைப்பு—பல்வேறு கல்வி நிலைகளின் நோக்கங்களும் தன்மைகளும்—வேலை அனுபவங்கள்—மாணுக்கர்களைச் சேர்ப்பதற்கான கோட்பாடுகள்—கொத்தாரிக் கல்விக்குழுவின் முக்கியப் பரிந்துரைகள்—கல்விக்கான சமவாய்ப்புகள்—தொடக்கக் கல்வியின் பிரச்சினைகள்—பல்நோக்குப் பள்ளிகள்பற்றிய கருத்து—மொழிப் பிரச்சினை—ஆசிரியக் கல்வியும் ஆசிரியர்களது நிலையும்—கற்பித்தல்முறைகள்—மதிப்பீடும் தேர்வுகளும்—வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும்—அறிவியற் கல்வி—பெண்கல்வி—தொழில்நுட்பக் கல்வியும் தொழிற்கல்வியும்—உயர்கல்வி—முதியோர்கல்வி—மதிப்பீடு.

17. ஐந்தாண்டுத் திட்டங்களும் கல்வி வளர்ச்சியும் ... 191

திட்டமிடுதலின் தேவை—முதல், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கல்வி இலக்குகள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் கல்வி வளர்ச்சியும்—ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கல்வி முன்னேற்றம்—எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகள்—கல்வி வளர்ச்சிக்குதவும் அமைப்புகள்—ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கல்வி இலக்குகள்—கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிக் கல்விக்கான தேசிய ஆராய்ச்சிக்குழுவின் கருத்துகள்—தமிழ்நாட்டின் கல்வித் திட்டம்—முடிவுரை.

பின்னிணைப்பு—மேற்கோள் நூல்கள் ... 209

முதல் பகுதி

# இந்தியக் கல்வி வரலாறு

# 1. அறிமுகம்

## கல்விச் செயல்முறை

கல்வி (education) பெறுவது ஒரு நாட்டின் மக்கள் எல்லோருடைய அடிப்படை உரிமைகளுள் ஒன்ருகும். தனிப்பட்ட மக்களுக்கு நன்மை பயப்பதுடன் சமூக முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாதது. 'கல்வி' (education) என்னும் சொல்லுடன் 'கற்றல்' (learning) என்னும் கருத்து இணைந்து காணப்படுகிறது. பிறப்புதொட்டே ஒருவனிடம் இயற்கையாக அமைந்து காணப்படாத பண்புகள் பிறந்த பின் ஒருவனுக்கு ஏற்படும் அனுபவங்கள், இவற்றின் விளைவுகள் ஆகியன கற்றல் என்னும் கருத்துக்குள் அடங்குவனவாம். எனவே, கற்றலும் கல்வியும் பள்ளி வாழ்க்கையுடன் முடிந்துவிடுவனவல்ல; பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ந்து நிகழும் செயல் முறைகளாகும். கல்வியின் இறுதிப் பயனுக வளர்ச்சி (development) தோன்றுகிறது; இவ் வளர்ச்சி உடல், உள்ளம், ஆன்மா ஆகிய ஆளுமையின் எல்லாக் கூறுகளையும் பாதிப்பதாகும். கல்வியானது குழந்தைகளது நற்பண்புகளையும் நல்லாற்றல்களையும் இசைந்த முறையில் முழுமையாக வளர்த்து அதன் ஆளுமையின் சிறப்பு மிக்க மலர்ச்சிக்கு உதவுகிறது. கல்வி இன்று சமுதாயத்தின் கூட்டு முயற்சியின் ஒரு விளைவாகத் திகழ்கிறது. சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் கல்வி முக்கிய கருவியாக அமைவதோடு சமுதாயத்தின் தேவைகள், அமைப்பு, அதன் அப்போதைய நிலைமை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகவும் அது அமைகிறது. ஒரு சமுதாயத்தில் பரவியுள்ள மதிப்புகள், குறிக்கோள்கள், வாழ்க்கை நோக்கங்கள் போன்றவற்றையும், பண்பாட்டின் பல்வேறு பகுதிகளையும் அதன் இன்றைய இளம் தலைமுறையினர்க்கு அறிமுகப்படுத்த அச் சமுதாயம் மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளின் தொகுப்பாகக் கல்வி இன்றைய உலகில் காணப்படுகிறது. சமூகத்தின் ஒவ்வொரு மனிதனும் முழு வளர்ச்சிபெற்றுச் சிறந்த உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாட்டுடன் வாழ்க்கை நடத்த அவனுக்கு அளிக்கப்படும் முறைப்பட்ட உதவி கல்வியாகும் எனலாம்.

சமூகத்தில் குழந்தையைப் பாதிக்கும் கல்விச் செல்வாக்குகள் முறைப்படி இந் நோக்கத்திற்காக அமைக்கப்படாதனவாகவோ (informal) அல்லது கல்வி நோக்கங்களை எய்துவதற்கென்று முறைப் படி திட்டமிட்டு அமைக்கப்பட்டனவாகவோ (formal) இருத்தல் கூடும். சமூக நிலையங்கள் ஒவ்வொன்றுமே ஓரளவு கல்விச் செல் வாக்குள்ளவையாகும். குடும்பம், விளையாட்டுக் குழுக்கள், சுற்றுப் புறச் சமுதாயம், தொழிற்கூடங்கள், சமய நிலையங்கள், அரசு போன்றவை கல்வியளித்தலைத் தமது தலையாய நோக்கமாகக் கொண்டிராவிடினும் இவையும் வளரும் குழந்தைகளது வாழ்க்கை யில் பங்கு கொண்டு அவர்களது கல்வியில் செல்வாக்குப் பெறு கின்றன. ஆனல், பள்ளிகள் கல்விக்கென்றே முறைப்படி நிறுவப் பட்ட அமைப்புகளாகும். பள்ளி என்பதற்கான ஆங்கிலச்சொல் 'School' என்பது. கிரேக்க மொழியினின்றும் ஆங்கில மொழியில் இடம் பெற்ற இச் சொல்லின் பொருள் 'ஓய்வு' (leisure) என்ப தாகும். பள்ளிகள் இவற்றின் தொடக்க காலத்தில் மிகுந்த ஓய்வு நேரத்தைப் பெற்றிருந்த உயர் குடும்பக் குழந்தைகளுக்காகவே மேல் நாடுகளில் செயற்பட்டன. இப் பள்ளிகளில் கல்வியின் பண் பாட்டுப் பயன்மட்டும் வலியுறுத்தப்பட்டது. ஆனல், இன்றே பள்ளிக் கல்வி எல்லோர்க்கும் இன்றியமையாதது மட்டுமன்று ; கல்விபெறுவது எல்லோருடைய மறுக்கவொண்ணு உரிமை என்பது உணரப்பட்டுள்ளது.

## பள்ளிகளது பணிகள்

மாணுக்கர்களுக்குப் பள்ளிகள் ஆற்றும் பணிகள் (functions) பலவாம்: மாணுக்கரது உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறப்பான வளர்ச்சிக்குத் துணை செய்து அவர்களது ஆளுமையின் (personality) மலர்ச்சிக்குப் பள்ளிகள் உதவுகின்றன. மாணுக்கர் களது தனித்திறன்களும் ஆற்றல்களும் வளர உதவுகின்றன. எதிர் கால வாழ்க்கைக்கான ஆயத்தப் பயிற்சியளித்தல், குடியாட்சிப் பண்புள்ள குடிமக்களாக வளரத் துணை செய்தல், பரந்த சமயப் பற்று, நல்லொழுக்கப் பண்புகள், தலைமை தாங்கும் திறன், கட்டுப்பாடுகளுக்குட்பட்டுச் செயற்படும் பழக்கம் போன்றவற்றை வளர்த்தல் ஆகியவற்றிலும் பள்ளிகள் மாணுக்கருக்குத் துணைசெய் கின்றன. இன்றியமையாத புதிய சமுதாய மாற்றங்களை (social changes) வரவேற்கும் மனப்பான்மையை மாணுக்கரிடம் தோற்று வித்தல், நாட்டுப்பற்றினை உருவாக்குதல், இதனுடன் உலகப் பொதுநோக்கினை வளர்த்தல் போன்றனவும் பள்ளிகளின் பொறு களாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வியின் வெற்றிக்குப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெரும் பொறுப்புடையவர்கள் என்பது தெளிவு. கல்வித் திட்டம் எத்துணை சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருப்பினும், கட்டடங்கள், துணைக் கருவிகள் போன்றன சிறந்து காணப்பட்டாலும், அன்பும் பண்பும் ஆர்வமும் மிக்க ஆசிரியர்கள் இல்லையெனின் கல்வியினின்றும் நாம் எதிர்பார்க்கும் பயனைப் பெறவியலாது. ஆசிரியத் தொழில் ஓர் உயர் தொழிலாகும் (profession). குழந்தை மையக்கல்வி அமைப்பிலும் ஆசிரியர்களது பணிகள் இன்றியமையாதவையாம். நல்லாசிரியர்கள் பிறப்பிலேயே தோன்றுகின்றனரா அல்லது பயிற்சியின் வழியே தோற்றுவிக்கப்படுகின்றனரா என்னும் சர்ச்சை இன்று பொருளற்றதாகும். சிக்கல் மிகுந்த இன்றைய கல்விச் செயல்முறையில் பயிற்சியின்றி, இயற்கைப் பண்புகளின் துணை கொண்டு மட்டும் எவராலும் வெற்றி பெறுதல் கடினம். பிற உயர் தொழில்களுக்கு எவ்வாறு பயிற்சி இன்றியமையாததோ அவ்வாறே ஆசிரியப் பணிக்கும் பயிற்சி தேவை. தொழிலில் நுழைவதற்குமுன் பயிற்சி (Pre service Training) மட்டுமன்றித் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கையிலும் பணியிடைப் பயிற்சி (In-service Training) ஆசிரியர்களுக்குத் தேவைப்படுவதாகும். மற்றும் பிறப்பிலேயே சிறப்பான ஆசிரியப் பண்புகளைக் கொண்டிருப்போர் ஒருசிலர் இருப்பினும், இவரும் பயிற்சியினால் மேலும் சிறப்பர் என்பதனை மறுக்க முடியாது.

## ஆசிரியக் கல்வியில் செயல்களும் கோட்பாடுகளும்

ஆசிரியப் பயிற்சியில் செயல்களும் (practice) இவற்றுடன் தொடர்புள்ள கோட்பாடுகளும் (principles) அடங்கியுள்ளன. கல்விக் கோட்பாடுகள்பற்றிய அறிவு நடைமுறைப் பயனற்றதென்றும், இவ்வறிவு ஆசிரியருக்குத் தேவையற்றதென்றும் கருதுவோர் சிலர் உள்ளனர். இது தவறான கருத்தாகும். ஆசிரியப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சிக்குதவும் செயல்களைப் போன்று கல்விக் கோட்பாடுகள்பற்றிய அறிவினைப் பெறுதலும் இன்றியமையாததாகும். இவ்வறிவு கல்விச் செயல்களினின்றும் விளையும் பயன்களை மேலும் சிறப்பாக்க உதவுகிறது. கற்பித்தலில் தன்னம்பிக்கையுடன் செயற்பட ஆசிரியருக்குத் துணையாக நிற்கிறது. கல்விக் கோட்பாடுகள் பயனற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத தத்துவக் கருத்துகளாகும் என்று நினைப்பது தவறு. எவ்வகைச் செயலில் நாம் ஈடுபட்டாலும் அச் செயல்பற்றிச் சிறிது ஆராய்ந்தால் அதற்கடிப்படையாகச் சில கருத்துகள் இருத்தலை நாம் உணருவோம். செயல்களின் இத்தகைய 'அறிவு அடிப்படைகள்' அவற்றிற்கான கோட்பாடுகளாகும். செயல்களையும் கோட்பாடுகளையும் தனித்தவையாகக் கருதுவதைவிடத் தொடர்புள்ள, ஒன்றையொன்று சார்ந்து காணப்படும்

இணைந்த கூறுகளாக இவற்றைக் கருதுதல் பொருந்தும். கல்வியைப் பொறுத்தவரை இதனை மிகத் தெளிவாக நாம் காணலாம். கல்விக் கோட்பாட்டின் குறைகளை உணர்ந்து இவற்றை நீக்கச் செயல் உதவுகிறது. செயலின் விளைவாக அதன் அடிப்படைக் கோட்பாடு மேலும் வலுப்பெறுகிறது. கோட்பாடு புதிய செயல்முறைகள் உருவாகவும் உதவுகிறது. எனவே, புதிய கல்விச் செயல்முறை களை உருவாக்குதல் பழக்கத்திலுள்ளவற்றை ஆராய்தல் ஆகிய இரண்டுமே கல்விக் கோட்பாட்டின் பணிகளாக அமைகின்றன. கல்வியைப் பொறுத்தமட்டில் கல்விக் கோட்பாடு (Educational Theory) கல்விச்செயல்களைவிடப் பொதுவாகச் சிறிது முன்னே நிற்ப தாகத் தோன்றுகிறது. இதன் விளைவாக, கல்விச் செயலின் குறிக் கோள் நிலையில் கோட்பாடு அமைந்து கல்விச் செயல் மேலும் பயனுறும் வகையில் வளர்ச்சி பெற வழி காட்டுகிறது. ஆதலின் கல்வித் தத்துவங்கள், கோட்பாடுகள் ஆகியனபற்றி அறிதல் ஆசிரியர்களுக்கு இன்றியமையாததென்பதில் ஐயமில்லை.

கல்விக் கருத்துகள், கோட்பாடுகள் ஆகியன பற்றிய அறிவினைப் பெறுவதனின்றும் ஆசிரியர்கள் பல பயன்களை அடைகின்றனர். கற்பித்தலை ஏதோ தட்டுத்தடுமாறி நிகழும் (trial and error) செயல் என்ற நிலையினின்றும் ஒரு நோக்குடைச் செயல் (purposeful) என்ற நிலைக்கு இவ்வறிவு உயர்த்துகிறது. ஆசிரியத் தொழில் ஓர் உயர் தொழில் (profession) என்பதன் பொருள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தங்களது செயலின் ஆதாரக் கோட்பாடுகளை உணர்ந்து செயலாற்றுகின்றனர் என்பதாகும். கோட்பாட்டறிவின்றி மேற்கொள்ளப்படும் செயல் ஊதியத்திற் கான, திறன் தேவைப்படாத வேலை (unskilled labour) யெனக் கருதப்படுமேயன்றி உயர் தொழிலாகாது. கல்வித் தத்துவங்கள், கருத்துகள், கோட்பாடுகள் ஆகியவற்றின் அறிவின் துணைகொண்டு ஆசிரியர்களால் தங்கள் பணியினை மேலும் சிறப்பாகஆற்றவியலுவ துடன் கல்விச் செயல்முறையில் பயனுள்ள புதுமையான மாற்றங் களை (innovations) செய்வதற்கும், கல்விப் பிரச்சினைகள் பற்றிச் சிந்தித்துத் தாங்களே புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கும் உதவும். சிறந்த கல்வியாளர்களது கருத்துகள் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குப் பெற்றிருத்தல் போன்று, தத்துவ இயலில் காணப் படும் முறைப்பட்ட தத்துவக் கோட்பாடுகளும் (Philosophical Doctrines) கல்வியின் நோக்கங்கள், அமைப்பு, பாடத்திட்டங்கள், நிருவாக முறை, செயல்கள் ஆகியவற்றை உருவாக்குவதிலும் தேவைக்கேற்ப மாற்றியமைத்தலிலும் பெரும் பங்குகொள் கின்றன. ஒவ்வோர் ஆசிரியரும் அறிந்தோ அறியாமலோ ஏதோ ஒரு தத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுகிறார்.

ஆதலின் தத்துவக் கோட்பாடுகள் கல்வி அமைப்பினில் எத்தகைய செல்வாக்கினைப் பெற்றுள்ளன என்பதனையும் ஆசிரியர்கள் அறிதல் வேண்டும். கல்விக் கோட்பாடு இதுபற்றியும் தெளிவாக்குகிறது.

**கல்வி வரலாற்றறிவின் பயன்கள்**

கல்விக் கோட்பாட்டின் (Educational Theory) ஒரு முக்கிய பிரிவு கல்வி வரலாறு (History of Education) என்பது. கல்வி பண்டைய காலந்தொட்டே தொடர்ந்து காணப்படும் சமூகச் செயலாகும். கல்வியின் இன்றைய நிலையினை நன்கு உணர்ந்து கொள்வதற்கும் இதனை மேலும் சிறந்த முறையில் மாற்றியமைத்தலில் துணை புரிவதற்கும் கல்வி வரலாறுபற்றிய அறிவு ஆசிரியர்களுக்குத் தேவைப்படுவதாகும். வேதகாலம் தொடங்கி இவ்விருபதாம் நூற்றுண்டில் இன்றுவரை காணப்படும் இந்தியக் கல்வியின் வரலாறு பற்றி அறிவதுடன் மேலை நாடுகளில் கல்வி வளர்ச்சி பற்றிய விவரங்களையும் அந்நாடுகளது கல்வி வல்லுநர்களது கல்விக் கருத்துகளைப்பற்றியும் ஆசிரியர்கள் அறிதல் வேண்டும். இவை நம்நாட்டுக் கல்வி வளர்ச்சியையும் பாதித்துள்ளன.

'மனிதன் அறிவு வளர்ச்சி பெற்று நாகரிகமடைந்தது பற்றியும், இந் நாகரிகத்தின் சிறப்புமிக்க பல்வேறு கூறுகளைப் பேணிக் காத்து இவற்றை மேலும் வளர்க்க அவனுல் உருவாக்கப்பட்ட சமூக நிலையங்கள் பற்றியும் விவரித்துக் கூறுவது கல்வி வரலாருகும்,' என்று குட் (Good) என்பார் விளக்கியுள்ளார். நிகழ்காலம் எனப்படுவது மறைந்துபோன இறந்த காலத்தின் தொடர்ச்சியாக, அதனின்றும் எழுவதாகும். எனவே, இன்றைய கல்வி அமைப்பினை நன்கு புரிந்துகொள்ளக் கல்வி வரலாற்றறிவு உதவுவதாகும். பண்டைக் காலக் கல்வியின் நோக்கங்கள், முறைகள், அன்று ஆசிரியர்களது நிலை போன்றனபற்றி அறிந்து, இன்று காணப்படும் நிலைமையுடன் அவற்றை ஒப்பிட்டு நோக்குகையில் கல்வி வளர்ச்சியின் இயல்பும் இதில் காணப்படும் தொடர்ச்சியும் நமக்குத் தெளிவாகும். காலப்போக்கில் சமூகத்தின் அமைப்பிலும் இதோடு இணைந்த கல்வி முறையிலும் மாற்றங்கள் எழுவது இயற்கையாகும். இவற்றை ஊக்குவித்தலிலும் திசைப்படுத்தலிலும் ஆசிரியர்களுக்கு முக்கிய பொறுப்பு உள்ளது. இப் பொறுப்பினைக் கல்வி வரலாற்றறிவின்றி அவர்களால் செம்மையாக நிறைவேற்றுதல் இயலுவதன்று. கல்வி வளர்ச்சிபற்றிய பயனுள்ள ஒரு மனப்பான்மை ஆசிரியர்களிடையே எழுதற்கும் கல்வி வரலாற்றறிவு உதவுகிறது. கல்வி உலகில் ஒரு புதுக் கருத்தோ முறையோ அறிமுகப்படுத்தப்பட்டால் அது எந்த அளவுக்கு நடைமுறைப் பயனுள்ளது, அதுபோன்ற கருத்தோ முறையோ முன்பு காணப்பட்டதா, அவ்வாறு காணப்

பட்டதெனின் அன்று அதனுல் எத்தகைய கல்விப்பயன் விளைந்தது என்று ஆராயாமல் புதிய கருத்துகள் யாவுமே பயன் மிக்கவை என நினைத்துச் செயற்படும் போக்கு சில ஆசிரியரிடம் இருத்தல் கூடும். வேறு சிலர் குறுகிய பழமைப்பற்றினுல் உந்தப் பெற்றுப் பயனுள்ள கருத்துகள் யாவுமே பண்டைய நூல்களிலும் செயல் முறைகளிலும் உள்ளன என்று, முன்னேற்றத்துக்குத் தடையாக அமையும் மனப்போக்குடன் காணப்படக்கூடும். இவ்விரு மனப் போக்குகளுமே தீமை பயப்பனவாம். இத்தகைய குறுகிய மனப் பான்மைகள் கல்வி வரலாறுபற்றி ஆராய்ந்துணர்ந்த ஆசிரியர் களிடம் எழமாட்டா. கல்வி வரலாற்றுக்குப் பண்பாட்டுப் பயனும் உள்ளது. கல்வியாளர் ரூசோவின் 'எமில்' (Emile), சுவாமி விவேகானந்தரது கல்விபற்றிய உரைகள், காந்தியடிகளது கல்விக் கருத்துகளைத் தொகுத்தளிக்கும் நூல்கள் போன்ற சிறந்த கல்வி இலக்கியங்களைப் படித்தின்புறும் ஆர்வத்தினைக் கல்வி வரலாற்றறிவு ஒருசில ஆசிரியர்களது உள்ளத்திலேனும் கட்டாயம் தோற்று விக்கக்கூடும்.

## ஆதிகாலக் கல்வி முறை (Primitive Education)

மனிதன் இவ்வுலகில் தோன்றிய தொன்மைக் காலத்திலிருந்தே 'கற்பித்தல்' என்னும் செயலும் அதன் கல்வி விளைவான 'கற்றலும்' எழுந்த நிலை இருந்து வந்துள்ளது. மனித இனம் நாகரிகமற்றுப் பண்படாத நிலையில் இருந்தபோது ஆதிகாலச் சமுதாயத்தில் காணப்பட்ட கல்வி அமைப்பு மிக்க எளிமையானதாகவும் முறைமை, ஒழுங்கு, திட்டம், தெளிவான நோக்கம் ஆகியன அற்றதாகவும் காணப்பட்டது. சமுதாய உறுப்பினர்களது உடனடித் தேவைகளை—உணவு, உறைவிடம், அபாயங்களினின்றும் விடுபடுதல் போன்றன—நிறைவு செய்யும் வகையிலே அது அமைந்திருந்தது; உடனடியாக எழக்கூடிய நடைமுறைப் பயன்கள் கல்வியின் இலக்குகளாக விருந்தன. குடும்பத்திலும் நெருங்கி இணைந்தமைந்த சமுதாயத்திலும் அன்ருடம் நிகழும் செயல்களில் பங்கு கொண்டு நேர் அனுபவங்களைப் (direct experiences) பெறுதலின் மூலம் அக்காலக் குழந்தைகள் தமக்குத் தேவைப்படும் இன்றியமையாத் திறன்களையும் பழக்கங்களையும் கற்றனர். பெற்ருேர்களும் சமுதாயத்தினரும் ஆசிரியர்கள் என்ற நிலையில் காணப்பட்டனர்; சமுதாய வாழ்க்கை பள்ளி வாழ்க்கையாக விருந்தது.

தொழில் பயில்வோர் (apprentices) என்ற முறையில் முதியோர்களது வாழ்க்கைச் செயல்களில் ஈடுபட்டு, அன்றைய தொடக்ககாலச் சமுதாயத்தின் இளம் உறுப்பினர்கள் பலவற்றைக்

கற்க வேண்டியிருந்தது. அவர்கள் கற்க மேற்கொண்ட முறையினை 'முயன்று தவறிக் கற்றல்' (trial and error learning) எனல் பொருந்தும். அக்காலக் குழந்தைகளது விளையாட்டுச் செயல்களும் முதியோர்கள் ஈடுபடும் சமுதாயச் செயல்களை ஒத்திருந்தன. இவ்வாறான விளையாட்டுச் செயல்களில் ஈடுபட்ட பின்னர், இத்தகைய செயல்களில் சமுதாய முதியோர்கள் ஈடுபடுகையில் உடன் இருந்து அவர்க்கு உதவியும், அவர்களது செயல்களைப் பார்த்துக் கற்றும் (imitation) அவற்றில் தேர்ச்சி பெற்றனர்.

ஆசிரியர்கள் எனப்படும் தனிப்பிரிவினர் பண்டைய சமூகங்களின் தொடக்க நிலையில் காணப்படவில்லை. பெற்றோர்களும் சமுதாயத்தினரும் இணைந்து செய்த கல்விப் பணி சிறிது காலம் சென்றபின் சமயக் குருமார்களது (priests) பொறுப்பாகியது. இதன் பின்னரே பள்ளிகள் நிறுவப்பட்டன; ஆசிரியர்களும் காணப்பட்டனர். பண்டைய கல்வியில் குழந்தைகள் நடைமுறைச் செயல்களுக்கான நேர்ப்பயிற்சியினைப் பெற்றதுடன் புலன்களால் உணர முடியாத மந்திர சக்திகளெனப்படும் சக்திகளை (supernatural forces) எவ்வாறு சமாளிப்பது என்பதுபற்றிய அறிவும் பெற்றனர். இளைஞர்கள் பால் முதிர்ச்சி பெறும் காலத்தில் அவர்களுக்கென நடத்தப்படும் தொடக்க அறிமுகச் சடங்கின் (initiation ceremony) போது மாந்திரீகம் (magic) போன்ற இத்தகைய இரகசிய அறிவு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இத்தகைய தொடக்க அறிமுகச் சடங்குகளும் கல்வி முறையும் இன்றும் உலகில் சில பழங்குடியினரிடையே காணப்படுகின்றன. இத்தகைய சடங்குகள் கல்விப் பயன், சமயப் பயன், சமூகப் பயன் ஆகியன யாவும் பெற்றனவாக இவர்கள் கருதுகின்றனர்.

இந்தியக் கல்வியின் தொடக்கம், வளர்ச்சி ஆகியவற்றின் வரலாற்று விவரங்களை அறியப் புகுமுன் ஒரு முக்கியக் கருத்தினை நாம் மறக்கக்கூடாது. இவற்றைப்பற்றி அறிவதன் வழியே இன்று நம் நாட்டில் எழுந்துள்ள பல்வேறு சிக்கலான கல்விப் பிரச்சினைகளுக்கு எளிதாக நம்மால் விடை காண முடியும் என்று நாம் எண்ணக்கூடாது. முற்காலக் கருத்துகளையும் செயல்முறைகளையும் ஒரு சிறிதும் மாற்றாமல் இன்றைய நிலைமைகளில் நம்மால் பயன்படுத்தி நன்மை பெறவியலாது என்பதனை நாம் மறக்கக்கூடாது. ஏன், இன்று பிற நாடுகளிலிருந்து கல்விக் கருத்துகளை, நம்நாட்டுச் சூழ்நிலையில் அவற்றின் பொருத்தம்பற்றி ஆராயாமல், இறக்குமதி செய்வதனின்றும் எழுந்துள்ள குழப்பங்களைப்பற்றிப் பல கல்வியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், எக் கல்வி இலக்குகளை, எத்தகைய முறைகளின் துணைகொண்டு, நமது முன்னோர்கள்

அடைய முயன்றனர், எந்த அளவுக்கு இதில் வெற்றியடைந்தனர், அவர்களது திட்டங்களிலும் முயற்சிகளிலும் எத்தகைய குறைபாடுகள் காணப்பட்டன போன்றவைபற்றிக் கல்வி வரலாறு வழியே நாம் பெறக்கூடிய அறிவு நமது கல்வி அமைப்பினை நன்கு திட்டமிடக் கட்டாயம் உதவும்.

## வினாக்கள்

1. கல்விச் செயல்முறையின் தன்மையினை விளக்குக.
2. பள்ளிகளது பணிகளையும் பொறுப்புகளையும் விவரிக்க.
3. கல்விச் செயல்முறையினைப் பொறுத்தவரை செயல்களும் கோட்பாடுகளும் இணைந்தவையாகும் என்னும் கூற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
4. கல்வி வரலாறுபற்றிய அறிவு ஆசிரியர்களுக்கு எவ்வாறு பயனுள்ளது என்பதனை ஆராய்க.
5. ஆதிகாலக் கல்வி முறைபற்றிச் சிறு குறிப்பு வரைக.

# 2. வேதகாலக் கல்வியும் பண்டைய தமிழகக் கல்வியும்

## வேதகாலச் சமுதாயம்

இந்தியக் கல்வியின் வரலாறு வேதகாலத்தினின்றே (vedic period) தொடங்குகிறது. அன்றைய பண்டைய இந்திய நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்தவை சமய உணர்வும் ஆன்மிக (spiritual) மதிப்புகளுமாகும். வேத கால இந்தியரது வாழ்க்கை மனப்பான்மை பரந்தும் விரிந்தும் காணப்பட்டது. 'மனித இனத்தின் நலன்' என்னும் குறிக்கோளினைச் சார்ந்து அவர்களது கருத்துகளும் முயற்சிகளும் அமைந்தன. அன்றைய சமுதாயம் அன்பு, பரிவு, நல்லொழுக்கம் போன்றவற்றை வலியுறுத்தியதுடன், தனிமனிதனது நலனைச் சமுதாய நலனுடன் இணைத்து நோக்கும் பண்பும் அதில் தெளிவாகக் காணப்பட்டது. மனித வாழ்க்கைக்கு ஆதாரமாக ஓர் இலட்சியம் அல்லது குறிக்கோள் இருத்தல் ஏற்கப்பட்டது; இது வெறும் உலக சாதனைகளையும் புலனின்பங்களையும் கடந்து அமைவதாகும் எனப்பட்டது. பண்டைய இந்திய நாகரிகத்தின் பல்வேறு கூறுகளான சமயம், தத்துவம், கலைகள் போன்றவற்றை உருவாக்கியதில் வேதகால இந்திய இனத்தவர் எனப்படும் ஆரியர்களின் ஒரு பிரிவினரான பிராம்மணர்களின் பங்கு முக்கியமானதாகும். சிறப்பாக, கல்வியினைப் பொறுத்தமட்டில் பிராம்மணர்கள் நடுவிடம் வகித்தனர். ஆதலின் வேதகாலக் கல்வி, பொதுவாக பிராம்மணக் கல்வி முறை (Brahmanic Education) எனவும் குறிப்பிடப்படுகிறது. ஈண்டு ஒன்று நினைவில் கொள்வதவசியம். வேதகாலத் தொடக்கத்தில் இந்து சமுதாயத்தில் பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் என்ற திட்டவட்டமான சாதிப் பிரிவுகள் காணப்படவில்லை. சிறிது காலம் சென்ற பின்னர் சமூகப் பொறுப்புகளின் தன்மையின் அடிப்படையில் இப் பிரிவுகள் எழுந்தன. பிற்காலத்திலேதான் இப் பிரிவுகள் மரபு நிலையோடு தொடர்புபடுத்தப்பட்டு இறுகிய தன்மை பெற்றன.

பண்டைய இந்தியப் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியன பற்றிய பல்வேறு விவரங்கள், நமக்கு வேதங்களினின்றும் (vedas) கிடைக்கின்றன. 'வேதம்' என்பதன் உட்பொருள் 'அறிவு' என்பதாகும். இவ் வேதங்கள் அன்றைய இந்துக்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கூறிலும் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டன. மக்களது அன்றாட நடத்தையும் பழக்கவழக்கங்களும் வேதங்களின் கருத்துகளினடிப்படையில் அமைந்தன. பொருளாதார முன்னேற்றம் ஆன்மிக முன்னேற்றத்திற்குக் கீழ்ப்பட்டு அதற்கு உதவுவதாக விருத்தல் வலியுறுத்தப்பட்டது. இலக்கியங்கள் சமயத் தொடர்புடையனவாக விருந்தன. கல்வி ஆன்மிக அடிப்படையில் எழும் ஒரு முயற்சியாகவே வரையறை செய்யப்பட்டது; தனது உண்மையான உயர் ஆன்மிக நிலையை ஒருவன் உணர்ந்து உலகப் பந்தங்களினின்றும் விடுபட உதவும் கருவி கல்வியெனப்பட்டது. வேதங்களுள் பழமையானது ரிக் வேதமாகும். ரிக் வேதம் பண்டைய இந்தியப் பண்பாட்டின் தொடக்க நிலையினைக் குறிப்பதன்று; அதன் உயர் வளர்ச்சி நிலையைக் குறிப்பதாகும். ரிக் வேதம், 'சம்ஹிதைக'ளெனப்படும் 1017 துதிப்பாக்களைக் கொண்டிருந்தது. இவற்றில் பல்வேறு வேதகால தேவர்களான இந்திரன், வருணன், அக்னி ஆகியோரைப்பற்றியும், பல்வேறு சடங்குகளைப்பற்றியும், தத்துவக் கருத்துகள்பற்றியும் பாக்கள் உள்ளன. ரிக் வேதம் தொகுக்கப்பட்ட காலத்திற்குப்பின் யஜுர், சாம, அதர்வண வேதத் தொகுப்புகள் எழுந்தன. அதர்வண வேதத்தில் மருத்துவம் போன்ற பல கலைகள்பற்றிய முதற்குறிப்புகள் உள்ளன. தவம், யோகம் போன்றவற்றின் வழியே மெய்ஞானம் பெற்று அதன் சாரத்தினை வேதப்பாக்களில் தேக்கி வைத்த ரிஷிகள் இஞ்ஞானத்தைப் பாதுகாத்து இதனை வருங்காலத்தினர்க்கு அளிக்க உதவும் முறைகளையும் உருவாக்கினர். இது வேதகாலக் கல்வியின் தோற்றமாகும். ஒவ்வொரு ரிஷியும் தனது மகன், சீடன் அல்லது மாணாக்கன் ஆகியோர்க்குத் தாம் பெற்ற அறிவினைப் போதித்தார். இதனை முதற்பள்ளி அமைப்புகளாகக் கருதலாம். வேதங்களின் துதிப்பாக்கள் (hymns) தந்தையிடமிருந்து மகனுக்கு என வழி வழியாக வாய்மொழி மூலம் கற்பிக்கப்பட்டன. வேத அறிவு பெற்ற பிராம்மண மத குருக்கள் (priests) இத் துதிப் பாக்களையும், இவற்றுக்குப் பின் எழுந்த சடங்கு முறைகள் பற்றிய விவரங்களையும் விளக்கிக் கற்பித்தனர். இந்நிலை பிராம்மணக் கல்வி எனப்படும் வேத காலக் கல்வியின் தொடக்கமாக அமைந்தது.

### பிராம்மணக் கல்வி முறையின் தொடக்கமும் வளர்ச்சியும்

மத குருக்கள் தங்களது பணிகளைச் செவ்வனே ஆற்ற வேதங்களின் அறிவு இன்றியமையாததாக இருந்தது. இப் பணிகள்

தொடக்கத்தில் மூவகைப்பட்டிருந்தன. வேள்விச் சடங்கு எந்த ஒரு வேத காலக் கடவுளைக் குறித்து நடத்தப்படுகிறதோ அவரைப் பற்றிய துதிப்பாக்களை, வேள்வியின்போது தலைமைக் குரு இசைப் பார். இவர் 'ஹோத்ரி' (Hotri) என்று குறிப்பிடப்பட்டார். மற்றொருவர் வேள்விச் சடங்குகளின் ஒரு பகுதியான சோமச்சாற்றுடன் (SomaJuice) தொடர்புள்ள செயல்களுக்கான பாக்களை இசைப்பார். இவர் 'உத்காத்ரி' (Udgatri) எனப்பட்டார். இச் சோமச் சாறு ஒருவகைச் செடியினைப் பிழிந்தெடுக்கப்பட்ட சாறு என்பர். இச் சாற்றுச்குத் தலைவனாக ஒரு தேவனை வேதகால இந்தியர் உருவகப் படுத்தியிருந்தனர். வேறு ஒருவர் வேள்வியில் அடங்கிய பிற சடங்குகளை நடத்துபவராக இருப்பார். இவர் 'அத்வரயு'(Adhvaryu) என்று குறிப்பிடப்பட்டார். வேள்விச் சடங்கினை நெறிப்படுத்தி மேற்பார்வையிட 'பிரம்மன்' (Brahman) என்ற நான்காவது பிரிவு ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வேத காலத்தின் தொடக்கக் கட்டத்தில் இப் பல்வேறு பணிகளை ஆற்றுவதற்கான பயிற்சியை மத குருவாகப்போகும் பிராம்மணர்கள் ஒவ்வொருவருமே பெற்றனர். காலம் செல்லச் செல்ல வேள்விச் சடங்கு முறைகள் சிக்கல் மிகுந்தவையாயின. இதன் விளைவாக, ஒரு மாணுக்கன் குறிப்பிட்ட ஒருவகை வேள்விப் பணிக்கு மட்டும் தன்னைச் சிறப்பாக ஆயத்தம் செய்து கொள்ளும் நிலை எழுந்தது. இதனுல் வேத காலத்தின் பிற் பகுதியில் மூவகைப்பட்ட குருமார் பள்ளிகள் தோன்றின. இப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணுக்கன் தனது பணியுடன் தொடர்புடைய வேதப் பகுதிகளை மட்டும் கற்ருன். ஆசிரியர் கூறுவதை மாணுக்கன் திரும்பத் திரும்பக் கூறி அதனைப் பிழையின்றி மனப்பாடஞ் செய்வது கற்றல் முறையாகக் காணப்பட்டது. மாணுக்கனது உச்சரிப்பில் ஆசிரியர் பெருங்கவனம் செலுத்தினுர். எழுத்துக்கலை பின்னரே தோன்றியதால் தொடக்க காலத்தில் கற்பித்தல் முழுமையாக வாய்மொழிக் (oral) கற்பித்தலாக இருந்தது. கல்வியில் பொருளுணர்ந்து நெட்டுருச் செய்தல் வலியுறுத்தப்பட்டது. வேதப் பாக்களின் பொருளினையும் சடங்குகளின் உட்கருத்துகளையும் குரு அல்லது ஆசிரியர் மாணுக்கனுக்கு விளக்குவார். காலப்போக்கில் இவை போன்ற விளக்கங்கள் தொகுக்கப்பட்டு, வேதங்களுடன் இணைந்த 'பிராம்மணங்கள்' (Brahmanas) எனப்படும் உரைநடை நூல்களாக நிலைபெற்றன. இந் நூல்களில் இலக்கணம், தத்துவம், வானவியல், சட்டம் போன்றவற்றின் தொடக்கக் கருத்துகள் பல காணப்படுகின்றன.

வேதகால இந்தியர்களது நாகரிகம் மேலும் வளர்ச்சி பெற்ற நிலையில் உபநிடதங்கள் (Upanishads) இயற்றப்பட்டுத் தொகுக்கப் பட்டன. கி.மு. 800 முதல் கி.மு. 500 வரையிலான காலத்தை

உபநிடதங்களின் காலம் எனலாம். உபநிடதங்கள் தத்துவ நூல்களாகும். வேதங்களில் காணப்படும் உயர் சிந்தனைகளின் மேன்மையான முடிவுகளாக உபநிடதங்களைச் சான்றோர் கருதுவர். இவ்வுபநிடதங்களின் வழியே பிராம்மணக் கல்விமுறைபற்றிய மேலும் பல விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. உபநிடதங்களுக்குப் பின் இவற்றின் கருத்துகளை மிகவும் சுருக்கி ஓரிரு வாக்கியங்களில் கூறும் 'சூத்திரங்கள்' எனப்படும் இலக்கியங்கள் எழுந்தன. பின்னர் இச் சூத்திரங்களுக்கு விளக்கங்களும் உரைகளும் தோன்றின. தர்ம சூத்திரம் எனப்படும் நூலிலும் அன்றைய கல்விமுறை பற்றிய கருத்துகள் உள்ளன.

வேதகாலக் கல்வி மாணுக்கனது இசைந்த, முழுமை பெற்ற வளர்ச்சியை வலியுறுத்தியது. ஆன்மிக மலர்ச்சி இக்கல்வியின் இறுதி நோக்கமாகும். அகத்தூய்மை, புறத்தூய்மை புற உலகுடன் தொடர்புள்ள உளச் செயல்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் வழியே இதனை அடைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கருதப்பட்டது.

தொடக்க நிலையில் வேத காலப் பள்ளிகளில் பிராம்மணச் சிறுவர் மட்டும் பயின்றனர். எல்லா பிராம்மணச் சிறுவர்களுக்கும் தொடக்கக் கல்வி அளிக்கப்பட்டதெனினும் அவர்களுள் தகுதி பெற்ரோர் மட்டுமே இத்துறையில் உயர் கல்வி பெற வாய்ப்பளிக்கப்பட்டனர். மாணுக்கர்களில் மீத்திறம் பெற்ரோர், சாதாரணமானவர்கள், திறம் குறைந்தோர் போன்ற நிலைகள் இருத்தல் அன்று உணரப்பட்டிருந்தது. காலம் செல்லச் செல்ல, க்ஷத்திரிய வைசியச் சிறுவர்களும் பிராம்மண ஆசிரியர்களிடம் கல்வி பயிலத் தொடங்கினர். இவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வி பிராம்மணச் சிறுவர்களுக்கான கல்வி ஏற்பாட்டினின்றும் வேறுபட்டு, இவர்களது பிற்கால வாழ்க்கைக்கான பயிற்சியாக அமைந்திருந்தது. பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூன்று பிரிவுச் சிறுவர்களது கல்விக்காலம் அவர்களுக்குப் புனித நூல் அணிவிக்கும் 'உபநயனம்' என்னும் சடங்கினின்றும் தொடங்கியது. வேதகால ஆரம்பத்தில் பெண்களும் வேதங்களைப் பயில அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கும் இத்தகைய சடங்கு மேற்கொள்ளப் பட்டது. பின்னரே பெண்கள் வேதங்களைக் கற்று ஓதும் தகுதியற்றவர்கள் என்ற கருத்து எழுந்தது. உபநயனம் பொதுவாக பிராம்மணச் சிறுவர்களுக்கு எட்டு வயதிலும், க்ஷத்திரியச் சிறுவர்களுக்குப் பதினேறு வயதிலும், வைசியச்சிறுவர்களுக்குப் பன்னிரண்டு வயதிலும் நடத்தப்பட்டது. இவ் வயது வேறுபாட்டிற்கு முக்கிய காரணம் க்ஷத்திரிய, வைசியச் சிறுவர்களது கல்வியில் பிராம்மணச் சிறுவர்களைப் போன்று அதே அளவுக்கு வேதங்களைக் கற்றல் இடம்

பெறவில்லை என்பதேயாகும். மற்றும், சிறு வயது முதற்கொண்டே பிராம்மணச் சிறுவர்கள் தமது குடும்பத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும் வேத ஒலிகளின் செல்வாக்குக் குட்பட்டிருப்பராதலின் இளம் வயதிலேயே இவர்களால் இவற்றை நன்கு உச்சரித்துக் கற்றல் இயலும் எனப்பட்டது.

இவ்வாறு தொடங்கிய பிராம்மணக் கல்வி முறை காலப் போக்கில் பல்வேறு மாறுபட்டச் சூழ்நிலைகளிலும் தொடர்ந்து செயலாற்றி வந்தது. முதலில் வேதங்கள் மட்டும் கல்வி ஏற்பாட்டில் இடம் பெற்றிருந்தனவாயினும் வேதகாலப் பிற்பகுதியில் இலக்கியங்கள், இலக்கணம், சமூகச் சட்டங்கள், புராணங்கள், தத்துவம், தருக்கவியல் போன்றனவும் இடம் பெற்றன. பின்னர் போர்க்கலையியல், மருத்துவம், விலங்குகளின் நலம் பற்றிய சாத்திரம், பிறகலைகள் ஆகியனவும் இடம் பெற்றன. தொடக்கத்தில் முறைப்படி அமைக்கப்பட்ட கல்விக் கூடங்கள் இன்றித் தனி ஆசிரியர்களது பொறுப்பாக பிராம்மணக் கல்வி யிருந்திருப்பினும், பின்னர் இம்முறையைப் பின்பற்றிப் பல பள்ளிகள் செயற்பட்டன. இவற்றுள் சிறப்பான சில கல்விக்கூடங்கள் பல்கலைக்கழகங்களைப் போன்று பேரும் புகழும் பெற்றன. இதற்கு எடுத்துக்காட்டாகக் காசி, பிரயாகை, நதியா, அயோத்தி போன்ற இடங்களில் அமைந்திருந்த கல்விக்கூடங்களைக் குறிப்பிடலாம். மற்றும் பிற்காலத்தில் நம் நாட்டில் செயற்பட்ட ‘குருகுலங்கள்’, ‘பரிஷத்துகள்’, ‘சம்மேளனங்கள்’ போன்றவற்றினையும் பிராம்மணக் கல்வி முறையின் விளைவுகளாக நாம் கருதலாம். பல்வேறு சமூக, அரசியல், பொருளியற் காரணங்களினால் நாளடைவில் பிராம்மணக் கல்வி முறை நாட்டினின்றும் மறையத் தொடங்கியது. எனினும், இதன் செல்வாக்கு தொடர்ந்து ஆங்காங்கே இன்றும் சிறிதேனும் காணப்படுகிறது. பிராம்மணக் கல்வி முறை நம் நாட்டில் பரவிக் காணப்பட்டபோது, அதே காலத்தில் உலகின் பிற நாடுகளிற் காணப்பட்ட கல்வி முறைகளைக் காட்டிலும் மிகச் சிறப்பாக அது அமைந்திருந்ததென்பதனை மேல்நாட்டு அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றனர். உலகில் அவ்வப்போது எழுந்த பல்வேறு கொந்தளிப்புகளிடையே இந்தியப் பண்பாடும் நாகரிகக் கூறுகளும் இவற்றுக் கேற்பட்ட பல்வேறு இன்னல்களை வெற்றியுடன் சமாளித்து இன்றும் சிறப்பாக விளங்குவதற்குப் பிராம்மணக் கல்வி முறை ஒரு காரணமாகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அறிவுச் சுடரினை அணையாமல் காத்து இன்றும் நமக்குப் பயன்படும் வகையில் அதனை அளித்திருப்பது, சிறந்த சமய, தத்துவ, அறிவியல் மேதைகளை நாட்டிற்கு உருவாக்கித் தந்திருப்பது போன்றவை பிராம்மணக் கல்வி முறையின் சிறப்புக்குச் சான்றுகளாக’ அமைகின்றன.

## குருகுலக் கல்விமுறையின் பொது இயல்புகள்

இனி பிராம்மணக் கல்வியின் சில பொது இயல்புகளை உற்று நோக்குவோம். இக் கல்வி முறையினை வேதகாலக் கல்வி முறை என்று குறிப்பிடுவதுடன், சிறப்பாக 'குருகுலக் கல்வி முறை' (Gurukula System) என்று குறிப்பிடுவர். குருகுல முறையின் பண்புகள் எனப்படுவன யாவும் இக் கல்வி முறையின் எல்லாக் காலங்களிலும் முழுமையாகக் காணப்பட்டன எனல் முடியாது. இம் முறைபற்றி நாம் பெறும் கருத்துகளும் பல்வேறு நூல்களில் சிதறிக் காணப்படுவனவாகும். வாழ்க்கை எனப்படும் போர்க் களத்தில் வெற்றி பெறத் தேவைப்படும் ஆயத்தப் பயிற்சியாக குருகுலக் கல்வி அமைந்திருந்தது. இக்கல்விப் பயிற்சி மாணாக்கர்களது தகுதிக்கும் திறனுக்கும் ஏற்ப, அவர்களது இளம் வயது முதற் கொண்டே தொடங்கப்பட்டு அளிக்கப்பட்டது. கல்வி கற்க விழையும் மாணாக்கன் ஆசிரியரை அணுகி, அவருடன் வசித்து, அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்று வந்தமையால் பிராம்மணக் கல்வி குருகுல முறை எனப்பட்டது. ஆசிரியருடன் அவரது குடும்பத்தின் ஒருவனாக வசித்துக் கல்வி கற்றதன் விளைவாக மாணாக்கன் குடும்பச் செயல்கள் பற்றி அறிந்ததுடன் சமூகப்பணி, உடலுழைப்பு ஆகியவற்றின் சிறப்பினையும் உணர்ந்தான். கல்வியறிவு பெறுதல் உடலுழைப்புக்கு எதிரானதன்று என்பதனை அறிந்தான். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல் போன்ற இக்காலக் கல்விக் கருத்துகளின் அடிப்படை குருகுல முறையில் அமைந்து காணப்பட்டது. தனது ஆசிரியருடன் வசிப்பதன் மூலம் அவருடன் நெருக்கமான தொடர்பு கொள்வதன் விளைவாக, அவரது சிறந்த பூண்புகளைப் பின்பற்றலின் வழியே மாணாக்கன் அவற்றை அடைவதும் இயன்றது. கல்வி ஆர்வமுள்ள சிறுவன் தான் விரும்பும் ஆசிரியர் அல்லது குருவிடம் சென்று அவருக்கு உணவுப் பொருள், தானியங்கள், விறகு ஆகியவற்றைக் காணிக்கையாகச் செலுத்தித் தன்னை அவரது மாணாக்கனாக ஏற்க வேண்டுவான். இது உபநயனச் சடங்கிற்குப் பின் நிகழும். இத்தகைய சிறுவன் 'பிரம்மச்சாரி' எனப்பட்டான். மாணவப் பருவம் சாதாரணமாக 12 ஆண்டுகள் நீடித்தது; ஒருசிலர் அதற்கு மேலும் குருகுல வாசம் செய்து கல்வி கற்பதும் உண்டு. ஆசிரியரது இல்லத்தில் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கும் வேள்வித் தீயினை அணையாமற் காப்பதில் தானும் பங்குகொள்ள விழைவதன் சின்னமாக மாணவன் அளிக்கும் 'சமித்துகள்' என்னும் விறகுச் சுள்ளிகள் அமைந்தன. மாணாக்கனது வரலாற்றைக் கேட்டறிந்து அவனது தகுதியை உணர்ந்த பின்னர் ஆசிரியர் அவனை ஏற்பார். ஆசிரியரது குடும்பத்தில் ஒருவனாகச் செயற்பட்டு அவரது உடைமைகளைப் பாதுகாப்பது, குடும்பத்தைப் பாதுகாப்பது, வேள்வித் தீயினைக் காப்

பது, பசுவினங்களை மேய்த்து வருவது, தனது ஆசிரியருக்கும் தனக்கும் உணவிற்காகப் பிச்சையெடுத்துத் தானியங்களைச் சேர்ப்பது போன்ற பல பொறுப்புகள் மாணுக்களைச் சாரும். பிச்சையெடுத்துண்பது மாணுக்கனுக்குப் பணிவினை (humility) கற்பிக்கும் எனப் பட்டது; சமுதாயத்தின் உதவியுடன்தான் தன்னால் கல்வி பெற முடிகிறது என்னும் உணர்வினை இது மாணுக்கனிடம் தோற்றுவிக்கும். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி எல்லோரும் கல்வி பெற இம் முறை துணை செய்தது. சமுதாயத்தினரது கல்விக்கடமை பற்றியும் அவர்க்கு இது உணர்த்தியது. இதேபோது ஓரளவு வசதியுள்ள குடும்பச் சிறுவர்களைப் பொறுத்தவரை பிச்சையெடுத்துத் தான் உண்ண வேண்டும் என்னும் விதி தளர்த்தப்பட்டது. மாணுக்கப்பருவம் முழுமையும் வலுவான கட்டுப்பாடுகள் நிறைந்த பருவமாகக் காணப்பட்டது; ஆனால், மகிழ்ச்சியற்றதாக விருக்கவில்லை. விருப்பங்களை நசுக்கி மாணுக்கர் துறவிகளாகச் செயற்பட வேண்டுமென்ற போக்கு இல்லை; விருப்பங்களைக் கட்டுப்படுத்தலும் தூய்மையாக்குதலுமே வலியுறுத்தப்பட்டன. எளிய வாழ்க்கை, உயர் சிந்தனை ஆகியன மாணுக்கர்களது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கருதப்பட்டது. ஆசிரியரது சொல்லுக்கும் கட்டளைக்கும் உடனடியாகக் கீழ்ப்படிதல் மாணுக்கனிடம் எதிர்பார்க்கப்பட்டது. ஆசிரியருக்குப் பணி புரிந்துகொண்டே அவரது ஓய்வு நேரங்களில் அவரிடமிருந்து மாணுக்கன் பலவற்றைக் கற்பது என்பது குருகுல முறையின் இயல்பாகும். கல்வி கற்பது முழுமையாக முடியும் வரை மாணுக்கன் ஆசிரியருடன் தங்கி அவரது குடும்பத்துள் ஒருவனாக வாழ்ந்து, கல்விக்காலம் முடிந்த பிறகு வாழ்க்கைக்குத் தேவையான பல அறிவுரைகளை ஆசிரியரிடமிருந்து பெற்றுத் தனது இல்லம் திரும்புவான். கல்வி கற்று முடிந்தவுடன் ஆசிரியர் கூறும் இறுதி நல்லுரைகளைக் கேட்பது 'சமாவர்த்தனை' (Samavartana) என்னும் கல்விச் சடங்காகக் குறிப்பிடப்பட்டது. இச் சடங்கு கல்விப் பருவம் முடிந்தமையைக் குறிக்கும். இதன் பின்னர் மாணுக்கனது தனிப்பட்ட வாழ்க்கை தொடங்கியது.

குருகுலப் பள்ளிகள் அழகும் அமைதியும் கொண்ட இயற்கையான சூழ்நிலையில் அமைந்திருந்தன; கூச்சலும் குழப்பமும் பரவிய நகர்ப்புரங்களினின்றும் ஒதுங்கி எழில்மிகு இயற்கையின் மத்தியில் தனது ஆசிரியரின் பாதங்களினருகே அமர்ந்து மாணுக்கன் கேள்வி, சிந்தனை, தியானம் போன்றவற்றின் வழியே வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முயன்ருன். இத்தகைய சூழ்நிலை கற்றலுக்கு மிகவும் ஏற்றதாகவிருந்தது. குருகுலப் பள்ளிகளில் கற்பித்தல் நேரடியாக ஆசிரியரது வாய்மொழி வழியே அமைந்திருந்தது. எழுத்துக் கலை தோன்றிய பின்னரும்கூட

வாய்மொழி வழியே கற்பிப்பதுதான் சிறந்ததாகவும் விரும்பத் தக்கதாகவும் பலகாலம் கருதப்பட்டது. வடமொழியே வாழ்க்கை மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருந்தது. பாடப் பொருளை மாணுக்கர் நெட்டுருச் செய்யத் தூண்டியதுடன் அவற்றைப் புரிந்துகொள்ளத் தேவைப்படும் விளக்கங்களையும் ஆசிரியர் அளித்துவந்தார். சிறு குறிப்புகள், கதைகள் போன்றவற்றைப் பயன்படுத்தியும் சிலபோது கருத்துகளுக்கு விளக்கம் தரப்பட்டது. ஒரு சில தொடக்கக் கருத்துகள் மட்டும் தரப்பட்டு முடிவினை மாணுக்கர் தாங்களே கண்டுணரும் முறையும் சிலபோது பின்பற்றப்பட்டது; விவாதித்தல் பயன்படுத்தப்பட்டது. தேவையானபோது நடைமுறைச் செயல்களில் ஈடுபட்டும் மாணுக்கர்கள் கற்றனர். ஓரளவு கல்வியில் முன்னேற்றமடைந்த மாணுக்கர் சிலபோது இளம் மாணுக்கர்க்கு உதவுதலும் உண்டு. அவ்வப் போது, கற்றன சோதிக்கப்படுவதும் உண்டு.

குருகுல முறைக் கல்வியில் ஆசிரியரும் மாணுக்கரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றிய மிகத் தெளிவான கருத்துகள் அன்று நிலவிவந்தன. தம் மாணுக்கனுக ஒரு சிறுவனை ஏற்றுக்கொண்டபின் ஆசிரியர் அவனைத் தம் குடும்பத்துள் ஒருவனுகக் கருதி மகன் போன்று அன்பு செலுத்துதல் வேண்டும். மாணவனது கல்வி வளர்ச்சியில் முழு ஆர்வம் காட்டுதல் வேண்டும். மாணுக்கனும் ஆசிரியருக்குக் கீழ்ப்படிந்து அவருக்குப் பல பணி விடைகளைச் செய்தல் வேண்டும். அவரது இருக்கைக்குக் கீழ் இடத்தில்தான் மாணுக்கன் உட்காரவேண்டும்; அவர் கூறுவதை மறுத்துப் பேசுதல் கூடாது; காலையில் அவர் துயிலெழுவதற்கு முன் எழுந்து, இரவில் அவர் உறங்கிய பின்னரே தான் உறங்குதல் வேண்டும்; காலையில் எழுந்த உடன் ஆசிரியரது கால்களைத் தொட்டுப் பணிந்த பின்னரே பிற பணிகளில் ஈடுபடல் வேண்டும். கல்விப் பருவம் முழுமையும் புலனடக்கத்துடன் தூய்மையான பிரம்மசரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; தன் ஆசிரியரது மனைவி, அவரது பிற குடும்ப உறுப்பினர் ஆகிய யாவருடனும் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். ஆசிரியரும் மாணுக்கனிடம் முழுவன்புடன் நடந்துகொள்ள வேண்டும். அவனுக்குக் கற்பிக்க வேண்டிய யாவற்றையும் முழுமனத்துடன் கற்பிக்கவேண்டும். தனது சுயநலன்களுக்கு மாணுக்கனை அவர் பயன்படுத்த முற்படுவது தவறு. மாணுக்கன் தனது உடல், உள்ளம் ஆகியவற்றைத் தூய்மையாக வைத்திருத்தலிலும், துதி முறைகள், சடங்கு முறைகள், ஒழுக்க முறைகள் ஆகியவற்றிலும் ஆசிரியர் அவனுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும். குருகுல முறையில் ஆசிரியர் மிகவும் உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டார். அவரிடம் அச்சங்கலந்த

மதிப்புடன் மாணாக்கன் நடந்துகொள்வது வலியுறுத்தப்பட்டது. மாணாக்கனுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தீவிரமானதெனினும் கொடுங்கோன்மை வாய்ந்ததாக அது செயற்படவில்லை. குருகுலப் பள்ளிகளில் சிறு தண்டனைகளைத் தவிர உடலை வருத்தும் கடுமை யான தண்டனைகள் அளிக்கப்படவில்லை. மாணாக்கர் மட்டுமன்றி ஆசிரியரும் சிறந்த நடத்தையும் உயர் பண்புகளும் உடையவராகத் திகழ்தல் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. ஆசிரியர் களுக்குச் சமுதாயத்திலும் நல்ல மதிப்பு இருந்தது. ஆசிரியர்களும் சிறந்து காணப்பட்டனர்; இத்தகையோரிடம்தான் மாணாக்கர் கற்க விழைந்தனர். கற்பித்தலுக்கு ஊதியம் ஏதும் பெறாமல், கற்பிப்பது தம் கடமையாகக் கருதி குருகுல ஆசிரியர்கள் செயலாற்றினர். கல்வி கற்று முடிந்த பின்னர், தனது சக்திக் கேற்ப எவையேனும் சில பொருட்களைத் தன் ஆசிரியருக்குக் காணிக்கையாக அளிப்பது மாணாக்கனது கடமையாகும் எனப் பட்டது. சிந்தனைச் சுதந்தரத்திற்குக் குருகுலப் பள்ளிகளில் நல்ல வாய்ப்பு அளிக்கப்பட்டது.

## நல்லியல்புகள்

பிராம்மணக் கல்வி முறையில் பல நற்பண்புகள் காணப்படு கின்றன. இந்தியக் கல்வி அமைப்பில் பழமைமிக்கதாக இக்கல்வி முறை திகழ்கிறது. இன்றும் இதன் சிறப்பியல்புகளின் செல்வாக்கு நம்மிடையே காணப்படுகிறது. இக் கல்வி முறையில் தகுதி பெற்றுள்ள யாவர்க்கும் இலவசமாகவும் எளிதாகவும் கல்வி வாய்ப்புகள் கிட்டின; கல்வி தனிப்பட்டோர்களது முயற்சி யாகவே இருந்ததால் இதில் சமுதாயத்தின் ,அல்லது அரசின் குறுக்கீடு இல்லை. விரிவுரை, பன்முறைப் பயிற்சி, விளக்கம் தருதல், வினவுதல், விவாதித்தல் போன்ற பல கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. மாணாக்கர்களது உளத்திறனுக் கேற்ப, தனிப்பட்ட முறையில் அவர்களுக்குக் கல்வி புகட்டப் பட்டது. சிந்தனைச் சுதந்தரம் மிகுந்து காணப்பட்டது. பிராம் மணக் கல்வி முறையில் மாணாக்கன் சிறந்த நூலறிவு பெற்றதுடன் சிறப்புமிக்க நல்லொழுக்க வளர்ச்சியும் பெற்றுத் திகழ்ந்தான். மாணாக்கனது தனித்தன்மை வளர்ச்சியுடன் அவனது இசைந்த (harmonious) பன்முனைப்பட்ட வளர்ச்சிக்கு அக் கல்வி முறை உதவியது; மாணாக்கன் கட்டுப்பாட்டினை நன்கு கற்றான். அன்றைய ஆசிரியர் ஊதியத்திற்காகக் கற்பித்தலை மேற் கொள்ளாது இதனை ஒரு புனிதமான கடமையாகக் கொண்டு கற்பித்தார். ஒழுக்கப்பயிற்சியிலும் நன்னடத்தையிலும் மாணாக்கர்களுக்குத் தாமே ஒரு சிறந்த எடுத்துக்காட்டென ஆசிரியர் திகழ்ந்தார். அவரது கற்பித்தலின் வழியே அறிவு

பெற்றதோடு, அவருடன் வாழ்ந்து அவரது வாழ்க்கை முறையினைப் பின்பற்றிப் பல சிறந்தபண்புகளையும் மனப்பான்மைகளையும் பழக்கங்களையும் மாணுக்கர் பெற்றனர் என்பது தெளிவு. ஆசிரியர்களது நிலை அன்று மிகஉயர்ந்து காணப்பட்டது; அரசர்களது அவைகளிலும் இவர்க்குத் தனிச் சிறப்பு இருந்தது; சமூகத்தில் ஆசிரியர்கள் மிகுந்த மதிப்புடன் போற்றப்பட்டனர்; சமூக நல்வாழ்விற்கு வழிகாட்டுவோராக அவர்கள் கருதப் பட்டனர். குருகுல முறையின் சிறப்பியல்புகளில் முக்கியமான ஒன்று அதில் காணப்பட்ட ஆசிரிய-மாணுக்கத் தொடர்பாகும். இது அன்பு, பரிவு, மதிப்பு ஆகியவற்றினடிப்படையில் அமைந் திருந்தது. குருகுலக் கல்வியில் உடலுழைப்புக்கும் சிறப்பிடம் இருந்தது. எளிமையாக வாழ்தல், இதேபோது உயர்ந்த குறிக் கோள்களின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் ஆகியன குருகுல முறையின் மையக் கருத்துகளாக இருந்தன. இன்று நம் நாட்டுக் கல்வியில் மாணுக்கரிடையே அவ்வப்போது காணப்படும் ஒழுங்கின்மை, கற்பதில் ஆர்வக் குறைவு ஆகியவற்றைப் போக்கவும் ஆசிரிய மாணுக்கத் தொடர் பினைப் பயனுள்ள முறையில் திருத்தியமைக்கவும், சமுதாயத்தில் ஆசிரியர்களது நிலையினை உயர்த்தவும் குருகுலப் பள்ளிகளது குறிக்கோள்களைப் பின்பற்றுதல் பயனுள்ளதாகும் என்னும் கருத்தில் பெருமளவு உண்மையுள்ளது.

**குறைபாடுகள்**

இதேபோது பிராம்மணக் கல்வி முறையின் குறைபாடுகளையும் நாம் உணர்தல் வேண்டும். குருகுலப் பள்ளிகள் பொதுவாகச் சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு மட்டும் உரித்தானவையாக இருந்தன. இப் பள்ளிகளில் கல்வி பயின்ற மாணுக்கர்களது எண்ணிக்கையும் மிகக் குறைந்ததாகவே இருந்தது. சமயக் கருத்துகள் அதிக அளவு வலியுறுத்தப் பெற்றதன் விளைவாக, சமுதாய முன்னேற்றத்தில் கற்றோர் போதிய கவனமும் முயற்சியும் செலுத்தவொட்டாமல் அவர்களைத் தடுப்பதாக இக் கல்வி முறை அமைந்தது. அறிவியல், பொருளாதாரம் போன்றவற்றின் வளர்ச்சியில் இது குறுக்கிட்டது. சாதி பாகுபாட்டின் விளைவாக இந்து சமுதாயத்தினரின் குறிப்பிடத்தக்க பெரும் பகுதியினரது கல்வி வளர்ச்சியை முழுமையாகப் புறக்கணித்து, இந்து சமுதாயத்தின் ஒற்றுமையை இக்கல்வி முறை குலைத்தது. வேத காலத் தொடக்கத்தில் பெண்களுக்கும் கல்வி பெற சமவாய்ப்புகள் அளிக்கப்பட்டனவெனினும் பின்னர் பெண் கல்வி புறக்கணிக்கப்பட்டது. வட மொழிக்குப் பதில் பல வட்டார மொழிகள் வளர்ச்சியுற்றபின் வட மொழி வழியே கற்பிக்கும்

குருகுலப் பள்ளிகள் பொதுமக்களுக்குப் பயனுருமற் போயின. இது பொதுமக்களிடையே கல்வி பரவுதலைப் பாதித்தது. தொழிற் கல்விக்கும் வேதகாலக் கல்வி அமைப்பில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. காலப்போக்கில் இக் கல்வி முறை இதனுல், பெரும் பயனும் மதிப்பும் பெற்ற பிராம்மணர்களது முன்னேற்றத்தையும் தடை செய்ததெனலாம். பிறப்பினுல் தாங்கள் உயர் மட்டத்தினர் என்னும் எண்ணம் பிராம்மணர் களிடையே வலுவடைந்ததன் விளைவாக, தங்களது சிந்தனை, உழைப்பு ஆகியவற்றின் மூலம் தங்களது அறிவை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் இவர்களிடம் குன்றிப்போய், சமுதாயத்தில் இவரது நிலையைப் பாதித்தது. பிராம்மணக் கல்வி முறையின் மையமாக வேதங்கள் காணப் பட்டன. வேத வாக்குகளை ஒரு சிறிதும் மாற்றவேகூடாது என்னும் நிலை காலப்போக்கில் தேவைப்படும் இன்றியமையா மாற்றங்கள் எழுவதையும் தடை செய்யக்கூடிய மனப்பான்மையை இம்முறை வழியே கல்வி பயின்ருேரிடம் தோற்றுவித்தது. கல்வி ஏற்பாடு மிகக் குறுகிய துறையில் சிறப்புப் பயிற்சியளிப்பதாகக் காணப்பட்டது. உடலுழைப்புக் கலைகளும் கைப்பணிகளும் குருகுலக் கல்வியில் நேரடியாகப் பங்குபெற்றுக் காணப்படாத மையின் இவை கீழ்நிலைப்பட்ட செயல்களாகக் கருதப்பட்டன. இது உடலுழைப்புக் கலைகளின் மேன்மையைக் கற்ருேர் உணர வொட்டாமற் செய்தது.

## பொது மதிப்பீடு

எனவே நம் நாட்டின் இன்றைய நிலைமைக்கும் வளர்ச்சித் தேவைகளுக்கும் ஏற்ற கல்வியைக் குருகுல முறை அமைப்பினைப் பின்பற்றி முழுமையாகப் பெறவியலும் எனக் கருதுவது தவறு. இன்று கல்வி பெறுதல் ஒவ்வொரு குடிமகனது சிறப்புரிமையாகக் கருதப்படுகிறது ; கற்கும் மாணுக்கர்களது எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக்கொண்டு போகிறது. குருகுல அமைப்பில் நடத்தப்பெறும் பள்ளிகள் இந்நிலைமையில் சமூகத்துக்கு முழுப் பயனுடன் இயங்க முடியாது. கல்வி முறையானது சமூக அமைப்புடன் இணைந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் அது பயனுள்ளதாகவிருக்கும். இன்றைய இந்தியாவின் சமூக அமைப்பு வேதகால இந்தியாவின் அமைப்பினின்றும் குறிப்பிடத்தக்க பெருமளவுமாறியுள்ளது என்பது தெளிவு. ஆகவே இன்றைய கல்விமுறை இக்காலச் சமுதாயத்தேவைகளுடனும் இன்று காணப்படும் சமூகஅமைப்புடனும் பொருந்தியதாக இருத்தல் வேண்டும். இத்தகைய முறையினை உருவாக்க பெருமுயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிருேம். எனினும் குருகுலமுறையின்

அடிப்படைக் கருத்துகளில் பயனுள்ள பலவற்றை இன்றைய நிலைமையில் எந்த அளவுக்குச் செயற்படுத்த இயலுமோ அந்த அளவுக்குச் செயற்படுத்த முயலுதல் கல்வி வளர்ச்சிக்குத் துணை செய்வதாகவே அமையும். பிராம்மணக் கல்வி முறை மறைந்த தற்கு முக்கிய காரணம் தேவைகளுக்கேற்பத் தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளும் நெகிழ்ச்சியை அது இழந்ததேயாம். அக்கல்வி முறையின் சிறப்புகளை மீண்டும் புதுப்பிக்க பிற்காலப் பெரியோர்களான சுவாமி தயானந்தர், யோகி அரவிந்தர் ஆகியோர் முயன்றதனை இங்குக் குறிப்பிடலாம்.

## பண்டைய தமிழரது கல்விமுறை

### சமுதாயமும் இலக்கியங்களும்

பண்டைக் காலத்தில் தமிழரது நாகரிகத்துடன் இணைந்து எழுந்த கல்வி முறையொன்று தென்னிந்தியாவில் பரவிச் செயற் பட்டு வந்ததனை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பிராம்மணக் கல்வி முறையின் தன்மையினைச் சார்ந்தமையால், அதே காலத்தில் தனிப்பண்புகள் கொண்டு உருப்பெற்று இக்கல்வி முறை காணப் பட்டது. தமிழர்களெனப்பட்டவர் சிந்துநதிப் பகுதியினின்றும் தெற்கு நோக்கிப் பெயர்ந்து வந்தவர்களா அல்லது இந்தயத் துணைக் கண்டத்தின் தென்பகுதியின் ஆதிகால மக்களா என்பது பற்றிக் கருத்து வேற்றுமை இருக்கக் கூடுமெனினும் அவர்களது தொன்மையான நாகரிகச் சிறப்புபற்றி ஐயப்பாடு கிடையாது. இந்நாகரிகத்தின் அடித்தளமாகத் தமிழர்களது கல்வி முறை அமைந்திருந்தது. பண்டைய தமிழர்களது கல்விமுறைபற்றிய தொடர்ச்சியான வரலாற்று விவரங்கள் நமக்கு இல்லையெனினும் அதன் தன்மை, சிறப்பியல்புகள் போன்றனபற்றி பண்டைத் தமிழ் இலக்கியங்களினின்றும் நம்மால் பல கருத்துகளைப் பெற முடிந்துள்ளது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டினது எனப்படும் ‘தொல்காப்பியம்’, ‘பத்துப்பாட்டு’, ‘எட்டுத்தொகை’, போன்ற நூல்களைக் கொண்ட சங்க இலக்கியங்கள் போன்றவற்றினின்றும் அக்காலக் கல்விமுறைபற்றி உணரவியலும். உலகப் பொது மறையென விளங்கும் ‘திருக்குறளி’ல் பண்டைய தமிழர்களது சமுதாய வாழ்க்கை, நடத்தை முறைகள் போன்றவற்றுடன் கல்வி நிலை, கல்விபற்றி அன்று நிலவிய உயர் கருத்துகள் போன்றனபற்றியும் நாம் உணர்தல்கூடும். கல்விக்கு அன்றைய தமிழர் சமுதாயத்தில் அளிக்கப்பட்டிருந்த சிறப்பிடத்தினை திருக்குறள் நன்கு தெளிவாக்குகிறது. சங்ககாலத் தமிழர்களது வாழ்க்கை எளிமையும் வளமும் மகிழ்ச்சியும் கொண்டிருந்த தாகவும், கொடை, வீரம் ஆகிய பண்புகளின் அடிப்படையில்

அமைந்திருந்ததாகவும் நாம் அறிகிறோம். சாதி வேறுபாடுகளற்ற சமுதாயமாக அது காணப்பட்டது. கல்வியும் கலைகளும் வளரத் தக்க சூழ்நிலையைக் கொண்டிருந்தது; கல்வியின் பெருமை நன்கு உணரப்பட்டிருந்தது; கற்றோரது சிறப்பு சங்க இலக்கியங்கள் யாவற்றிலும் வலியுறுத்தப்பட்டிருத்தல் இதனைப் புலப்படுத்து கிறது. கல்வி பற்றி சங்ககாலத் தமிழர் பரந்த ஒரு மனப்பான்மை யினைக்கொண்டு காணப்பட்டனர். கல்வி கற்றல் ஒருவனது வாழ் நாள் முழுவதும் நீடிக்கத் தேவைப்படுவதாகும் எனப்பட்டது. சங்க இலக்கியங்களுக்குப்பின் எழுந்த காப்பியங்களிலும், சமய இலக்கியங்களிலும், பிற இலக்கிய இலக்கண நூல்களிலும் சங்க காலத்தில் சிறந்தோங்கிச் செயற்பட்ட தமிழர் கல்வி முறை எவ்வாறு தொடர்ந்து நன்கு இயங்கிவந்தது என்பதனை அறியக்கூடும்.

தமிழர்களது கல்வி முறைபற்றி முறையான பல விவரங்களை நமக்களிப்பது கி.பி. பதிமூன்றும் நூற்றுண்டில் பவணந்தி முனிவர் என்ற ஜைன சமயத் துறவியால் ஆக்கப்பட்ட 'நன்னூல்' எனப்படும் இலக்கண நூலாகும். நன்னூல் சூத்திரங்கள் நல்லாசிரியரது பண்புகள், மாணுக்கனது தன்மை, பாடநூல்களின் இயல்பு, கற்பித்தல் முறைகள் போன்ற கல்வியின் பல கூறுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்றன.

### கல்வியின் நோக்கங்களும் கல்வி ஏற்பாடும்

கல்வியின் நோக்கங்களென நான்கினை நன்னூல் குறிப்பிடு கிறது. அறநெறிப்பட்ட வாழ்க்கை, பொருளீட்டுதல், வாழ்க்கையில் நல் வசதிகளை பிறர்க்குத் துன்பம் எழாவகையில் அனுபவித்தல், பின்னர் இவற்றைத் துறந்து பேரின்பத்தினை அடைதல் ஆகியன இவையாம். ஆன்மிகக்கல்வி எனப்படுவது தனிப்பட்ட முறையில் குறிப்பிடப்படவில்லையெனினும் இந்நோக்கங்களின் அடிப் படையில் அது காணப்படுகிறது என்பது தெளிவு. பிறவிக்கடல் கடந்து இறைவன் அடிசேர்தலுக்குக் கல்வி கருவியாகும். கல்வி அறிவு பெற்றவன் ஆய்வுத் திறனும் சிந்தனைச் சுதந்தரமும் பெற்று விளங்குதல் வேண்டும். கற்றதன் பயனாக அவனது நடத்தையில் விரும்பத்தக்க சிறந்த மாற்றங்கள் எழவேண்டும். ஒருவன் தான் கற்றவற்றிற்கேற்ப ஒழுகுதல் மிகவும் வலியுறுத்தப்பட்டது. கல்வியறிவு பெறுதவன் விலங்கிற்கு ஒப்பாவான் எனப்பட்டது. கல்வி பெறுதலின் வழியேதான் பண்பாடு, சகிப்புத்தன்மை, இன்சொல் பேசல், பிறரிடம் பரிவு, நல்லொழுக்கம், சமூகவியல்பு போன்றன எழும் என்பது உணரப்பட்டிருந்தது. குறிப்பிட்ட ஒரு தொழிலினைப் புரிதலுக்குக் கல்வி என்ற குறுகிய நோக்கம்

தமிழர்களது கல்வியில் வலியுறுத்தப்படவில்லையெனினும் இது புறக்கணிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகும்.

தமிழகக் கல்வியின் கல்வி ஏற்பாடு (curriculum) எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றி நம்மால் ஓரளவு ஊகிக்க இயலும். தாய்மொழியான தமிழ், பயிலும் பாடமாகவும் பயிற்று மொழியாகவும் விளங்கியது. 'எண்', 'எழுத்து', எனப்படும் இரு பிரிவுகள் கல்வித் திட்டத்தில் நடுவிடம் பெற்றன. எண்ணெனப்படுவதுள் கணிதம் அறிவியல் போன்ற பாடக் கருத்துகள் அடங்கும். எழுத்து என்பதுள் மொழி, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்ப் பிரிவுகள், இலக்கிய—இலக்கணம், வேறுபல கலைகள் ஆகியன அடங்கும். கல்வியின் தொடக்கநிலை முதற்கொண்டே எண்ணும் எழுத்தும் பயிற்றுவிக்கப்பட்டன. இளமையில் கல்வி தொடங்குவது வலியுறுத்தப்பட்டது. தொடக்க காலங்களில் கல்வி வாய்மொழியாகக் கற்பிக்கப்பட்டது; பின்னர் ஓலைச் சுவடுகளும் எழுத்தாணிகளும் பயன்படுத்தப்பட்டன. 'கணக்காயர்' எனப்பட்ட ஆசிரியரது இல்லம் பள்ளியாகச் செயற்பட்டது. வடநாட்டில் காணப்பட்டது போன்று சிறப்புமிக்க சில குருகுலப் பள்ளிகளாக இவ்வாசிரியர்களது பள்ளிகள் பெயர் பெற்றதாகத் தெரியவில்லை எனினும், தங்களது கல்விப் பொறுப்புகளை இவை நல்ல முறையில் நிறைவேற்றின என்பது தெளிவு. பிராம்மணக் கல்வி முறையில் காணப்பட்டது போன்று கல்விச் சடங்குகளோ, கற்போனுக்கான பிரம்மசரியமோ தமிழகக் கல்வி முறையில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

### கற்பித்தல் முறைகளும் கல்விக் கூடங்களும்

ஒருவன் கேள்வி வழியே பெறும் அறிவு, நூல்களைப் படித்துப் பெறும் அறிவைவிட உயர்ந்ததாகக் கருதப்பட்டது. கற்பித்தல் பெருமளவு வாய்மொழிப்பட்டதாகவிருந்தது. மனப்பாடஞ் செய்தல் முக்கியத்துவம் பெற்று காணப்பட்டது. கற்பித்தலில் பல நுண் முறைகள் கையாளப்பட்டன. ஆசிரியரது விளக்க உரைகளைக் கேட்டல், வினவுதல், விடையளித்தல், ஆராய்தல், விவரித்துக் கூறல் போன்றன இவற்றுள் சிலவாம். பண்டைய தமிழகத்தின் கல்விச் சிறப்பினை அன்று செயற்பட்ட பல்கலைக் கழகங்களைப் போன்ற உயர் கல்விக் கூடங்களின் தன்மையினின்றும் நாம் உணரலாம். தென் மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டுச் செயற்பட்ட முதல், இடை, கடைச் சங்கங்கள் இத்தகையவையாம். பெரும் புலவர்களும் பேராசிரியர் களும் இச்சங்கங்களை அலங்கரித்தனர். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மட்டுமன்றி கணிதம், அறிவியல், மருத்துவம், வானவியல் போன்ற

பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கும் இச்சங்கங்கள் உதவின. சாதி சமய வேறுபாடுகள் எவையுமின்றி எல்லோர்க்கும் தமது அறிவுத் திறனைக் காட்டவும் மேலும் கல்வி பெறவும் இச்சங்கங்களில் வாய்ப்பளிக்கப்பட்டது.

பிற்காலத் தமிழகத்தில் எழுந்த 'கடிகைகள்', 'அக்ரஹாரங்கள்' 'மடங்கள்' போன்றன கல்வி மையங்களாகச் செயற்பட்டுவந்தன. மற்றும் கோயில்களுடன் இணைந்த பல உயர் கல்விக் கூடங்களும் தமிழகத்தில் நிறுவப்பட்டுச் செயற்பட்டன. எண்ணயிரம், திருமுக்கூடல், திருவொற்றியூர், புன்னவயில் போன்ற ஊர்களில் கோயில்களுடன் இணைந்த உயர்கல்விக் கூடங்கள் செயற்பட்டன. இவற்றில் வடமொழிக் கல்வி ஆகியன இடம் பெற்றன. மற்றும் கோயில்கள் இசை, நடனம் போன்ற நுண்கலைகளின் வளர்ப்புப் பண்ணைகளாகவும் இயங்கின. பெண்கல்வியைப் பொறுத்த வரை, பண்டைய தமிழகத்தில் அவர்க்குச் சிறந்த வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. அக்காலத்தில் சிறந்து விளங்கிய புலவர்களுள் பல பெண்பாற்புலவர்களும் காணப்படுகின்றனர். பல்வேறு நுண் கலைகளிலும் பெண்கள் பயிற்சிபெற்றுச் சிறந்துவிளங்கினர். ஆனால் பிற்காலத்தில் சமுதாயத்தில் பெண்களதுநிலை குறைந்ததன் விளைவாக, பெண்கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவு இல்லாமற் போயின.

## பொதுப் பண்புகள்

ஆசிரியர், மாணுக்கர் ஆகியோரிடம் இருக்கவேண்டிய பண்பு களைப்பற்றி நன்னூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணுக்கன் ஒழுங்கு, நன்னடத்தை, ஆர்வம், முழுக்கவனம் ஆகியன கொண்டு செயற்பட வேண்டும். காலந்தவருமை, மகிழ்ச்சியுடன் ஆசிரியர் சொல்லுக்குக் கீழ்ப்படிதல், அறிவு வேட்கை, நல்ல நினைவாற்றல், பணிவு, பண்பாடு ஆகியன யாவும் மாணுக்கனிடம் இருக்க வேண்டும். மாணுக்கர்களிடையே கற்றல்திறனில் தனியாள் வேற்றுமைகள் இருத்தல் உணரப்பட்டு இவற்றிற்கேற்ப கற்பித்தல் முறைகளில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன. திறன் மிக்க மாணுக்கர்கள் ஆசிரியருக்குத் துணையாகப் பிற மாணுக்கர் களுக்குக் கல்வி புகட்டும் பழக்கமும் அன்று காணப்பட்டது; உளப் பயிற்சி, ஒழுக்கப்பயிற்சி ஆகியவற்றுடன் உடற்பயிற்சிக்கும் தமிழகக் கல்வியில் முக்கிய இடம் அளிக்கப்பட்டது.

சமுதாயத்தின் பல பிரிவுகள், பல நிலைகள் ஆகியவற்றினின்றும் பண்டைய தமிழக ஆசிரியர்கள் எழுந்தனர். ஆசிரியர், மாணுக்கரது அகக் கண்களைத் திறந்து அவர்களது அறியாமையைப் போக்குபவ

ராகக் கருதப்பட்டார். சிறந்த அறிவு, கடவுள் நம்பிக்கை, தெளிவாகக் கற்பிக்கும் திறன், மாணுக்கரது இயல்புகள் பற்றிய உணர்வு, அவர்பால் பரிவு போன்ற பல பண்புகள் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்பட்டன. கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் ஊதியம் பெற்றனர். சமுதாயத்தின் தலைவர்களென ஆசிரியர்கள் கருதப் பட்டனர். பரந்த அறிவு, நிலை குலையாமை, பொறுமை, கம்பீரம், சகிப்புத்தன்மை, ஆக்கத்திறன் போன்ற பண்புகளை ஒரு நல்லாசிரியர் பெற்றிருப்பராதலின், நிலம், மலை போன்றவற்றுடன் நன்னூலாசிரியர் அவரை ஒப்பிடுகிருர். திட்பமாகவும் ஒருபுறச் சார்பின்றியும் ஆசிரியர் செயற்பட வேண்டியவராதலின் அவர் தராசு போன்றவர் எனப்பட்டார். பரிவு, மென்மையுணர்வு, கவர்ச்சியான ஆளுமை ஆகியன உடையவராதலின் அவர் மலர் போன்றவர் எனக்குறிப்பிடப்பட்டார். இத்தகைய ஆசிரியர்கள் பலரது பணியால் தமிழகக் கல்வி உலகின் சிறந்த கல்விஅமைப்புக் களுள் ஒன்ருகத் திகழ்ந்தது.

## பண்டைய தமிழகக் கல்வியும் பிராம்மணக் கல்வி முறையும்

பண்டைய தமிழகக் கல்வி முறையினை வேதகால பிராம்மணக் கல்வி முறையோடு ஒப்பிட்டு நோக்கும்போது இக்கல்விமுறை களிடையே காணப்படும் சில பொதுப் பண்புகளையும் சில முக்கிய வேறுபாடுகளையும் நம்மால் உணர முடிகிறது. இரண்டிலுமே சமயம் வாழ்க்கைக்கும் கல்விமுறைக்கும் அடிப்படையாக அமைந்திருந்தது. வாழ்க்கையின் நோக்கங்களையும் இலட்சியங் களையும் நமக்களிப்பது சமயமாகும் என்று கருதப்பட்டது. எனவே நல்லொழுக்க—ஆன்மிகப்பயிற்சி கல்வியில் நடுவிடம் பெற்றது. கல்வியின் மேன்மையினையும், வாய்மொழி வழியே அறிவு பெறுதலின் சிறப்பினையும், சிறந்த ஆசிரியர்கள், மாணுக்கர்கள் ஆகியோரது நல்லுறவினையும், சமுதாயத்தில் ஆசிரியர்களது உயர் மதிப்பு நிலையினையும் இவ்விரு கல்வி முறைகளும் வலியுறுத்துகின்றன. ஆனல் பிராம்மணக்கல்வி முறை போலன்றித் தமிழகக் கல்வி முறையில் கல்வி வாய்ப்புகள் எவ்வித பாகுபாடுமின்றிச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்க்கும் அளிக்கப்பட்டன. வடமொழி பொதுமக்கள் மொழியாக இருந்த நிலை மாறிய பிறகும் பிராம்மணமுறைப் பள்ளிகளில் வடமொழி பயிற்று மொழியாகத் தொடர்ந்திருந்தது. இதனல் சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டுமே அவற்றினின்றும் சிறிது பயனடைந்தனர். தமிழகக் கல்வியில் இதுபோன்ற நிலை எழாததால் தமிழ் மக்கள் அனைவரும் சிறந்த பயனைப்பெற முடிந்தது. மற்றும் தமிழகக் கல்வி முறையில் பிராம்மணக் கல்வி முறை போன்ற, 'உபநயனம்' 'சமாவர்த்தனை'

போன்ற கல்விச் சடங்குகள் இடம் பெறவில்லை. குருகுல முறை போன்ற ஒன்று பரவலாகக் காணப்படவில்லை. கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் ஓரளவு ஊதியம் பெற்றும் வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிராம்மணக் கல்வி, தமிழகக் கல்வி ஆகியவற்றின் சிறப்புக் களுக்கு அடிப்படையில் முக்கியமாக அன்றைய நல்லாசிரியர்கள் காரணமாகவமைந்தனர் என்பதனை நாம் மறுக்க முடியாது. அன்று காணப்பட்ட ஆசிரியர்களைப் போன்ற பண்பாளர்கள் இன்றும் பெருமளவில் ஆசிரியப் பணியாற்றுதற்கு முன்வருவ ராயின் தமிழகக் கல்வியின் எதிர்காலம் சிறப்பு மிகுந்து விளங்கும் என்பதில் ஐயப்படத் தேவையில்லை.

## வினாக்கள்

1. வேத கால இந்தியச் சமுதாயத்தின் தன்மையையும் வாழ்க்கைக் குறிக்கோள்களையும் விவரிக்க.
2. பிராம்மணக் கல்வி முறையின் தொடக்கம், வளர்ச்சி ஆகியவற்றை விளக்குக.
3. குருகுலக்கல்வி முறையின் பொதுப் பண்புகளைக் குறிப் பிட்டு, இவை எந்த அளவுக்கு இன்று பொருத்தமானவை என்பதனை ஆராய்க.
4. குருகுலக்கல்வி முறையின் நல்லியல்புகள், குறைபாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதனை மதிப்பிடுக.
5. பண்டைய தமிழகச் சமுதாயத்தின் தன்மையினை விவரிக்க.
6. தமிழகக் கல்வி முறையின் நோக்கங்கள், கல்வி ஏற்பாடு, கற்பித்தல் முறைகள் ஆகியவற்றை விவரிக்க.
7. தமிழகத்தில் சங்க காலத்தில் காணப்பட்ட உயர்கல்வியின் நிலையினை மதிப்பிடுக.
8. பண்டைய தமிழகக் கல்வி, பிராம்மணக் கல்வி ஆகிய வற்றை ஒப்பிட்டு, இவற்றிடையே காணப்படும் பொதுப் பண்புகளையும் வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டுக.

# 3. பௌத்தக் கல்வி முறையும் இஸ்லாமியக் கல்வி முறையும்

## பௌத்த சமயத்தின் கோட்பாடுகள்

இந்து மதத் தோற்றத்துக்குப்பின் சுமார் கி.மு. 600-ல் எழுந்த பௌத்தமதம் தனது கருத்துக்களுக்கேற்ற ஒரு கல்வி முறையினை நம் நாட்டில் உருவாக்கிச் செயற்படுத்தியது. இதனை 'பௌத்தக் கல்வி,' (buddhist education) எனலாம். புத்தசமயம் தோன்றி வளர்ச்சி பெற்றதற்கு இந்து சமயத்தின் சில குறைபாடுகள் முக்கிய காரணங்களாக அமைந்தன. சாதிவேற்றுமைகளின் இறுகிய தன்மை, மதகுருக்களின் ஆதிக்கம், பயனற்றசடங்குகள் அதிக அளவு வலியுறுத்தப்பெற்றமை போன்றன இவற்றுள் சிலவாம். இவற்றை புத்த சமயம் எதிர்த்தது. 'நிர்வாணம்' (Nirvana) எனப்படும் வாழ்க்கைத் துன்பங்களினின்றும் முழுமையாக விடுபட்ட முக்திநிலையினை எய்துதல் புத்த சமயத்தின் இலக்காகக் கொள்ளப்பட்டது. அகிம்சை, அன்பு ஆகிய பண்புகள் வலியுறுத் தப்பட்டன. வேதங்களின் தெய்விக அடிப்படையைப் பௌத்தர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உடலை வருத்தும் தவங்களிலும் அவர் களுக்கு நம்பிக்கை இல்லை. இதேபோது இவ்விரு சமயங்களும் 'ஆத்மா', 'கர்மா', 'முக்தி' போன்ற பல கருத்துக்களை ஏற்கின்றன. பௌத்த மதம் இந்து மதத்தின் சில மாற்றங்களைக் கொண்ட பிரிவாகக் கருதுவோர் இரு சமயங்களிலும் காணப்படும் இப்பல்வேறு பொதுக் கோட்பாடுகளையும் கருத்துகளையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

### பௌத்தக் கல்வியும் பிராம்மணக் கல்வியும்

பௌத்தக் கல்வி முறைக்கும் பிராம்மணக் கல்வி முறைக்கு மிடையே பல ஒற்றுமைகள் உள்ளன. கௌதம புத்தரது இளம் பருவ ஆசிரியர்கள் பிராம்மணர்களேயாம். கல்வியின் சமய அடிப்படை இவ்விரு கல்விமுறைகளிலும் வலியுறுத்தப்படுகிறது; கல்விமுறை, ஆசிரிய மாணுக்க உறவின் தன்மை ஆகியவற்றிலும்

ஒற்றுமை காணப்படுகிறது. இதேபோது இவ்விரு கல்விமுறைகளுக்கிடையே குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகளும் உள்ளன. பிராம்மணக் கல்வியைப்போல் வேதங்களைக் கற்றல் என்ற அடிப்படையில் பௌத்தக் கல்வி அமையவில்லை. பௌத்தப் பள்ளி ஆசிரியர்கள் பிராம்மணர்களாகவில்லை. பௌத்த சமயப் பள்ளிகளில் சாதிவேறுபாடுகள் பாராட்டப்படவில்லை; தகுதியுள்ள எல்லாப் பிரிவினரும் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு கல்வி அளிக்கப்பட்டனர். பொதுவாக பிராம்மணக் கல்விமுறை தனிப்பட்ட மாணுக்கனிடம் அதிக கவனம் செலுத்தியது; ஆனல் பௌத்தக் கல்விமுறையில் மாணுக்கர்களைக் குழுக்களாக அமைத்துக் கற்பித்தல் கையாளப்பட்டது. பௌத்தப் பள்ளிகளில் பிராம்மணப் பள்ளிகளைக் காட்டிலும் குடியாட்சிப்பண்பு பரவிக் காணப்பட்டது. வேதகாலப் பள்ளிகளில் குரு ஓர் எதேச்சாதிகாரி போன்று காணப்பட்டார். ஆனல் பௌத்தப் பள்ளிகளின் நிருவாகத்தில் மாணுக்கர்களும் பங்கு கொண்டனர்; அவர்களது கருத்துகளுக்கும் மதிப்பு தரப்பட்டது. மற்றும், பௌத்தப் பள்ளிகளில் தாய்மொழி பயிற்று மொழியாகக் காணப்பட்டது; வடமொழியன்று. தனிப்பட்ட ஆசிரியர்களது குருகுலங்களுக்குப் பதில் ‘விஹாரங்கள்’ (viharas) கல்விக் கூடங்களாகச் செயற்பட்டன.

### பௌத்தக் கல்வியின் பொது இயல்புகள்

சமுதாய மக்கள் அனைவருக்கும் தேவையான கல்வி பௌத்தப் பள்ளிகளில் அளிக்கப்பட்டதெனினும், இவற்றின் முக்கிய நோக்கம் பௌத்த சமய குருக்களான பிட்சுக்களை உருவாக்குவதாகும். உலகத் தொடர்புகளினின்றும் முழுவதும் விடுபட்டு ஆன்மிக நிர்வாணத்தைப் பெறச் சிறந்தமுறை உலகினின்றும் ஒதுங்கி வனங்களில் வசித்துத் தியானத்தில் ஈடுபடுவதுதான் என்பது புத்தபிரானது கருத்தாக இருப்பினும் தீவிர மனவுறுதியுள்ள ஒரு சில பிட்சுக்கள் மட்டுமே இக்கருத்தினைப் பின்பற்றினர். பெரும்பான்மையான பிட்சுக்கள் விஹாரங்கள் எனப்படும் பௌத்த மடாலயங்களில் தங்கி வாழ்க்கை நடத்தினர். இவ் விஹாரங்கள் நாட்டின் பல பகுதிகளில் நிறுவப்பட்டன. இவை பௌத்தப் பள்ளிகளாகவும் திகழ்ந்தன. பௌத்த சமயப் பிட்சுவாகப் பணிபுரிய விரும்புவோர் இவ்விஹாரங்களின் பிட்சுக்களது சங்கங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவர்களது மேற்பார்வையில் பயிற்சி பெற்றனர். பிட்சுக்களின் சங்கங்களில் சேர்த்துக் கல்விப்பயிற்சிபெற விரும்புவோர்க்குச் சில எளிய கட்டுப்பாடுகள் உண்டு. அவர்கள் வியாதியற்றவர்களாக இருக்க வேண்டும்; அடிமைகள், கடன்பட்டோர், அரசர்களது பணி

யாட்கள் போன்றோர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. சுமார் 8 வயதில் மாணாக்கர்கள் விஹார பௌத்த சங்கங்களில் சேரலாம். இதற்கு இவர்களது பெற்றோரது அனுமதி தேவைப்படும். இவ்வாறு சேர விரும்புவோர் தங்களது தலைமுடியை நீக்கி, மஞ்சள் ஆடை அணிந்து சங்கத்தின் பிட்சுக்கள் யாவரையும் தலைவணங்கிப் பணிந்து அவர்கள் யாவருக்கும் கீழ்நிலையில் உட்கார்ந்து புத்த பகவானிடம் தஞ்சம் புகுவதாகவும், தர்மத்திடம் தஞ்சம் புகுவதாகவும், சங்கத்திடம் தஞ்சம் புகுவதாகவும் வாக்குக் கொடுக்க வேண்டும். இதன் பின்னர், இவர்கள் சங்கத்தில் முதன் முதலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு, விஹாரத்தில் கல்வி பயிலத்தொடங்கினர். இவ்வாறு புத்த சங்கத்தில் சேரும் நிகழ்ச்சி உபநயனம் போன்ற ஒரு கல்விச் சடங்காகக் கருதப்பட்டு, இது பப்பஜ்ஜா (Paffajja) எனப்பட்டது. சங்கத்தின் புதிய இளம் உறுப்பினர்கள் சிரமணாக்கள் (Shramanas) எனப்பட்டனர். சங்கத்தின் முழு உறுப்பினராக ஒருவர் 20 வயதிற்குப் பின்னரே ஆகமுடியும். இம்முழு உறுப்பினர் உலக வாழ்க்கையைத் துறந்து தாம் வாழ்நாள் முழுவதையும் சமயப் பணிக்குச் செலவிடுபவர் ஆவார். முழு உறுப்பினராக ஒருவன் சங்கத்தினால் ஏற்கப்படும் நிகழ்ச்சி அல்லது சடங்கு 'உபசம்பாதம்' (Upasampada) எனப்பட்டது புத்த சங்கங்களில் சேர சாதி வேறுபாடு ஏதுமின்றி தகுதியுள்ளோர் அனைவருக்கும் உரிமையுண்டு. சேர்ந்தபின் விஹாரத்தின் கட்டுப்பாடுகளுக்கு முழுமையாக இவர்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

புத்த விஹார சங்கங்கள் சமயக் கல்வியுடன் வாழ்க்கைக்கான கல்வியினையும் போதிக்கத் தொடங்கின. புத்த சங்கத்தில் முதலில் ஒருவன் சேர்ந்தவுடன் அவ்விஹார பிட்சுக்களில் ஒருவரைத் தனது ஆசிரியராகத் தேர்ந்தெடுத்து, அவனது வேண்டுகோளை அவர் ஏற்றால், அவரது மாணாக்கனாக அவரிடம் கல்வி பயிலவேண்டும். உடல் தூய்மை (Chastity) ஏழ்மை (Poverty), உலகின் புலனின்பங்களை ஒதுக்கித் தள்ளுதல் (Abstinence) ஆகியன மாணாக்கர்களால் பின்பற்றப்படவேண்டும். உணவு, உடைகள் பற்றிய ஓரளவு கடுமையான விதிகள் விஹாரங்களில் செயற்படுத்தப்பட்டன. பிச்சை எடுத்து பிட்சுக்கள் தமக்கான எளிய உணவினைத் தேடிப் பெறவேண்டுமென்றும், விஹாரத்தில் செய்யப்பட வேண்டிய பல்வேறு உடலுழைப்பு வேலைகளைப் புதிதாகச் சேர்ந்த இளம் மாணாக்கர் செய்ய வேண்டுமென்றும், அனுபவமிக்க பிட்சுக்கள் தியானத்திலும், புத்தபகவானது போதனைகளை மேலும் ஆழ்ந்து கற்பதிலும், இளம் மாணாக்கர்களுக்குக் கல்விப் பயிற்சியளிப்பதிலும், புத்த சமயத்தைப் பரப்புவதிலும் தங்களது காலத்தைக் கழிக்க வேண்டுமென்றும் நியதிகள் காணப்பட்டன.

தவறுகளுக்குத் தகுந்த தண்டனையளிக்கப்பட்டது; பெரும் தவறுக்குச் சங்கத்தினின்றும் வெளியேற்றப்படுதலும் தண்டனையாக சிலபோது அளிக்கப்பட்டது.

பௌத்தக் கல்வியிலும் சமயமும் ஆன்மிகமும் நடுவிடம் வகித்தன. சமய இலக்கியங்களை ஆழ்ந்து கற்றல் முக்கிய கல்விச் செயலாகவிருந்தது. கல்வியில் இரண்டு நிலைகள் குறிப்பிடப்பட்டன. துவக்க நிலையில் படிப்பது, எழுதுவது போன்றனவும், தொடக்க கணிதமும் கற்பிக்கப்பட்டன. உயர் நிலையில் சமயம், தத்துவம், மருத்துவம் போன்றனவும் இடம் பெற்றன. வேதங்களும் சிலபோது கற்பிக்கப்பட்டன. பத்தொன்பது வகையான கலைகள் கல்வி ஏற்பாட்டில் இடம் பெற்றன எனப்படுகிறது. நலந்தா, தட்சசீலம் போன்ற பௌத்தப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி பல்வேறு துறைகளில் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டு வந்ததென்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன. கற்பித்தல் முறை பெருமளவு வாய்மொழியாக (Oral) அமைந்திருந்தது. கற்பித்தலில் கருத்துக்கள் செயல்கள் ஆகியவற்றின் தொடர்பு வலியுறுத்தப்பட்டது. விதி வருமுறை நன்கு (inductive method) பயன்படுத்தப்பட்டது. சர்ச்சைகள், விவாதங்கள் ஆகியனவும் கல்வி முறைகளாக நன்கு பயன்படுத்தப்பட்டன. உயர்கல்வி பெற்ற பிட்சுக்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்வது அவர்கள் பெற்ற கல்வியை முழுமையாக்க உதவும் எனப்பட்டது. மற்றும், பௌத்தக் கல்விக் காலத்தில் பல்வேறு நகரங்களுக்குச் சென்று ஆங்காங்கே வேண்டுவோர்க்குக் கல்வி புகட்டும் நடமாடும் ஆசிரியர்களும் காணப்பட்டனர்.

புத்த விஹாரங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணுக்கர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், தமது அறைகளையும் விஹாரத்தின் பிற பகுதிகளையும் எவ்வாறு தூய்மையாகவும் துப்புரவாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பன பற்றித் திட்டவட்டமான விதிகள் இருந்தன. மாணுக்கர்களது ஆன்மிக எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், கற்பித்தல், வினுக்களை கேட்டல், சிந்தித்துணர ஊக்குவித்தல், விளக்கக் குறிப்புக்களைத் தருதல் போன்ற முறைகளின் வழியே ஆசிரிய பிட்சுக்கள் உதவினர். ஆசிரியரிடம் மாணுக்கர்கள் மதிப்பும் பக்தியும் கொண்டு ஒழுகுதல் போலவே, தம் மாணுக்கர்களிடம் ஆசிரியர் அன்பும் பரிவும் கொண்டு நடந்துகொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டது. ஓர் ஆசிரியராக இருத்தற்கான தகுதியினைப்பெற ஒருவர் குறைந்தது பத்து ஆண்டுகளாவது பிட்சுவாகவிருந்திருத்தலோடு, பௌத்தமதக் கோட்பாடுகளை நன்கு கற்று இருத்தல்வேண்டும். பிட்சுவாகக் கல்வி பயின்றுமுடிய குறைந்தது பத்து ஆண்டுகள்

ஒருவனுக்குத் தேவைப்படுவதாகும். ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஆசிரிய மாணுக்கரது உறவின் தன்மை பிராம்மணக் கல்வி முறையில் காணப்பட்டது போன்றே இங்கும் காணப்பட்டது.

## பௌத்தக் கல்வியின் வளர்ச்சி

புத்த விஹாரங்களின் தொடக்கக் காலத்தில், இவற்றில் அளிக்கப்பட்ட கல்வியும் பயிற்சியும் பிட்சுக்களாகப் பணிபுரிய விரும்புவோர்க்கானவையாகவே இருந்தன. உலகின் நடைமுறை வாழ்க்கையுடன் இணைந்த பாடங்களும் செயல்களும் கல்விப் பயிற்சியில் இடம் பெறவில்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, பிட்சுக்களிடையே ஒரு கருத்து உருவாகிற்று. ஒருவன் முழுமை யடைவதற்குப் பல நிலைகளைக் கடக்க வேண்டுமென்பதும், இவற்றுள் சிலவற்றைக் கடக்க உலக வாழ்க்கை, உலக நிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட பாடங்களைப் பயின்று அறிவு பெறுவது தேவைப்படுவதாகும் என்பதும் இக்கருத்தாகும். இதன் விளைவாக பௌத்த சமய இலக்கியங்கள், கருத்துக்கள் ஆகிய வற்றுடன் பிற கலைகளையும் விஹாரப் பள்ளிகளில் பிட்சுக்கள் கற்பிக்கத் தொடங்கினர். இக்கால பிராம்மணப் பள்ளிகளில் வேதங்களுடன் பிற பாடங்களையும் மாணுக்கர் பயிலும் நிலையும் அவ்வாறு தாமும் பயிலவேண்டும் என்று இவர்களை ஊக்கு வித்திருக்கக்கூடும். இவ்வாறுன பல பௌத்த விஹாரங்கள் நாளடைவில் உயர்கல்விக் கூடங்களாகச் சிறப்புப்பெற்று, சீனு போன்ற வெளிநாடுகளினின்றும் அறிஞர்களைக் கவரும் அளவுக்குப் புகழ் எய்தின. சீனு, ஜப்பான், திபெத் போன்ற நாடுகளினின்றும் கல்விபயில மாணுக்கர்கள் வந்தனர். பாகியன் (Fa-hien), இவரைப் பின்தொடர்ந்து வந்த ஹியன்-சியாங் (Hiuen-Tsiang), ஐ-சிங் (I-Tsing) ஆகிய சீன யாத்திரீகர்கள் பாடலிபுத்திரம் போன்ற இடங் களில் நிறுவப்பட்டிருந்த விஹாரங்களின் சிறப்புப்பற்றியும் வாலபி (Valabi), நலந்தா (Nalanda), விக்ரமசீலா (Vikramashila), தக்கசீலா (Taxila) போன்ற பௌத்தப் பல்கலைக் கழகங்களின் சிறப்புப்பற்றியும் வேறுபல பௌத்த மடாலயங்கள், கல்விச் சாலைகள் ஆகியவற்றின் பணிகள் பற்றியும் நன்கு விவரித்துள்ளனர். புத்தரது கொள்கைகளைக் கற்பிக்கவென நிறுவப்பட்ட இக்கல்விக் கூடங்கள் நாளடைவில் சிறந்த வளர்ச்சி பெற்றுப் பொதுக் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்து, பிட்சுக்களாகப் பின்னர் பணிபுரிய விரும் பும் மாணுக்கர்களுக்கு மட்டுமன்றி, பிற வாழ்க்கைப் பணிகளை மேற்கொள்ளப் போகும் மாணுக்கர்களுக்கும் கல்வி புகட்டுவதாக அமைந்தன. புத்தமதம் நம் நாட்டில் ஓரளவு மங்கிப்போகும் வரை இவ்விஹாரங்கள் தொடர்ந்து கல்விக் கூடங்களாகச் செயற் புரிந்தன வென்பதனையும், தமிழ் நாட்டிலும் இத்தகைய விஹாரப்

பள்ளிகள் ஒருபோது நன்கு செயற்பட்டனவென்பதனையும் நாம் வரலாற்று வாயிலாக உணர்கிறோம்.

பெண்களது கல்வியில் பௌத்த சமயம் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொள்ளவில்லை எனலாம்; தொடக்கத்தில் பிக்குணிகளாகப் பணிபுரிய விரும்பும் பெண்களுக்குத் தனிப்பட்ட விஹாரப் பள்ளிகள் நிறுவப்பட்டன. சில பெண்கள் சிறந்த பௌத்தத் தத்துவ வல்லுநர்களாகவும் திழந்தனரென்றும், அசோக சக்ரவர்த்தியின் தங்கையான சங்கமித்திரை போன்ற பெண்கள் பௌத்த சமயத்தின் கோட்பாடுகளில் நன்கு கற்றுத் தேர்ந்து கடல்கடந்து சமயப் பிரசாரத்திற்குச் சென்றார் என்றும் நாம் அறிவோம். ஆனால் காலப்போக்கில், பிராம்மணக் கல்வியாளர்கள் நினைத்தது போன்றே பௌத்தர்களும் பெண்கள் ஆண்களுக்குத் தாழ்ந்தவர்களெனக் கருதத் தொடங்கினர். பெண்களது சமூக மதிப்புநிலை குறையக் குறைய பௌத்தக் கல்வி முறையிலும் பெண் கல்வி புறக்கணிக்கப்படலாயிற்று.

## மதிப்பீடு

பௌத்தக் கல்வி முறையிலும் குறைபாடுகள் இருந்ததை ஆராய்ச்சியாளர் சுட்டிக்காட்டியுள்ளனர். பிராம்மணக் கல்வி முறை போன்று இம்முறையிலும் சமய ஆதிக்கம் அதிக அளவு காணப்பட்டது; உடலுழைப்புக் கலைகளும் கைப்பணிகளும் பொதுவாக கீழ்நிலைப்பட்டவை என்ற கருத்தும் நிலவியது. பொதுமக்களிடையே கல்வி பரவும் முயற்சிகளில் அதிக அளவு கவனம் செலுத்தப்படவில்லை; சமுதாயத்தின் உயர் மட்டத்தினரே அதிக அளவு கல்விப் பயன்பெற முற்பட்டனர். போர்க்கலை (Military Science) முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக, மக்களது பாதுகாப்புத் திறன் குலைக்கப்பட்டு பிற்காலத்தில் வேற்று நாட்டினர் எளிதில் நம்மைப் படையெடுத்து வெற்றி கொள்ளக்கூடிய ஒரு நிலைமையையும் இக்கல்வி முறை தோற்றுவித்தது என்போரும் உண்டு. மற்றும் சில பிட்சுக்களின் ஒழுக்கக் குறைவான நடத்தையும் பௌத்தக் கல்வி முறையின் செல்வாக்கினைக் குறைத்தது என்பர். இக்குறைபாடுகளின் விளைவாக, பல சிறப்புப் பண்புகளைப் பெற்றிருந்தும் பௌத்தக் கல்விமுறை மறையத் தொடங்கி மீண்டும் நாட்டில் பிராம்மணக் கல்விமுறை பரவத் தொடங்கியது. பௌத்தக் கல்விமுறை நாட்டில் மிகச் சிறந்து விளங்கிய காலத்திலும் பிராம்மணக் கல்வி முறைப் பள்ளிகள் தொடர்ந்து இயங்கிவந்தன என்பதனையும் ஈண்டுக் குறிப்பிடவேண்டும். நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்குப்

பௌத்தக் கல்விமுறை பெருமளவு உதவியது. எல்லோர்க்கும் கல்வியளிக்க முற்பட்டதனால் பௌத்தப் பள்ளிகளை இன்றைய பொதுமக்கட்கான பள்ளிகளின் முன்னோடிகளாகக் கருதலாம்.

## இஸ்லாமியக் கல்விமுறை

### இஸ்லாமியக் கல்வி முறையின் வளர்ச்சி

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் இந்தியாவில் இஸ்லாமிய ஆதிக்கம் எழத் தொடங்கிய காலமாகும். கஜினி மகம்மதின் படையெடுப்பு இதனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பின்னர் முஸ்லிம் மன்னர்களது ஆட்சி இந்தியாவில் ஓரளவு நிலைத்தவுடன் அவர்கள் தங்களது கருத்துகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதிய கல்வி முறையினை நமது நாட்டில் புகுத்தினர். கல்வி புகட்டுதல் ஒரு புனிதக் கடமையாக முஸ்லிம் சமயத்தினரால் போற்றப்படுவதாகும். கல்விக்கும் கல்விப் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் இம் மதத்தினரிடையே என்றுமே சிறந்த மதிப்பு உண்டு. இஸ்லாமியக் கல்விமுறை (Islamic education) எழுந்ததன் விளைவாக தத்துவம், மருத்துவம், பல்வேறு கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டது; அரபு, பாரசிக மொழிகள் நம் நாட்டில் பரவின. 'மக்தாபுகள்', 'மதரசாக்கள்' எனப்படும் பல கல்விக்கூடங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் எழுந்தன. இத்தகைய இஸ்லாமியப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்கள் சிறந்த அறிவும் நல்லொழுக்கமும் கொண்டவர்களாகவும் சமூகத்தினரின் நன்மதிப்பினைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். இப்பள்ளிகளில் ஆசிரிய மாணாக்கரிடையே காணப்பட்ட தொடர்பின் தன்மை அன்பு, பரிவு போன்றவற்றின் அடிப்படையிலே அமைந்து காணப்பட்டது. இந்தியாவில் அரசாண்ட முஸ்லிம் மன்னர்களில் பலர் மக்களது கல்வி வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டினர்; பல பள்ளிகள், கல்லூரிகள், நூல் நிலையங்கள் போன்றவற்றை ஆங்காங்கு நிறுவினர். இத்தகைய மன்னர்களது எடுத்துக்காட்டைப் பின்பற்றி பல முஸ்லிம் பிரபுக்களும் கல்விக் கூடங்களை நிறுவுதலில் உதவினர். அரசு முயற்சி, தனியார் பணி ஆகிய இரண்டின் இணைந்த விளைவாக இஸ்லாமியக் கல்வி நம் நாட்டில் வளர்ந்தது. தொடக்கக்கால இஸ்லாமிய அரசுகளின் கல்விப் பணியைக் காட்டிலும் பின்னர் வந்த முகலாய மன்னர்களது கல்விப் பணி மிகக் குறிப்பிடத்தக்கதாகும். கல்வி வளர்ச்சிக்கு உதவ திட்டமான ஒரு கோட்பாடு அக்பரது ஆட்சிக் காலத்தில் வகுக்கப் பட்டது. பல வடமொழி நூல்களை அவர் பாரசிக மொழியில் பெயர்க்கச் செய்தார். வரலாறு, அறிவியல் ஆகிய துறைகளில்

பல அரிய நூல்களினைக்கொண்ட நூல்நிலையத்தை நிறுவினார்; நுண்கலைகளது வளர்ச்சியினை ஆதரித்தார். இந்து முஸ்லிம் சிறுவர்கள் இணைந்து கல்வி பயிலுவதனை ஊக்குவித்தார். பதேபூர் சிக்ரி, ஆக்ரா போன்ற இடங்களில் உயர்கல்வி நிலையங்களை நிறுவினார். அக்பருக்குப்பின் அரசாண்ட ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோர் அக்பரைப் போன்று கல்வியில் அத்துணை ஆர்வங் காட்டவில்லையாயினும் கல்விப் பணிகளில் குறுக்கிடவில்லை. ஔரங்கசீப்பின் ஆட்சியில் இந்துக் கல்வி நிலையங்கள் ஒடுக்கப் பட்டனவெனினும் இஸ்லாமியப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு அவர் ஏராளமாக உதவினார். அவருக்குப்பின் அரசாண்டோரும் தொடர்ந்து கல்வி வளர்ச்சிக்கு உதவினர்.

இஸ்லாமியக் கல்வியின் நோக்கங்கள் பலவாகும். அறிவு ஒளியினை இஸ்லாமியச் சமயத்தினர் யாவரிடமும் பரவச் செய்தல் இக்கல்வி முறையின் ஒரு நோக்கமாகும். கல்வியின்றி கடவுளருளைப் பெறமுடியாது. பொதுக்கல்வி சமயக் கல்வியுடன் இணைந்ததாகக் கருதப்பட்டது. கல்விவழியே இஸ்லாத்தினைப் பிறரிடம் பரப்பும் நோக்கமும் இஸ்லாமியக் கல்விமுறையில் காணப்பட்டது. இஸ்லாமிய சமயக் கோட்பாடுகளினடிப்படையில் எழுந்துள்ள சமூக அறநெறிக் கோட்பாடுகளை விளக்கும் கருவியாகவும் கல்வி அமைந்தது; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி உதவுவது வலியுறுத்தப்பட்டது. மற்றும், இஸ்லாமியக் கல்வி சில அரசியல் நோக்கங்களையும் அரசர்களது அரசியல் நலன்களையும் அடிப்படை யாகக் கொண்டும் செயற்பட்டது.

மக்தாபுகளும் மதரசாக்களும்

இஸ்லாமிய சமயம் இந்தியாவில் பரவி நிலைத்த பின்னர் சமயப் பணிக்காகப் பல மசூதிகள் நிறுவப்பட்டன. இம் மசூதிகளுடன் இணைந்து இஸ்லாமியப் பள்ளிகள் செயற்பட்டன. இஸ்லாமியப் பள்ளிகள் இருவகைப்பட்டு காணப்பட்டன. 'மக்தாபுகள்' (Maktabs) எனப்படும் துவக்கக் கல்வி நிலைக்கான பள்ளிகள் மசூதி களின் ஒரு பகுதியில் செயற்பட்டன. இவற்றின் முக்கிய பணி இஸ்லாமியப் புனித நூலான திருக்குர்ஆனிலிருந்து தினத் தொழுகைக்குத் தேவைப்படும் பகுதிகளை மாணாக்கர்களுக்குக் கற்பிப்பதாகும். இதனுடன் படிக்க, எழுத, எளிய கணக்குகளைப் போட இப்பள்ளிகளில் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட்டது: முஸ்லிம் சிறுவன் 4 ஆண்டு 4 மாதம் 4 நாட்கள் வயதினை அடையும்போது அவன் மக்தாபுக்கு அழைத்துவரப்பட்டு அவனது கல்வி தொடங்கப்பட்டது. இத்தொடக்கச் சடங்கு 'பிஸ்மில்லா' எனப்பட்டது. இப்போது சிறுவன் ஒரு சில எழுத்துகளை

உச்சரிக்கவும் திருக்குரானிலிருந்து ஓரிரு புனித வாக்கியங்களைத் திரும்பக் கூறவும் வேண்டும். இவ்வாறு செய்ய இயலாவிடினும் அச்சிறுவன் 'பிஸ்மில்லா' எனக் கூறவேண்டும். இதன் பின் அவனது முறையான கல்வி தொடங்குவதாகக் கருதப்பட்டது. மக்தாபுகள் பொதுமக்களுக்கானவை, வசதியுள்ள சில முஸ்லிம் குடும்பத்தினர் தமது குடும்பச் சிறுவர்களுக்குத் தொடக்கக் கல்வியைத் தனிப்பட்ட முறையில் தம் இல்லங்களில் அளிப்பதும் உண்டு. மக்தாபுகளில் சிலபோது இந்து சிறுவர்கள் சிலரும் கல்வி பயின்றனர் எனப்படுகிறது. இஸ்லாமிய உயர்கல்விக்கான நிலையங்கள் 'மதரசாக்கள்' (madrasahs) எனப்பட்டன. இவை தற்காலக் கல்லூரிகளுக்கு ஒப்பானவை. இவற்றுடன் மாணவ இல்லங்களும் (hostels) சிலபோது இணைந்திருந்தன. குருகுலங்கள், விஹாரங்கள் போன்றன்றி இங்கு வசித்துக் கல்வி பயின்ற மாணுக்கர்களது வாழ்க்கை சிறிது வசதியுள்ளதாகவே இருந்தது. மதரசாக்களும் பொதுவாக மசூதிகளுடன் இணைந்தே செயற்பட்டன. மதரசாக்களில் தலைசிறந்த அறிஞர்கள் பல்வேறு பாடப் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினர். மக்தாபில் கல்வி கற்று முடிந்த பின்னர் மதரசாவில் மாணுக்கன் சேரலாம். கல்விக் காலம் இவற்றில் சுமார் 12 ஆண்டுகள் நீடித்தது. மதரசாக்களின் மேற்பார்வை தனிப்பட்டவர்களது பொறுப்பில் பொதுவாக இருப்பினும் இவற்றுக்கு அரசர்கள் மானியம் அளிப்பதும் உண்டு. இம் மானியம் நிலமாகவோ நிதியாகவோ இருக்கக்கூடும். மதரசாக்களின் கல்வித் திட்டத்தில் உலகியல் (Secular) பாடங்களும் சமய போதனையும் காணப்பட்டன. உலகியல் பாடங்களில் அரபு மொழி இலக்கியம், தருக்கம், சொற்கோப்புக்கலை (rhetoric) தத்துவம் சட்டவியல், சமயவியல் (theology), மருத்துவம், வரலாறு, புவியியல் போன்றன கற்பிக்கப்பட்டன. அரபுமொழி பயிற்று மொழியாகவிருந்தது. பாரசீக மொழியும் கற்பிக்கப்பட்டது. திருக்குரானை நன்கு ஆழ்ந்து கற்பது சமயக் கல்விப் பகுதியில் இடம் பெற்றது.

### இஸ்லாமியக் கல்வி முறையின் அமைப்பு

மக்தாபுகளிலும் மதரசாக்களிலும் கற்பித்தல்முறை வாய் மொழியாகவே பெருமளவு அமைந்திருந்தது. நினைவில் வைக்க நெட்டுருச் செய்வது வலியுறுத்தப்பெற்றது. கட்டுப்பாடு, ஒழுங்கு, பணிவு ஆகியன மாணுக்கர்களது நடத்தையில் எதிர் பார்க்கப்பட்டது. மதரசாக்களில் விரிவுரைகள், பகுத்தும் தொகுத்தும் கருத்துகளை ஆராய்தல், மாணுக்கனிடம் தனிக் கவனம் செலுத்துதல் போன்றனவும் காணப்பட்டன. ஓரளவு வயது முதிர்ந்த மாணுக்கர்கள் ஆசிரியருக்குத் துணையாக இருந்து,

பள்ளிகளில் புதிதாகச் சேர்ந்த மாணுக்கர்களுக்குக் கற்பிக்கும் முறையும் மக்தாபுகளில் இருந்தது. ஒழுக்கம் தவறி நடக்கும் மாணுக்கர்களுக்குக் கடும் தண்டனைகள் அளிக்கப்பட்டன. இதே போது நன்மாணுக்கர்களுக்கு வெகுமதிகள் தரப்பட்டன. சிறந்த ஆற்றல்பெற்ற மாணுக்கர் தொடர்ந்து படிப்பதற்கு அவர்களுக்குப் பொருளுதவியும் தரப்பட்டது. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி இஸ்லாமியக் கல்வி முறையில் ஆசிரியர்களுக்குச் சிறந்த மதிப்பு அளிக்கப்பட்டது. ஆசிரியர்களும் தமது மாணுக்கர்பால் பரிவுடன் நடந்துகொண்டனர்.

இஸ்லாமியக் கல்விமுறை இலக்கியம், பல்வேறு நுண் கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியினை ஆதரித்து ஊக்குவித்தது. முஸ்லிம் மன்னர்களது ஆதரவில் டில்லி, அஜ்மீர், ஆக்ரா, பிடார், ஜான்பூர் போன்ற பல நகரங்களில் உயர்கல்விக் கூடங்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றின. நாட்டில் பல இடங்களில் தொழிற்கூடங்கள் (workshops) காணப்பட்டன. இவற்றில் தொழில் கற்போராக விருந்து (Apprentices) பல்வேறு தொழில்களுக்கான முறை யறிவினையும் செயற்பயிற்சியையும் பலர் பெற்றனர். போர்க்கலை முஸ்லிம் மன்னர்களது காலத்தில் சிறப்புமிக்க வளர்ச்சியைப் பெற்றது. ஆனுல் பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டு காணப் பட்டது. உயர்குடும்பப் பெண்கள் தங்களது இல்லங்களிலே தனிப்பட்ட முறையில் கல்வி கற்றனர். பொதுவாக நோக்கும் போது, இந்தியாவில் காணப்பட்ட இஸ்லாமியக் கல்விமுறை அச்சுக்கலை எழுவதற்குமுன் ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட கல்விமுறையினைப் பெருமளவு ஒத்திருந்தது எனக் கல்வியாளர்கள் குறிப்பிடுகின்றனர். மற்றும் இஸ்லாமியக் கல்விமுறை நம் நாட்டில் அரசர்களது செல்வாக்குடன் பரவிச் செயற்பட்ட காலத்திலும் பிராம்மணக் கல்வி முறையினடிப்படையில் நடத்தப் பட்ட பள்ளிகள் தொடர்ந்து இயங்கிவந்ததும் குறிப்பிடத்தக்க தாகும். இந்துப் பள்ளிகளுக்கும் இஸ்லாமியப் பள்ளிகளுக்கு மிடையே பல ஒற்றுமைகள் காணப்பட்டன என்பதும் தெளிவு. கல்வியின் நோக்கம், கற்பிக்கும் முறை, ஆசிரிய - மாணவத் தொடர்பு ஆகியவற்றில் இத்தகைய ஒற்றுமையை நாம் காணவியலும்.

## மதிப்பீடு

இஸ்லாமியக் கல்விமுறையில் பல நல்லியல்புகளும் உள்ளன ; அக்கல்வி முறையினுல் பல நல்விளைவுகள் எழுந்தன. இஸ்லாமியப் பள்ளிகள் தொடக்கத்தில் முஸ்லிம் சமயத்தினருக்கு மட்டுமே உதவிவந்தனவெனினும் காலம் செல்லச் செல்ல நாட்டின்

பிறசமயத்தினரது குழந்தைகளும் இவற்றில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். எனவே குறுகிய சமூக வேறுபாடுகளைக் களைந்து நாட்டு மக்களிடையே பண்பாட்டு ஒருமைப்பாட்டினை ஓரளவேனும் வளர்க்க இஸ்லாமியக் கல்விமுறை உதவியது. இஸ்லாமியக் கல்வி முறை உலகியல் கருத்துகளையும் சமயக் கருத்துகளையும் இணைந்த முறையில் கற்பிக்க முயன்றது அதன் சிறப்புகளில் ஒன்றாகும். கல்வி ஏட்டுப் படிப்பாகவிராமல், நடைமுறைப் பயனுள்ள ஒன்றாக உருவாக்கப்பட்டது. கல்வியின் இன்றியமையாமை மக்களுக்கு நன்கு உணர்த்தப்பட்டது. இதேபோது இம்முறையின் சில குறை பாடுகளின் விளைவாக, இது தொடர்ந்து பல நூற்றாண்டுகள் இந்தியாவில் செயற்பட்டும் நாடுமுழுவதும் பரவி வேரூன்ற இதனால் இயலவில்லை. இக்குறைபாடுகள் பின்வருவனவாம்: இஸ்லாமியக் கல்வியின் அடிப்படை சமயமாகவிருப்பினும் நாளடைவில் இதனை ஓரளவு மறந்து நடைமுறைப் பயனைமட்டும் அதிக அளவு வலியுறுத்துவதாக அது அமைந்தது. இஸ்லாமியக் கல்விக் கூடங்களிற் பல, காலத்தில் நிலைத்துச் செயற்படாமல் அவ்வப் போது தோன்றி மறைவனவாக இருந்தன. அரபு மொழியும் பாரசிக மொழியும் அதிக அளவு வலியுறுத்தப்பட்டன; நாட்டின் இயல்பான மொழிகள் இஸ்லாமியக் கல்வியில் பங்கு பெறாததன் விளைவாக, பொதுமக்கள் இதனின்றும் போதிய பயனைப் பெறவில்லை. பொதுமக்களுக்கான துவக்கக் கல்விக் கூடங்களாக நிறுவப்பட்ட மக்தாபுகளும் எதிர்பார்க்கப்பட்ட பயனைப் பொது மக்களுக்கு அளிக்கவில்லை. மதரசாக்களில் கற்பித்தல் முறைகள் பெருமளவு நெட்டுருச் செய்தலை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததனால் தந்நம்பிக்கையூட்டும் தானே கற்கும் முறைகள் புறக்கணிக்கப்பட்டன. பெண் கல்வியை முழுமையாகப் புறக் கணித்ததும் இஸ்லாமியக் கல்வியின் ஒரு முக்கிய குறைபாடாகும்.

## வினாக்கள்

1. பௌத்தக் கல்வியின் வளர்ச்சியை விவரிக்க. இக்கல்வி முறையின் தன்மை யாது ?

2. பௌத்தக் கல்வி முறையினை பிராம்மணக் கல்வி முறை யோடு ஒப்பிட்டு ஆராய்க. பௌத்தக் கல்வி பிரம்மணக் கல்வி முறையின் ஒரு கிளையேயாகும் என்னும் கூற்றினை நீவிர் ஏற்கிறீரா ?

3. பௌத்தக் கல்வி முறையில் பெண் கல்வி எத்தகைய நிலையில் காணப்பட்டது ?

4. பௌத்தக் கல்வி முறையின் சிறப்பியல்புகளையும் குறை பாடுகளையும் விளக்குக.

5. இஸ்லாமியக் கல்வி வளர்ச்சியினை விவரிக்க. இஸ்லாமியக் கல்வியின் பின்னமைந்த தத்துவத்தினை விளக்குக.

6. இஸ்லாமிய மக்தாபுகள் மதரசாக்கள் ஆகியவற்றில் அளிக்கப்பட்ட கல்வி பற்றிச் சிறு குறிப்பு வரைக.

7. இஸ்லாமியக் கல்வி முறையின் நற்பண்புகளையும் குறை பாடுகளையும் குறிப்பிடுக.

# 4. நாட்டுக் கல்வி

## நாட்டுக் கல்வியின் அமைப்பு

சமயத் தொடர்புகொண்ட இந்து, இஸ்லாமியப் பள்ளிகளுடன் இணைந்த வகையில் நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் எல்லாப் பிரிவினருக்கும் பொதுவான துவக்கப் பள்ளிகள் தோன்றலாயின. வர்த்தகம், விவசாயம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்தோரது குழந்தைகளுக்கு எழுதவும், படிக்கவும், அவர்கள் ஓரளவு கணித அறிவு பெறவும் கற்பிக்கவே இப்பள்ளிகள் எழுந்தன. இவை 'பாடசாலைகள்' எனப்பட்டன; தமிழ்நாட்டில் இவை 'திண்ணைப் பள்ளிக்கூடங்கள்' என்றும் குறிப்பிடப்பட்டன. இப்பள்ளிகளில் அளிக்கப்பட்ட கல்வியின் தரம் இப்பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களைப் பொறுத்து காணப்பட்டது. இவை உயர்தரமான கல்வியை அளித்தன எனப் பொதுவாகக் கூறவியலாது. கல்வியின் நோக்கம் குறுகியதாக அமைந்திருந்தது. இத்திண்ணைப் பள்ளி ஆசிரியர்களது நிலையும் உயர்ந்ததாகவில்லை. இத்தகைய பள்ளிகளுக்குப் பணவசதி, கற்பித்தலுக்கான பிறவசதிகள் போன்றன மிகக் குறைந்து காணப்பட்டாலும் பொதுமக்கள் ஓரளவேனும் கல்விபெற இவை உதவின என்பது மறுக்கமுடியாது. ஆங்கிலேயர் களது வருகையினால் நாட்டில் காணப்பட்ட பாடசாலைகள், மக்தாபுகள், மதரசாக்கள், வங்காளத்திற் செயற்பட்ட 'டால்' (Tols) எனப்படும் கல்விக்கூடங்கள், தென்னிந்திய 'அக்ரஹாரங்கள்' போன்றவற்றின் கல்விச் செல்வாக்கு தொடர்ந்து குறைந்து வந்த காலத்தில் இத்திண்ணைப் பள்ளிகள் பொதுமக்களது கல்வித் தேவையைச் சிறிதளவிலேனும் பூர்த்தி செய்தனவெனலாம்.

ஆங்கிலேயரது வருகைக்கு முன்னும், அவர்கள் வந்த பின்னர் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற தொடக்கக் காலங்களிலும் நம் நாட்டில் காணப்பட்ட கல்வி முறைபற்றி ஓரளவு அறிந்து கொள்வது பயனுள்ளதாகும். இக்கல்வியை நாட்டுக் கல்வி (Indigenous education) எனக் கல்வி வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். பாடசாலைகள், திண்ணைப்பள்ளிகள், மக்தாபுகள் போன்ற யாவற்றின் கல்வி அமைப்புக்களும் நாட்டுக்கல்வி

என்பதுவ் அடங்கும். நாட்டுக்கல்வி பற்றிய முழுமையான விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை; அக்கல்வியின் இயல்பு, அது நாட்டில் பரவியிருந்த அளவு, மாணுக்கர் சேர்க்கை போன்றன பற்றி நம்பத்தகுந்த புள்ளிவிவரங்கள் கிடையாது. நாட்டுக்கல்வி பற்றிய விவரங்களைச் சேகரிக்க 19-ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேய அரசினர் ஒரு முயற்சியை மேற்கொண்டனர். ஆங்கில ஆட்சிக்கு உதவும் வகையிலும் அதேபோது சிக்கனமான முறையிலும் ஒரு கல்வி முறையினை உருவாக்க இம்முயற்சி அவர்களுக்குத் தேவைப்பட்டது. சென்னை, பம்பாய், வங்காளம் ஆகிய மாகாணங்களில் (Provinces) இம்முயற்சி செயற்படுத்தப்பட்டு, நாட்டுக் கல்விபற்றி பல விவரங்கள் திரட்டப்பட்டன. இவை நாட்டின் பிறபகுதிகளுக்கும் பொருந்தும் என்று கூறவியலா விடினும் அக்காலத்தில் நாட்டின் கல்வி நிலையின் பொதுக் கூறுகளை எடுத்துக்காட்ட உதவின. நாட்டுக்கல்வி பற்றிய ஆய்வுகள் சர் தாமஸ் மன்ரோ (Sir Thomas monro) என்பவரால் சென்னை மாகாணத்திலும், மௌண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் (mount stuart elphinstone) என்பவரால் பம்பாயிலும் வில்லியம் ஆதம் (william adam) என்பவரால் வங்காளத்திலும் மேற்கொள்ளப் பட்டன. இவ்வாய்வுகளில் வங்காளத்தில் நாட்டுக்கல்வியின் நிலைமைபற்றி ஆதமின் ஆய்வு மிகுந்த திட்பமும் முழுமையும் பெற்றதாகவிருந்தது.

### மன்ரோ ஆய்வு

1822-ஆம் ஆண்டில் சர் தாமஸ் மன்ரோ சென்னை மாகாணத்தின் எல்லா மாவட்டங்களினின்றும் (கன்னட மாவட்டம் தவிற) அவற்றில் அப்போது காணப்பட்ட கல்வி நிலை பற்றிய விவரக் குறிப்புகளை மாவட்ட அலுவலர்களிடமிருந்து திரட்டினுர். இக்குறிப்புக்களில் மாணுக்கர்களது எண்ணிக்கை, இனம், மொழி, பள்ளியில் காணப்படும் வகுப்புக்கள், கால அட்டவணை, பாடத்திட்டம், சம்பள விகிதம், பள்ளியின் வருமானத் திற்கான வழிகள் போன்றன யாவும் இருத்தல் கோரப்பட்டது. இவ்விவரங்களை ஆராய்ந்த மன்ரோ சென்னை மாகாணத்தில் பொது மக்களுக்கு ஓரளவு சுமாரான கல்வி வாய்ப்பு இருப்பதாகவும், மக்களில் ஆண்களே கல்வி கற்றுவந்தனர் எனவும் பெண்கள் பொதுவாகக் கல்வி ஏதும் பெறுவதாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். சென்னை மாகாணத்தில் 12,498 பள்ளிகள் இயங்கிவந்தனவென்பதும், 67 மக்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் கல்வி அறிவு பரவியிருந்தது என்றும் இவ்வாய்வினின்றும் அறியப்படுகிறது. இக்கணக்கெடுப்பில் வீட்டிலிருந்தவாறே தனி ஆசிரியர்கள் அல்லது பிற உறவினர்களிடமிருந்து கல்வி கற்றுவந்த

மாணுக்கர்களது எண்ணிக்கை சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இங்கிலாந்தின் கல்வி நிலையைவிட சென்னை மாகாணத்தில் அன்று காணப்பட்ட நிலை சிறிது தாழ்ந்திருந்ததெனினும் பல ஐரோப்பிய நாடுகளில் அன்று பரவியிருந்த கல்வியின் தரத்தைவிட அது உயர்ந்ததாகவே காணப்படுகிறது என்று மன்ரோ குறிப் பிட்டுள்ளார்.

பெல்லாரி மாவட்ட அலுவலரது கல்வி விவர அறிக்கை சென்னை மாகாணத்தின் அன்றைய கல்வி அமைப்பினை நன்கு விளக்குவதாக அமைந்துள்ளது. ஒரு மிலியன் மக்கட் தொகை கொண்ட பெல்லாரி ஜில்லாவில் 539 பள்ளிகள் இருந்தனவென்று கணக்கிடப்பட்டது. இப்பள்ளிகள் ஆங்கிலம், தமிழ், பாரசீகம், மராத்தி, தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகிய பல மொழி களுடன் இணைந்து காணப்பட்டன. பெரும்பான்மையான பள்ளிகள் தெலுங்கு, கன்னடம், வடமொழிப் பள்ளிகளாகும். இப்பள்ளிகளில் மிகச் சிறிய எண்ணிக்கையிலான பெண்களே கல்வி கற்றுவந்தனர். பள்ளிகளில் நான்கு வகுப்புக்கள் மட்டும் இருந்தன. 5 வயது முதல் 12-14 வயது வரையிலான மாணுக்கர்கள் படித்து வந்தனர். ஓர் ஆசிரியரே பொதுவாக நான்கு வகுப்புக் களையும் மேற்பார்வை செய்துவந்தார். இதற்கு உதவும் வகையில், சிறிய குழந்தைகளுக்குக் கற்பித்தலில் மேல் வகுப்பு மாணுக்கர்கள் ஆசிரியருக்குத் துணை செய்தனர். இத்தகைய முறையினை (monitorial system) டாக்டர் பெல் (dr. bell) போன்ற மேல் நாட்டுக் கல்வியாளர்கள் சிலர் பாராட்டியுள்ளதுடன் இம்முறை இங்கிலாந்து, ஸ்காத்லாந்து ஆகிய நாடுகளிலும் பள்ளிகளில் புகுத்தப்படுதலை • விரும்பினர்- பள்ளியில் பணிபுரிந்துவந்த அன்றைய ஆசிரியர்களில் பலர் திறமை குறைந்தவர்களாகவும் பயிற்சியற்றவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுக்களிக்கப் பட்ட ஊதியமும் மிகக் குறைந்ததாக இருந்தது. பள்ளிகளில் பயன்படுத்தப்பட்ட ஓரிரு பாட நூல்களின் தரமும் மிகக் குறைந்து காணப்பட்டது.

அன்று பள்ளியில் முதன் முதலாகக் குழந்தையைச் சேர்ப்பது ஒரு புனிதச் சடங்காகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் குழந்தையின் கையைப்பிடித்து எழுதக் கற்பிப்பார்; பிறகு குழந்தை மணலில் எழுத்துகளை எழுதிப் பழகிக்கொள்ளும். இதன்பின் சொற்களை எழுதும். பிறகுதான் எண்கணிதத்தினை அறிந்துகொள்ளும். கூட்டல், கழித்தல், பெருக்கல் சிக்கலான பின்னவாய்பாடு போன்றன எண்கணித பாடத்தில் குழந்தை களுக்குக் கற்பிக்கப்பட்டன. எழுதக் கற்பிக்கப் பயன்படுத்தப் பட்டமுறை நன்கு அமைந்திருந்தது: பள்ளி காலையில் 6 மணிக்கே

தொடங்கிவிடும். இறைவணக்கத்துடன் கல்வி ஆரம்பமாகும். இப்பள்ளிகளில் ஓரளவு கடுமையான தண்டனை முறை காணப் பட்டது எனவும் அறிகிறோம்.

### எல்பின்ஸ்டன் ஆய்வு

1829-ஆம் ஆண்டில், பம்பாய் மாகாண ஆளுநராகவிருந்த எல்பின்ஸ்டன், சென்னை மாகாண கல்விஆய்வு போன்ற ஒன்றை அம்மாகாணத்திலும் நடத்தினர். கல்வி பெறுவோரது எண்ணிக்கை சென்னையைவிட குறைந்த விகிதத்திலே அங்கு அன்று காணப்பட்டது. எனினும் துவக்கக்கல்வி பரவலாகக் காணப்பட்டதென்றும் எல்லாச் சிற்றூர்களிலும் பள்ளிகள் இருந்தனவென்றும் வேறு குறிப்புகள் புலப்படுத்துகின்றன. ஆலயங்கள், தனியார் வீடுகள், ஆசிரியர்களது இல்லங்கள் போன்ற இடங்களில் பள்ளிகள் அமைந்திருந்தன. இப்பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை சராசரி 15 ஆகும். எல்லாப் பள்ளிகளும் ஒற்றை ஆசிரியப் பள்ளிகளேயாம். பள்ளிகளில் சேரக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஹரிஜனப் பிரிவினரைத் தவிர பிற பிரிவு மாணுக்கர்கள் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பல்வேறு இனத்தவரும் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தன ரெனினும் இவர்களில் பெரும்பான்மையினர் பிராம்மணர்களாக இருந்தனர். ஆசிரியரது ஊதியம் சுமார் ரூ. 3 முதல் ரூ. 5 வரையில் இருந்தது. இவ்வூதியத்துடன் பிறபொருள்களும், சில சந்தர்ப்பங் களில் சன்மானங்களும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டது. ஊதியம் குறைந்திருப்பினும் சமூகத்தில் இவரது மதிப்பு உயர்ந் திருந்தது. கல்வி கற்ற மாணுக்கர்களில் பெரும்பாலோர் உயர்குடி வகுப்புச் சிறுவர்களாக இருந்தனர். 6 முதல் 14 வயது வரை யிலான வயதுகளில் மாணுக்கர்கள் இப்பள்ளிகளில் காணப் பட்டனர். இவர்கள் சுமார் 2 அல்லது 3 ஆண்டுகள் சராசரியில் பள்ளிக் கல்வி பெற்றுர்கள். படித்தல், எழுதுதல், கணிதம் ஆகியன இவர்க்குக் கற்பிக்கப்பட்டன. அச்சிடப்பட்ட பாட நூல்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படவில்லை. மாணுக்கர் களுக்கு நேரடியாக ஆசிரியரே கற்பித்தாலும், இங்கும் சென்னை யைப் போன்று வயது வந்த மாணுக்கர் ஆசிரியருக்குத் துணையாகச் சிறு குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறை இருந்தது. முன்னரே குறிப்பிட்டபடி, பம்பாய் மாகாண கல்வி ஆய்வு முழுமையான விவரங்களைத் தந்ததாகக் கூறமுடியாது. பல முக்கிய விவரங்கள் அவசரமாக நடத்தப்பட்ட ஆய்வின் விளைவாக விடுபட்டுப் போயிருக்கக்கூடும். பம்பாய் கல்வித்துறை நாட்டுக்கல்வியின்பால் அக்கறை குறைவினுல் விவரங்களைத் திரட்டுவதில் அசட்டையாக இருந்தது. எனவே, எல்பின்ஸ்டன் ஆய்வு இம்மாகாணத்தின்

அன்றைய கல்வி நிலைமைபற்றி ஓரளவு தெளிவாக்கியதென்றாலும் முழுமையான நிலைமையை உணர்த்துவதாக அமையவில்லை.

## ஆதமின் ஆய்வு

வங்காளத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியாரது ஆதிக்கம் எழுவதற்கு முன்பே பொதுமக்களுக்கான பல துவக்கப்பள்ளிகள் பரவலாகக் காணப்பட்டன. வங்காள மாகாண நாட்டுக் கல்வி அமைப்புபற்றி பெண்டிங்க் பிரபுவின் (lord bentinck) விருப்பத்தின் மேல் வில்லியம் ஆதம் என்பார் ஆராய்ந்தார். 183 முதல் 1838 வரை இவ்வாராய்ச்சியில் ஈடுபட்ட இவர் மூன்று அறிக்கைகளை சமர்ப்பித்தார். முதல் அறிக்கையில் ஆதம் வங்காளத்தில் நாட்டுக்கல்வி செயல்பட்டுவந்த முறை, அதன் அமைப்பு ஆகியன பற்றி குறிப்பிட்டுள்ளார். துவக்கநிலை, உயர்நிலை ஆகிய இருநிலைக் கல்விக்கும் வசதிகள் இருந்தன. பள்ளிக் கல்வியைவிட தனி ஆசான்களிடம் கல்வி பயிலுதல் பரவிக் காணப்பட்டதனையும் இவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்து வெளியிடப்பட்ட இவரது இரண்டாம் அறிக்கை ராஜ்ஷாஹி (rajshahi) மாநிலத்தில் நேட்டூர் (uattore) என்னும் இடத்தில் நிலவிய நாட்டுக்கல்வி நிலை பற்றியதாகவிருந்தது. இவ்வறிக்கையில் இவர் இப்பகுதியில் மக்கள் தொகை, பள்ளிகளின் எண்ணிக்கை, கல்வி பயிலும் குழந்தைகளது எண்ணிக்கை, கல்வித்திட்டம் போன்ற பலவற்றைப் பற்றி விவரம் தந்துள்ளார். மாணக்கர்கள் தமது எட்டாவது வயதில் பள்ளியில் சேர்ந்து சுமார் பதினைந்து வயது வரை கல்வி பயின்றனர். இவர்களில் பெண்களது எண்ணிக்கை மிகக் குறைவு. ஆசிரியரது ஊதியமும் பம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களில் இருந்தது போன்றே மிகக் குறைவாக (ரூ. 5 முதல் ரூ. 8 வரை) இருந்தது. பல வடமொழிக் கல்லூரிகள் செயற்பட்டதையும் ஆதம் குறிப்பிட்டுள்ளார். இவரது மூன்றாவது அறிக்கை வங்காளத்தின் வேறு ஐந்து பகுதிகளை உற்று நோக்கித் திரட்டிய கல்வி புள்ளி விவரங்களைக் கொண்டிருந்தது.

## நாட்டுக்கல்வியின் பொதுப் பண்புகள்

வில்லியம் ஆதமின் அறிக்கைகள் நாட்டுக்கல்வியின் பல பொதுப் பண்புகளைத் தெளிவாக்குகிறது. கல்வி அமைப்பில் பாடசாலைகள், மதரசாக்கள், பாரசீகப் பள்ளிகள் போன்றவற்றுடன் வட்டார இந்திய மொழி வழியே துவக்கக் கல்வி புகட்டும் பள்ளிகளும் காணப்பட்டன. பள்ளிகளுக்கென தனிக் கட்டடங்கள் காணப்படவில்லை. தனவந்தர்கள், ஜமீன்தார்கள், உள்ளூர் பிரமுகர்கள் போன்றோரது ஆதரவிலேயே பெரும் பான்மையான பள்ளிகள் இயங்கிவந்தன ; கோயில்களிலும், மசூதி

களிலும் பல பள்ளிகள் நடைபெற்றன. இப்பள்ளிகளின் ஆசிரியர்களது ஊதியம் மிகக் குறைவாகக் காணப்பட்டது; பள்ளிகள், பெரும்பாலும் ஓராசிரியப் பள்ளிகளாகும். பள்ளிகளில் எழுதுதல் படித்தல், எண்கணிதம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டது. உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப பள்ளிக் கல்வி அமைந்திருந்தது. ஹரிஜனங்கள், பெண்கள் ஆகியோர் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. முஸ்லிம்கள் பாரசீக மொழியினையும் அரபு மொழியினையும் பயின்றனர்; இந்துக்கள் வடமொழி, வங்காளி, இந்துஸ்தானி ஆகியவற்றைக் கற்றனர்.

ஆதம் திரட்டித்தந்த புள்ளி விவரங்களைப்பற்றி கருத்து வேறுபாடு காணப்படுகிறது. இவை உண்மையல்ல என்று ஹ்ார்டாக் குறிப்பிடுகிறார். ஆனால் இந்தியக் கல்வி வல்லுநர் சர். பரன்ஜபி (m. r. paranjpe) இந்நிலைமை உண்மையான தொன்றாகும் எனக் கருதுகிறார். ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு பள்ளி இருந்ததை மன்றோவின் அறிக்கையும் குறிப்பிடுகிறது. எனவே, கல்வித்தரம் எவ்வாறாகவிருந்திருப்பினும், துவக்கக் கல்வி பரவலாக நாட்டில் செயற்பட்டதாக ஆதம் சுட்டிக்காட்டியுள்ளதை மறுக்கவியலாது. நாட்டுக்கல்வி நன்கு வளர்ச்சி பெற உதவும் சில கருத்துகளையும் ஆதம் குறிப்பிட்டுள்ளார். இதற்கான முயற்சி முன்னோடித் திட்டமாக ஓரிரு மாவட்டங்களில் செயற்படுத்தப்பட வேண்டுமென்றும், இவற்றில் முழுமையான கல்வி ஆய்வு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் கூறுகிறார். தற்கால இந்திய மொழிகளில் ஆசிரியர் பயன்படுத்த ஒரு புத்தகத் தொகுப்பு தயாரிக்கப்பட வேண்டுமென்றும், இதனைக் கற்பிக்க ஆசிரியர்கள் தூண்டப்பட வேண்டுமென்றும், கற்பித்தபின் மாணாக்கர்களுக்குத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டுமென்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர்களுக்கான பயிற்சிபற்றியும் கல்விக்கு அரசு மானியம் தருவதுபற்றியும் பரிந்துரைத்துள்ளார். இத்தகைய திட்டம் வெற்றிபெற ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கல்விக்கென ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஆதம் கூறியுள்ளார். இது நாட்டுக் கல்வியினை இந்தியாவிற்கான தேசியக் கல்வி அமைப்பாக மாற்ற உதவும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். ஆதமின் பரிந்துரைகளின் சிறப்பினை சர் மைக்கேல் ஸேட்லர் (sir michael sadler) போன்றோர் பாராட்டியுள்ளனர்.

### நாட்டுக் கல்வியின் மறைவுக்கான காரணங்கள்

இதுவரை விவரிக்கப்பட்ட நாட்டுக் கல்விமுறை 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சி இந்தியாவில் நன்கு நிலைத்தபின்

வேகமாக மறையத் தொடங்கியது. நாட்டுக்கல்வியின் சீரழிவிற்குப் பல காரணங்கள் உள்ளன. அரசு ஆங்கிலமுறைக் கல்வியை வலுவாக ஆதரித்தது ஒரு காரணமாகும். ஆங்கிலத்தின் முக்கியத்துவம் பெருகப்பெருக, நாட்டின் பல்வேறு மொழிகளைக் கற்கும் ஆர்வம் மக்களிடையே குறைந்து வரலாயிற்று. நாட்டு மக்களின் வறுமையும் மற்றொரு காரணமாகும். நாட்டுப்பள்ளிகளிற்கான சிறிய சம்பளத் தொகையையும் கட்ட இயலா நிலையில் பல குடும்பங்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவில்லை. நாட்டுக்கல்வி மறைந்து போவதுபற்றி ஆங்கிலேய ஆட்சியாளர் சிறிதும் கவலைப்படவில்லை. எழுத்தறிவினை நாட்டு மக்களுக்குப் பரவலாக அளிக்க நாட்டுக்கல்விப் பள்ளிகளின் தேவை இன்றியமையாதது என்று ஆதம், எல்பின்ஸ்டன் போன்றோரும் பின்னர் 1854-ஆம் ஆண்டின் கல்வி அறிக்கையும் சுட்டிக்காட்டியிருந்ததை ஆட்சியாளர் புறக்கணித்தனர். அதன் விளைவுதான் இன்றும் நம் நாட்டுமக்கள் யாவரும் முழுமையாக எழுத்தறிவு பெறாமல் பின் தங்கிக்கிடக்கும் நிலையாகும். ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் மிகவும் குறைவாயிருந்ததால் தகுதிகுன்றியவர்கள் மட்டும் இத்தொழிலுக்கு வந்தனர். இத்தகையோரது தரக்குறைவும் நாட்டுக்கல்வியின் மறைவுக்கு ஒரு காரணமாக அமைந்தது.

எனினும், 18, 19-ஆம் நூற்றாண்டுகளின் நாட்டினது கல்வித் தேவைகளைப் பெருமளவு நிறைவு செய்ததில் நாட்டுக்கல்விக்குப் பெரும் பங்கு இருந்தது என்பதனை மறுக்கவியலாது. நாட்டுக் கல்வியின் அடிப்படையில் ஒரு தேசியக் கல்வி முறையை உருவாக்குவதற்குப் பதிலாக, மேற்கத்திய கல்விமுறை புகுத்தப்பட்டதனின்றும் பல குழப்பங்கள் எழுந்தன.

### வினாக்கள்

1. 'நாட்டுக்கல்வி' என்று நாம் எதனைக் குறிப்பிடுகிறோம்? இதன் இயல்பும் பொதுப்பண்புகளும் எவ்வாறு காணப்பட்டன?
2. சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களில் நாட்டுக் கல்வியின் நிலைபற்றி விவரிக்க.
3. வங்காளத்தில் பரவியிருந்த நாட்டுக்கல்வி பற்றி ஆதமின் அறிக்கையில் காணப்பட்ட கருத்துகளைச் சுருக்கித் தருக.
4. நாட்டுக்கல்வியின் மறைவுக்கான காரணங்கள் யாவை?

# 5. ஐரோப்பியர்களது தொடக்க காலக் கல்விப் பணிகளும் கிழக்கிந்தியக் கம்பெனியின் முயற்சியும்

## கிறித்துவ சமயப் பரப்பாளர்களது கல்வி முயற்சிகள்

சென்ற 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பரவியிருந்த நாட்டுக் கல்வி நசித்து மறைந்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்று கிழக்கிந்தியக் கம்பெனி (east india Company) வழியே ஆங்கில ஆட்சி நம் நாட்டில் வளரத் தொடங்கியதாகும் எனப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியார் நாட்டில் அடியெடுத்துவைக்கு முன்னரே 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிமுதல் வேறு பல ஐரோப்பிய நாட்டினர் இந்தியாவிற்குள் நுழைந்தனர். போர்த்து கீசியர், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஸ்பானியர்கள் ஆகியோரும், இவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களும் நாட்டிற்கு வந்தனர். தொடக்கத்தில் இவர்கள் வியாபார நோக்குடன் நம் நாட்டிற்கு வந்தனர். மொகலாய ஆட்சியின் இறுதி நாட்களில் இவர்கள் பல்வேறு துறைமுகப் பட்டினங்களில் தமது வியாபார நிலையங்களை அமைத்துக்கொண்டு நன்கு பயனடைந்தனர். வியாபார நோக்குடன் நம் நாட்டவர்களை கிறித்துவ சமயத்திற்கு மாற்றமுயலும் செயலும் காணப்பட்டது. நாட்டில் அன்று காணப்பட்ட குழப்பத்தையும் நாட்டினை ஆண்டுவந்த அரசர்களின் வலுவின்மையையும் இந்த ஐரோப்பிய நாட்டினரை நாடு பிடிக்கும் போட்டியில் ஈடுபடத் தூண்டின. இப்போட்டியில் 1601-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியினரும் கலந்துகொண்டனர். இவர்கள் எவ்வாறு பிற ஐரோப்பிய நாட்டினரை வெற்றி கொண்டு முழுமையாக ஆங்கிலேயரது ஆட்சியை நம் நாட்டில் நிறுவினர் என்பது வரலாற்றின் வாயிலாகத் தெளிவாகும்.

தற்கால இந்தியக் கல்விமுறை எனப்படுவதன் தொடக்கம் இப்பல்வேறு ஐரோப்பிய நாட்டினருடன் வந்த கிறித்துவப் பாதிரிமார்களது (Christian missionaries) சமய மாற்றப் பணிகளுடன்

இணைந்ததாகும். இச்சமயப் பரப்பாளர்கள் மூலமாக, மேற்கத்தியக் கல்விக் கருத்துகள் நம் நாட்டில் புகுத்தப்பட்டன; இந்தியக் கல்வியை இவர்கள் ஒரு புது நோக்குடன் அணுகினர்; தங்களது சமயத்தைப் பரப்பவேண்டுமென்ற குறுகிய நோக்கம் இவர்களது செயல்களுக்குப் பின்னமைந்து காணப்பட்டதெனினும், இதற்குக் கல்வியினைவிடச் சிறந்த கருவி ஏதுமில்லை என்பதை உணர்ந்து கிறித்துவப் பாதிரிமார்கள் கல்விப் பணியிலும் தொடக்கத்திலிருந்தே பங்கு பெறலாயினர். இந்திய மக்களுடன் நேர்த்தொடர்பு கொள்ள இந்திய மொழிகளையும் கற்றனர்; சிலபோது மறைமுகமாக இம்மொழிகளது வளர்ச்சிக்கும் இவர்களது தொண்டு பயன்பட்டது. போர்த்துகீசியர்கள் இந்தியாவில் இடம் பிடித்ததோடு இணைந்து இந்நாட்டில் ரோமன் கத்தோலிக்கர்களது சமய-சங்கப் பணிகள் தொடங்கின. போர்த்துகீசியர்கள் நான்கு வகைப்பட்ட கல்விக்கூடங்களை நாட்டில் நிறுவினர். கிறித்துவ தேவாலயங்களுடன் (Churches) இணைந்த போர்த்துகீசிய, லத்தின் மொழி துவக்கப்பள்ளிகள், ஏழை இந்தியக் குழந்தைகளுக்கு வேலைப் பயிற்சியும் துவக்கக் கல்வியும் அளிக்கும் அநாதை இல்லங்கள் (orphanages), கிறித்துவர்களது ஏசுபிரான் சங்கப் பிரிவினரால் (society of Jesus) உருவாக்கப்பட்ட ஜெசூயிட் கல்லூரிகள் (Jesuit colleges), பாதிரிமார்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான கிறித்துவ சமயக் கல்வி இல்லங்கள் (seminaries) ஆகியன இவையாம். பிரான்சிஸ் சேவியர், ராபர்ட் நெபிலி போன்றோர் கிறித்துவ சமயப் பணிகளுக்குச் சிறந்த முறையில் செயலாற்றி உதவியதுடன் பல பள்ளிகளைப் போர்த்துகீசியர் வசமிருந்த இந்தியப் பகுதிகளில் நிறுவினர். பிரெஞ்சுக்காரர்களும் பாண்டிச்சேரி, மாஹி, ஏனம், சந்திரநாகூர் போன்ற இடங்களில் தாய்மொழித் துவக்கப் பள்ளிகளை நிறுவினர். டச்சுக்காரர்களும் பல பள்ளிகளை நிறுவியதுடன் இந்திய மொழிகளின், முக்கியமாகத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உதவினர். எனினும் பொதுவாக நோக்கும்போது, துவக்கக் காலத்தில் இப்பல்வேறு சமயப்பரப்பாளர்களால் நடத்தப்பட்ட பள்ளிகளின் தரம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தமையவில்லை என்றும், இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் இப்பள்ளிகளது பங்கும் செல்வாக்கும் போதியனவாக இல்லை என்றும் கல்வி வல்லுநர் ஆராய்ந்து கருத்துத் தெரிவித்துள்ளனர். போர்த்துகீசியர், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியவர்களைப் பொறுத்தவரை சமயப் பரப்பாளர்கள் மிகுந்த ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இதுவும் இந்தியர்களிடையே மனக்கசப்பையும் எதிர்ப்பு மனப்பான்மையையும் தோற்றுவித்தது.

**கிழக்கிந்தியக் கம்பெனியின் முயற்சி**

கிழக்கிந்தியக் கம்பெனி நம் நாட்டில் அடியெடுத்து வைத்து நிலைபெற முயன்ற தொடக்க நாட்களில் அது இந்தியக் கல்வியில் போதிய ஆர்வம் காட்டவில்லை. 1698–ஆம் ஆண்டு செயற் படுத்தப்பட்ட 'கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம்' (Charter) முதன்முறையாக அதனைக் கல்விப் பணியில் ஈடுபடுத்தியது. கம்பெனியின் படையாட்களுக்காகப் பாதிரிமார்களை வரவழைத்த லையும் பள்ளிகளை ஏற்படுத்துதலையும் கம்பெனி அலுவலர்கள் இச் சட்டத்தினால் கோரப்பட்டனர். இப்பள்ளிகள் கம்பெனியின் ஆங்கிலேய அலுவலர்களது குழந்தைகளுக்காகவே ஏற்படுத்தப் பட்டன. இவற்றைப்போன்று தருமத்திற்கு நடத்தப்பட்ட சில பள்ளிகளும் (charity schools) பின்பு தோன்றின. இவற்றில் இந்தியக் குழந்தைகள் சிலரும், சேர்த்துக்கொள்ளப்பட்டனரெனி னும் இந்தியர்களது கல்விக்கென்ற தனிப்பட்ட ஒரு முயற்சியைக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்நிலையில் மேற்கொள்ளவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. கிறித்துவச் சமயப் பரப்பாளர்களது சமய மாற்றப் பணிக்கு ஆதரவாகத் தொடக்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் நடந்துகொண்டாலும் சிறிதுகாலம் சென்றபின் இவ்வாறு சமயமாற்றப் பணிகளுக்கு ஆதரவு தருவது தங்களது அரசியல் வளர்ச்சியில் குறுக்கிடக்கூடும் என்பதனை உணர்ந்து சமய மாற்றத்தினை ஊக்குவிப்பதனை அவர்கள் விட்டொழித்தனர்.

1813-ஆம் ஆண்டுவரை இந்தியர்களது கல்வி வளர்ச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனியினது ஆர்வம் மிகக் குறைந்தே இருந்தது. நேரடியான கல்வி முயற்சி எதிலும் அது ஈடுபடவில்லை எனலாம். 1813-ம் ஆண்டில் கிழக்கிந்தியச் சட்டம் இங்கிலாந்தின் நாடாளு மன்றத்தில் புதுப்பிக்கப்பட்டபோது ஒரு புதிய பிரிவு (43-வது பிரிவு) அதில் சேர்க்கப்பட்டது. ஒவ்வோராண்டும் இந்தியர்களது இலக்கியம், கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கு மாக ஒரு லட்சம் ரூபாய்கள் கம்பெனியினரால் ஒதுக்கப்பட்டுச் செலவிடப்படவேண்டுமென்பது இப்புதிய பிரிவாகும். இதன் அடிப்படையில் சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களில் கல்வி வளர்ச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியாளர் நேரடியாகப் பங்கு பெறுவது எழுந்தது.

சென்னை மாகாணத்தில் 1822-ஆம் ஆண்டில் சர் தாமஸ் மன்றோ அன்றைய நாட்டுக் கல்வி அமைப்பு, பள்ளிகள் போன்ற வற்றைப் பற்றிய விவரங்களை ஜில்லா ஆட்சித் தலைவர்களைத் திரட்டச் செய்தார். இப்பள்ளிகளை ஆட்சித் தலைவர்கள் மேலும் ஊக்குவிக்கவேண்டுமென்றும், தேவைப்பட்டால் மானியமும்

அளிக்கலாம் என்றும் மன்ரோ இவர்களிடம் தெரிவித்தார். சென்னை மாகாணத்தில் அப்போது காணப்பட்ட கல்வியினைப்பற்றி பாராட்டுணர்ச்சியுடன் மன்ரோ குறிப்பிட்டார். இதனை மேலும் வளர்க்க, ஒவ்வொரு ஜில்லாவிலும் (மாவட்டம்) ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமாக இரு பள்ளிகளைத் திறக்க விரும்பினார். மேலும் ஆசிரியர்கள் கிடைத்தவுடன் மேலும் பல பள்ளிகள் திறக்கப்படும் என்றார். பள்ளிகளை நிறுவுவதற்கும் பாட நூல்களைத் தேர்ந் தெடுப்பதற்கும் ஒரு பொதுக் கல்விக்குழு (committee of public instruction) மன்ரோவினது முயற்சியால் 1826-ல் செயற்படத் தொடங்கியது.

பம்பாயில் கிழக்கிந்தியக் கம்பெனியினது ஆதரவுடன் பம்பாய் கல்விக் கழகம் ஒரு பள்ளியை நடத்திவந்தது.[1] 1818-ல் மேலும் இரு பள்ளிகளை இக்கழகம் ஏற்படுத்தியது. இவற்றில் ஐரோப்பிய, இந்தியச் சிறுவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சமய போதனை இருந்ததெனினும் இது இந்தியச் சிறுவர்களுக்குக் கட்டாயமாக இருக்கவில்லை. 1820-ல் மவுண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் பம்பாய் கவர்னராக இருந்தபோது, பள்ளிகளது தரத்தை உயர்த்தவும், புதுப் பள்ளிகளைத் திறக்கவும், பாட நூல்கள் கிடைக்குமாறு செய்யவும் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. 1821-ல் பூனா நகரில் சமஸ்கிருதக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இந்துக்களது கல்வியினை ஊக்குவித்து இதேபோது மேல் நாட்டுப் பாடங்களை அவர்களுக்கு அறிமுகம் செய்தல் இந்த வடமொழிக் கல்லூரியின் நோக்கமாகவிருந்தது. எல்பின்ஸ்டன் மேலும் பல பள்ளிகளையும் ஏற்படுத்தினார். பம்பாய் கல்விக் கழகத்தின் பணிகளுக்கும் அவர் உதவினார். 1823-ல் அவரால் தயாரிக்கப்பட்ட கல்விக் குறிப்பில் கல்வி வளர்ச்சிக்கான தமது கருத்துகளைத் தெரிவித்தார். மக்களது கல்விக்கான பொறுப்பினை அரசு ஏற்கவேண்டுமென்பதனை இதில் அவர் வலியுறுத்தினார். நாட்டுப்பள்ளிகள் வளர உதவுதலோடு ஆங்கிலப் பள்ளிகளை ஏற்படுத்தி மேலைநாட்டு அறிவியல் கல்வி இவற்றில் போதிக்கப்பட வேண்டுமென்றார். தரமான விலை குறைந்த பாட நூல்கள் இந்தியர்களது தாய்மொழிகளிலே வெளியிடப்படுவதன் முக்கியத் துவத்தையும் இவர் குறிப்பிட்டார். தானே ஒரு ஆங்கில முறையிலான உயர்நிலைப் பள்ளியினை ஏற்படுத்தியதோடு பல தாய் மொழி துவக்கப் பள்ளிகளையும் ஏற்படுத்த உதவினார். இவரது கல்விக் குறிப்பு கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1840-ஆம் ஆண்டில் பம்பாய் மாகாணத்தில் கல்விக்கான ஒரு வாரியமும் ஏற்படுத்தப்பட்டது. அரசின் முயற்சி களுடன் சமயப் பரப்பாளர்களது கல்விப்பணியும் தொடர்ந்து காணப்பட்டது.

வங்காளத்திலும் கிழக்கிந்தியக் கம்பெனி கல்வி வளர்ச்சியில் நேரடியாகப் பங்கு கொண்டு இயங்கத் தொடங்கியது. 1731-ல் கல்கத்தா மதரசாவும் 1791-ல் வாரணாசி சமஸ்கிருதக் கல்லூரியும் நிறுவப்பட்டன. இச்சமயத்தில் ஜான் ஓவன், சார்லஸ் கிராண்டு (Charles Grant) போன்றோர் ஆங்கில மொழியினை இந்தியர்களுக்குக் கற்பித்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். இவ்வாறே பம்பாயிலும் எல்பின்ஸ்டனுக்குப்பின், பம்பாய் கல்விக் கழகத்தின் தலைவரான சர் எர்ஸ்கின் பெர்ரி (Sir Erskine Perry) என்பவரும் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். கீழ் நோக்கிக் கசிதல் கோட்பாடு (downward filtration theory) என்று பின்னர் குறிப்பிடப்பட்ட கருத்து முதன் முதல் பெர்ரியால் சுட்டிக்காட்டப்பட்டதாகும். சமுதாயத்தின் ஒரு சிலருக்கு ஆங்கிலக் கல்வி புகட்டினால் காலப்போக்கில் இவ்வறிவு கீழ் நிலையிலுள்ள பெரும்பான்மையினரிடம் கசிந்து பரவிவிடும் என்று பெர்ரி கருதினர். கிழக்கிந்தியக் கம்பெனி கீழ்த்திசை மொழிகள், தாய்மொழிக் கல்விப் பள்ளிகள் ஆகியவற்றின் வளர்ச்சியில்தான் தொடக்கத்தில் ஆர்வங்காட்டியும் மானியம் அளித்தும் செயற்பட்டு வந்ததெனினும் ஜான் ஓவன், சார்லஸ் கிராண்டு, எர்ஸ்கின் பெர்ரி போன்றோர் கம்பெனியின் ஆதரவு ஆங்கிலமுறைக் கல்விக்காகவே இருத்தல் வேண்டுமென்றனர். இராசாராம் மோகன் ராய் (Rajaram Mohan Roy) போன்றோரும் இந்தியர்களது முன்னேற்றத்துக்கு ஆங்கிலமுறைக் கல்வி இன்றியமையாதது என்னும் கருத்துக்கு ஆதரவளித்தனர். இக்கருத்து வேறுபாடுகளின் விளைவாக, சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழ்த்திசைக் கல்வியாளர்களுக்கும் (orientalists) மேல்நாட்டுக் கல்வியினை, குறிப்பாக ஆங்கிலக் கல்வியினை, ஆதரிப்போருக்கும் இடையே கடும் சர்ச்சை இந்தியக் கல்வி உலகில் எழுந்தது. இச்சர்ச்சையின் முடிவு நம் நாட்டில் கல்வி வளர்ச்சியின் போக்கினையும் எதிர்காலத்தையும் முழுமையாக மாற்றியமைப்பதாக இருந்தது.

### கீழ்த்திசை—ஆங்கிலக் கல்விமுறைகள் பற்றிய கருத்து வேறுபாடு

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்பகால கல்வி முயற்சிகள் கீழ்த்திசைக் கல்வியினையும் இந்திய மொழிகளையும் (முக்கியமாக சமஸ்கிருதம் அரபுமொழி ஆகியன) ஆதரிப்பதாகவே காணப்பட்டது. 1823-ஆம் ஆண்டில் பத்து உறுப்பினர்களைக் கொண்டு பிரின்செப் (H. T. Prinsep) என்பவரது தலைமையில் நியமிக்கப்பட்ட பொதுக்கல்விக் குழு கீழ்த்திசைக் கல்வியில் மிகுந்த நாட்டம் கொண்டு செயற்பட்டது. கல்விக்கென ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு கல்கத்தா மதரசா, வாரணாசி சமஸ்கிருதக் கல்லூரி

ஆகியவற்றை மாற்றியமைத்தது. கல்கத்தா நகரில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியைத் தொடங்கிற்று. ஆக்ரா, தில்லி ஆகிய இடங்களில் இரு கீழ்த்திசைக் கல்விக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. சமஸ்கிருத அரபுமொழி நூல்கள் அச்சிட்டு வெளியிடப்படுவதற்கும் இக்குழு பெருமுயற்சிகள் மேற்கொண்டதுடன், கீழ்த்திசைக் கல்வி வல்லுநர்களது உதவியுடன் ஆங்கில நூல்களில் காணப்பட்ட பயனுள்ள செய்திகளை நம் நாட்டுப் புராதன மொழிகளில் பெயர்த்தெழுதவும் பிரின்செப் தலைமையிற் செயற்பட்ட இக்குழு முயற்சி மேற்கொண்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) மிண்டோ பிரபு (Lord Minto) போன்றவர்களும் கீழ்த்திசைக்கல்வி ஆதரவாளர்களாகக் காணப்பட்டனர். புதிய மேற்கத்திய அறிவியற் கருத்துகளையும் இந்திய மொழிகளின் வழியே கற்பித்தலை இவர்கள் விரும்பினர். மேற்கத்திய கல்வியைத் தற்கால இந்திய மொழிகளின் வழியே இந்தியர்களுக்குப் புகட்டுவதை மன்ரோ, எல்பின்ஸ்டன் போன்றவர்களும் விரும்பினர். இத்தகையோரும் ஆங்கிலம் பயிற்று மொழியாதலை விரும்பவில்லை. இக்கருத்துகளுக்கு நேர்எதிராக ஆங்கிலக் கல்வி முறையினையே இந்தியாவில் பரப்புதல் வேண்டுமென்றும், ஆங்கில அரசின் கல்வி நிதி இதற்கென்றே முழுமையாகச் செலவிடப்பட வேண்டுமென்றும் வேறுசிலர் விருப்பினர். இதற்கு பொதுக்கல்விக் குழுவின் சில உறுப்பினர்கள் ஆதரவளித்தனர். கிறித்துவ சமயப் பரப்பாளர்களது ஆதரவும் இதற்குக் கிட்டியது. மேற்கத்திய ஆங்கிலக் கல்வி முறைக்கு ஆதரவாக இராசாராம் மோகன்ராய்போன்ற இந்தியக் கல்வியாளர்களும் தமது குரல்களை எழுப்பினர். ஆங்கிலக் கல்வியின் மூலமாகத்தான் நம் நாட்டு மக்களிடையே மறுமலர்ச்சியினையும் எழுச்சியினையும் விழிப்புணர்ச்சியினையும் தோற்றுவித்தல் இயலுமென்று இத்தகையோர் கருதினர். புதிய மேற்கத்திய அறிவியற் கலைகள் நம் மாணவர்க்கு கற்றறிந்த ஆங்கிலேயர்களால் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் விரும்பினர். மற்றும் கீழ்த்திசைக் கல்வி புகட்டும் கல்விக்கூட மாணாக்கர்களும் தமக்கும் ஆங்கில அறிவு தேவை எனக் கருதினர். அரசியல் ரீதியில் ஆங்கிலம் முக்கிய இடத்தைப்பெற்று ஆட்சி மொழியாக இருந்ததால் அரசாங்க அலுவலகங்களில் பணிபுரிய ஆங்கில அறிவு தேவைப்பட்டது. இதனை இந்தியர்களால் புறக்கணிக்க முடியாது. ஆங்கிலத்தின் தேவையைக் கீழ்த்திசைக் கல்வியாளர்களும் ஓரளவு உணர்ந்திருந்தனர்; இதனால் கீழ்த்திசைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கில பாடம் கற்பிக்க வழிசெய்தனர். எனினும் ஆங்கிலக் கல்வி ஆதரவாளர்களை இது திருப்தி செய்வதாக அமையவில்லை. பொதுமக்களது கருத்தும் ஆங்கிலக் கல்வியினை சார்ந்து காணப்பட்டது.

பொதுக்கல்விக் குழு உறுப்பினர்களில் இவ்விரு மாறுபட்ட கருத்துகளுக்கு ஆதரவாளர்கள் சரிசம எண்ணிக்கையில் காணப் பட்டனர். இது இக்குழுவின் செயலில் சுமார் மூன்று ஆண்டு களுக்குத் தொடர்ந்து ஒரு நெருக்கடி நிலைமையைத் தோற்று வித்தது. திட்டமான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்த குழுவினுல் இயலாமற்போயிற்று. இறுதியாக இந்த நிலைமையினை அரசின் கவனத்திற்குக் கொணர்ந்து, குழு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதுபற்றிய உறுதியான குறிப்புகள் தரப்படவேண்டுமென அரசினைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, 1885-ஆம் ஆண்டில் பொதுக்கல்விக் குழுவின் செயலர் இந்நிலைமைபற்றி அரசுக்குத் தெரிவித்து அதன் செயலாணையினை வேண்டினர். 1813-ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டத்தில் காணப்பட்ட கல்விப் பிரிவு, இந்தியநாட்டு மக்களது கல்வி வளர்ச்சிக்கும் இவர்களிடையே விஞ்ஞான அறிவு வளர்க்கப் படுவதற்கும் ஒரு இலட்சரூபாய்கள் செலவிடப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதன் உண்மைப் பொருளும் நோக்கமும் யாவை என்பது தெளிவாக்கப்பட வேண்டுமென்று பொதுக்கல்விக் குழுவின் செயலர் இந்திய கவர்னர் ஜெனரலைக் கேட்டுக்கொண்டார். இதன் விளைவே மெக்காலேயின் பிரசித்தபெற்ற குறிப்பாகும்.

261583 T.2.66 5
51461

**மெக்காலேயின் கல்விக் குறிப்பு**

வில்லியம் பெண்டிங்கு பிரபுவின் ஆட்சிக் குழுவில், 1834-ஆம் ஆண்டு மெக்காலே பிரபு (Lord Macaulay) சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சிறந்த அறிஞரான மெக்காலே பிரபுவிற்கு இந்தியப் பண்பாட்டினைப்பற்றி உணர்வு குறைந்திருந்ததுடன் அதுபற்றிய ஒரு அலட்சிய மனப்பான்மையும் காணப்பட்டது. 1813-ஆம் ஆண்டின் கிழக்கிந்தியச் சட்டத்தின் கல்விப் பிரிவிற்குப் பொருள் கூறும் பொறுப்பு மெக்காலே பிரபுவிற்குத் தரப்பட்டது; ஆங்கிலேய ஆட்சியாளர்களது கல்வித் திட்டத்தின் நோக்கம் எதுவாகவிருத்தல் வேண்டும், கல்வியின் பயிற்றுமொழியாக எம் மொழி பயன்படுத்தப்படவேண்டும், கல்வி வளர்ச்சியில் அரசும் தனியாரும் எப்பங்கினை வகிக்கவேண்டும் போன்ற அன்று சர்ச்சைக்குரியவைபற்றியும் மெக்காலே கருத்துத் தெரிவிக்க வேண்டியதாயிற்று. எனினும் இவைபற்றி அவர் பல்வேறு முடிவு களைத் தெரிவிக்குமாறு கோரப்படவில்லை என்பது ஈண்டு கவனத் திற்குரியதாகும். 1835-ஆம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் நாள் நிருவாகக் குழுவிற்குத் தனது அறிக்கையை மெக்காலே பிரபு கொடுத்தார்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் 1813, 1833 - ஆகிய ஆண்டின் சட்டங்களில் கல்விப் பிரிவில் காணப்படும் சொற்களுக்கு மெக்காலே ஆங்கிலக் கல்வி முறைக்கு ஆதரவாகப் பொருள் கொண்டார். இந்தியாவில் இலக்கிய வளர்ச்சிக்கு ஆங்கிலேய அரசு உதவவேண்டுமென்பது ஆங்கில மொழி இலக்கியங்களைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டுமென்றும், கற்றறிந்த இந்தியர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கில மொழி அறிவு பெற்ற இந்தியர்களைக் குறிப்பதாகும் என்றும் மெக்காலே விளக்கம் தந்தார். விஞ்ஞான அறிவினை ஆங்கில மொழி வாயிலாகத்தான் இந்தியர்களிடையே பரப்ப முடியும் என்றும் சட்டத்தின் நோக்கம் இதுதான் என்றும் மெக்காலே குறிப்பிட்டார். அரசு கீழ்த்திசைக் கல்வியை வளர்க்கவேண்டு மெனக் கருதினால் சட்டத்தின் கல்விப் பிரிவு திருத்தப்படவேண்டி யிருக்குமென்றார்.

இந்தியாவில் கல்வியின் பயிற்றுமொழியாக ஆங்கிலம் இருத்தல் வேண்டுமென்று மெக்காலே தனது குறிப்பில் கருத்துத் தெரிவித்தார். நாட்டு மொழிகளோ அல்லது சமஸ்கிருதம் அரபு மொழியோ இதற்கான தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்றார். மேலை நாடுகளது மொழிகளும் இலக்கியங்களும், குறிப்பாக ஆங்கில மொழியும் இலக்கியமும், கீழைநாட்டு மொழிகளுக்கும் இலக்கியங்களுக்கும் மிக உயர்ந்தவையென்றும், அராபிய சமஸ்கிருத மொழி நூல்கள் யாவற்றிலும் அடங்கியுள்ள கருத்துகள் ஐரோப்பிய இலக்கிய நூல்கள் ஒரு சிலவற்றிலுள்ள கருத்துகளுக்கு ஈடாகவென்றும் குறிப்பிட்டார். மெக்காலே அரபு மொழியினையோ வடமொழியினையோ ஒருசிறிதும் கற்றவ ரில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் உயர் வகுப்பினர் அனைவரும் ஆங்கிலமொழிக் கல்வியை விரும்புவதாகவும் மெக்காலே சுட்டிக்காட்டினார். ஆங்கில மொழியினைக் கற்பது இந்தியர்களுக்குக் கடினமானதாகவிராது என்றார். பல இந்தி யர்கள் ஏற்கெனவே ஆங்கில மொழியினைக் கற்றுச் சிறந்த தேர்ச்சி யினைப் பெற்றிருத்தலையும், கீழ்த்திசை மொழி நூல்களைக் காட்டி லும் ஆங்கில மொழி நூல்கள் இந்தியாவில் பெருமளவு விற்பனை யாவதையும் மெக்காலே குறிப்பிட்டார். இந்து முஸ்லீம் சட்டங் களை எளிதாக ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து விடலா மென்றும் இதற்காக கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகளை நடத்தத் தேவையில்லை என்றும் கூறினார். ஓரிரு கீழ்த்திசைக் கல்லூரிகளைத் தவிர பிறவற்றை மூடிவிடவும் சமஸ்கிருதம் அரபுமொழி ஆகிய வற்றில் அரசு நிதியினைப் பயன்படுத்தி மேலும் நூல்கள் வெளி யிடப்படுவது நிறுத்தப்படவும் பரிந்துரை செய்தார். ' ஆங்கில

முறைக் கல்வியின் வழியே நமக்கும் நாம் ஆளும் இலட்சக்கணக்கான மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமையக்கூடிய ஒரு வகுப்பினரை இந்தியாவில் உருவாக்கவேண்டும்; இவ்வகுப்பினர் இரத்தத்திலும் உடல் வண்ணத்திலும் இந்தியர்களாகவிருப்பர். ஆனால் மனப்பான்மை, கருத்துகள், பழக்கவழக்கங்கள், அறிவு ஆகியவற்றில் ஆங்கிலேயர்களைப் போலிருப்பர்', என்று மெக்காலே குறிப்பிட்டார். குறைந்த நிதிவசதியினைக் கொண்டு இத்தகைய ஒரு வகுப்பினரைத் தோற்றுவித்தால், இவர்கள் பெற்ற கல்வி நாளடைவில் சிறிதுசிறிதாக பிற இந்தியர்களிடமும் பரவும் என்றார். இக்கருத்து கல்விபற்றிய கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாடு (downward filtration theory) எனப்பட்டது. இந்திய மொழிகளது வளர்ச்சிக்கும் ஆங்கிலக் கல்வி பெற்ற பிரிவினர் உதவுவர் என்றார் மெக்காலே.

### பெண்டிங்கு பிரபுவின் தீர்மானங்கள்

மெக்காலேயின் குறிப்புக்களின் அடிப்படையில் 1835-ஆம் ஆண்டு மார்ச்சு ஏழாம் நாள் வில்லியம் பெண்டிங்கு பிரபு ஆணைகளைப் பிறப்பித்தார். ஆங்கிலேய அரசின் முக்கிய நோக்கம் இந்தியாவில் ஐரோப்பிய மொழி இலக்கியம், அறிவியல் ஆகியவற்றைப் பரப்புவதாகும். எனவே கல்விக்கென ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக ஆங்கிலக் கல்விக்குச் செலவிடப்படவேண்டும். ஆனால் ஏற்கெனவே செயற்பட்டுவரும் கீழ்த்திசைக் கல்விக்கூடங்கள் தொடர்ந்து பராமரித்து வரப்படவேண்டும். அரசு நிதியினைக் கொண்டு கீழை நாட்டு மொழிகளில் நூல்கள் வெளியிடத் தேவையில்லை. இப்பணத்தைப் பயன்படுத்தி ஆங்கில மொழிவழியே மேல்நாட்டின் இலக்கியங்கள் அறிவியல்கள் பற்றிய அறிவினை இந்திய மக்களிடையே பரப்பலாம் என்று பெண்டிங்கு ஆணை பிறப்பித்தார். இவ்வாணைகள் இந்தியக் கல்வியின் வளர்ச்சிக்கான ஒரு முறையான கோட்பாட்டினை அளித்ததெனலாம். இக்கோட்பாட்டினைப் பின்பற்றியே ஆங்கிலேய அரசின் கல்வி முயற்சிகள் யாவும் அமைந்தன.

மெக்காலேயின் குறிப்புபற்றி மாறுபட்ட கருத்துகள் இந்தியக் கல்வி உலகில் காணப்படுகின்றன. இவரது கல்வி அறிக்கை ஆங்கிலேயரது ஆட்சியில் இந்தியக் கல்வி வளர்ச்சிக்கு திட்டமான ஓர் அடிப்படையினை ஏற்படுத்தித் தந்துள்ளதாதலின் இந்தியக் கல்வி வரலாற்றில் இதற்கு ஒரு முக்கிய இடம் உள்ளது என்பதனை மறுக்க முடியாது. இதேபோது இந்தியாவில் தற்காலக் கல்வி எழுவதற்கு மெக்காலே முதன் முயற்சி மேற்கொண்டு அதன் முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்று கூறுவது ஏற்கத் தக்கதன்று.

அவருக்கு முன்னரே, மேற்கத்திய கல்வி நாட்டில் பரவியிருந்தது. நாட்டின் பல்வேறு மொழிகளின் வளர்ச்சியில் மெக்காலே குறுக்கிடவில்லை எனினும் அவற்றைப்பற்றித் தவறான எண்ணம் கொண்டிருந்தார். இம்மொழிகளது இலக்கியங்களையோ சிறப்புகளையோ ஓரளவேனும் புரிந்துகொள்ள அவர் ஒருசிறிதும் முயலவில்லை. நாட்டு மொழிகள் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலம் பயிற்றுமொழியானதன் விளைவாக இந்தியர்களிடையே ஆங்கிலக் கல்வி பெற்றோர், பெறுதவர் என பிளவு தோன்றியதுடன், இந்தியர்களுக்குத் தமது தாய்மொழிகள்பற்றிய தாழ்வு மனப்பான்மையும் எழுந்தது. ஆங்கிலக் கல்வி வலியுறுத்தப்பட்டதன் விளைவாக, தாய்மொழி தொடக்கப் பள்ளிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு எழுத்தறிவின் வளர்ச்சி நாட்டில் பெருமளவு குறைந்துபோயிற்று. கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாடு நாட்டில் வெற்றி பெறவில்லை. ஆங்கிலக் கல்வி பெற்ற சிறுபிரிவினர் தாங்கள் பிறரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற மனப்போக்கினுல் உந்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து மிக விலகியே வாழத் தொடங்கினர். இவர்களது கல்விச் செல்வாக்கு பொதுமக்களது வாழ்க்கையினை உயர்த்தவோ புதிய அறிவினை அவர்களிடையே பரப்பவோ ஒருசிறிதும் பயன்படவில்லை. அவ்வாறு பொதுமக்கள் கல்வியறிவு பெறுவதை இவர்கள் விரும்பவும் இல்லை. அதற்குப் பாடுபடவும் இல்லை; மெக்காலேயின் குறிப்பினின்றும் சில நல்விளைவுகளும் தோன்றின என்பதனை நாம் மறக்கக்கூடாது. இது நம்நாட்டில் மேலைநாட்டின் சிந்தனைகளும் அறிவியற் கருத்துகளும் பரவத் துணை செய்தது. பொருளாதார உயர்வுக்கும் சிந்தனைச் சுதந்தரத்திற்கும், நாட்டு விடுதலைக்கும் பாடுபடவும் மக்களைத் தூண்டியது. மற்றும், மெக்காலேயின் முடிவுகளிலும் கருத்துகளிலும் ஓரளவு உண்மையிருத்தலை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

### ஆக்லெண்ட் பிரபுவின் கல்விக் கொள்கை

பெண்டிங்கு பிரபுவிற்குப் பிறகு ஆக்லெண்ட் பிரபு (Lord Auckland) கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றுர். இவர் கீழ்த்திசைக் கல்வி நிலையங்களுக்கு ஓரளவு ஆதரவு தந்தார். கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாட்டில் ஆக்லெண்டுக்கும் முழு நம்பிக்கையுண்டு. சமுதாயத்தின் உயர்மட்டத்திலிருப்போருக்குக் கல்வியளித்தல் போதுமானதென்றும் இப்பொறுப்பினை அரசாங்கம் ஏற்பது போதுமானதென்றும் இவர் கருதினர். வங்காள மாகாண நாட்டுக் கல்வி முறையினை ஆராய்ந்த வில்லியம் ஆதமின் பரிந்துரைகளை ஆக்லெண்டு ஏற்கவில்லை. ஆதம் கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாட்டினை எதிர்த்தார்; பொதுமக்கட் கல்வியினை ஆதரித்தார்; நாட்டுக் கல்விக்கான பள்ளிகள் அரசாங்கத்தினுல் ஊக்கு

விக்கப்படவேண்டுமென்று கருதினர்; முன்னரே குறிப்பிட்டுள்ள படி இதற்கான ஒரு திட்டத்தையும் வகுத்துத் தந்தார். இவரது கருத்துகளை மெக்காலே ஏற்கவில்லை; இவரது கருத்துகளுக்கு அரசாங்க ஏற்பும் கிட்டவில்லை. ஆக்லெண்டு பிரபுவின் கல்விக் கொள்கையை மொத்தமாக ஆராய்ந்து பார்க்கும்போது கீழ்த் திசைக் கல்வி முழுமையாக நாட்டினின்றும் அழியாமல் இவர் பார்த்துக்கொண்டாரென்றாலும் ஆங்கிலக் கல்வி நாட்டில் பரவு தற்கான பெருமுயற்சிகளை எடுத்துக்கொண்டார் என்று கூறலாம். இவரால் ஆதரிக்கப்பட்ட கீழ்நோக்கிக் கசிதல் கொள்கை கிட்டத் தட்ட 1870-ஆம் ஆண்டு வரையில் கல்வித் திட்டத்தில் செல்வாக்குப் பெற்று காணப்பட்டது. இதற்குப் பின்னர்தான், இது பயனற்றதென்ற உணர்வு அரசாங்கத்தினரிடம் எழுந்து, இக்கொள்கை கைவிடப்பட்டது.

### 1833 முதல் 1853 வரையிலான கல்வி வளர்ச்சி

இனி நமது நாட்டில் 1833-ஆம் ஆண்டு தொடங்கி 1853-ஆம் ஆண்டு வரையிலான இருபது ஆண்டுகளில் கல்வி வளர்ச்சி எவ்வாறு அமைந்தது என்பதனை அறியலாம்.

வங்காள மாகாணத்தில் கல்வித்துறையில் ஆங்கில மொழியின் செல்வாக்கு இவ்வாண்டுகளில் அதிகரித்துக்கொண்டு சென்றது. ஆங்கில மொழிக் கல்விக்கூடங்களின் எண்ணிக்கையும் அதிகரித் தது. அராபிய, சமஸ்கிருத மொழிப் பள்ளிகளின் மதிப்பு வெகு வாகக் குறைந்தது. 1842-ஆம் ஆண்டில் அதுவரை செயற்பட்டு வந்த பொதுக் கல்விக்குழு கலைக்கப்பட்டு வேறொரு கல்விக்குழு (council of education) நிறுவப்பட்டது. இத்தகைய குழுக்கள் சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களிலும் நிறுவப்பட்டன. 1835-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்ட மருத்துவக் கல்லூரியைத் தொடர்ந்து வேறு பல கல்வி நிலையங்களும் கல்லூரி களும் தோன்றின. 1843-ல் ஹார்டிஞ்சு பிரபு கவர்னர் ஜெனர லாகப் பதவி ஏற்றார். 1844-ல் இவர் முக்கியமான ஓர் அறிவிப்பை வெளியிட்டார். இதன்படி உயர் பதவிகளுக்கு இந்தியர்களை நியமிக்கும்போது அவர்களது கல்வித் தகுதி, மற்றும் கல்வி கற்ற பள்ளியின் தகுதி ஆகியன கருத்தில் கொள்ளப்படவேண்டு மென்றும், கல்வி கற்ற நிறுவனம் கல்விக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்டிருக்கவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. இதன் விளைவாக வங்காளம், பீஹார் போன்ற இடங்களில் பல பள்ளிகள் திறக்கப் பட்டன. இவற்றைக் கண்காணிக்க ஆய்வாளர்கள் நியமிக்கப் பட்டனர்; இவை ஓராசிரியப் பள்ளியாகவிருந்தன. இவற்றில் ஒரு மாணாக்கனுக்கு மாதம் ஒன்றுக்கு ஓர் அணா கட்டணமாக வசூலிக்

கப்பட்டது. இப்பள்ளிகள் ஹார்டிஞ்சு பள்ளிகளெனப்பட்டன. இவை கல்வியைப் பரவலாக்க உதவினவெனினும் 'அரசாங்கப் பணி பெறக் கல்வி' என்னும் குறுகிய ஒரு போக்கைத் தோற்று வித்து, தொழிற்கல்வி பெறுவதில் மக்களது ஆர்வத்தைக் குறைத் தது. ஆசிரியப் பயிற்சிக்கென சாதாரணப் பள்ளி எனப்பட்ட 'நார்மல்' பள்ளி (normal school) ஒன்று 1847-ல் முதலாக நிறுவப்பட்டது. ஹார்டிஞ்சு பிரபுவிற்குப்பின் டெல்ஹௌசி பிரபுவின் காலத்தில் கல்கத்தாவின் இந்து கல்லூரியில் பொறி யியல் வகுப்பு தொடங்கப்பெற்றது. இவர் பெண்கள் கல்விக்காகவும் பாடுபட்டார்.

பம்பாய் மாகாணத்தில் பம்பாய் கல்விக் கழகம் எல்பின்ஸ்டன் போன்றோரது முயற்சியாலும் ஆதரவாலும் சிறந்த முறையில் 18 ஆண்டுகள் பணியாற்றியது. 1840-ஆம் ஆண்டில் இது கலைக்கப் பட்டு கல்வி வாரியம் (board of education) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இது பல பள்ளிகளை நிறுவியது. இவற்றில் தாய்மொழி பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்பட்டது; ஆனால் சர் எர்ஸ்கின் பெர்ரி கல்வி வாரியத்தின் தலைவராக நியமிக்கப் பட்டவுடன் அவர் தாய்மொழிக் கல்வியினை எதிர்த்தார். ஆங்கில மொழியினை வலுவாக ஆதரித்தார். இதன் விளைவாக 1848-ல் பம்பாய் அரசு ஒரு புதிய விதியைச் செயற்படுத்த முற்பட்டது. இதன்படி தொடக்கக்கல்வி நிலையில் தாய்மொழியும் உயர்நிலைக் கல்வி நிலையில் ஆங்கிலமும் பயிற்று மொழியாக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக பம்பாயிலும் ஆங்கிலக் கல்வி ஊக்கம் பெற்றது.

சென்னை மாகாணத்தில் கல்வி வளர்ச்சிக்காக சர் தாமஸ் மன்றோ ஆற்றிய பணிகள்பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது. மன்றோவிற்குப்பின் நாட்டுக்கல்விக்கு அரசாங்க ஆதரவு பெருமளவு குறைந்தது. மன்றோ பல்வேறு ஜில்லாக்களில் தொடங்கிய இந்து, முஸ்லிம் பள்ளிகளுக்கு அரசு மானியம் நிறுத்தப்பட்டதால் அவை மூடப்பட்டன. சென்னையில் ஓர் ஆங்கிலக் கல்லூரியும் வேறுசில முக்கிய இடங்களில் ஆங்கிலப் பள்ளிகளும் நிறுவுவதற் கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1841-ல் சென்னையில் ஓர் உயர்நிலைப்பள்ளி தொடங்கப்பட்டது. 1853-ல் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த ஒரு கல்லூரிக்கென ரூபாய் ஐம்பதினாயிரம் மானியமாக ஒதுக்கப்பட்டது.

வடமேற்கு மாகாணம், பஞ்சாப் போன்றவற்றிலும் இத்தகைய கல்வி வளர்ச்சி அரசினால் மேற்கொள்ளப்பட்டது.

மேலே விவரிக்கப்பட்டவை கல்வித்துறையில் அரசாங்கத்தின் முயற்சியினைக் குறிப்பனவாகும். இதே காலத்தில் தனியார் முயற்சியின் (non-official efforts) விளைவாகவும் கல்வித்துறை நாட்டில் முன்னேற்றம் பெற்றது. இம் முன்னேற்றமும் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்தியாவில் சமயக் குழுக்கள் தொடர்ந்து தமது கல்விப் பணியில் ஈடுபட்டுவந்தன. இவர்களது கல்விப்பணி மூன்று வகைகளாகக் காணப்பட்டது. மதம் மாறிய இந்தியர்களுக்கும் மதமாற்றப் பணிகளில் துணை புரிந்துவரும் உதவியாளர்களுக்கும் கல்வி அளித்தல் இவரது பொறுப்பாகியது; மதமாற்றத்துக்கு இந்திய மொழிகளைக் கற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, இதன் விளைவாக கிறித்துவ சமயக் குழுக்கள் மறைமுகமாக இந்திய மொழிகளது வளர்ச்சிக்கும் உதவின. இந்திய மொழிகளில் பல நூல்களை எழுதிப் பிரசுரித்தல், அகராதிகளைத் தொகுத்தல், இலக்கண நூல்களை இயற்றுதல், விவிலிய நூலினை (bible) மொழி பெயர்த்தல் போன்ற பல பணிகளில் இவர்கள் ஈடுபட்டனர். தாய்மொழிகளில் பாட நூல்களையும் எழுதிப் பள்ளிகளில் இவர்கள் பயன்படுத்தினர். மற்றும் பெண் கல்விக்காகவும் கிறித்துவப் பாதிரிகள் சிறந்த பணியாற்றினர். இவர்கள் பல பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றை நிறுவி கல்வி பரவத் துணை புரிந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியாரது பள்ளிகள் மதச் சார்பற்றவை யெனினும் அவர்கள் கிறித்துவப் பாதிரிமாரது கல்வி முயற்சிக்குப் பெரும் ஆதரவு நல்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனியார் பலரது கல்விப்பணியும் குறிப்பிடத்தக்கது. டேவிட் ஹேர், சர் எட்வார்ட் ஹைட் ஈஸ்ட், இராசாராம் மோகன்ராய் ஆகியோரது கூட்டு முயற்சியினால் பின்னர் மாநிலக் கல்லூரியாக மாறிய இந்து கல்லூரி கல்கத்தாவில் எழுந்தது. பெத்தூன் (J. E. D. Bethune) என்பவர் மதச்சார்பற்ற பெண்கள் பள்ளி ஒன்றை நிறுவினார். ஈஸ்வரசந்திர வித்யசாகர் கல்கத்தாவில் இரு இலவசப் பள்ளிகளை 1853-ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார். பம்பாய் மாகாணத்தில் பம்பாய் கல்விக் கழகம் பல பள்ளிகளை நிறுவியது. சென்னையில் பச்சையப்பரும் சென்னைப் பள்ளிக் கழகத்தினரும் (Madras school society) கல்விக்காக அருந்தொண்டாற்றினர். பெங்களூரில் ஒரு பள்ளியினை மைசூர் அரசர் நிறுவி நடத்தியதுடன் சென்னைப் பள்ளிக் கழகத்தினருக்கும் உதவி வந்தார்.

## வினாக்கள்

1. ஆங்கிலேயரல்லாத பிற ஐரோப்பிய நாட்டவரது கல்விப் பணிகளையும் இவற்றுக்கான நோக்கங்கள், விளைவுகள் ஆகியவற்றினையும் விவரிக்க.

2. 'கிழக்கிந்தியக் கம்பெனி அதன் தொடக்க காலத்தில் இந்தியக் கல்விபற்றி அலட்சியமும் குறுக்கிடாமையும் கலந்த மனப்போக்கைக் கொண்டிருந்தது' என்னும் கூற்றினை ஆராய்க.

3. இந்தியக் கல்வியின் வளர்ச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்கினை மதிப்பிடுக.

4. மெக்காலேயினது கல்விக் குறிப்பினையும் அதனின்றும் இந்தியக் கல்வியில் எழுந்த விளைவுகளையும் விவரிக்க.

5. கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாடு என்பதனை விளக்குக.

6. *1833*-ஆம் ஆண்டு முதல் *1853*-ஆம் ஆண்டு வரையில் இந்தியக் கல்வியின் வளர்ச்சியை விவரித்து, இதில் தனிப்பட்டோர்களது முயற்சியின் பங்கினைக் குறிப்பிடுக.

7. சிறு குறிப்பு வரைக :—

   (i) பம்பாய் கல்விக் கழகம்.

   (ii) கீழ்த்திசை, ஆங்கிலக் கல்வி பற்றிய சர்ச்சை.

   (iii) பெண்டிங்கு பிரபுவின் தீர்மானங்கள்.

   (iv) ஆக்லெண்டு பிரபுவின் கல்விக் கொள்கை.

# 6. உட் கல்வி அறிக்கை (1854)

## முன்னுரை

கிழக்கிந்தியக் கம்பெனிக்கான சட்டம் (the charter Act of the east India company) இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தினுல் புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு முறை இவ்வாறு புதுப்பிக்கப்படும்போதும் அதில் சில மாற்றங்கள் ஏற்படும். 1853-ஆம் ஆண்டில் இச்சட்டத்தினைப் புதுப்பிப்பதற்கான தேவை எழுந்தபோது, இந்தியாவில் ஆங்கிலேயர்கள் திட்டமான ஒரு கல்விக் கொள்கையைப் பின்பற்றிச் செயற்படுதலின் தேவை உணரப்பட்டது. இதற்காக இந்தியக் கல்வியின் அப்போதைய நிலையினை ஆராய்ந்து அதன் வளர்ச்சிக்கான தெளிவான பரிந்துரைகளை அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கட்டுப்பாடுகள் வாரியத்தின் (board of control) தலைவராக அப்போது இருந்த சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பார் இப்பணியினை மேற்கொண்டு இந்தியக் கல்விபற்றிய தனது அறிக்கையை 1854-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவ்வறிக்கை இவரது பெயரைக் கொண்டு உட் கல்வி அறிக்கை (Wood's education despatch) எனப்படுகிறது. இவ்வறிக்கை இந்தியாவிற்கான விரிவான ஒரு கல்வித் திட்டத்தை விவரிக்கிறது. கல்வியின் பல்வேறு கட்டங்களான தொடக்கக்கல்வி, உயர்நிலைப்பள்ளிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகியன யாவற்றைப் பற்றிய கருத்துகளும் இவ்வறிக்கையில் உள்ளன. அரசாங்கமும் தனியார் முயற்சியும் எவ்வாறு கல்வித்துறையில் இணைந்து செயற்படவேண்டும் என்பதற்கான தெளிவான குறிப்புகள் இதில் காணப்படுகின்றன. எனவே இந்தியக் கல்வியின் வரலாற்றிலே உட் அறிக்கை ஒரு சிறப்பிடத்தினைப் பெற்றுள்ளது; இந்தியக் கல்வியின் வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்ததாகவும் இது கருதப்படுகிறது. இதனை இந்தியக் கல்விக்கான 'மகா சாஸனம்' (Magna carta) என்றும் சிலர் வருணித்துள்ளனர்.

பரிந்துரைகள்

உட் அறிக்கை கிழக்கிந்தியக் கம்பெனியின் கல்விக் கொள்கையை விளக்கி, அதன் பல்வேறு பொறுப்புக்களில் இந்தியர்களுக்குக் கல்வி அளிக்கும் பொறுப்பு முதலிடம் வகிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டது. எனவே கல்வியினை இந்தியாவில் விரிவடையச் செய்தல் கம்பெனி அரசின் கடமையாயிற்று. உட் அறிக்கையின் முக்கிய பரிந்துரைகள் பின்வருவனவாம்:

இந்திய மக்கள் ஆங்கிலக் கல்வியின் பயன்களைப் பெறுமாறு செய்வது கல்வியின் நோக்கமாக அமைதல்வேண்டும். இவ்வாறு செய்தல் இந்தியரது அறிவு ஒழுக்கம் ஆகியவற்றின் தரத்தினை உயர்த்துவதுடன் அவர்களை நேர்மையுள்ள திறமையான அரசாங்க அலுவலர்களாக ஆக்குவதற்கும் உதவும். இந்தியப் பண்பாட்டில் அடங்கியுள்ள அறிவு சிறப்பும் பயனும் உடையதெனினும் தற்காலத் தேவைகளுக்குப் பெருமளவு ஒவ்வாததாக அது காணப்படுகிறது. எனவே மேல்நாட்டு அறிவினை இந்திய மக்களிடையே பரப்புவது கல்விக் கொள்கையின் நோக்கமாக அமையவேண்டும்.

இந்திய மொழிகள் ஆங்கிலத்துடன் இணைந்து கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படவேண்டும். இந்திய மொழிகள் புறக்கணிக்கப்படுதல் கூடாது. ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழியாகவிருக்க வேண்டுமென்பது நியாயமற்றதாகும்.

புதிய பள்ளிகளை நிறுவுதலில் அரசாங்கத்தின் முயற்சியோடு தனிப்பட்டோரது முயற்சிகளும் வரவேற்கப்படவேண்டும்.

கல்வி வரிசைப்படுத்தப்பெற்ற பல நிலைகளைக் கொண்டு (graded system of education) அமையவேண்டும். நாட்டின் கல்வி அமைப்பின் அடித்தளமாக தொடக்கநிலை நாட்டுப்பள்ளிகளும் (indigenous elementary schools) இதற்கடுத்த நடுத்தளத்தில் நடுநிலைப்பள்ளிகளும் உயர்நிலைப்பள்ளிகளும் இருக்கும். மேல்நிலையில் பல்கலைக் கழகமும் அதனுடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளும் செயற்படவேண்டும்.

உயர்கல்வி நிலையில் இந்தியப் பண்பாட்டுத் துறைப் பாடங்களைப் பயில மாணுக்கர்களுக்கு ஓரளவு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவது விரும்பத்தக்கதாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிகள் நிறுவப்படவேண்டும். பொதுமக்களுக்குத் தேவையான நடைமுறைப் பயனுள்ள கல்வியை இவை அவர்களுக்கு அளிப்பதாக அமையவேண்டும்.

கீழ்நோக்கிக் கசிதல் கொள்கையின்படி கல்வி சமுதாயத்தின் உயர் நிலையிலுள்ள சிறு பிரிவினருக்கு மட்டும் அளிக்கப்படுதல் தவறாகும். இத்தவறு களையப்பட்டு சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருக்கும் கல்வி வாய்ப்பளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். பொதுமக்களிடையே கல்வி பரவ நாட்டுப்பள்ளிகளின் தொண்டும் ஊக்குவிக்கப்படவேண்டும்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகத்தில் உள்ள வங்காளம், சென்னை, பம்பாய், பஞ்சாப், வடமேற்கு மாகாணம் ஆகியவற்றில் பொதுக் கல்விக்கான துறைகள் (Departments of Public Instruction) ஏற்படுத்தப்படவேண்டும். இவற்றின் செயல்களைப் பொறுப்புடன் திட்டமிட்டு, மேற்பார்வை செய்ய பொதுக் கல்வி இயக்குநர்கள் (Directors of Public Instruction) நியமிக்கப்படவேண்டும். இவர்களுக்குத் துணையாக ஆய்வாளர்கள் (inspecting officers) நியமிக்கப் படவேண்டும்.

இலண்டன் பல்கலைக் கழகத்தின் மாதிரியில் கல்கத்தா சென்னை, பம்பாய் ஆகிய தலைநகரங்களில் பல்கலைக் கழகங்கள் (universities) நிறுவப்படவேண்டும். இப்பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கான வேந்தர் (chancellor), துணை வேந்தர் (vice chancellor), பிற உறுப்பினர்கள் (fellows) ஆகியோர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவார்கள். இவ்வாட்சிக் குழு தேர்வுகளை நடத்தி, வெற்றி பெற்றோர்க்குப் பட்டங்களை அளிக்கும். பல்வேறு பாடங்களைப் போதிக்கப் பேராசிரியர்கள் பல்கலைக் கழகங்களில் நியமிக்கப்படவேண்டும். பல்கலைக் கழகக் கல்வி சமயச் சார்பற்றதும் பரந்த மனப்பான்மையினையும் உயர் பண்பினையும் தோற்றுவிப்பதாக அமையும்.

தனியார் கல்வி நிலையங்களுக்கு அரசு மானியங்கள் அளிக்கும் முறை (grant-in-aid) செயற்படுத்தப்படவேண்டும். நல்ல நிருவாகம், சமயச்சார்பற்ற கல்வி ஆகியவற்றைக் கொண்ட எல்லாப் பள்ளிகளுக்கும் மானியம் அளிக்கப்படும். அரசாங்கத்தினரால் அவ்வப்போது இப்பள்ளிகள் ஆய்வுக்கு உட்படவேண்டும்; அரசாங்கத்தின் பல்வேறு நிபந்தனைகளுக்கும் இவை கட்டுப்படவேண்டும். இதேபோது இப்பள்ளிகளோ கல்லூரிகளோ மாணக்கர்களிடமிருந்து ஒரு சிறிய தொகையைப் படிப்புக் கட்டணமாக வசூலிக்க வேண்டும். நூலகத்தை விரிவாக்குதல், பள்ளியின் இடவசதியைப் பெருக்கல், ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் போன்றவற்றிற்கும் மானியம் வழங்கலாம், உட் அறிக்கையின் இப்பரிந்துரையின் விளைவாகப் பெரும் பலனடைந்தவை கிறித்துவப் பாதிரிமார் நடத்திவந்த பள்ளிகளாகும்; ஏனெனில் அப்போது

பெரும்பாலான தனியார் பள்ளிகள் மிஷனரிப் பள்ளிகளாக விருந்தன. இவற்றில் சமய போதனை நடைபெற்றதனை அரசு கல்வித்துறை ஆய்வாளர்கள் அதிகமாகப் பொருட்படுத்தவேண்டிய தில்லை என அவர்கட்கு அரசு அறிவுறுத்தியது.

ஆசிரியப் பணி புரிவோர்க்குப் பயிற்சியின் அவசியத்தை இவ் வறிக்கை வலியுறுத்தியது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஆசிரியர் களுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்றை, இங்கிலாந்தில் செயற்படும் 'நார்மல்' பள்ளி (normal school) என்றழைக்கப்படும் பயிற்சிப் பள்ளியின் அடிப்படையில் அமைக்கவேண்டும். ஆசிரியப் பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்குப் படிப்புதவித் தொகை அளிக்கப் படவேண்டும். ஆசிரியர்களது தரமும் நிலைமையும் உயர்த்தப்பட வேண்டியது அவசியம். சட்டம், மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளிலுள்ளோர்க்கும் பயிற்சியளிக்கலாம்.

அரசாங்க வேலைகளுக்கு கல்வி கற்றோர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்நிலைப் பணிகளுக்குக்கூட ஆரம்பக் கல்வியறிவு உள்ளவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஆனல் அரசாங்க வேலையில் அமர்வது ஒன்றே கல்வியின் நோக்கமாக அமையக்கூடாது. பயனுள்ள அறிவினைப் பெறுதல் நோக்கமாக அமைதல் வேண்டும்.

இந்திய மொழிகளில் நல்ல பாட நூல்கள் எழுதப்படுவதன் தேவை, தொழிற்கல்வியின் முக்கியத்துவம், பெண்கள் கல்வியின் இன்றியமையாமை, முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மையினருக்குச் சிறப்பான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதலின் தேவை போன்றவை பற்றியும் உட் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

உட் அறிக்கை இந்தியக் கல்வியில் அன்று காணப்பட்ட குழப்ப நிலைமையை நீக்க உதவியது. உட் அறிக்கையின் அடிப்படையில் தான் பின்னர் செயற்பட்ட கல்விக் குழுக்களும் இயங்கின.

**மதிப்பீடு**

உட் அறிக்கையில் பல நல்லியல்புகள் காணப்படுகின்றன. தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, உயர் கல்வி, ஆசிரியக் கல்வி, தொழிற்கல்வி, பெண் கல்வி ஆகிய கல்வியின் பல்வேறு நிலைகளை யும் கூறுகளையும் உள்ளடக்கிய விரிவான ஒரு கல்வித் திட்டத்தை இவ்வறிக்கை விவரித்தது. நெடுநாள் தேவையான பல்கலைக் கழகங்கள் நிறுவுதலை இது வலியுறுத்தியது. கல்வித் திட்டங்கள் பயனுடன் செயற்படத் தேவையான மாகாணக் கல்வித்துறைகள் நிறுவப்படுதற்கு உதவியது. கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாட்டினை

விடுத்து பரவலாக எல்லோர்க்கும் கல்வி அளிப்பதற்கான முயற்சியினை ஊக்குவித்தது. மற்றும் கல்வி மானியக் கொள்கை கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தது.

உட் அறிக்கையின் குறைபாடுகளெனப்படும் சிலவற்றையும் கல்வியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். புத்தகம் படித்துத் தேர்வில் வெற்றி பெற்று அரசாங்கப் பணிகளில் சேருவது ஒன்றே கல்வியின் நோக்கமாகும் என்ற குறுகிய கருத்தினை இது தோற்றுவிக்க உதவியது. நம்நாட்டில் ஏற்படுத்தப்படவேண்டுமெனப் பட்ட பல்கலைக்கழகங்களின் அமைப்பு வெளிநாடுகளைச் சார்ந்தமைத்திருந்ததோடு, கல்விப் பிரச்சினைகளைப்பற்றி ஏதும் அறியாதோரும் அரசாங்கத்தினால் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படக்கூடிய நிலைமையைத் தோற்றுவித்தது. மேல்திசை ஆங்கிலக் கல்வியில் இந்தியர்களது ஆர்வத்தைத் தூண்டிவிட அரசாங்க வேலை வாய்ப்பினை ஒரு கருவியாகப் பயன்படுத்துதலை உட் அறிக்கை ஊக்குவித்தது என்றும் கூறப்படுகிறது. எல்லோர்க்கும் கல்வி என்ற குடியாட்சித் தத்துவம் இவ்வறிக்கையில் இடம் பெறவில்லை. தலைவர்களை உருவாக்குவதாகவோ, குடியாட்சிப் பண்புகளைத் தோற்றுவிப்பதாகவோ, நாட்டில் தொழில் மலர்ச்சி ஏற்படுத்துவதாகவோ இவ்வறிக்கை அமையவில்லை. இன்றைய சுதந்தர இந்திய நிலைமையில் இவ்வறிக்கையைக் குறிப்பிடத்தக்க பயனுடையதாகக் கருத முடியாது.

## உட் அறிக்கையின் விளைவுகள்

எனினும், உட் அறிக்கையினின்றும் பல கல்வி விளைவுகள் எழுந்தன. வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களில் பல்கலைக் கழகங்கள் 1857-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திலும் பொதுக் கல்வித்துறை அமைக்கப்பட்டது. உயர்கல்வி நன்கு முன்னேற்றமடைந்தது. எல்லா மாகாணங்களிலும் கல்வி மானியக் கொள்கை செயற்படுத்தப்பட்டது. கல்வித்துறை மேலும் மேலும் இந்தியர்களது பொறுப்பில் விடப்பட்டது. உயர்நிலை அல்லது செகண்டரி கல்வியின் வளர்ச்சி மிகவும் நன்கு அமைந்தது. ஆனால் இப்பள்ளிகள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டமையும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களது பற்றுக்குறைவும் இவற்றினின்றும் முழுப் பயன்களை மக்கள் பெறவொட்டாமல் தடை செய்தன.

## ஸ்டான்லி பிரபுவின் அறிக்கை

1857-ஆம் ஆண்டு இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய அரசுக்கு மாறியது. ஸ்டான்லி பிரபு (Lord Stanley) பிரிட்டிஷ் அரசின் முதல் இந்திய அரசுக் காரி

தரிசியாகப் (secretary of state for India) பதவி ஏற்ருர். உட் அறிக்கைக்கு மாருக எல்லன்பரோ பிரபு வெளியிட்ட கருத்து களையும் ஆராய்ந்த ஸ்டான்லி பிரபு 1859-ல் தனது அறிக்கையை வெளியிட்டார். இவர் இவ்வறிக்கையில் ஆரம்பக்கல்வியின் முக்கி யத்துவத்தை வலியுறுத்திஞர். மானியம் வழங்குவதற்குப் பதிலாக ஆரம்பக்கல்வியின் முழுப் பொறுப்பினையும் அரசு ஏற்பதை விரும்பிஞர். ஆரம்ப அல்லது தொடக்கக் கல்வி இலவச மாக இருக்கத் தேவையில்லை என்றும் வருடாந்திர நிலவரியின் அடிப்படையில் மக்களிடமிருந்து இதற்கென கல்வித் தீர்வையை (education cess) வசூலிக்கவேண்டுமென்ருர். இத்தீர்வை கல்விக்கு மட்டுமன்றி பிறவளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப் படலாம் என்ருர்.

ஸ்டான்லி பிரபுவின் கல்வி அறிக்கைக்குப்பின் கல்விப் பிரச் சினைகள் பற்றி மீண்டும் நாட்டில் கருத்து வேறுபாடுகளும் குழப்பங் களும் தோன்றின. நாட்டுக்கல்வி, கல்வித் தீர்வை, தொடக்கக் கல்விக்கு மானியம் அளித்தல் போன்ற பல பிரச்சினைகளைப்பற்றி பல்வேறு மாகாணங்கள் வெவ்வேருன முடிவினை மேற்கொண்டன. மேயோ பிரபு (Lord Mayo) கல்விப் பொறுப்பினை மாகாணங்கள் ஏற்று நடத்தவும் தமது வருவாயில் ஒரு பகுதியை கல்விக்காகச் செலவிடவும் அனுமதித்தார். லிட்டன் பிரபுவும் (Lord Lytton) இதனைத் தொடர்ந்து ஆதரித்தார். 1861-ஆம் ஆண்டில் ஹாரிசன் என்பவரால் விளக்கப்பட்ட, தேர்வின் முடிவுகளின் அடிப்படையில் ஆசிரியர்களுக்குப் பரிசுகளும் ஊதியமும் அளிக்கப்படும் முறை (payment of results) 1872-ஆம் ஆண்டில் காம்ப்பெல் என்பவரால் நாட்டுப் பள்ளிகளின் வாயிலாகப் பொதுக் கல்வியைப் பரப்பத் தீட்டப்பட்ட திட்டம் ஆகியன இக்காலக் கல்வி வரலாற்றில் குறிப் பிடத் தக்கவையாகும்.

## விஞக்கள்

1. 1854-ஆம் ஆண்டில் வெளிவந்த உட் என்பாரது அறிக்கை இந்தியக் கல்வியின் 'மகா சாஸனமாக'க் கருதப் படுகிறது என்னும் கருத்திணை விவரிக்க.

2. உட் அறிக்கையின் கல்வி விளைவுகள் யாவை ?

3. ஸ்டான்லி பிரபுவின் அறிக்கையில் காணப்பட்ட முக்கிய கருத்துகள் யாவை ?

# 7. இந்தியக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்

## முன்னுரை

இருபது ஆண்டுகளுக்கொருமுறை கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம் புதுப்பிக்கப்படும்போது இந்தியாவில் கல்வி நிலைமைபற்றி ஆராயப்படுவது வழக்கம். ஆனால் சிப்பாய்க் கலகத்தின் விளைவாக இந்தியாவில் கம்பெனி ஆட்சி முடிந்து, பிரிட்டிஷ் அரசாங்கம் நாட்டின் நிருவாகத்திற்கு நேரடியாகப் பொறுப்பேற்றபின் இதற்கு வாய்ப்பு இல்லாமற்போயிற்று. 1854-ஆம் ஆண்டு உட் கல்வி அறிக்கைக்குப்பின் இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் என்ன மாற்றங்கள் எழுந்துள்ளன, எத்தகைய முன்னேற்றம் காணப்படு கிறது என்பதனை உணர்தலும் இயலாதிருந்தது. அரசின் அப்போதைய கல்விக் கொள்கை உயர்நிலைப்பள்ளிக் கல்வி, உயர் கல்வி ஆகியவற்றுக்கு அதிக கவனம் செலுத்தப்படும் வகையில் அமைந்திருப்பதாகவும் தொடக்கக் கல்வி பெருமளவு புறக்கணிக் கப்படுவதாகவும் சிலர் குற்றம் சாட்டினர். தொடக்கக் கல்வி பற்றிய அரசின் கொள்கையை கிறித்துவச் சமயப் பரப்பாளர்களும் கடுமையாக எதிர்த்து, இது 1854-ஆம் ஆண்டின் கல்வி அறிக்கைக்கு மாறுபட்டதாகும் என்று கூக்குரல் எழுப்பினர். தங்களது சமய மாற்றப் பணிக்கு இடையூறு வருமென்று நினைத்த இவர்கள் ஒருசில தொடக்கப் பள்ளிகளையும்கூட அரசு முழுமையாக ஏற்று நடத்துவதனை விரும்பவில்லை. இங்கிலாந்தில் இருந்த இவர் களது நண்பர்கள் உடனடியாக இந்தியக் கல்விப் பொதுக்குழு (the general council of education in India) என்ற அமைப்பைத் தொடங்கி, இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப்பதவிஏற்கவிருந்த ரிப்பன் பிரபுவிடம் (Lord Ripon) இந்தியக் கல்வி நிலைமைபற்றிக் கவலை தெரிவித்து, இதனை ஆராய்ந்து சீராக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இந்தியாவில் தொடக்கக் கல்வியின் நிலை நன்கு அமைந்திருக்கவில்லை என்பதனை ரிப்பன் பிரபுவும் உணர்ந்திருந்தார். எனவே அவர் இந்தியாவில் வைஸ்ராயாகப் (viceroy) பதவி ஏற்றவுடன் இங்கு கல்வி நிலைமையை ஆராய

ஒரு கல்விக் குழுவினை 1882-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஏற்படுத்தினர். இது இந்தியக்கல்வி ஆய்வுக்குழு (Indian education commission) எனப்பட்டது. இக்குழுவில் இந்தியர்கள், சமயப் பரப்பாளர்கள், பிற கல்வியாளர்கள் ஆகிய இருபது உறுப்பினர்கள் இருந்தனர். இக்குழுவின் தலைவராக வைஸ்ராயின் ஆட்சிக் குழுவின் உறுப்பினராகவிருந்த சர் வில்லியம் ஹண்டர் (Sir William Hunter) நியமிக்கப்பட்டார். எனவே இக்குழு 'ஹண்டர் கல்விக்குழு' (Hunter commission) என்றும் குறிப்பிடப்படுகிறது. இக்கல்விக் குழு முக்கியமாக நாட்டின் தொடக்கக் கல்விபற்றி ஆராய விரும்பியது. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருவனவாம்: (i) தொடக்கக் கல்வியின் நிலை, அது விரிவடைவதற்கு உதவக்கூடிய முறைகள் ஆகியவற்றை ஆராய்தல்; (ii) அரசு முழுப் பொறுப்பேற்று நடத்தும் கல்விக்கூடங்களின் நிலைமை, இவற்றின் முக்கியத்துவம் ஆகியன பற்றி ஆராய்தல்; (iii) கல்வியின் பொது அமைப்பில் கிறித்துவ பாதிரிகளது கல்விக்கூடங்களின் பங்கும் நிலைமையும் பற்றி ஆராய்தல்; (iv) தனிப்பட்டோரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள்பற்றி அரசாங்கத்தின் மனப்பான்மையை ஆராய்தல்; (v) மானியக் கொள்கைபற்றி ஆராய்தல். இக்கல்விக்குழு முக்கியமாக தொடக்கக் கல்வியில் கவனம் செலுத்தியதெனினும், உயர்நிலைப்பள்ளிக் கல்வி, உயர்கல்வி ஆகியனபற்றியும் இது சில கருத்துகளைத் தெரிவித்தது. ஹண்டர் கல்விக்குழு தொடக்கத்தில் இரண்டு மாதங்கள் கல்கத்தாவில் கூடி பிரச்சினைகளை அணுகி ஆராயும் முறைகள் பற்றி முடிவெடுத்தபின், இந்தியா முழுவதும் சுமார் எட்டு மாதங்கள் சுற்றுப்பயணம் செய்து கல்வியைப்பற்றி ஆராய்ந்து 1883-ஆம் ஆண்டில் தனது அறிக்கையை வெளியிட்டது.

### ஹண்டர் கல்விக் குழுவின் பரிந்துரைகள்

ஆங்கில ஆட்சியில் இந்தியக் கல்வியின் வரலாற்றில் மூன்று பகுதிகள் காணப்படுவதாக, இவ்வரலாற்றினை ஆராய்ந்த ஹண்டர் கல்விக்குழு குறிப்பிட்டது. உட் அறிக்கைக்கு முன்னான காலப் பகுதியில் கல்வியில் அரசாங்கத்தின் ஈடுபாடு இல்லாமலிருந்தது. உயர்கல்வியில் மட்டும் அரசாங்கம் நேரடியாகச் சிறிது கவனம் செலுத்தியது. தொடக்கக் கல்வி, உயர்நிலைப்பள்ளிக் கல்வி ஆகியவற்றைப் பொறுத்தவரை இப்போது மிஷனரிகள், தனி வள்ளல்கள் ஆகியோரது பங்கும் முயற்சியும் சிறப்பாகவிருந்தன. 1854-ஆம் ஆண்டு முதல் 1871-ஆம் ஆண்டுவரையிலான இரண்டாவது காலப் பகுதியில் கல்வி நிர்வாகம் மாகாண அரசாங்கங்களுக்கு மாற்றப் பட்டு, கல்வி அரசாங்கத்தின் பொறுப்பு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது உயர்நிலைப்பள்ளிக் கல்வி ஓரளவு பரவிற்று; உயர்நிலைக்கட்டக் கல்வியின் இறுதிவகுப்பாக பல்கலைக்

கழக மெட்ரிகுலேஷன் தேர்வு ஏற்கப்பட்டது; உயர்நிலைப்பள்ளிக் கல்வி நிலையில் ஆங்கிலமே பயிற்று மொழியாகவிருந்தது. 1871ஆம் ஆண்டுக்குப் பிறகான காலப் பகுதியில் அரசாங்கம் ஆரம்பக் கல்வியில் பெருங்கவனம் செலுத்தத் தொடங்கியது.

ஹண்டர் கல்விக்குழு கல்வி வளர்ச்சியினை ஆராய்ந்தபின் தனது பரிந்துரைகளைத் தந்தது. இவற்றுள் பின்வருவன முக்கிய மானவையாகும்.

தொடக்கக்கல்வி பொதுமக்கட்கான கல்வியாகும். தாய் மொழிவழியே அளிக்கப்படும் தொடக்கக் கல்விதான் பொதுமக்க ளது கல்வி நிலையை உயர்த்த உதவும்; தொடக்கக் கல்வி வாழ்க் கைப் பயனுடையதாக அமைதல் வேண்டும்; வட்டார வாழ்க்கைச் செயல்முறைகளுடன் தொடர்புடையதாகவிருத்தல் வேண்டும். விவசாயம், உடல்நலம், கைத்தொழில்கள் ஆகியவற்றுக்கு உதவக் கூடிய கணிதம் அறிவியல் கருத்துகள் போன்றன தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தில் இடம் பெறவேண்டும். நாட்டுப் பள்ளிகள் ஊக்குவிக்கப்படவேண்டும். அப்போதுதான் பொதுக் கல்வியின் ஒரு பகுதியாக இவை இணைந்து இயங்கி, தொடக்கக் கல்வி பரவ உதவ முடியும்.

புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பு தனியார் அல்லது பொதுமக்கட் குழுக்களுக்கு விடப்படுவது விரும்பத்தக்கது. முக்கியமாக, தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரை இப் பொறுப்பு உள்ளாட்சி நிறுவனங்களான மாவட்ட, நகரசபை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். தொடக்கக் கல்வி யினை விரிவாக்கல், மேற்பார்வை செய்தல், தொடக்கப் பள்ளிகளை நிருவகித்தல், மற்றும் இவற்றுக்கான செலவை ஏற்றல் போன்றன இவ்வுள்ளாட்சி நிறுவனங்களின் பணிகளாகும். பாடத்திட்டம் சுற்றுப்புறச் சூழ்நிலை சமுதாயத் தேவை ஆகியவற்றுக்கேற்ப ஆங்காங்கே அமைக்கப்படலாம்; தேவையான முறையில் பாட நூல்களையும் இப்பள்ளி நிருவாகம் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். கல்விக்கான நிதியைப் பொறுத்தவரை உள்ளாட்சி நிறுவனங்கள் தொடக்கக் கல்விக்காக குறிப்பிட்ட ஒரு தொகையை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். மாகாண அரசும் இதற்கென ஒரு தொகையை ஒதுக்கவேண்டும். திரட்டப்படும் உள்ளூர் நிதி தொடக்கக் கல்விக்காக மட்டுமே செலவிடப்படவேண்டும். கிராமப் பள்ளிகள் நகரப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு அரசு அளிக்கும் நிதி உதவி தனிப் படுத்தப்படவேண்டும். பள்ளிகளில் உயர் வகுப்புக்கு மாற்றல் தேர்வு முறையில் அமையும். குறிப்பிட்ட அளவு சிறுபான்மை மாணாக்கர் பள்ளியில் இருப்பின் அவர்களது தாய்மொழி வழியே கல்வி புகட்ட வாய்ப்பிருத்தல் வேண்டும்.

கல்விப் பொறுப்பினை தனியார் குழுக்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் போன்றவற்றிடம் விட்டு அரசாங்கம் இதனின்றும் தன்னை விடுவித்துக்கொள்கையில் சில முறைகள் பின்பற்றப்படவேண்டும். அரசு உதவியின்றி இயங்க இயலாத நிலையில் உள்ள பள்ளிகள் நிலைத்த அமைப்பினைப் பெறும்வரை, இவற்றின் நிருவகிக்கும் பொறுப்பினை அரசு தொடர்ந்து ஏற்கலாம். தொடக்கக் கல்வி, உயர்நிலைப்பள்ளிக் கல்வி ஆகியன உள்ளூர் மக்களது ஆர்வமும் ஒத்துழைப்பும் இன்றிப் பரவ முடியாததால் அவர்களது ஒத்துழைப்பினை அரசாங்கம் பெற முயற்சி மேற்கொள்ளவேண்டும். பள்ளியின் பொறுப்பினை மாற்றும்போது அதிலுள்ள தளவாடங்கள் யாவும் கொடுக்கப்படவேண்டும். பொறுப்பு மாற்றப்படுதலால் பள்ளிப் பணியாளர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படக் கூடாது.

பள்ளிக் கல்வியின் தரம் உயர் ஆசிரியப் பயிற்சி இன்றியமையாததாகையால், இப்பயிற்சிக்கான பள்ளிகள் திறக்கப்படவேண்டும். பயிற்சி பெற்றபின்னர்தான் ஆசிரியர்கள், பணியில் நிரந்தரமாக்கப்படவேண்டும்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் பொறுப்பினைத் திறமைமிக்க இந்தியர்கள் ஏற்று நடத்துவதற்கு மானியஉதவி வழங்கவேண்டும். தனியாரால் பள்ளி நடத்தவியலா இடங்களில் மட்டும் அரசாங்கம் பள்ளிகளை நடத்தலாம். உயர்நிலைப் பள்ளிகளில் உயர் வகுப்புக்களில் இருவகைப்பட்ட கல்வித் திட்டத்திற்கு வாய்ப்பு இருத்தல் வேண்டும். ஒன்று கல்லூரிப் படிப்பிற்கு ஆயத்தப் பயிற்சியாகவும் மற்றொன்று நடைமுறை வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபடுவதற்கான பயிற்சியாகவும் இருக்கவேண்டும். அரசுப் பணிகளில் சேருவதற்கு இவற்றில் எதில் தேர்ச்சி பெற்றிருப்பினும் போதுமானது.

உயர்கல்வி, கல்லூரிக்கல்வி ஆகியவற்றின் பொறுப்பினின்று அரசு விலகவேண்டும். இதேபோது உயர் கல்விக்கான கல்விக் கூடங்களின் முழு நிருவாகம் கிறித்துவ சமயக் குழுக்களிடம் செல்வது தவிர்க்கப்படவேண்டும். பிறரும் இத்தகைய கல்விக் கூடங்களை ஏற்படுத்த ஊக்குவிக்கப்பட்டு அதற்கான எல்லா வாய்ப்பும் அவர்களுக்கு அரசாங்கம் அளிக்கவேண்டும். தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குகையில் கல்லூரிக்காகும் செலவு, ஆசிரியரது எண்ணிக்கை, கல்லூரியின் தரம், அதன் தேவைகள் போன்றன யாவும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். கட்டடம் கட்டுதல் நூல் நிலையம், சோதனைக் கருவிகள் போன்றவற்றுக்காகத் தனியாக சிறப்பு மானியம் (special grant) அளிக்கப்படவேண்டும். மாணாக்கர்களது நாட்டம், விருப்பம் போன்றவற்றிற்கேற்ப, பல

வகைப் பாடங்கள் கல்லூரிகளில் கற்பிக்கப்படவேண்டும்; தகுதிக்கேற்ற மாணுக்கர்கள் வெளிநாடு சென்று மேலும் சிறப்புக் கல்வி பெற இத்தகையோர்க்கு உதவிப்பணம் தரலாம். கல்லூரி மாணுக்கர்களது அறநெறிப் பண்புகளை வளர்த்தலில் கல்லூரிப் பேராசிரியர்கள் தனிக்கவனம் செலுத்தவேண்டும். மற்றும், அரசுக் கல்லூரிகளைவிடத் தனியார் நடத்தும் கல்லூரிகள் ஓரளவு குறைந்த கல்விக் கட்டணம் பெறவும் அவை அனுமதிக்கப்பட வேண்டும்.

பள்ளிக் குழந்தைகளது உடல் வளர்ச்சிக்குதவ ஏற்ற உடற் பயிற்சிகளும் விளையாட்டுகளும் பள்ளிகளில் இடம் பெற வேண்டும். பள்ளிகளில் குறிப்பிட்ட ஒரு மதம்பற்றி மட்டும் போதனை நடத்தப்படுமாகில் பிற மதங்களைச் சார்ந்த குழந்தைகள் அவ்வகுப்புக்குச் செல்லவேண்டும் என்ற கட்டாயம் இருக்கக் கூடாது.

கல்வி மானியம் வழங்கும் முறைபற்றியும் ஹண்டர் கல்விக் குழு சில கருத்துகளைத் தெரிவித்துள்ளது. மானியம் பெறும் பள்ளிகளது உள் நிருவாகத்தில் அரசாங்கம் தலையிடக்கூடாது; பிற்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கல்வி நிலையங்களுக்கு மானியம் வழங்குதலில் முன்னுரிமை தரப்படவேண்டும்; சில சிறப்புப் பாடங்களைக் கற்பித்துவரும் பள்ளிகளுக்குச் சிறப்பு மானியம் வழங்கப்படலாம்; மானியம் பெறும் கல்விக்கூட மேலாளர் விரும்பினுல் நிருவாகத்துறையில் உதவிபுரிய ஒரு சிறப்புக்கல்வி அலுவலரை நியமிக்கலாம்.

பயிற்றுமொழிப் பிரச்சினை பற்றித் தெளிவாக இக்குழு தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. ஆங்கிலமே தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்றுமொழியாக இருத்தலை ஆதரிப்பதாக இதனைக் கொள்ளலாம்.

பெண்கள் கல்வியின் வளர்ச்சிபற்றியும் ஹண்டர் குழு சில கருத்துகளைக் கூறியுள்ளது. பெண்கள் பள்ளிகளுக்குத் தாராளமாக அரசாங்கம் மானியம் அளிக்கவேண்டும்; பெண்களுக்கு இலவசக் கல்வி அளித்தல் வேண்டும்; ஆசிரியைகளுக்குப் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்துதல், பெண்களுக்கெனத் தனிப் பாடத்திட்டத்தினை உருவாக்குதல், பெண் கல்விக்கெனத் தனி ஆய்வாளர்களை நியமித்தல் போன்றன பெண் கல்வி வளர உதவும் எனப்பட்டது.

முதியோர் கல்விக்கான இரவுப் பள்ளிகள் தொடங்கப் படுவதை இக்குழு ஆதரித்தது. முஸ்லிம்களது கல்வி வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டு மென்பதனையும் சுட்டிக் காட்டியது.

**விளைவுகள்**

ஹண்டர் கல்விக் குழுவின் பரிந்துரைகளை இந்திய அரசாங்கம் பொதுவாக ஏற்றுக்கொண்டது. தொடக்கக் கல்வி உள்ளாட்சி நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சியில் தனியாரது முயற்சி வரவேற்கப்பட்டு ஊக்குவிக்கப் பட்டது. ஏற்கெனவே அரசுப் பள்ளிகளாயிருந்தவற்றின் நிருவா கத்தைத் தனியாரிடம் அரசாங்கம் மாற்றவில்லையாயினும் புதிய அரசுப் பள்ளிகள் நிறுவப்படவில்லை. அரசாங்கமும் தனியார் முயற்சிகளும் இணைந்து செயற்பட்டதன் விளைவாகக் கல்வி வளர்ச்சி ஓரளவு சிறப்பாக அமைந்தது. உயர்நிலைப் பள்ளிகளில் தொழில், வர்த்தகம் ஆகியவை சார்ந்த பாடங்களுக்கு வாய்ப்புக் கள் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டன. எனினும் இவை மக்க ளிடையே போதிய அளவு வரவேற்பினைப் பெறவில்லை.

ஹண்டர் கல்விக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து நாட்டின் கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகியது. பஞ்சாப், அலகாபாத் பல்கலைக்கழகங்கள் தோன்றின. 1885-ல் தோன்றிய இந்திய தேசிய காங்கிரசும் தேசிய இயக்கமும் கல்வி வளர்ச்சிக்கு உதவின. தலைசிறந்த இந்தியர்கள் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றனர். இதேபோது கல்லூரிக்கல்வியின் தரம் அதிகமான மாணாக்கர்களது எண்ணிக்கையின் விளைவாகச் சற்று குறையத் தொடங்கியது. பண்பாட்டுப் பயிற்சியாக அமைந்த கல்லூரிப் படிப்பு பலருக்கு வாழ்க்கையில் பயனின்றி வேலை யில்லாப் பிரச்சினையினை அதிகப்படுத்துவதாகவும் காணப்பட்டது. சென்ற நூற்றாண்டின் இறுதி இருபது ஆண்டுகளில் செகண்டரி கல்வி எனப்படும் உயர்நிலைப்பள்ளிக் கல்வி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டது. எல்லா மாகாண அரசுகளும் உயர்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டத்தில் வாழ்க்கைப் பயனுள்ள செய்முறைப் பாடங்கள் சிலவற்றையேனும் புகுத்தின. ஆனால் தாய்மொழி இந்நிலைக் கல்வியின் பயிற்று மொழியாவதற்கான எம்முயற்சியும் மேற்கொள்ளப்படாதது வருந்தத் தக்கதாகும். உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் ஆங்கிலம் முழுமையான ஆதிக்கம் செலுத்தியது. தொடக்கப்பள்ளிக் கல்வி உள்ளூர் ஆட்சி நிறுவனங்களின் பொறுப் பானபின் சிறிது துரிதமாக வளர்ச்சியடைந்தது. கிறித்துவச் சமயப் பரப்பாளர்கள் இக்காலத்தில் ஒருசில புதிய கல்லூரிகளைத்

துவக்கினார்களென்றாலும் கல்விப்பணி மட்டும் மதமாற்றத்துக்கு உதவாது என்பதனை உணர்ந்துகொண்டு நாட்டின் பின்தங்கிய பகுதியினர் பழங்குடி மக்கள் ஆகியோரிடை மதப்பிரச்சாரம் செய்வதில் முழுமூச்சுடன் ஈடுபடத் தொடங்கினர்.

### வினாக்கள்

1. ஹண்டர் கல்விக்குழு எக்காரணங்களின் விளைவாக நியமிக்கப்பட்டது? இதன் முக்கிய நோக்கங்கள் யாவை?

2. ஹண்டர் கல்விக் குழு எனப்படும் 1882-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தியக் கல்விக் குழுவின் முக்கிய பரிந்துரைகளைக் குறிப்பிட்டு, இவற்றின் தன்மையை மதிப்பிடுக.

# 8. கர்சன் பிரபு

## முன்னுரை

இந்தியக் கல்வி வரலாற்றிலே இருபதாம் நூற்றுண்டின் தொடக்ககாலம் மிக முக்கியமானதாகும். இப்போது மக்களிடையே நாட்டுப்பற்றும் விடுதலையுணர்வும் துரிதமாகப் பரவத் தொடங்கியது. நாட்டின் பண்பாட்டின் மேன்மையினையும் இலக்கியம், கலைகள் போன்றவற்றின் சிறப்பினையும் மக்கள் உணரத் தொடங்கினர். தேசியப் பண்பாட்டின் அடிப்படையில் நமது நாட்டின் கல்விமுறை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் படிப்படியாக மக்கள் உணரத் தொடங்கினர். இத்தகைய சூழ்நிலையில் கர்சன் பிரபு (Lord Curzon) 1899-ஆம் ஆண்டில் இந்தியாவின் வைஸ்ராயாகப் பதவி ஏற்றுர். சிறந்த அனுபவத்தினையும் பரந்த கல்வி அறிவினையும் பெற்றிருந்த கர்சன் பிரபு தமது ஏழாண்டுப் பதவிக்காலத்தில் ஆட்சித்துறையிலும் கல்வித்துறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்த முயன்றுர். ஆனால் இந்திய மக்களது உணர்ச்சிகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் இவற்றில் இவர் ஈடுபட்டதால் இம்மாற்றங்கள் தேவைப்பட்ட பயனைத் தராமற்போனதுடன் எதிர்ப்புணர்ச்சியையும் மக்களிடையே தோற்றுவித்தன.

1897-ஆம் ஆண்டு முதல் 1902-ஆம் ஆண்டுவரையிலான காலத்தில் கல்வி வளர்ச்சியில் தேக்கம் காணப்பட்டது. நாட்டில் எழுந்த வறட்சி, பஞ்சம், தொற்று நோய்கள் போன்றனவும் இந்நிலைக்குக் காரணங்களாக அமைந்தன. 1901-ஆம் ஆண்டில் கர்சன் பிரபு இந்தியாவின் கல்வி நிலைமையை ஆராய ஓர் இரகசியக் கூட்டத்தைக் கூட்டினுர். இக்கூட்டத்தில் மாகாணங்களின் பொதுக்கல்வி இயக்குநர்கள் மட்டும் பங்கு பெற்றனர். இதில் கிறித்துவச் சமயப் பரப்பாளர்கள் சிலர் கலந்துகொண்டனரெனினும் இந்துக்கள் எவரும் அழைக்கப்படவில்லை. இது இந்தியர்களுக்கு மனக்கசப்பைத் தோற்றுவித்தது எதிர்பார்க்கக் கூடியதேயாம். இக்கூட்டத்தில் தொடக்கக் கல்வி நிலையிலிருந்து பல்கலைக் கழகக் கல்விநிலை வரையிலான எல்லா கல்விப் பிரச்சினைகளையும்

கர்சன் பிரபு உறுப்பினர்களுடன் விவாதித்தார். கல்வியின் அமைப்பு, முறைகள், கல்வி வளர்ச்சியில் காணப்படும் போக்குகள், இவற்றின் விளைவுகள் ஆகியனயாவும் ஆராயப்பட்டன. இக் கூட்டத்தின் முடிவுகள் வெளியிடப்படவில்லை; எனினும் இம் முடிவுகள் கர்சன்பிரபுவின் கல்விச் சீர்த்திருத்தங்களுக்கு அடிப்படையாக அமைந்தன. சிம்லா மாநாட்டின் முடிவுகள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது இந்தியர்களது உள்ளங்களில் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவித்தது; தேசிய உணர்ச்சியினை வலுப்படுத்தவும் இது காரணமாயிற்று.

## இந்தியப் பல்கலைக் கழகக் குழு

சிம்லா மாநாட்டின் முடிவுகளுக்கேற்ப 1902-ஆம் ஆண்டு சனவரியில் 'இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கான குழு ஒன்று (the indian universities commission) நிறுவப்பட்டது. பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டபின் அவற்றின் கல்வித் தரத்தினை உயர்த்த மேலும் முயற்சிகள் நாட்டில் மேற்கொள்ளப்படவில்லை; பல்கலைக் கழகங்களில் கல்விப் பொறுப்பில் இருந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவினை எட்டத்தொடங்கிற்று. எனவே, பல்கலைக்கழகங்களின் நிலைமையை ஆராய்ந்து, அவற்றின் அமைப்பு, செயற்படுமுறைகள், தரம் ஆகியவற்றை மாற்றவும் உயர்த்தவும் ஆலோசனை கூற கர்சன் பிரபு இக்குழுவினை அமைத்தார். நாட்டின் பல்கலைக்கழகங்கள் அறிவுவளர்ச்சியைப் புறக்கணிக்கும் வகையில் தேர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவந்தன எனக் கூறப்பட்டது. மற்றும் இப்பல்கலைக் கழகங்கள் இலண்டன் பல்கலைக்கழகத்தின் மாதிரியில் அமைக்கப்பட்டன; ஆனால் இலண்டன் பல்கலைக்கழகம் 1898-ல் நன்கு மாற்றியமைக்கப்பட்டது. எனவே பல்கலைக்கழகச் சீர்த்திருத்தம் ஓர் உடனடித் தேவையாகக் காணப்பட்டது.

இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கான இக்குழு தனது அறிக்கையில் பல பரிந்துரைகளைச் செய்தது. பல்கலைக்கழகங்களின் நிருவாக அமைப்பு மாற்றியமைக்கப்படவேண்டும்; நிருவாக ஆட்சிக்குழு உறுப்பினர்களது எண்ணிக்கையும் பதவிக்காலமும் குறைக்கப்படவேண்டும். பல்கலைக்கழக ஆட்சிக் குழுக்களில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் அப்பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளில் ஆசிரியர்களும் இடம் பெறுதல் வேண்டும். பல்கலைக்கழகங்களில் தேர்வு நடத்தும் பணியுடன் கற்பித்தலுக்கான வசதிகளும் இருக்கவேண்டும். உயர்கல்வியைப் புகட்டுவதற்கான பேராசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் நியமிக்கப் படவேண்டும். பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளில்

கற்பித்தலுக்குப் போதிய ஏற்பாடுகள் இருக்கவேண்டும். இணைப் பினை ஒரு கல்லூரிக்கு அனுமதித்தலில் தரக்குறைவினைத் தடுக்க, ஓரளவு கடுமையான விதிகள் அனுசரிக்கப்படவேண்டும். இணைந் துள்ள கல்லூரிகளைப் பல்கலைக்கழகம் மேற்பார்வையிடுவது அவசிய மாகும். கல்லூரிப்பாடத் திட்டங்கள், தேர்வுமுறை ஆகியவற்றில் மாறுதல்களையும் திருத்தங்களையும் ஏற்படுத்துதல் இன்றியமையாத தாகும். மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான உணவு இல்லங்கள் கட்டப்படவேண்டும்; இவர்களுக்குப் படிப்புதவிப் பணம் கொடுக் கப்படுவதும் தேவை. பல்கலைக்கழக மெட்ரிகுலேஷன் தேர்வின் தரம் உயர்த்தப்பட வேண்டும். இண்டர்மீடியட் படிப்பு நீக்கப்படும் போது பி. ஏ. பட்டப் படிப்பு மூன்றாண்டுகளாக நீடிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு நிருவாகக்குழு அமைக்கப் பட்டு, ஆசிரியர்களைப் பணிக்கமர்த்தல், மாணவரிடையே கட்டுப் பாட்டினை வளர்த்தல், கல்லூரிக்கான கட்டடங்களைக் கட்டுதல் போன்றன இதன் பொறுப்பில் விடப்படவேண்டும்.

### இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம்

இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1904-ஆம் ஆண்டு 'இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம்' (indian universities act) இயற்றப்பட்டது. இச்சட்டம் பல்கலைக்கழகங்களது பணியினை விரிவுபடுத்தியது. பேராசிரியர்களை நியமிக்கவும் ஆராய்ச்சிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித்தரவும் இவற்றுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் (senate) எண்ணிக்கையும் பதவிக்காலமும் குறைக்கப் பட்டது. ஆட்சிக்குழு உறுப்பினர்களில் ஒரு பகுதி தேர்ந் தெடுக்கவும் வகை செய்யப்பட்டது. மாமன்ற ஆட்சிக்குழுவில் (syndicate) பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் இடமளிக்க வேண்டுமெனப்பட்டது. பல்கலைக்கழகங்களுடன் கல்லூரிகள் இணைவதற்கான விதிகள் கடுமையாக்கப்பட்டன. இக்கல்லூரிகளை மாமன்ற ஆட்சிக்குழு பார்வையிடல் வேண்டும். கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளித்தல் இதனைத் திரும்பப்பெறுதல் போன்றவற்றில் பல்கலைக்கழகங்கள் அரசின் சம்மதத்தைப் பெறவேண்டும். ஆட்சி மன்றம் உருவாக்கும் விதிகள் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்; இவற்றில் சிலவற்றை நீக்கவோ மாற்றவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. இது பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களுக்கும் பொருந்தும். மற்றும் ஒரு பல்கலைக்கழகத்தின் பரப்பினையும் அதன் எல்லைகளையும் நிர்ணயம் செய்யும் பொறுப்பு கவர்னர் ஜெனரலதாகும்.

இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் பல்கலைக்கழக நிருவாகத்தில் நெடுநாட்களாகத் தேவைப்பட்ட சீர்த்திருத்தங்களை ஏற்படுத்தியது எனலாம். கல்லூரி இணைப்புக்கான கடும் விதிகள், அவற்றினை மேற்பார்வை செய்தற்கான விதிகள் போன்றன கல்லூரிக் கல்வியின் தரத்தை உயர்த்த உதவின. எனினும் இச்சட்டத்தை கோபாலகிருஷ்ண கோகலே போன்ற தலைவர்கள் கடுமையாகக் கண்டித்தனர். இதற்கு முக்கிய காரணம் கர்சன் பிரபுவின் நோக்கங்களில் இந்தியர்களுக்கிருந்த அவநம்பிக்கையேயாகும். கல்லூரிகளின் இணைப்புக்கான விதிகள் கடுமையாக்கப்பட்டது. தனியார் கல்லூரிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காகும் என்றும், பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவென்றும், இச்சட்டத்தின் விளைவாகப் பல்கலைக்கழகங்கள் அரசாங்கத்தின் முழுக்கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டியிருக்குமென்றும் கூறப்பட்டது. சுருங்கக் கூறினல், இச்சட்டம் பல்கலைக் கழகக் கல்வியைச் சீர்த்திருத்தி அதனை சீரான அடிப்படையில் அமைக்கப் போதிய அளவு உதவவில்லை எனலாம்.

### கர்சன் பிரபுவின் கல்விக் கொள்கை

இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் இயற்றப்பட்டதுடன், 1904-ஆம் ஆண்டில் கர்சன் பிரபுவின் கல்விக் கொள்கைகளைப் பற்றிய அரசாங்கத் தீர்மானமும் வெளியிடப்பட்டது. இத்தீர்மானத்தில் இந்தியக் கல்விமுறையின் குறைபாடுகள் நுட்பமாக ஆராயப்பட்டு குறிப்பிடப்பட்டன. அதன் வளர்ச்சியும் பரப்பும் தேவையைக் காட்டிலும் மிகக் குறைந்திருத்தலுடன் அதன் தரமும் போதிய அளவு உயர்ந்து காணப்படவில்லை. அரசாங்க வேலை பெறுவதற்காகவே கல்வி கற்கப்பட்டது. இக்குறுகிய நோக்கத்தின் விளைவாக, கல்வி கற்றோர் பிறபணிகளுக்குத் தகுதியற்றோராகக் காணப்பட்டனர். கல்விமுறையில் தேர்வுக்கு அதிகமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; கல்வித் திட்டமும் வாழ்க்கையுடன் தொடர்பில்லாத இலக்கியப் படிப்பாகவே பெருமளவு காணப்பட்டது. அறிவு வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டு தேர்வில் வெற்றி பெற உதவும் நெட்டுருச் செய்தல் அதிக அளவு வலியுறுத்தப் பட்டது. ஆங்கில ஆர்வம் தாய்மொழிகளது வளர்ச்சியைப் புறக்கணிக்கச் செய்தது. மற்றும் தொழிற்கல்வியும் தொழில் நுட்பக் கல்வியும் புறக்கணிக்கப்பட்டன.

இக்குறைகளை நீக்க கர்சன் பிரபு பல கருத்துகளைத் தெரிவித்தார். இவை பின்வருவனவாம்;

நாட்டின் மக்கட் தொகைக்கேற்ப தொடக்கக் கல்வி வசதிகள் போதியனவாக இல்லை. மேலும் அரசாங்கம் முதலிலிருந்தே தொடக்கக் கல்வியில் போதிய கவனம் செலுத்திவரவில்லை. எனவே தொடக்கக் கல்வியை விரிவடையச் செய்வது அரசின் முதல் நோக்கமாகும். வருவாயின் பெரும்பகுதி இதற்கெனச் செலவிடப்படும். கல்விக்கான வருவாய் பகுதியினைத் தொடக்கக் கல்விக்கு மட்டும் செலவிட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அறிவுரை கூறப்படும். கற்பித்தல் முறைகள் எளிமையும் நடைமுறைப் பயனுடையனவாக மாற்றியமைக்கப்படும். ஆசிரியர்களது ஊதியமும் உயர்த்தப்படும்.

உயர்நிலைப் பள்ளிக்கல்வியைப் பொறுத்தவரை, இக்கட்டத்தில் ஓரளவு வளர்ச்சி காணப்பட்டாலும் கட்டடம், பள்ளிக்கான பிற தளவாடங்கள் ஆகியன போதிய அளவில் இல்லை. திட்டமின்றி உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டதன் விளைவாக கற்பித்தல் தரமும் குறைந்துள்ளது. நல்ல கண்காணிப்பு, கட்டுப்பாடு ஆகிய வற்றின் மூலம் உயர்நிலைப் பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும். இப்பள்ளிகளைத் தணிக்கை செய்ய கல்வி ஆய்வாளர்கள் நியமிக்கப்படவேண்டும். தரமான பள்ளிகளை உருவாக்க, பள்ளி களுக்கு அங்கீகாரம் அளிப்பது, மானியம் வழங்குவது போன்ற வற்றுக்கான நிபந்தனைகள் இறுக்கமாக்கப்பட வேண்டும். பள்ளிக் கட்டணம், மாணவர் எண்ணிக்கை, மாணவரில்லங்கள் ஆசிரியர்களை நியமித்தல் போன்றவற்றிற்கான தெளிவான விதிகளைக் கல்வித் துறை ஏற்படுத்தவேண்டும். அரசின் அங்கீகாரம் பெற்ற பள்ளி களில் பயின்றோர் மட்டுமே அரசுத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டும்.

தொடக்கப்பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டிய தில்லை. பதின்மூன்று வயதுக்குப்பின் ஆங்கிலம் கற்பிக்கப்படலாம், உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரிப் பள்ளி அமைத்தற்கு அரசு உதவவேண்டும்.

பெண்களது கல்விக்காக அரசு மேலும் அதிகம் செலவு செய்ய வேண்டும். இதற்காக பெண்களுக்கென ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தலாம். மாதிரிப்பள்ளிகளை ஏற்படுத்தலாம். இவை நன்கு செயற்படுவதற்கு ஆய்வாளர்கள் மேலும் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுவர்.

விவசாயக் கல்லூரி போன்ற சிறப்புக் கல்லூரிகளை ஏற்படுத்து வதும், இந்தியக் கலைகள் கைப்பணிகள் ஆகியவற்றில் பயிற்சி

யளித்தற்கான நிறுவனங்களை ஏற்படுத்துவதும் தேவைப் படுவதாகும்.

மதிப்பீடு

கர்சன் பிரபுவின் கருத்துகளில் பல உண்மையில் ஏற்கத் தக்கவையே. எனினும் இவர் செயற்பட்டமுறை இந்தியர் களிடையே சந்தேகத்தினைத் தோற்றுவித்து, கல்விச் சீர்த்திருத்த முயற்சி அரசியல் அடிப்படையுடையது எனக் கருதச் செய்தது. எனினும் கர்சன் பிரபுவின் முயற்சி கல்வித்துறையில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது என்பதனை மறுக்க முடியாது.

## வினாக்கள்

1. கர்சன் பிரபுவின் கல்விக் கொள்கையை ஆராய்ந்து மதிப்பிடுக.
2. இந்தியப் பல்கலைக் குழுவின் (1902) முக்கிய பரிந்துரைகள் யாவை ?
3. 'இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம்' பற்றிச் சிறு குறிப்பு வரைக.

# 9. சுதேசி இயக்கமும் கல்வியும்

## சுதேசி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்நூற்றுண்டின் தொடக்க ஆண்டுகளில் நாட்டில் விடுதலை யுணர்வு பெருகிக்கொண்டு வந்தது; சுதேசி இயக்கம் தொடர்ந்து வளர்ச்சிபெற்று வந்தது. கர்சன் பிரபுவின் கொள்கைகள், முக்கிய மாக வங்காளப் பிரிவினை, நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்துவ தாக அமைந்தன. அப்போது நடந்த ருஷ்ய-ஜப்பானியப் போரில் ஜப்பான் பெற்ற வெற்றி ஆசியர்களது திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகப் பல இந்தியர்களால் கொள்ளப்பட்டு, ஜப்பானைப் பற்றியும் அந்நாட்டின் கல்விமுறை பற்றியும் நம் நாட்டு இளைஞர்களை அறியத் தூண்டியது. இது இளைஞர்களது உள்ளத்தில் புரட்சியை விதைத்தது. இவையாவும் தேசிய இயக்கத்துக்கு வலியூட்டின. இதன் விளைவாக நாட்டில் சுதேசி இயக்கம் எழுந்தது. இவ்வியக்கம் வெளிநாட்டுப் பொருள்களைப் புறக் கணித்து, நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை மட்டும் பயன்படுத்துவதை வலியுறுத்திற்று. ஆனல் நம் நாடு தொழிற் கல்வி புறக்கணிக்கப்பட்டதனல் தொழில் துறையிலும் பொருள் களின் உற்பத்தியிலும் பின்தங்கியிருத்தல் அப்போது மக்களுக்குத் தெளிவாயிற்று. இதனல் தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தையும் தேசியக்கல்வியின் உடனடித் தேவையினையும் மக்களும் சிறப்பாக இளைஞர்களும் உணர்ந்தனர். சுதேசி இயக்கத்தின் போதுதான் முதன் முறையாக இந்திய இளைஞர்கள் அரசியலில் நேரடியாகப் பங்குகொண்டனர். இதனைத் தடைசெய்ய அரசாங்கத்தின் முயற்சிகள் அவர்களது நாட்டுப்பற்றினைத் தூண்டுவதாகவே இருந்தது.

இந்நிலைமையில் நாட்டின் தலைவர்கள் சிலர் நமது நாட்டிற் கான தேசியக்கல்வி ஒன்றை உருவாக்கிப் பரப்பத் திட்டமிட்டனர். இதற்கென தேசியக்கல்விக் குழு (the national council of education) என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பில் சர் குருதாஸ் பானர்ஜி, ராஷ் பிஹாரி கோஷ், ரவீந்திரநாத் தாகூர் போன்றோர் உறுப்பினர்களாகவிருந்தனர். தொடக்கக்கல்வி முதல்

பல்கலைக்கல்வி வரையிலான கல்விக்கான ஒரு விரிவான கல்வித் திட்டத்தினை இக்குழு வரைந்தது. கல்கத்தாவில் ஒரு தேசியக் கல்லூரியினையும் ஜபல்பூரில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியையும் ஏற்படுத்தியது. வங்காளம் முழுவதும் பல தேசியப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் நடைமுறைப் பயனுள்ள கல்வி தாய்மொழி வாயிலாக மாணுக்கர்களுக்கு அளிக்கப்பட்டதும் பண்டைய இந்தியப் பண்பாட்டை மீண்டும் புதுப்பிக்கச் சில குரு குல முறைப் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டன. இதேபோது 1906-ல் தொடங்கப்பட்ட முஸ்லிம் லீக் (muslim league) எனப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர்கள் ஆங்கிலேயர்களால் பெருமளவு தூண்டப்பட்டு, முஸ்லிம்களுக்கான தனி கல்வி நிலையங்கள் வேண்டு மென்றும் அரசு நடத்தும் கல்விக் கூடங்களில் முஸ்லிம்களுக்கென குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடங்கள் ஒதுக்கப்படவேண்டு மென்றும் கோரினர். இக்கட்டத்தில்தான் கல்விக் கூடங்களில் சமய வேறுபாடுகள் புகுந்து சூழ்நிலையைக் கெடுக்கத் தொடங்கின.

### கோகலேயின் கல்விப் பணிகள்

பிறதேசத் தலைவர்களைப்போன்று கோபாலகிருஷ்ண கோகலே (1866-1915) நாட்டின் கல்வி வளர்ச்சியில் பேரார்வம் காட்டினர். 1904-ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த கல்விக் கொள்கையின் விளைவாக நாட்டில் தொடக்கக்கல்வி ஓரளவு வளர்ச்சியுற்றுப் பரவி இருந்ததெனினும் தேவைக்கு ஏற்ப அது இல்லை. சுதேசி இயக்கம் நாட்டு மக்களது கல்விப்பசியினைத் தூண்டிவிட்டிருந்தது. நாட்டின் எழுத்தறிவு விகிதம் மிகக் குறைந்து காணப்படுவதை தலைவர்கள் உணர்ந்து, பொதுமக்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினர். 1906-ஆம் ஆண்டிலேயே பரோடா மன்னர் தமது இராச்சியத்தில் கட்டாய தொடக்கக்கல்வியினை செயற்படுத்தினர். இது பிறபகுதி மக்களது ஆர்வத்தையும் தூண்டியது. மக்களது ஆர்வத்தினை கோகலே உணர்ந்து பொதுமக்களுக்கு இலவசமாகவும் கட்டாயமாகவும் தொடக்கக்கல்வி அளிக்கப்பட வேண்டியதன் தேவையை ஆங்கிலேய அரசுக்கு உணர்த்த முற்பட்டார். பண்பாட்டுப் பந்தயத்தில் கல்வியில் பின்தங்கிய நாடுகள் கல்வி பரவிய நாடு களுக்குகேற்ப செயற்படமுடியாது என்று கோகலே குறிப்பிட்டார். எனவே 1910-ஆம் ஆண்டு மார்ச்சு 19 நாள் உயர்சட்ட மன்றத்தில் (imperial legislative council) கோகலே கட்டாயத் தொடக்கக் கல்விபற்றிய ஒரு தீர்மானத்தைக் கொணர்ந்தார். நாடுமுழுவதும் தொடக்கக்கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆக்கப்படுவதற் கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், இதற்கான முறைப்பட்ட திட்டத்தினை உருவாக்க அரசாங்க உறுப்பினர்களும்

பிற தலைவர்களும் உள்ள ஒரு குழு விரைவில் அமைக்கப்பட வேண்டுமென்றும் இத்தீர்மானம் பரிந்துரை செய்வதாக அமைந்திருந்தது. கட்டாயத் தொடக்கக்கல்வி 6 முதல் 10 வயதுவரை சிறுவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், எப்பகுதிகளில் ஏற்கெனவே சிறுவர்களில் 33 சதவிகிதத்தினர் பள்ளிகளில் பயின்று கொண்டிருக்கிறார்களோ அப்பகுதிகளில் முக்கியமாக இத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமென்று தம் தீர்மானத்தில் கோகலே குறிப்பிட்டார். இதற்காகும் செலவை உள்ளாட்சி நிறுவனங்களும் அரசும் 1 : 2 என்ற விகிதத்தில் பங்குபோட்டு ஏற்கலாம் என்றும், தொடக்கக்கல்வி விரிவடைவதற்கான திட்டங்களை வகுக்க ஒரு தனி கல்விச் செயலாளர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். கட்டாயக் கல்வித் திட்டத்தில் கோகலே பெண்களைச் சேர்க்கவில்லை.

கோகலேயின் தீர்மானத்தில் காணப்பட்ட கருத்துகளைக் கவனித்து ஆவன செய்வதாக அரசாங்கம் உறுதி கூறியதால் தன் தீர்மானத்தை அவர் திரும்பப் பெற்றுக்கொண்டார். இதன்பின் மத்திய அரசில் ஒரு கல்வித்துறை ஏற்படுத்தப்பட்டது; கல்விக்கென ஒரு செயலரும் நியமிக்கப்பட்டார். எனினும் கோகலேயின் தீர்மானத்தின் முக்கிய பகுதியான இலவச கட்டாய தொடக்கக்கல்வி பற்றிய முயற்சி எதனையும் மேற்கொள்ளாததாலும் நாட்டில் தொடக்கக்கல்வியின் வளர்ச்சி மிகவும் குறைந்த வேகத்தில் காணப்பட்டதாலும் கோகலே 1911-ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். ஆனால் இத்தீர்மானம் சபையில் தோற்றுப்போயிற்று. இதற்கு ஆதரவாக 13 வாக்குகளும் எதிராக 38 வாக்குகளும் போடப்பட்டன. இத்தீர்மானத்தை எதிர்த்தோர் தங்களது எதிர்ப்புக்கு அடிப்படையாகத் தெரிவித்த காரணங்கள் யாவும் பொருளற்றவையாகவும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவையாகவும் இருந்தன; இருப்பினும் இத்தகையோரது எண்ணிக்கை சபையில் அதிகமாகவிருந்தது. நாடு கட்டாய இலவச தொடக்கக்கல்விக்குத் தயாரான நிலையில் இல்லை என்று கூறப்படுவதை எதிர்த்து கோகலே மிகச் சிறப்பாக வாதிட்டார்; ஆனால் இது பயனற்றுப்போயிற்று. எனினும் அரசாங்கம் கோகலேயின் தீர்மானத்தின் அடிப்படையில் அவ்வப்போது செயற்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட வடமேற்கு எல்லை மாகாணத்தில் தொடக்கக்கல்வி இலவசமாக்கப்பட்டது. பஞ்சாப், மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், அஸ்ஸாம் ஆகியவற்றிலும் தொடக்கக்கல்விக்கு மிகக் குறைந்த பள்ளிக் கட்டணமே வசூலிக்கப்பட்டது. முக்கியமாக, கோகலேயின் இம்முயற்சி இப்பிரச்சினைபற்றி மக்களையும் அரசாங்கத்தையும் சிந்திக்கச் செய்தது.

**கல்விக் கொள்கைபற்றிய அரசின் அறிக்கை**

நாட்டில் கல்வித் தேவைபற்றிய உணர்வு மிகுவதைக் கருத்தில் கொண்டு 1913-ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் நாள் தனது கல்விக் கொள்கைபற்றிய விரிவான அறிக்கை ஒன்றை (educational policy resolution) இந்திய அரசாங்கம் மீண்டும் வெளியிட்டது. இத்தீர்மானத்தில், நடைமுறைப் பயனுள்ள தொடக்கக்கல்வி பரவலாக்கப்பட வேண்டுமென்றும், தேவையுள்ள இடங்களில் உயர் தொடக்கப் பள்ளிகள் நிறுவப்பட வேண்டுமென்றும், உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்குப் பதில் நிறுவப்பட வேண்டுமென்றும், தனியார் பள்ளிகள் நன்கு கண்காணிக்கப்பட வேண்டுமென்றும் பழைய மக்தாபுகளும் பாடசாலைகளும் ஆதரிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. ஆசிரியர்கள் மாணுக்கர்களது இனத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல், ஆசிரியப் பயிற்சியின் தேவை, ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சியளித்தல் ஆகிய கருத்துகளும் இத்தீர்மானத்தில் காணப்படுகின்றன. ஆசிரிய மாணுக்கரது விகிதம் 1 : 50 என்பதற்குமேல் காணப்படக் கூடாதென்றும் ஆசிரியர்களது பணி நிலைமை உயர்த்தப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. தாய்மொழி வழியே கல்வி புகட்டிவரும் உயர்நிலைப் பள்ளிகள் ஆதரிக்கப்பட வேண்டுமென்றும் பெண்களது கல்வியில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும், புதிய பள்ளிகளை அரசு திறக்காவிட்டாலும் செகண்டரி கல்வி நிருவாகத்திலிருந்து அரசாங்கம் முழுமையாக தன்னை விடுவித்துக்கொள்வது தவறாகுமென்றும் இது கூறியது. மற்றும் பல்கலைக்கழகக் கல்வியின் பெருக்கத்திற்கும் இது ஆதரவளித்தது. 1913 முதல் 1921 வரை நாட்டில் எழுந்த கல்வி வளர்ச்சிக்கு இத்தீர்மானம் உதவியது எனலாம்.

**விணுக்கள்**

1. சுதேசி இயக்கம் நம் நாட்டின் கல்வி வளர்ச்சியை எவ்வாறு பாதித்தது?

2. இந்தியக் கல்வி வளர்ச்சியில் கோகலேயின் பங்கு பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

3. 1913-ஆம் ஆண்டின் 'இந்திய அரசின் கல்விக் கொள்கை பற்றிய அறிக்கை' பற்றிச் சிறு குறிப்பு வரைக.

# 10. கல்கத்தா பல்கலைக் கழகக் குழு

## முன்னுரை

1904-ஆம் ஆண்டின் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டத்தின் விளைவாக பல்கலைக்கழகங்களின் நிருவாகத்திலும் பணியிலும் ஓரளவு முன்னேற்றம் எழுந்ததாயினும் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் நிலைமையில் பல பிரச்சினைகள் காணப்பட்டன. நிதி வசதிக் குறைவு, மாணுக்கர்களது எண்ணிக்கைப் பெருக்கம், கட்டடங்கள் பிற தளவாடங்கள் போன்றவற்றின் பற்ருக்குறை போன்றன இப்பிரச்சினைகளுக்குக் காரணங்களாக அமைந்தன. கல்கத்தா பல்கலைக்கழகத்தின் இத்தகைய நிலையை ஆராய்ந்து இப் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கென 1914-ஆம் ஆண்டில் ஹால்டேன் பிரபுவின் தலைமையில் ஒரு ஆய்வுக் குழுவினை இந்திய அரசு அமைத்தது. ஆனல் முதல் உலகப் போர் அப்போது மூண்டதால் அக்குழு செயற்பட இயலாது போயிற்று. பின்னர் 1917-ஆம் ஆண்டில் செம்ஸ்போர்ட் பிரபு கல்கத்தா பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினை மீண்டும் அமைத்தார். லீட்ஸ் பல்கலைக்கழகத் துணை வேந்தராகவிருந்த சர் மைக்கேல் ஸேட்லர் (Michael Sadler) இதன் தலைவராக நியமிக்கப்பட்டதனல் இது ஸேட்லர் குழு (Sadler commission) எனப்பட்டது. இக்கல்விக் குழுவில் பல பிரபல ஆங்கிலேய அறிஞர்களுடன் டாக்டர் ஜியாவுதீன் அகமத், சர் அசுடோஷ் முகர்ஜி ஆகியோரும் இருந்தனர். கல்கத்தா பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியையும் நிலைமையையும் பிரச்சினை களையும் ஆராய்வதற்கென இக்கல்விக் குழு அமைக்கப்பட் டிருப்பினும் பல்வேறு இந்தியப் பல்கலைக்கழகங்களின் அமைப் பினையும் செயல்களையும் பார்த்தாராய இது அனுமதிக்கப்பட்டது. முடிவில் பல்கலைக்கழகங்கள் பற்றிப் பொதுவாகவும் கல்கத்தா பல்கலைக்கழகம் பற்றிச் சிறப்பாகவும் தனது கருத்துகளை வெளி யிட்டது. தொடக்கக்கல்விப் பிரச்சினைகள்பற்றி இக்கல்விக் குழு ஏதும் கூறவில்லையெனினும் உயர்நிலைப்பள்ளிக் கல்விபற்றித் தன் அறிக்கையில் பல கருத்துகளைத் தெரிவித்துள்ளது. ஏனெனில் உயர்நிலைப்பள்ளிக் கல்வி பல்கலைக்கழகக் கல்வியின் ஆதாரமாக அமைவதாகும்.

**ஸேட்லர் குழுவின் பரிந்துரைகள்**

உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் சில மாற்றங்கள் செய்வது பல்கலைக்கழகக் கல்வியை உயர்த்த இன்றியமையாதென இக்கல்விக் குழு கருதியதால் இதுபற்றிய சில பரிந்துரைகளை அளித்தது. இண்டர்மீடியட் வகுப்பு பல்கலைக்கழகப் பொறுப்பினின்றும் நீக்கப்பட்டு, பி. ஏ. பட்டப் படிப்பின் காலம் 3 ஆண்டுகளாக நீடிக்கப்படவேண்டும். பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு மெட்ரிகுலேஷனுக்குப் பதில் படிப்புத்தகுதி இண்டர்மீடியட்டாக இருக்கும். தனிப்பட்ட இண்டர்மீடியட் கல்லூரிகள் ஏற்படுத்தப் பட்டு இவற்றில் கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், விவசாயம், வணிகவியல் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும். இண்டர்மீடியட் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றை கண்காணித்து நிருவகிக்க தனிப்பட்ட ஒரு கல்வி வாரியம் அமைக்கப்படவேண்டும். இண்டர்மீடியட் கல்லூரிகள் தாய்மொழியினைப் பயிற்றுமொழியாகக் கொள்ளவேண்டும்.

கல்கத்தா பல்கலைக்கழகத்தின் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி ஸேட்லர் குழு பின்வரும் கருத்துகளைத் தெரிவித்தது. கல்கத்தா பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையில் பயிலும் மாணாக்கர் களது எண்ணிக்கையும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளின் எண்ணிக்கையும் மிக அதிகமாகக் காணப்படுவதால், டாக்கா நகரில் மாணுக்கர் தங்கிக் கற்கும் ஒரு பல்கலைக்கழகம் (residential university) ஏற்படுத்தப்படவேண்டும். கல்கத்தா பல்கலைக்கழகத்தினை வெறும் தேர்வுகள் நடத்தும் பல்கலைக்கழகம் என்ற நிலையினின்றும் உண்மையிலே கற்பிக்கும் பல்கலைக்கழகமாக விளங்கச் செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். கல்கத்தாவினின்றும் தொலைவான இடங்களில் கல்லூரிகள் ஏற்படுத்தப்படும்போது இவற்றில் ஒரு சிலவேனும் நாளடைவில் பல்கலைக்கழக மையங்களாக வளரக்கூடிய வகையில் இவற்றின் வசதிகள் பெருக்கப்படவேண்டும். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பெண்கல்வி வளர்ச்சிக்கான பிரிவு ஒன்றை ஏற்படுத்து வதை இக்குழு ஆதரித்தது. தொழிற்கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியன மேலும் முக்கியத்துவம் பெறவேண்டியதன் அவசியத்தையும் இது வலியுறுத்தியது.

பல்கலைக்கழகங்கள் பொதுவாக எவ்வாறு அமைந்திருக்க வேண்டுமென்பது பற்றியும் ஸேட்லர் கல்விக்குழு பல பரிந்துரை களைத் தந்தது. அரசாங்கக் கட்டுப்பாட்டினை வெகுவாகக் குறைப்பதற்கு உதவும் வகையில் பல்கலைக்கழக ஆசிரியர்களது அதிகாரங்கள் விரிவாக்கப்படவேண்டும். பல்கலைக்கழகங்கள்

செயற்படுவதற்கான விதிகள் ஓரளவு நெகிழ்ச்சி வாய்ந்தவையாக விருக்கவேண்டும். திறமைமிக்க மாணுக்கர்களுக்கு ஆனர்ஸ் (honours) உயர்பட்டப் படிப்பு ஏற்படுத்தப்படவேண்டும். பல்கலைக்கழகங்களுக்கான பேராசிரியர்களையும் ரீடர்களையும் தேர்ந் தெடுக்க வல்லுநர்கள் அடங்கிய தேர்வுக்குழு நியமிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களின் நிருவாகத்திற்கு ஆட்சிக் குழுவிற்குப் (senate) பதிலாக ஒரு மன்றமும் (representative court) மாமன்ற ஆட்சிக் குழுவிற்குப் (syndicate) பதிலாக ஒரு செயற்குழுவும் (executive council) ஏற்படுத்தப்படவேண்டும். பாடத்திட்டம், தேர்வு, ஆராய்ச்சிகள் போன்றவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவெடுக்க கல்விக் குழுவும் (academic council) பாடதிட்டக் குழுவும் (board of studies) ஏற்படுத்தப்படவேண்டும். பல்கலைக்கழகங்களில் பல பாடத்துறைகள் (faculties) ஏற்படுத்தப்படவேண்டும். ஊதியம் பெற்று முழுநேர அலுவலராகப் பணியாற்றும் துணை வேந்தர் நியமிக்கப்படவேண்டும். மாணுக்கர்களது உடல் நலனில் கவனம் செலுத்த உடற்பயிற்சி இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும். பல்வேறு பல்கலைக்கழகங்களின் செயல்களை ஒருங் கிணைப்பதற்கு பல்கலைக்கழகத் தொடர்பு வாரியம் (inter university board) ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும், மற்றும் உயர்கல்வித் துறையில் முஸ்லிம்கள் பின்தங்கியிருத்தலால் அவர்களுக்கு எல்லா கல்வி வசதிகளும் செய்துதர வேண்டுமென்ப தனையும் முஸ்லிம் பெண்களுக்கான பர்தா பள்ளிகள் நிறுவப் படலாம் என்றும் குறிப்பிட்டது. பல்கலைக்கழகங்களில் கல்விக்கென ஒருதுறை (department of education) இருத்தலையும், இண்டர் மீடியட், பி.ஏ. வகுப்புக்களில் கல்வி (education) ஒரு பாடமாக வைக்கப்படுவதையும் இக்குழு ஆதரித்தது.

## மதிப்பீடு

பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியைப் பொறுத்தவரை ஸேட்லர் குழுவின் அறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏற்கெனவே செயற்பட்டுவரும் பல்கலைக்கழகங்களை நல்ல முறையில் மாற்றியமைக்க இது உதவியதுடன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் அமைப்பையும் இது பாதித்தது; இந்தியப் பல்கலைக்கழகங்களின் கல்விமுறையை வாழ்க்கையின் செயல் களுடன் இணைக்க உதவியது; இந்திய மொழிகள் பல்கலைக்கழகக் கல்வி நிலையில் ஓரளவு மதிப்புபெற உதவியதுடன் இவ்வறிக்கை உயர்கல்வியில் ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதாகவும் அமைந்தது. இதன் பரிந்துரைகள் ஏற்கத்தக்கனவாகவும் செயற்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன. இவ்வறிக்கைக்குப்பின் பாட்னு,

வாரணாசி, அலிகர், டாக்கா, மைசூர், அண்ணாமலை நகர் போன்ற பலவிடங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் தோன்றின. இதன் பரிந்துரைகளிற் சில அன்றைய நிலைமையில் காலத்தில் முன்னோக்கு பவையாக விருந்திருப்பினும் இந்தியக் கல்வி வரலாற்றில் ஸேட்லர் குழுவின் கல்வி அறிக்கை முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது என்பது தெளிவாகும்.

## வினாக்கள்

1. கல்கத்தா பல்கலைக்கழக ஆய்வுக் குழுவின் கருத்துப்படி, பல்கலைக்கழகங்களின் நோக்கங்கள், அமைப்பு ஆகியன எவ்வாறு இருத்தல் வேண்டும் ?

2. ஸேட்லர் கல்விக்குழுவின் முக்கிய பரித்துரைகளை விவரிக்க.

# 11. ஹார்டாக் அறிக்கையும் உட்-ஆபட் அறிக்கையும்

## அரசியல் சீர்த்திருத்தங்கள்

*1920*-ஆம் ஆண்டிற்கு முந்திய சில ஆண்டுகளாகவே நாட்டில் அரசியல் கிளர்ச்சி தொடர்ந்து தீவிரப்பட்டுவந்தது. இது பொதுவாகக் கல்வியையும் சிறப்பாகத் தொடக்கக் கல்வியையும் பாதித்தது. *1917*-ஆம் ஆண்டின் ருஷிய புரட்சி பற்றிய செய்திகளும் இந்தியர்களது மனப்பான்மையினைப் பாதித்தது. காந்தியடிகளது ஒத்துழையாமை இயக்கமும் இப்போது செயல்படத் தொடங்கியது. இப்பல்வேறு இணைந்த காரணங்களின் விளைவாக எழுந்த கொந்தளிப்பைச் சமாளிக்க சில அரசியல் சீர்த்திருத்தங்கள் செய்யப்படவேண்டியது இன்றியமையாததாகும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் கருதினர். உலகப் போர் முடிந்ததும் தனக்கு உதவியதற்காக இந்தியர்களுக்குச் சுதந்தரம் வழங்குவதாகத் தான் அளித்த வாக்குறுதியினை மீறியதற்கு ஈடுசெய்யும் வகையிலும் அரசியலில் சில சிறிய சலுகைகளை அளித்தல் தேவைப்படும் என்றும் இவர்கள் கருதினர். இதன் விளைவாக எழுந்ததுதான் மான்டெகு–செம்ஸ்போர்ட் சீர்த்திருத்தங்களாகும் (Mont-Ford reforms). இச்சீர்திருத்தங்கள் *1921*-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமாயின. இச்சட்டத்தின் விளைவாகவும் இதனைத் தொடர்ந்தும் கல்வித் துறையில் அடுத்த சில ஆண்டுகளில் பல சீர்த்திருத்தங்கள் எழுந்தமையால் *1921* முதல் மாகாண சுயாட்சி எழுந்த *1937*-ம் ஆண்டு வரையிலான காலத்தை 'கல்வி சீர்த்திருத்தங்களின் காலம்' (era of educational reforms) எனக் குறிப்பிடக்கூடும்.

## இரட்டையாட்சி முறை

மான்டெகு - செம்ஸ்போர்ட் சீர்த்திருத்தங்கள் நாட்டில் இரட்டை ஆட்சிமுறை (diarchy) மாகாண அரசாங்க நிருவாகத்தில் தோற்றுவித்தது. இதற்குமுன் மத்திய அரசே பல்வேறு

பொறுப்புகளை நேரடியாக வகித்துவந்தது, தனது தேவைகளுக் கேற்பப் பல சிறப்புக் குழுக்களை (committees and commissions) ஏற்படுத்தி இவற்றின் வழியே இப்பொறுப்புகளைச் செயற் படுத்தியது. இந்நிலைமையை மான்டெகு-செம்ஸ்போர்ட் அறிக் கையின் விளைவான ஆட்சிச் சீர்த்திருத்தச் சட்டம் மாற்றியது. மாகாண அரசாங்கங்கள் இரு பகுதிகளாக ஆக்கப்பட்டன. நிருவாகப் பொறுப்புகளும் மத்திய அரசின் அதிகாரத்திற் குட் பட்ட ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் (reserved) மாகாண அரசு களுக்கு மாற்றப்பட்ட பொறுப்புக்கள் (transferred) எனஇருவகைப் பட்டனவாயின. கல்வி, சுகாதாரம் போன்றன மாகாண அரசு களுக்கு மாற்றப்பட்டு, இப்பொறுப்புகள் மாகாண சட்டசபை வழியே இயங்கும் அமைச்சர்களுக்கு அளிக்கப்பட்டன. கல்வி மாகாண அமைச்சர்களது பொறுப்பாக மாற்றப்பட்ட பிறகும் நாட்டின் சில பகுதிகளிலும் சில பல்கலைக்கழகங்களைப் பொறுத்தும் மத்திய அரசு தானே செயற்பட்டது.

## இரட்டையாட்சியில் கல்வி வளர்ச்சி

இச்சட்டத்திற்குப்பின் மாகாணத்தின் இந்திய அமைச்சர்கள் கல்வி வளர்ச்சி, சீர்த்திருத்தம் ஆகியவற்றுக்காகப் பெரிதும் பாடுபட்டனர். மாகாண சட்டசபைகள் தங்களது வரவு-செலவு திட்டத்தில் விருப்பத்துடன் கல்விக்கான மானியச் செலவை ஏற்றன. தொடக்கக்கல்விப் பொறுப்பினைப் பெற்ற உள்ளாட்சித் துறை நிறுவனங்களும் மிக்க ஆர்வத்துடன் செயற்பட்டன. எனினும் கல்வி வளர்ச்சிக்கான வாய்ப்புகளை முழுமையாகப் பயன் படுத்திக்கொள்வதில் பல தடைகள் எழுந்தன. இரட்டை ஆட்சி முறையில் கல்விக்கான பொறுப்பு இந்திய அமைச்சர்களது கையில் இருப்பினும் வருவாய்த் துறைக்கான (revenue) பொறுப்பு கவர்னரது நேர்கட்டுப்பாட்டில் செயற்பட்ட ஆங்கிலேய மத்திய அமைச்சர்களிடமே இருந்துவந்தது. அதனால் கல்வி வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தத் தேவையான நிதி கிடைப்பது பல போது கடினமாகவிருந்தது. கல்வி மாகாணப் பொறுப்பாக மாற்றப்பட்டதால் மத்திய அரசு மாகாண அரசுக்கு அளித்துவந்த கல்விக்கான மானியத் தொகையினை நிறுத்தியது. இதுவும் கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவமைந்தது. இரட்டை ஆட்சிமுறையிலும் கவர்னருக்கு அதிக அளவு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தன. தமக்கு விருப்பமில்லாத பயனுள்ள கல்வித் திட்டங்களையும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கவர்னர்கள் பலபோது புறக்கணித் தனர். இந்தியாவிற்கான பிரிட்டிஷ் செயலாளர் (secretary of state for India) அதிகாரத்துக்கு மட்டுமே உட்பட்டிருந்த இந்தியக் கல்வித்துறையைச் சார்ந்த (Indian educational service) அதிகாரி

களுக்கும் இந்திய அமைச்சர்களுக்குமிடையே பலபோது கருத்து மோதல்கள் எழுந்தன. இவர்களிடையே ஒத்துழைப்பு மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. இறுதியாக 1924-ஆம் ஆண்டில் இந்தியக் கல்வித்துறைக்கு அலுவலர்களைத் தேர்வு செய்யும் முறை ரத்து செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றும் அரசியல் சட்டம் கல்விப் பொறுப்பை மாகாணங்களுக்கு மாற்றியதால் இந்தியா முழுவதற்கும் பயன்படத்தக்க ஒரு விரிவான கல்விக்கொள்கை எழ மத்திய அரசு முயல இயலாமற் போயிற்று. இதனை மாற்ற 1921-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மைய கல்வி அறிவுரை வாரியமும் (central advisory board of education) இரண்டு ஆண்டுகளில் கலைக்கப்பட்டது. குறிப்பாக இரட்டையாட்சி பயன்குன்றிச் செயற்பட்டதற்கு முக்கிய காரணம் இந்த அரசியல் சட்டத்தில் இந்திய மக்களுக்கு நம்பிக்கை இல்லாததாகும். தங்களை ஏமாற்றுவதற்கு பிரிட்டிஷ் அரசு செய்த சூழ்ச்சியாக இதனை இந்தியர்கள் கருதினர். மாகாண இந்திய அமைச்சர்களும் இத்தகைய கருத்தினைக் கொண்டிருந்ததன் விளைவாக மத்திய மாகாண நல்லுறவு பாதிக்கப்பட்டு, தேவையான கல்விச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது தடைப்பட்டது. இதனால் இரட்டை ஆட்சிக் காலத்தில் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் எழவில்லை. மேலும் இக்காலத்தில் ஆங்கிலேயர்பால் இந்தியர்களுக்கு இருந்த வெறுப்புணர்ச்சி பல வரலாற்று நிகழ்ச்சிகளின் விளைவாக அதிகரித்துக்கொண்டு போயிற்று. நாட்டுப்பற்றையும் தேசிய உணர்ச்சியையும் இந்தியப் பண்பாட்டையும் நசுக்கி ஒடுக்குவதாகக் கருதப்பட்ட கல்விமுறையினையும் ஆங்கிலப் பள்ளிகளையும் மாணுக்கர்கள் புறக்கணித்தலும் இப்போது எழுந்தது. இக்கல்வி முறைக்கு மாற்முக தேசியப் பள்ளிகள் வித்யாபீடங்கள், குருகுலப்பள்ளிகள் போன்றன நிறுவப்பட்டன. இவை யாவும் இந்தியக் கல்வி அமைப்பில் மேலும் மாற்றங்களைத் தோற்றுவித்ததற்கான காரணங்களாயின.

### ஹார்டாக் கல்விக் குழு

இரட்டை ஆட்சி முறையில் வேறுபல நிகழ்ச்சிகளும் இந்தியரிடையே மனக்கசப்பைத் தோற்றுவித்திருந்தன. இதனால் இந்திய அரசியல் நிலைமைபற்றியும் இந்தியச் சட்டத்தின் அரசியல் மற்றும் சட்டக் கூறுகளைப்பற்றியும் ஆராய்வதற்கென சைமன் குழு (Simon commission) 1927-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. இக்குழு இந்தியக் கல்வியின் நிலைமைபற்றியும் ஆராயுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதால் இதற்கென ஒரு துணைக்குழு உருவாயிற்று. இதன் தலைவராக ஸேட்லர் குழுவில் ஓர் உறுப்பினராகவிருந்த சர் பிலிப் ஹார்டாக் (Sir Philip Hartog) என்பவர்

நியமிக்கப்பட்டார். ஹார்டாக் கல்விக்குழு தனது அறிக்கையை 1929-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் வெளியிட்டது.

**பரிந்துரைகள்**

ஹார்டாக் கல்விக்குழுவின் அறிக்கையில் இந்தியக் கல்வியின் பல்வேறு கூறுகளைப்பற்றி தெளிவான ஆராய்ச்சி காணப்படுகிறது. 1917 முதல் 1927 வரை கல்வியில் வளர்ச்சி எழுந்துள்ளது என்பதனை ஹார்டாக்குழு ஒப்புக்கொண்டது. தரமும் சிறிது அதிகரிப்பதனைச் சுட்டிக்காட்டியது. கல்வி நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படை என்பதனை யாவரும் உணர்ந்துள்ளனர் என்றும் கல்விப் பொறுப்பு மாகாண இந்திய அமைச்சர்களுக்கு மாற்றப்பட்டதன் விளைவாக கல்வி வளர்ச்சியில் மக்களது ஆர்வம் பெருகியிருப்பதுடன் கல்விச் சீர்த்திருத்தங்கள் மக்களது கருத்துகளுக்கு ஏற்ப அமைதலையும் உணர்த்தியுள்ளது என்றும் இவ்வறிக்கை குறிப்பிட்டது. மற்றும் கல்வியில் பிற்பட்ட நிலையில் காணப்பட்ட முகம்மதியர்கள், பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரும் கல்வி ஆர்வம் மிகுந்துள்ளனர் என்பதனை ஹார்டாக் கல்விக்குழு தனது அறிக்கையின் தொடக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடக்கக்கல்வி பற்றிக் குறிப்பிடுகையில் இது நாட்டில் வளர்ச்சி பெற்றிருப்பினும் படித்தவர்களது எண்ணிக்கை பெருகவில்லை என்று கூறியது. இதற்கான காரணங்களை இக்குழு வரிசைப் படுத்தியது. இந்தியக் கல்வியில் இந்நிலையில் பெருமளவு கழிவு (wastage) காணப்படுகிறது. இதற்குத் தேக்கமும் (stagnation) துணை செய்கிறது. உயர்நிலைப்பள்ளிக் கல்வி, உயர்கல்வி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டதன் விளைவாக தொடக்கக் கல்வி புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளது. முக்கியமாக கிராமப் புரங்களில் எழுத்தறிவு வளர்ச்சி மோசமாக உள்ளது. ஏழைமை, அறியாமை, போக்குவரவுச் சாதனங்களில் குறைபாடு, சாதி வேறுபாடுகள், தொற்றுநோய்கள், குழந்தைகளும் விவசாயப் பணிகளில் ஈடுபடுத்தப்படல் ஆகிய பல காரணங்கள், இருந்த தொடக்கக்கல்வி வாய்ப்புகளையும் கிராமப்புரமக்கள் நன்கு பயன் படுத்திக்கொள்வதில் குறுக்கிட்டன. மாகாண அரசாங்கங்களும் கட்டாயத் தொடக்கக்கல்வியினை நன்கு செயற்படுத்துவதில் போதிய முயற்சி மேற்கொள்ளவில்லை. சாதாரணமாக முதல் நான்கு வகுப்புக்களைப் படித்து முடித்தால்தான் ஓரளவு எழுத்தறிவு பெறுதல் இயலும். ஆனால் பல குழந்தைகள் முதல் இரண்டு வகுப்புக்களுடன் தங்களது கல்வியை நிறுத்திக்கொள்ளும் நிலை காணப்படுவதை இக்குழு குறிப்பிட்டது. பிரிட்டிஷ் இந்தியாவில் அப்போது, 1-ஆவது வகுப்பில் சேர்ந்த 100 மாணவர்களில் 19 மாண

வர்களே தொடர்ந்து 4 வகுப்புவரை கல்விபயிலும் விகிதம் காணப் படுதலே குழு எடுத்துக்காட்டியது. இதனையே இக்குழு கழிவு (wastage) என்று குறிப்பிட்டது; தொடக்கப்பள்ளிப் படிப்பு முடிவதற்கு முன் குழந்தை பள்ளியைவிட்டு விலகுவது 'கழிவு' எனப்படும். ஒரே வகுப்பில் அடுத்த ஆண்டும் குழந்தை நிறுத்தி வைக்கப்படுவது 'தேக்கம்' எனப்படும்.

தொடக்கக்கல்வியில் ஏற்படும் கழிவுக்கான காரணங்களை ஹார்டாக் கல்விக்குழு ஆராய்ந்துள்ளது. தேக்கம் கழிவிற்கு ஒரு காரணமாகும், தொடக்கக்கல்வியினை முடிக்காமல் பள்ளியை விட்டு மத்தியில் நீங்கும் குழந்தைகள் தாங்கள் கற்ற ஒரு சிறிதினையும் மறந்து எழுத்தறிவற்றவர்களாக மாறினர். முதியோர் கல்விக்கான வாய்ப்புகள் போதிய அளவு இருக்கவில்லை. தொடக்கப்பள்ளிகள் பரவலாக அமைந்திருக்கவில்லை. சில இடங் களில் தேவைக்கதிகமான பள்ளிகளும் சில இடங்களில் பள்ளிகளே இல்லாமலும் இருந்தன. மிகக் குறைந்த மக்கட்தொகையுள்ள சிற்றூர்களுக்குப் பள்ளி வசதி செய்துதருவது ஓரளவு கடினமாகக் காணப்பட்டது. இயங்கிவரும் பள்ளிகளினின்றும் முழுப்பயன் பெற முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. பல குழந்தைகள் இப்பள்ளிகளுக்குச் செல்லவே இல்லை. ஓராசிரியப் பள்ளிகளின் கல்வித்தரம் குறைந்து காணப்பட்டது. பாடத்திட்டமும் மக்கள் வாழ்க்கைத் தேவைகளுடன் தொடர்பின்றி காணப்பட்டது; ஆசிரியர்கள் பயிற்சி பெற்றோராக இருக்கவில்லை; பள்ளிகளது ஆய்வும் திறம்பட நடத்தப்படுவதில்லை. இக்காரணங்கள் கழிவினைத் தோற்றுவித்தன என்று ஹார்டாக்குழு ஆராய்ந்து கருத்து தெரிவித்தது.

வருந்தத்தக்க இந்நிலைமையை மாற்றி தொடக்கக்கல்வியின் தரத்தை உயர்த்தவும் ஹார்டாக் கல்விக்குழு பல பரிந்துரைகளை அளித்தது.

தொடக்கக்கல்வியினை மேலும் விரிவாக்க முற்படுமுன் இது வரை ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளின் நிலை வலுப்படுத்தப்பட வேண்டும். தொடக்கக்கல்வி குறைந்தது நான்கு ஆண்டுக் காலங்கள் நீடிக்கவேண்டும். தொடக்கப்பள்ளி ஆசிரியர்களது தரமும் பணிநிலைமையும் உயர்த்தப்படுவது இன்றியமையாத தாகும். இவர்களது பயிற்சிக்கும், புதுப்பயிற்சிக்கும் (refresher course), இவர்களுக்கான கல்வி மாநாடுகளுக்கும் வாய்ப்புகள் இருத்தல்வேண்டும். ஆசிரியர்களது ஊதியம் உயர்த்தப்பட்டு பணிநிலைமைகள் (service conditions) சீராக்கப்படவேண்டும். தொடக்கப்பள்ளிகளின் பாடத்திட்டம் மேலும் பயனளிக்கும்

முறையில் விரிவாக்கப்படவேண்டும். இப்பாடத்திட்டம் பள்ளி செயல்படும் சமுதாயத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டும். பள்ளியின் வேலைக்காலம், விடுமுறை நாட்கள் ஆகியனவும் இதற்கேற்ப அமைக்கப்படவேண்டும்.

தொடக்கப்பள்ளிகளின் கீழ்வகுப்புக்களுக்குத் தனிக்கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். இங்குதான் கழிவும் தேக்கமும் அதிக அளவில் காணப்படுகின்றன. இவற்றின் காரணிகளை அகற்ற இவ்வகுப்புக்களில் பெருமுயற்சி மேற்கொள்ளப்படுவது மிகவும் இன்றியமையாதது.

தொடக்கக் கல்வியுடன் இணைந்த முறையில் கிராம முன்னேற்றப் பணிகள் மேற்கொள்ளப்படுவது நல்லது. தொடக்கக் கல்வியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இதன் வளர்ச்சிக் கான பொறுப்பினை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைப்ப தோடு வாளாயிராமல் அதனைப் பரவலாக்குவதில் அரசாங்கமும் கவனம் செலுத்தவேண்டும்: தொடக்கப்பள்ளிக்கான அரசு கல்வித்துறை ஆய்வாளர்களது எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

போதிய முன்னேற்பாடுகள் இன்றி கட்டாயத் தொடக்கக் கல்வியினைச் செயற்படுத்த முற்படுவதனை ஹார்டாக்குழு வரவேற்கவில்லை.

உயர்நிலைப்பள்ளிக் கல்விபற்றியும் ஹார்டாக் கல்விக்குழு ஆராய்ந்து கருத்துத் தெரிவித்துள்ளது. இக்கல்வி நிலையில் திருப்தி யான முன்னேற்றம் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்டது. ஆசிரியர் களது திறமை, ஆசிரியப் பயிற்சியின் தரம், ஆசிரியர்களது பணி நிலைமை போன்றவற்றிலும் முன்னேற்றம் உள்ளது. உயர்நிலைப் பள்ளிகளது செயல்களும் விரிவாக்கப்பட்டுள்ளன. எனினும் உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் அமைப்பில் சில பெருங்குறைகளை இக்குழு சுட்டிக்காட்டியது. உயர்நிலைப்பள்ளியில் சேரும் ஒவ்வொரு மாணாக்கனும் மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றிபெற்று, பல்கலைக் கழகத்தில் நுழைவதுதான் இக்கல்விநிலையின் நோக்கம் என்ற தவறான கருத்து பரவலாகக் காணப்பட்டது. மெட்ரிகுலேஷன் தேர்வில் ஏராளமானபேர் வெற்றி பெறாமல் போகும் நிலை கல்வி முயற்சியில் பெரும் பங்கு வீணாவதைக் குறிப்பதாகும் என்பதனை இக்குழு குறிப்பிட்டது. இந்த நிலைமைக்குக் காரணங்கள் கீழ் வகுப்புக்களில் வகுப்பு மாற்றத்திற்கான விதிகள் போதிய அளவு கடுமையாக இல்லாமலிருத்தலும், தகுதியற்ற மாணாக்கர்கள் உயர் நிலைக்கல்வி பயில முற்படுவதும் ஆகும் என்று இக்குழு கருதியது. உயர்நிலைப்பள்ளிக் கல்வியைச் சீராக்க, பெரும்பான்மையான

மாணுக்கர்களது தேவைகளுக்கு உதவவல்ல பலவகைப்பட்டதும் பலதிறப்பட்டதுமான பாடல்கள் நடுநிலைப்பள்ளிகளில் (middle school) கற்பிக்கப்படுதலை இக்குழு ஆதரித்தது. உயர்நிலைப் பள்ளிகளிலும் தொழில்துறை வாணிபத்துறை போன்றவற்றிற் கான பயிற்சியினை அளிக்கும் பாடல்களும் தொழில்நுட்ப, தொழிற் பயிற்சிக்குதவும் பாடங்களும் புகுத்தப்படவேண்டும். இவற்றுள் தமக்கு விருப்பமான ஒன்றினை மாணுக்கர் தேர்ந்தெடுத்துப் பயிலலாம். மாணுக்கர்களது முன்னேற்றம் ஆசிரியரின் பணி நிலைமையுடன் இணைந்திருத்தலால் ஆசிரியர்களது நிலையும் உயர்த்தப்படுவது அவசியமாகும்.

பல்கலைக்கழக உயர்கல்வியின் வளர்ச்சி மனநிறைவுதரக் கூடியதாக அமைந்திருந்ததென்ருலும் இதிலும் சில குறைபாடுகள் உள்ளன என்பதனை ஹார்டாக் கல்விக்குழு எடுத்துக் கூறியது. பல்கலைக்கழகங்கள் பொதுவாக தேர்வுக்கு முதலிடம் தந்து செயற் பட்டன. இத்தேர்வுகளில் வெற்றி பெருமற்போகும் மாணுக்கர் களது எண்ணிக்கையும் மிகுதியாக உள்ளது. மாணுக்கர்களது எண்ணிக்கைப் பெருக்கம், பல்வேறு பல்கலைக்கழகங்களிடையே சிலபோது காணப்படும் போட்டி மனப்பான்மை ஆகியன தரக் குறைவுக்கு காரணங்களாக அமைகின்றன. சிறந்த உயர்கல்வியின் இறுதி விளைவுகளாகக் கருதப்படும் சமுதாயப் பண்புகளான சகிப்புத்தன்மை, பரந்த மனப்பான்மை, தன்னம்பிக்கை போன்றன மாணுக்கர்களிடம் வளர்ச்சிபெற உதவும் வகையில் பல்கலைக்கழகக் கல்வி அமைந்திருக்கவில்லை. பல்கலைக்கழகக் கல்வியின் நிலையை உயர்த்த ஹார்டாக் கல்விக்குழு சில பரிந்துரைகளைத் தந்துள்ளது. கல்வித்தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள பல்கலைக்கழகங்களின் நுழைவுத் தேர்வுகளின் விதிகள் கடுமையாக்கப்பட்டு, உயர்கல்வித் தகுதியற்றோர் பல்கலைக்கழகங்களுள் நுழையாமல் தடுப்பதன் அவசியத்தை இக்குழு சுட்டிக்காட்டியது. பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் நல்ல நூலகங்கள் இருத்தல்வேண்டும்; மாணுக்கர் களைச் சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களிடம் தனிக்கவனம் செலுத்த ஆசிரியருக்கு உதவும்முறை (tutorial system and tutorial classes) கல்லூரிகளில் செயற்படுத்தப்படவேண்டும். பட்டப் படிப்போடு தனியாக ஆனர்ஸ் வகுப்பு ஏற்படுத்தப்படவேண்டும். இவ்வகுப்பு திறம்பட நடக்கப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் கல்லூரி ஆசிரியர்களும் இணைந்து செயற்படவேண்டும். இணைந்துள்ள கல்லூரிகளது ஆசிரியர்களைப் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுத்து நியமித்தல் விரும்பத்தக்கதாகும். மற்றும் உயர்கல்வியின் மதிப்பை உயர்த்த பட்டம்பெற்ற இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

பெண்கள் கல்வியின்நிலை உற்சாகமூட்டுவதாகயில்லை என்று ஹார்டாக் கல்விக்குழு கருதிற்று. கிராமப்புரங்களில் பெண்களது கல்விக்கு வாய்ப்புகள் மிகக்குறைவு. பெண் ஆசிரியைகளது எண்ணிக்கையும் குறைவு. பெண்களது கல்வியில் கழிவு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே பெண்கல்வி வளர்ச்சிக்குழு பெருமுயற்சி தேவை என்பதனை இக்குழு வலியுறுத்தியது. பெண் களுக்கான தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஆகிய வற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். இம்மாதிரியே ஆசிரியைகள், பெண்கல்வி ஆய்வாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை யினைப் பெருக்க முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். தொடக்கக் கல்வி சிறுமியர்க்கும் கட்டாயமாக்கப்படவேண்டும். ஆனால் இது படிப்படியாக செயற்படுத்தப்படலாம். பெண்களுக்கான பாடத் திட்டம் அவர்களது தேவைகளுக்கேற்ப அமைக்கப்படுவது அவசிய மாகும். இத்தகைய பாடத்திட்டத்தினை உருவாக்க கல்வியும் அனுபவமும் மிக்க பெண்களது உதவி கோரப்படலாம். மனையியல், இசை, சுகாதாரம் போன்றன இவர்களது கல்வியில் வலியுறுத்தப் படலாம். உயர் கல்விக்கான வாய்ப்புகளும் பெண்களுக்கு அளிக்கப்படுவது தேவையாகும். மற்றும் கிராமத்தில் பெண்கள் ஆசிரியைகளாகப் பணியாற்ற அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வீட்டுவசதி, அதிக ஊதியம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

ஹார்டாக்குழு வேறுசில பரிந்துரைகளையும் கூறியுள்ளது. வாழ்க்கைத் தொழில்களுக்கான கல்வி, தொழில் நுட்பக்கல்வி ஆகியவற்றுக்கான நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும், இத்தகைய நிறுவனங்கள் பல்கலைக்கழக நிலையிலும் தேவைப்படு வனவாம் என்றும் இக்குழு கூறியுள்ளது. மற்றும், கல்வியில் பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டோர் போன்றோரும் தனிப் பள்ளிகளில் பயிலுவதைவிட பிறருடன் சேர்ந்து கல்வி கற்பது நல்லது எனக்கருத்து தெரிவித்தது. இறுதியாக, கல்விப் பொறுப்பினை மாகாண அரசாங்கங்களுக்கு மாற்றியது அவசரப் பட்டுச் செய்யப்பட்டதென்றும் மத்திய அரசு தனது கல்விப் பொறுப்புகளை கைவிடக்கூடாது என்றும் அறிவுறுத்தியது.

## மதிப்பீடு

ஹார்டாக் கல்விக்குழுவின் அறிக்கை கல்வி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அன்றைய கல்விக் கொள்கைகளுக்கு இது முழுமை யான ஒரு உருவம் தந்தது. கல்வி வளர்ச்சியைத் திடப்படுத்த உதவியது. கல்வித் துறையினர் இதனை உற்சாகத்துடன் வரவேற்றனர். ஆனால் பிறர் இவ்வறிக்கையைக் கடுமையாகக் கண்டித்தனர். தரஉயர்வு என்று கூறி, நாட்டில் கல்வி விரிவாக்கப்

படுவதை இது தடுப்பதாக அமைகிறது என்று இவர் கருதினர். இவ்வறிக்கையின் பயனாக நாட்டின் உடனடியான முதல் தேவையான எல்லோர்க்கும் எழுத்தறிவளித்தல் நிறைவு பெறுமற் போகுமென்று ஐயப்பாடு கொண்டனர். இதற்கேற்றாற்போல் பொருளாதார நெருக்கடி நிலைமையின் காரணமாக 1927-28-ஆம் ஆண்டுகளுக்குப்பின் அரசாங்கம் கல்விக்கென செலவிட்ட பணத்தின் அளவு குறைக்கப்பட்டது; கல்வி வளர்ச்சித் திட்டங்களும் பாதிக்கப்பட்டன.

### சாப்ரு குழு அறிக்கை

1934-ஆம் ஆண்டில் சர் டேஜ் பகதூர் சாப்ரு (Sir Tej Bahadur Sapru) என்பாரது தலைமையில் வேலையின்மைப் பிரச்சினைபற்றி ஆராய ஐக்கிய மாகாண அரசு நியமித்த குழுவும் உயர்நிலைப்பள்ளி நிலையில் பல்துறைப் பாடங்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதை ஆதரித்தது. இண்டர்மீடியட் வகுப்பை எடுத்துவிட்டு உயர்நிலைக் கல்விக் காலத்தை மேலும் ஓராண்டு நீட்டிக்கலாம் என்றது. நடுநிலைப்பள்ளி நிலையிலேயே தொழிற்கல்விப் பாடங்கள் புகுத்தப் படுவதை ஆதரித்தது.

### மையக்கல்வி அறிவுரை வாரியம்

மையக்கல்வி அறிவுரை வாரியம் (central advisory board of education) 1921-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் மூடப்பட்டது என்று முன்னரே குறிப்பிடப்பட்டது. மைய, மாகாணங்களின் கல்விக் கொள்கைகளை இணைப்பதற்கும் பல்வேறு முக்கிய கல்விப் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிவுரை கூறுவதற்கும் இவ்வாரியம் ஏற்படுத்தப்பட்டது. ஹார்டாக் கல்விக்குழுவின் பரிந்துரையினைப் பின்பற்றி 1935-ஆம் ஆண்டில் இவ்வாரியம் மீண்டும் ஏற்படுத்தப் பட்டது. எல்லா மாகாணப் பிரதிநிதிகளும் இதில் உறுப்பினர் களாகவிருந்தனர். இதன் முதல் கூட்டத்தில் பல முக்கிய கல்விப் பிரச்சினைகளை ஆராய்ந்து கல்வி அமைப்பில் உடனடியாகத் தேவைப்படும் மாற்றங்கள் பற்றிய தீர்மானங்களை இவ்வாரியம் நிறைவேற்றியது. கல்வியில் மூன்று நிலைகள் இருத்தலை இது விரும்பியது. குறைந்தபட்சக் கல்வியினையும் நிலைத்த எழுத்தறிவினையும் அளிக்கும் தொடக்கநிலை, தன்னிறைவு தரத்தக்கதும் உயர்நிலைப்பள்ளிக் கல்வி தொழிற்கல்வி ஆகியவற்றுக்கு அடிப் படையாக அமையக்கூடியதுமான நடுநிலை அல்லது கீழ் செகண்டரி நிலை, உயர் செகண்டரிநிலை அல்லது உயர்நிலைப்பள்ளி நிலை என்பன இவையாகும். உயர் செகண்டரி கல்விநிலையில் பல்வேறு நோக்கங் களும் பாடத்திட்டங்களும் கொண்ட ஐவகைக் கல்விக்கூடங்கள் இருத்தல்வேண்டும். பல்கலைக்கழகப் படிப்பு, கிராமப்புறங்களுக்

கான ஆசிரியப் பயிற்சி, வேளாண்மைப் பயிற்சி, அலுவலக எழுத்தர் பயிற்சி, குறிப்பிட்ட சில தொழில் நுட்பங்களில் பயிற்சி ஆகியன உயர்நிலைப்பள்ளிகளின் ஐவகை நோக்கங்களாகும். முழுமையாக ஏட்டுப்படிப்பாகவும் இலக்கியப் படிப்பாகவும் அமைந்துள்ள பொதுக் கல்விமுறை மாற்றப்பட்டு வாழ்க்கைப் பயனுள்ள தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வி ஆகியன வலியுறுத்தப்படுதலை கல்வி வாரியம் வலியுறுத்திற்று. கீழ் செகண்டரி கட்டத்தின் இறுதி வகுப்பில் ஒரு பொதுத்தேர்வு (public examination) இருக்க வேண்டுமென்று கருதியது. மற்றும், இத்தீர்மானங்களுக்கேற்ப கல்வி அமைப்பினை மாற்றியமைக்க சிறந்த கல்வி வல்லுநர்களது உதவி பெறப்பட வேண்டுமென்றும் கூறியது.

### உட்-ஆபட் அறிக்கை

மேலே குறிப்பிடப்பட்ட கருத்தினைச் செயற்படுத்தும் நோக்குடன் இங்கிலாந்தின் தொழில்நுட்பப் பள்ளிகளது முதன்மை ஆய்வாளராகவிருந்த ஆபட் (Abbot) என்பாரும், இங்கிலாந்தின் கல்விவாரியத்தில் நுண்ணறிவு இயக்குநராகவிருந்த உட் (Wood) என்பாரும் இந்தியாவிற்கு வரவழைக்கப்பட்டனர். இவ்விருவரும் 1936-37 ஆண்டுகளில் இந்தியா முழுமையும் சுற்றிப்பார்த்து, பின்னர் 1937-ஆம் ஆண்டு ஜுன் மாதம் தங்களது அறிக்கையைச் சமர்ப்பித்தனர். இவ்வறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. நமது நாட்டின் பொதுக்கல்வி அமைப்பினை உட் ஆராய்ந்து இதுபற்றி தமது கருத்துகளைத் தெரிவித்தார். தொழில், தொழில்நுட்பக் கல்விபற்றி மிகநுட்பமாக ஆபட் ஆராய்ந்து நடைமுறைச் சாத்தியமான பல கருத்துக்களைத் தெரிவித்தார். இவர்களது கல்வி அறிக்கை உட்-ஆபட் அறிக்கை (Wood-Abbot report) எனப்படும்.

பொதுக்கல்வி பற்றிய உட் என்பாரது பரிந்துரைகள் பின் வருவனவாம்: தொடக்கப்பள்ளிகளுக்கு முடிந்தவரை பயிற்சி பெற்ற ஆசிரியர்களே நியமிக்கப்படவேண்டும். பெண்கள் கல்வியில் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டும். தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் ஏட்டுப்படிப்பாகவிராமல் குழந்தைகளது செயல்களின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். கிராமப்புற தொடக்கப்பள்ளிகளது பாடத்திட்டம் கிராமச் சூழ்நிலைக்கும் கிராமியத் தேவைகளுக்கும் ஏற்ப அமைக்கப்படல்வேண்டும். தொடக்கப்பள்ளிகளில் தாய்மொழி மட்டும் பயிற்று மொழியாகவிருத்தல் வேண்டும். ஆங்கிலம் இந்நிலையில் கற்பிக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் உயர்நிலைப்பள்ளிகளில்

ஆங்கிலம் கட்டாயம் கற்பிக்கப்படவேண்டும்; தொடக்கநிலையிலும், உயர்நிலைப்பள்ளிக் கல்வி நிலையிலும் கலையும் கைப்பணிகளும் (arts and crafts) ஊக்குவிக்கப்பட்டு கல்வி ஏற்பாட்டில் இடம் பெறுதல் அவசியமாகும். கைப்பணிகளையும் கலையினையும் கற்பிக்க திறமைமிக்க ஆசிரியர்கள் பள்ளிகளில் நியமிக்கப்படவேண்டும். நடுநிலைப்படிப்பை முடித்து நடுநிலை அல்லது தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிய விரும்புவோர்க்கு மூன்றாண்டுகால ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

தொழிற்கல்வியின் சீரமைப்புபற்றி ஆபட்டின் பரிந்துரைகள் பின்வருவனவாகும் : சூழ்நிலைத் தேவைகளின் அடிப்படையில் எத்தொழிலுக்கான பயிற்சியளிப்பது என்பது நிர்ணயிக்கப்படுவது அவசியமாகும். தொழில்நுட்பக் கல்வியும் பொதுக்கல்வி போன்ற சிறந்த கல்விப் பயனுடையது என்பதனை ஆபட் தெளிவுபடுத்தினர். ஆளுமையின் இசைந்த வளர்ச்சிக்குப் பொதுக்கல்வி துணைபுரிவது போன்ற தொழில் கல்வியும் உதவுவதாகும். தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சி நாட்டின் தொழில் துறை வளர்ச்சி (industrial development)க்கு ஏற்ப அமைய வேண்டும். இல்லையேல் வேலையின்மை பிரச்சினை உருவாகக்கூடும். தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியன பொதுக்கல்வியுடன் தொடர்புடையனவெனினும் இவற்றின் நோக்கமும் முறைகளும் மாறுபடுவதால் இவற்றுக்குத் தனிப்பள்ளிகள் தேவைப்படும். தொழிற்கல்வி தொடங்குமுன் பொதுக்கல்வி ஓரளவு அளிக்கப்பட வேண்டும். தொழிற்கல்வி வளர்ச்சியுடன் வேளாண்மை குடிசைத் தொழில்கள் ஆகியனவும் வளர்க்கப்படுதல் தேவை. நாட்டின் தொழில் வளர்ச்சிக்குதவ நிருவாகிகள் (managers), மேற்பார்வையாளர்கள் (supervisors), இயந்திரங்களை இயக்குபவர்கள் (operators) போன்ற மூவகை அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென ஆபட் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாகாணத்திலும் தொழிற்கல்விக்கான ஓர் அறிவுரைக்குழு (advisory council for vocational education) அமைக்கப்பட வேண்டுமென ஆபட் பரிந்துரைத்தார். இக்குழு, பொறியியல், நூற்புத்தொழில்கள், வேளாண்மை, சிறுதொழில்கள் குடிசைத்தொழில்கள், வாணிபம் போன்றவற்றுக்கான உட்குழுக்களைக் கொண்டிருக்கவேண்டும். தொழிற்கல்வியினை நன்கு செயற்படுத்துவது, பாடத்திட்டத்தை உருவாக்குவது போன்றன இவ்வுட்குழுக்களது பொறுப்பாகவிருக்கும்.

ஓரளவு பொதுக் கல்விக்குப்பின் தொழிற்கல்வி தொடங்கும். இதற்கான பள்ளிகள் இளநிலை, முதுநிலை (junior and senior

vocational schools) என இருவகைப்பட்டு செயற்படும். நடுநிலைப் பள்ளி முடித்தவர்கள் இளநிலைப்பள்ளிகளிலும் உயர் செகண்டரி கல்வி முடித்தவர்கள் முதுநிலைப்பள்ளிகளிலும் சேரலாம். இளநிலை தொழிற்பள்ளிப் படிப்பு இரண்டாண்டுகளாகும். இதனை முடித்தவர்கள் முதுநிலைப் பள்ளிகளில் சேரலாம் அல்லது வேறு தனித் தொழிற்பயிற்சி பெறலாம். முதுநிலை தொழிற்பள்ளித் தேர்ச்சி இண்டர்மீடியட் தேர்ச்சிக்கு ஈடாகும். இப்படிப்பும் இரண்டாண்டு காலம் நீடிக்கும். வேளாண்மையினைப் பொறுத்த வரை ஒருசில பள்ளிகள் போதுமானவை. ஒவ்வொரு தொழிலுக்கான பயிற்சியை ஒரு தனிப்பள்ளியில் அளிப்பதற்குப்பதில் பாலிடெக்னிக் பள்ளிகள் (polytechnics) எனப்படும் பல்தொழிற் பள்ளிகள் நிறுவப்படலாம் என்றும் ஆபட் கருத்து தெரிவித்தார்.

உட்-ஆபட் அறிக்கை நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவதாக அமைந்தது; எனினும் அதன் பரிந்துரைகளை அரசாங்கம் செயற்படுத்த முனையவில்லை.

1921-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரையிலான காலத்தை மொத்தமாக நோக்கும்போது, இக்காலத்தில் பல்கலைக் கழக வளர்ச்சி திருப்தியளிக்கக் கூடியதாகவிருந்தது எனலாம்; இவ்வாறே செகண்டரி அல்லது உயர்நிலைப்பள்ளிக் கல்வியும் ஓரளவு வளர்ச்சிபெற்றுக் காணப்பட்டது. ஆசிரியப் பயிற்சி வாய்ப்புகளிலும் ஆசிரியர்களது பணிநிலைமையிலும் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. இது தொழில்நுட்பக் கல்விக்கும் ஓரளவு பொருந்தும் எனலாம். ஆனால் தொடக்கக்கல்வி தேவையான வளர்ச்சியைப் பெறவில்லை என்றே கருதத் தோன்றுகிறது.

## வினாக்கள்

1. இரட்டையாட்சியின் கீழ் இந்தியக் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியை விவரிக்க.

2. இந்தியாவில் தொடக்கக்கல்வியின் வளர்ச்சிக்கு ஹார்டாக் குழுவின் பரிந்துரைகள் எவ்வாறு உதவியுள்ளன ?

3. உயர்நிலைப்பள்ளிக் கல்வி, உயர்கல்வி, பெண்கள் கல்வி ஆகியவை பற்றிய ஹார்டாக் கல்விக் குழுவின் கருத்துகளைச் சுருக்கி வரைக.

4. 'மையக் கல்வி வாரியம்' பற்றிச் சிறு குறிப்பு வரைக.

5. ஆபட்–உட் என்போரது அறிக்கையின் முக்கியத்துவத்தை விளக்குக.

6. 1921 முதல் 1937 வரையிலான காலம் 'கல்விச் சீர்த்திருத்தங்களின் சகாப்தம்' என ஏன் குறிப்பிடப்படுகிறது ?

# 12. சில இந்தியப் பெரியோர்களது கல்விக் கருத்துகள்

## முன்னுரை

நமது நாட்டில் ஆங்கிலேயர்களது ஆட்சி வேரூன்றி நிலைக்கத் தொடங்கிய சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும், மற்றும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் நம்மிடையே மிகச் சிறந்த சில சிந்தனையாளர்களும் சீர்திருத்தவாதிகளும் தோன்றினர். இந்து சமயத்திலும் சமுதாயத்திலும் காலப்போக்கில் எழுந்த பல்வேறு குறைகளையும் பயனற்ற பழக்கங்களையும் களைந்து சமுதாயத்திற்குப் புத்துயிர் அளிக்க இப்பெரியோர்கள் பெரும்பாடு பட்டனர். நமது பண்டைய மரபின் பெருமையை நாம் மீண்டும் உணர இவர்கள் உதவியதுடன் நமது நாகரிக-ஆன்மிகச் சிறப்பினை வேற்றுநாட்டினரும் அறிந்து பாராட்டவும் துணை செய்தனர். நமது நாட்டிற்கான கல்வி அமைப்பிலும் இவர்கள் தங்களது சிந்தனையைச் செலுத்தி, பயன்மிக்க பல கல்விக் கருத்துகளை நமக்குத் தந்துள்ளனர். கல்விபற்றி இப்பெரியோர்கள் ஆராய்கையில் பள்ளி ஆசிரியர்கள் என்ற ஓரளவு குறுகிய நோக்கினின்றும் ஆராயாமல், மனித இனத்தினை உயர்த்தவந்த ஆசிரியர்கள் என்ற பரந்த நோக்கினின்றும் இவர்கள் செயற்பட்டனர் என்பது இக்கருத்துகளின் சிறப்பை மேலும் உயர்த்துவதாக அமைகிறது. நம் நாட்டுப் பண்பாட்டுடனும் தேவைகளுடன் இணைந்தவை எனச் சிறப்பாகக் குறிப்பிடத்தகும் கல்விக் கோட்பாடுகள் இவையாகும். இப்பெரியோர்கள் ஒருசிலரது கல்வித் தத்துவங்களையும் கருத்துகளையும் ஓரளவேனும் அறிவது பயனுள்ளதும் அவசியமானதுமாகும். நாட்டில் இன்றுள்ள கல்வி அமைப்புபற்றி மாணவருலகில் சிலபோது காணப்படும் எதிர்ப்பு மனப்போக்கைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது இச்சிந்தனையாளர்களது கல்விக் கருத்துகளின் சிறப்பு மேலும் தெளிவாகிறது.

## சுவாமி தயானந்தர் (1825-1883)

ஆரிய சமாஜ இயக்கத்தினைத் (arya samaj) தோற்றுவித்த சுவாமி தயானந்தர் இவ்வியக்கத்தின் வழியே இந்து சமுதாயத்தினைச் சீர்த்திருத்த முயன்றதுடன் நமது நாட்டிற்கேற்ற கல்விமுறை பற்றியும் தமது ஆழ்ந்த கருத்துகளைக் கூறியுள்ளார். ஆரிய சமாஜ இயக்கம் சில அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டமைந்தது. உண்மை அறிவு கடவுளிடமிருந்து எழுவதாகும்; இவ்வறிவு வேதங்களில் பொதிந்துள்ளதனால் வேதங்களைக் கற்பதும் பிறர்க்குக் கற்பிப்பதும் ஒவ்வோர் இந்தியனது கடமையாகும். உண்மையினை நிலைநிறுத்தவும் பொய்யை எதிர்க்கவும் நாம் ஒவ்வொருவரும் தீவிரமாகச் செயற்படுதல் நமது கடமையாகும். நம் செயல்கள் யாவற்றுக்கும் அடித்தளமாகச் சிந்தனையும் நற்பண்புகளும் இருத்தல் அவசியம். பிறர் மகிழ்வுற்றிருந்தால் மட்டுமே நம்மால் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துதல் இயலும் என்பதனை நாம் மறக்கலாகாது. இத்தகைய கோட்பாடுகளைக் கொண்ட ஆரிய சமாஜ இயக்கத்தின் வழியே நாட்டு மக்களை ஒன்றுபடுத்தி, இவ்வொற்றுமையின் வாயிலாக நாட்டில் சமூக-சமயப் புதுவாழ்வு ஒன்றினை உருவாக்கப் பாடுபட்டவர் தயானந்தர். 'சத்தியார்த்தப் பிரகாசம்' என்னும் நூலில் இவரது கல்விக் கருத்துகள் காணப்படுகின்றன.

சுவாமி தயானந்தரது கல்வித் தத்துவம் அவரது வாழ்க்கை நோக்கு, இலட்சியம் ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும். ஒரு குழந்தையின் கல்வியினை நன்கு தொடங்கி நெறிப்படுத்துவதில் அதன் பெற்றோர்களுக்கும் குடும்பச் சூழ்நிலைக்கும் இருக்கும் முக்கிய பங்கினையும் செல்வாக்கினையும் தயானந்தர் சுட்டிக்காட்டியுள்ளார். முறையான பள்ளிக்கல்வி குழந்தை சுமார் எட்டு வயதினை அடைவதற்குள் தொடங்குதல் வேண்டும். பள்ளிகள் ஊருக்குப் புறமாக, அமைதியான தனி இடங்களில் இருத்தல் நல்லது. பெண்கல்வியை முழுமையாக ஆதரித்த சுவாமி தயானந்தர் கல்விக் கட்டத்தின் தொடக்க நிலையிலிருந்தே சிறுவர் சிறுமியர்களுக்குத் தனிப்பட்ட பள்ளிகள் இருத்தலை விரும்பினார். பள்ளி ஆசிரியர்கள் போதிய அறிவும் சிறந்த ஒழுக்கமும் கொண்டிருத்தல் அவசியமாகும். ஆசிரிய-மாணாக்கரிடையேயான உறவு பண்டைய குருகுல மரபில் இருத்தல்வேண்டும். பள்ளிக்கல்விக் காலத்தில் மாணாக்கர் முழுமையான புலனடக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும்; மாணாக்கர்களது உடலும் உள்ளமும் கட்டுப்பாட்டுக்குட்பட்டுச் செயற்படுதல் வேண்டும்.

கல்விக்கான ஏற்பாடுகளில் வேதங்கள், ஒலியியல், இலக்கணம் ஆகியனவும் மருத்துவம், இசை, அரசியற்கலை, பொறியியற்கலை போன்ற உபவேதங்களும் இடம்பெற வேண்டுமென்றும் மாணாக்கர் இவை யாவற்றையும் நன்கு கற்க வேண்டுமென்றும் சுவாமி தயானந்தர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கற்றுத்தேர 18 முதல் 20 ஆண்டுகள் தொடர்ந்து கல்வி கற்கும் தேவை எழும். முதன் முறையாக மும்மொழித்திட்டம் (தாய்மொழி, வடமொழி, வேற்று நாட்டுமொழி) கல்வி அமைப்பில் இடம்பெற வேண்டுமென்பதனை வலியுறுத்தியவர் தயானந்தரேயாவார். ஆன்மிக-நல்லொழுக்கப் பயிற்சியளித்தலின் வழியே குழந்தையைச் சிறந்த பண்பாளனாக உயர்த்துதல் கல்வியின் நோக்கமாகும் என்பது தயானந்தரின் கருத்தாகும். உடற்பயிற்சி இதற்கு ஆதாரமாகும். இத்தகைய கல்வியினைச் செல்வந்தன், ஏழை, உயர்சாதியினன், கீழ்க்குடிமகன் என்ற எந்த வேறுபாடுமின்றி எல்லோருக்கும் தாய்மொழி வழியே அளிக்க வேண்டுமென்பதனையும் இதற்கான பொறுப்பினை முழுமை யாக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதனையும் சுவாமி தயானந்தர் வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது. பிறப்பு மரபு போன்றவற்றைக்காட்டிலும் ஒருவனது சிறப்புத் தகுதியே சமுதாயத்தில் அவனது நிலையினை நிர்ணயிக்க வேண்டுமென்பது அவரது கருத்து. சமயத்தைப் பொறுத்துங்கூட சுவாமி தயானந்தர் மிகப் பரந்த மனப்பான்மை கொண்டு செயற்பட்டார். அவரது சமய உலகிற்குக் கட்டுப்படுத்தும் குறுகிய எல்லைகள் கிடையா. தமது இந்து சமயத்தில் எழுந்துள்ள குறைபாடுகளை அவர் சுட்டிக்காட்டிக் கண்டிக்கத் தவறியதில்லை; இம்மாதிரியே பிற சமயங்களின் சிறப்புகளையும் மதிக்கத் தவறியதில்லை.

சுவாமி தயானந்தரது கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் 1886-ஆம் ஆண்டில் லாகூரில் தயானந்தர் ஆங்கில—வேத கல்லூரி எனப்பட்ட கல்விக்கூடமும் 1902-ஆம் ஆண்டில் கன்கிரி என்னும் இடத்தில் ஒரு குருகுலமும் ஆரிய சமாஜத்தினரால் நிறுவப்பட்டன. மேலும் சில கல்விக்கூடங்களும் பின்னர் ஏற்படுத்தப்பட்டன. சுவாமி தயானந்தரது கல்விக் கருத்துகளின் அடிப்படையிலே இவை முழுமையாக இயங்குகின்றன என்று இன்று கூற இயலா தெனினும் அவரது போதனைகளைப் பெருமளவு பிரதிபலிப்பனவாக இவை செயற்பட்டு வருகின்றன; அவரது பெருமைக்குச் சான்று களாகவும் இவை நம்மிடையே உள்ளன.

**சுவாமி விவேகானந்தர் (1863-1902)**

இராமகிருஷ்ண பரமஹம்ஸரது ஆன்மிகத் தொண்டினைத் தொடர்ந்த அவரது சீடர் சுவாமி விவேகானந்தர் நம்

நாட்டின் பெருமையையும் இந்து சமயத்தின் சிறப்பினையும் உலகிற்கு உணர்த்தியதோடு நமது இளைஞர்களுக்கான பயன்மிக்க கல்விமுறை எவ்வாறு அமைதல்வேண்டும் என்பது பற்றியும் தமது கருத்துகளைத் தந்துள்ளார். விவேகானந்தர் 1863-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 12-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். இவரது இயற்பெயர் நரேந்திரநாதர் என்பதாகும். நரேந்திரநாதர் சிறந்து கல்வி பயின்று பி.ஏ. பட்டம்பெற்று, பி.எல். வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது பல்வேறு குடும்பக் காரணங்களின் விளைவாகப் படிப்பை நிறுத்தவேண்டியதாயிற்று. வறுமையில் சிக்கிய நரேந்திரநாதரது உள்ளம் மெய்ஞ்ஞானத்தினை நாடத் தொடங்கியது. இம்முயற்சியில் பல பெரியோர்களிடம் சென்று, இறுதியில் தட்சிணேசுவரத்தில் இராமகிருஷ்ணரை அடைந்து அவரது சிறப்புச் சீடராகி, விவேகானந்தர் எனப் பெயர் கொண்டார். இராமகிருஷ்ணரது மறைவுக்குப் பின்னர், நாடு முழுவதும் பயணம் செய்து பரமஹம்ஸரது வேதாந்தக் கருத்து களைப் பரப்பும் முயற்சியில் விவேகானந்தர் ஈடுபட்டார். அமெரிக்கா சிகாகோ நகரில் 1893-ஆம் ஆண்டு நடந்த அனைத்துச் சமயங்களின் மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநியாகக் கலந்து கொண்ட சுவாமி விவேகானந்தர் இச்சமயத்தின் சிறப்புக்களை யாவரும் உணரச் செய்தார். 1897-ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மடம் சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்டது. வறியோர்க்கு உதவுதல், இராமகிருஷ்ணரது ஆன்மிக போதனைகளைப் பரப்புதல், மக்களுக்கு கல்வி புகட்டுதல் ஆகியன மடத்தின் உறுப்பினர்களது பணிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இன்று நம் நாட்டில் மட்டுமன்றி உலகின் பல்வேறு பகுதிகளிலும் சுவாமி விவேகானந்த ரால் தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண நற்பணி மன்றத்தின் கிளைகள் நன்கு செயலாற்றிவருகின்றன.

சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தின் வேதாந்தக் கருத்து களைப் பற்றி நின்றாரெனினும் அவருக்கு எல்லாச் சமயங்களிடமும் மதிப்பு உண்டு. எந்த ஒரு சமயமும் வேறொன்றினைவிடத் தாழ்ந்த தன்று என்றும், எல்லாச் சமயங்களும் ஒரே இலக்கினை அடைய உதவுகின்றன என்றும் அவர் கருதினார். எனவே மதமாற்றங்கள் தேவையற்றன. பல்வேறு சமயத்தினரிடையே ஆன்மிக சகோதரத் துவம் (spritual brother) இருத்தலை அவர் வலியுறுத்தினார். நமக்கு உடனடியாக இன்று தேவைப்படுவது மனிதர்களை உருவாக்கும் (man making) சமயமும் கல்வி முறையும்தான்.

ஒவ்வொருவரிடமும் 'முழுமை' (perfection) எனப்படும் மாசற்ற பூரணத்துவம் அடங்கியுள்ளது. இதனை எங்கிருந்தோ தேடிப் பெறத் தேவையில்லை. இது ஏற்கெனவே நம்மிடம் மறைந்து

பொதிந்துள்ளதாகும். இது நமது மரபுரிமையாகும். மனிதனுள் மறைந்து காணப்படும் அறிவும் ஆற்றலும் இணைந்த முழுமை நன்கு வெளிப்படுதல் கல்வியாகும் (education is the manifestation of the perfection inherent in man). கல்வி என்பது வெறும் ஏட்டுப்படிப்பன்று. நம் நாட்டு இளைஞர்க்கான கல்வி பின்வரும் நோக்கங்களை எய்த உதவவேண்டுமென சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார். கல்வியின் வழியே மாணுக்கரிடையே தன்னம்பிக்கைஉருவாக்கப்படவேண்டும். முன்னேற்றப் பாதையின் முதற்கட்டமாக தன்னம்பிக்கை அமைகிறது. மனிதனுள் மறைந்து கிடக்கும் சக்தியினைப்பற்றிய உணர்வினை அவனிடம் தோற்றுவித்து அச்சமின்மை வழியே எதனையும் அடைதல் இயலும் என்பதனை அவன் உணரச்செய்வது கல்வியின் நோக்கமாகவிருத்தல் வேண்டும். 'எழுமின்; விழிமின்; இலக்கை எட்டும்வரை அயராது உழைமின்', என்னும் கூற்று கல்விமுறையின் இலட்சியக் கருத்தாக அமைய வேண்டும். உண்மைக்கல்வி மாணுக்கரிடையே தன்மதிப்பினைத் தோற்றுவித்தல்வேண்டும். இதனை தன்மதிப்புப்பற்று என்றும் குறிப்பிடலாம்; சுவாமி விவேகானந்தர் இதனை 'சிரத்தை' (sraddha) என்று அழைக்கிருர்.

தூய்மையான வாழ்க்கைக்கு ஆதாரமான உடல்திறனை கல்வி முறை மாணுக்கர்களிடையே வளர்க்கவேண்டும். உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உடல்நலம் அடிப்படை. ''வலிமை தூய்மையானது; வலுவின்மை பாவமாகும். நமது இளைஞர்கள் முதலில் உடல்வலுவுடன் திகழவேண்டும். இதற்குப் பின்னரே சமய உணர்வுபெற முற்படலாம்.'' ''கீதையைப் படிப்பதைவிட கால்பந்தாட்டத்தில் ஈடுபடுதல் உன்னை கடவுளுலகிற்கு அருகே அழைத்துச்செல்லும்; வலுமிக்க உடல் பெற்றிருந்தால் உன்ஞல் கீதையையும் நன்கு புரிந்துகொள்ள முடியும்'', என்கிருர் சுவாமி விவேகானந்தர். நமது உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் திண்மையைக் குறைக்கும் எதனையும் நஞ்சென ஒதுக்கித்தள்ளச் சொல்கிருர்.

கல்வி அமைப்பில் சமய ஆன்மிகக் கூறுகள் முக்கிய இடம் பெறவேண்டும் என்று விவேகானந்தர் வலியுறுத்துகிருர். நமக்குத் தேவைப்படும் கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்கக் கூடிய தாகவும், உள்ளத்தின் ஆற்றலை அதிகப்படுத்தக் கூடியதாகவும் அறிவினை விரிவாக்கக் கூடியதாகவும் நமது வாழ்க்கையை நாம் நன்கு அமைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை நமக்கு அளிப்பதாகவும் அமையவேண்டுமாயின் சமய-ஆன்மிக அடிப்படை கல்விக்கு இன்றியமையாதது. சுவாமி விவேகானந்தர் அன்று கூறிய இக்கருத்தினை இன்று கொத்தாரி கல்விக்குழுவும் குறிப்

பிட்டுள்ளது. பள்ளிக்கல்வி ஏற்பாட்டின் முக்கிய குறைபாடு கல்வி அமைப்பில் சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புகளுக்குப் போதிய இடமளிக்காததாகும் என்று இக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. கல்வியின் சமய அடிப்படை என்னும் போது சமயக் கருத்துகளைக் குழந்தைகள்பால் திணிப்பதன்று. சமயம் பற்றிய உணர்வினைக் குழந்தைகள் தமது அனுபவங் களினின்றும் தாமாகவேபெற கல்விமுறையும் ஆசிரியர்களும் உதவுதல்வேண்டும். பல்வேறு சமயங்களின் பெரியோர்களைப்பற்றி பள்ளிகளில் போதிப்பதையும் சுவாமி விவேகானந்தர் ஆதரித்தார்.

குழந்தையின் சுதந்தரத்தின் அடிப்படையிலே கல்வி அமைய வேண்டுமென்பதனை சுவாமிகள் வலியுறுத்தியுள்ளார். குழந்தை தனது இயல்புக்கேற்பத் தானே வளர்கிறது; தானே கற்கிறது. இதற்கான முழுவாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவதும் வளர்ச்சியில் குறுக்கிடும் தடைகளை நீக்குவதுமே நாம் செய்யக்கூடியவையாகும். கற்பித்தல் என்ற பெயரில் குழந்தையின்மீது எதுவும் வலுவந்த மாகத் திணிக்கப்படக்கூடாது. பிரோபெல் (Froebel) போன்ற கல்வியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளது போன்று, சுவாமி விவேகானந்தரும் உண்மையான கல்வி சுயக்கல்வியாக இருத்தல் வேண்டும் என்கிறார். ஆசிரியர்களது பொறுப்பும் பணியும் குழந்தைகளது இயல்பான போக்குகள் முழுவளர்ச்சிபெற வாய்ப்பளித்து உதவுதலும் வழிகாட்டுதலுமாகும். இவ்வாய்ப் புகள் குழந்தையின் தேவைகள் சிறப்பியல்புகள் ஆகியவற்றுக் கேற்ப அமைதல் வேண்டுமென்னும் கருத்தையும் இவர் வலியுறுத் தினார். குழந்தை கடவுளுக்கொப்பானது; கடவுளுக்குத் தொண்டு செய்வது போன்றே ஆசிரியர் குழந்தைக்குத் தொண்டு செய்தல் வேண்டும். அதனிடம் மறைந்து காணப்படும் ஆன்மிக முழுமையினை அது உணரச்செய்வது அவரது குறிக்கோளாகும். ஆன்மிக அடிப்படையின் சிறப்பினை வலியுறுத்தும் சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையின் நடைமுறைக் கூறுகளைக் கல்விமுறை புறக்கணித்து விடவேண்டுமென்று கருதவில்லை. நாட்டின் பெரும் பான்மையினர் வறுமையால் வலுவிழந்து ஒற்றுமை குலைந்து வாடுவதை நன்குணர்ந்த சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் நிறைவுற எல்லோர்க்கும் கல்வி உதவ வேண்டும் என்றும் கூறுகிறார்.

உள்ளம் ஒருமுனைப்பட்டு, குவிந்து (concentration) தன் முழு ஆற்றலுடன் செயலாற்றுதல்தான் அறிவு எழ வழியாகும். இவ்வாறு செயற்படும் உள்ளத்தின் வலிமைக்கு எல்லைகள் கிடையா. கல்வி என்பதன் பொருள் இத்தகைய குவிந்த உள்ளச் செயற்பாடாகும். இவ்வாறு உள்ளம் செயலாற்ற மாணக்கர்க்கு

முழுமையான புலனடக்கம் (brahmacharya or complete continence) இன்றியமையாததாகும். புலனடக்கத்துடன் இயல்பூக்கங்களைத் தூய்மை செய்தலும் இணைந்தது.

ஆசிரியர்களது தனிப்பட்ட வாழ்க்கை, ஒழுக்கம், கற்பித்தலில் ஆர்வம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சுவாமி விவேகானந்தர் வலியுறுத்துகிறார். ஆசிரியர்களது எடுத்துக்காட்டாக விளங்கும் வாழ்க்கையின்றி கல்வியே இல்லை எனலாம். ஆசிரியர்கள் உள்ளத் தூய்மையுடனும் தியாக மனப்பான்மையுடனும் செயற்பட வேண்டும். மாணாக்கர்பால் அன்பும் பரிவும் கொண்டு நடந்து கொள்ளவேண்டும். பரிவற்ற ஆசிரியரால் குழந்தைகளுக்கு ஏதும் கற்பிக்க இயலாது. பரிவின் துணை கொண்டுதான் ஆசிரியரால் குழந்தைகளது நிலையில் தன்னை வைத்துப் பார்த்து அவர்களது இயல்புகளை அறிந்து அவர்க்கு உதவமுடியும். மாணாக்கர்கள் அறிவு வேட்கையோடு விடாமுயற்சியுடன் கற்க முற்படவேண்டும். சிந்தனையிலும் பேச்சிலும் தூய்மை, புலனடக்கம் ஆகியன அவர்களுக்கு அவசியமான பண்புகளாகும்.

பெண்களுக்கு ஆண்களைப்போன்று முழுமையான கல்வி வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்பது சுவாமிகளது கருத்து. நம் நாட்டில் அன்று காணப்பட்ட பெண்களது அவலநிலைபற்றி அவர் பெரிதும் வருந்தினார். பெண்களை மதித்து நடத்தும் நாடே முன்னேற முடியும் என்று குறிப்பிட்டு, பெண்கல்வியின் அவசியத்தை பெருமளவு வலியுறுத்தினார். இம்மாதிரியே பொதுமக்களிடையே கல்வி பரப்பப்படுவதன் இன்றியமையாமையையும் விவேகானந்தர் வற்புறுத்தினார். "இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியோடும் கல்வி அறிவின்றியும் நாட்டில் வாழும்வரை, அவர்களது செலவில் கல்விகற்று அவர்களது நிலைமைபற்றி உணர்வின்றி இருப்பவனை நாட்டின் துரோகியென்றே கருதுவேன்" என்றார். வறுமை நாட்டின் இழிநிலைக்குக் காரணமாகும். மக்களிடையே கல்வி பரவுவதன் மூலமாகத்தான் வறுமை நீங்கும்; எனவே பொதுமக்கட்கல்வி நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கருவியாகும்.

மக்களிடையே நட்புறவையும் ஒத்துழைப்பையும் வளர்த்து நாட்டின் ஒருமைப்பாட்டுணர்ச்சிக்குக் கல்வி உதவவேண்டும். தாம் விளக்கிய கல்விக் கருத்துகள் நம் நாட்டு மக்கள் புத்துணர்ச்சி பெற்றுப் புதுவாழ்வு வாழ உதவக்கூடிய தேசிய கல்விமுறையாக உருவாக வேண்டுமென்பது சுவாமி விவேகானந்தரது ஆர்வமாக அமைந்தது.

மகான் அரவிந்தர் (1872 - 1950)

கல்கத்தாவில் 1872-ஆம் ஆண்டு பிறந்த அரவிந்தர் தமது கல்விப்பருவம் முழுவதையும் இங்கிலாந்தில் கழித்தார். இலண்டன், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்களில் பயின்று மிகச் சிறப்பாகத் தேர்ச்சிபெற்ற அரவிந்தர் இந்திய நிருவாகத் துறைக்கான ஐ. சி. எஸ். தேர்விலும் கலந்து கொண்டு வெற்றிபெற்ருர். எனினும், அத்துறையில் பணிக்கமர விருப்பமின்றி, இந்தியா திரும்பிய அரவிந்தர் 13 ஆண்டுகள் பரோடா மன்னரது அரசில் பணியாற்றினுர். 1905-ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினையின்போது நாட்டின் விடுதலைப் போரில் பங்கு கொண்ட அரவிந்தர் தீவிரவாதியாகச் செயற்பட்டார். இதன் விளைவாக ஆங்கில அரசு அரவிந்தரைப் பலமுறை சிறையிலடைத்தது. அலிபூர் சிறையில் இருக்கையில் ஏற்பட்ட ஆழ்ந்த ஓர் ஆன்மிக அனுபவத்தின் விளைவாக 1910-ஆம் ஆண்டில் நாட்டின் பொதுவாழ்வினின்றும் விலகி, புதுச்சேரியில் தங்கி, ஆன்மிகப் பணியில் அரவிந்தர் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அரசியல், ஆன்மிகத்துறைகளில் வழிகாட்டிய அரவிந்தர் இவற்றுக்காதாரமான கல்விமுறை பற்றியும் தமது கருத்துகளை நமக்குத் தந்துள்ளார். அன்று பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தம் இளைஞர்களுக்குத் தரப்பட்டுவந்த கல்வி மோசமானது மட்டுமன்று; நாட்டின் பண்பாடு ஆன்மிகத் தன்மை ஆகியவற்றுக்கு ஊறுவிளைவித்து நம் நாட்டையே இழிநிலைக்குக் கொண்டு செல்வதாக அமைந்திருந்ததென்று அரவிந்தர் கருதினுர்.

பாரதநாட்டின் பண்பாட்டு மேன்மையிலும் ஆன்மிகத் தலைமையிலும் அரவிந்தருக்கு அசைக்கமுடியாது வலுவான நம்பிக்கை இருந்தது. நமது நாட்டின் பெருமை பற்றியும் எதிர் காலத்தில் இன்று இழந்துள்ள மதிப்பினை நம் நாடு மீண்டும் பெற்று உலகிற்கே வழிகாட்டியாகும் நிலைக்கு உயரும் என்பது பற்றியும் அரவிந்தருக்குச் சிறிதும் ஐயப்பாடு கிடையாது. பாரத நாட்டின் உள்ளத்தின் அடித்தளம் ஆன்மிகமாகும். மூவாயிரம் ஆண்டுக்காலமாக நம்நாடு பண்பாட்டுத்துறைகளில் செய்துள்ள ஆக்கப்பணிகள் மிக உயர்ந்தவை; பல திறப்பட்டவை. அரசியல், தத்துவம், இலக்கியம், அறிவியல்கள், நுண்கலைகள், யோகம் போன்ற ஆன்மிகக்கலைகள் ஆகிய எல்லாத் துறைகளிலும் நமது முன்ஞேரான மேதைகளது படைப்புக்களும் கண்டுபிடிப்புக்களும் கருத்துகளும் ஏராளம். அண்மைக்காலத்தில் பல்வேறு காரணங்களின் விளைவாக நம் பாரதநாடு தனது ஆன்மிக உணர்வினை

இழந்தது. தான் பல இன்னல்களுக்கு உட்பட்டதன் காரண மாகும் என்று அரவிந்தர் கருதுகிறார்.

இந்தியப் பண்பாட்டின் அடிப்படைகளாகவும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதனவாகவும் அமைவன வேதங் களாகும். இவை மெய்யறிவுக் கருவூலங்கள். வேதங்கள், உடநிடதங்கள் ஆகியவற்றின் சாரத்தை கீதை தெளிவாக்குகிறது. செயல், பக்தி, தியானம், ஞானம் ஆகிய எல்லாக் கூறுகளையும் இணைத்து ஓர் யோக முறையினை கீதை நமக்கு அளிக்கிறது என்கிறார் அரவிந்தர். 'தெய்வீக வாழ்க்கை' (life divine) என்னும் நூலில் அரவிந்தர் தமது தத்துவக் கோட்பாடுகளை விளக்கி யுள்ளார். இவை வேத - உபநிடதங்களினின்றும் எழுவனவாகும். இதேபோது அரவிந்தரது தத்துவம் இந்நூற்றாண்டின் புதிய கருத்துகளையும் புறக்கணிக்காது பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலமாக அமைகிறது; மேலைநாடுகளது தத்துவக் கொள்கை களையும் நமது பண்டைய தத்துவ உண்மைகளோடு தொகுப்ப தாகவும் காணப்படுகிறது.

மகான் அரவிந்தரது கல்விக் கருத்துகள் அவரது தத்துவக் கோட்பாட்டினின்றும் கிளைத்தெழுந்தவையாகும். 'கர்மயோகின்' என்ற இதழில் தனது கல்விக் கருத்துகளையும் இவற்றிற்கடிப் படையாகவுள்ள கல்வித் தத்துவத்தையும் அரவிந்தர் விளக்கி யுள்ளார்.

உள்ளத்தின் சிறப்புத்திறன்களை வளர்த்து வெளிக்கொணர்வது உண்மைக் கல்வியின் நோக்கமாகுமென்று அரவிந்தர் குறிப்பிடு கிறார். பயனுள்ள கல்வி ஒருவனது உள்ளத்தின் ஆற்றல்கள் வளர்ச்சிபெற்று உயர்நிலையடைய உதவவேண்டும். வெறும் பொருளறிவு பெறுதல்மட்டும் கல்வியின் இறுதி இலக்கன்று. உண்மைக்கல்வி தனி மனிதனுக்கும் அவன் வாழும் நாட்டுக்கும் மட்டுமன்றி மனித சமுதாயத்திற்கே உயர்வளிப்பதாக அமைதல் வேண்டும். மாணுக்கனது உள்ளத்தைப் பண்படுத்தி உயர்த்துதல் கல்வியின் நோக்கமெனப்படும்போது, இவ்வுள்ளத்தின் தன்மை பற்றியும் அரவிந்தர் குறிப்பிடுகிறார். உள்ளம் நான்கு நிலைகளைக் (layers) கொண்டதாகும். பண்டைய நினைவுநிலை எனப்படும் 'சித்தம்' அடிநிலையாகும். இதற்கு அடுத்த மேல்நிலையினை 'மனம்' எனக் குறிப்பிடுகிறார் அரவிந்தர். மனமானது புலன்களினின்றும் உணர்ச்சிகளைப்பெற்று அவற்றை அறிவாக மாற்றுவதுடன், தனிமையாகத்தானே உண்மைகளை உணரும் தன்மைகொண்ட தாகும். மனத்திற்கு மேற்பட்ட நிலையான 'புத்தி' என்பது மனத்தினால் பெறப்பட்ட அறிவுக் கூறுகளை ஒருங்கமைக்கிறது.

ஆக்குதல், தொகுத்தல், பகுத்தாராய்தல் போன்றன யாவும் இந்நிலையின் செயல்களாகும். ஆசிரியர்களைப் பொறுத்தவரை இந்நிலை முக்கியமானது. உள்ளத்தின் மிக உயர்ந்த நிலையாக 'உயர் உள்ளம்' (super mind); என்னும் நிலையினை அரவிந்தர் குறிப்பிடுகிறார். உயர் உள்ளம் நேரடியாக உண்மைகளை உணர வல்லது. இந்நிலையை எய்த மாணுக்கர்களுக்கு ஆசிரியரால் முழுமையாக உதவ இயலாது. இதனை அவர்கள் தாங்களே முயன்று எய்தவேண்டும்.

உள்ளம் அதன் இயல்புபடி வளரும்; ஆதலின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்களது விருப்பப்படியெல்லாம் குழந்தைகளது வளர்ச்சியை மாற்றுதல் இயலாது. மாற்ற முயலுதலும் தவறு என்கிறார் அரவிந்தர். உள்ளத்தின் வளர்ச்சிக்குப் பயிற்சி யளித்தலில் புலப்பயிற்சி (sense training) உற்றுநோக்கல், கவனம், தீர்மானித்தல் போன்ற உளத்திறன்களுக்குப் பயிற்சி ஆகிய வற்றின் முக்கியத்துவத்தை அரவிந்தர் வலியுறுத்தியுள்ளார். யோகப் பயிற்சியின் சிறப்பினை இவர் சுட்டிக்காட்டியுள்ளார். தன்னை நிறைவுசெய்து முழுமைபெற, ஒருவனால் மேற்கொள்ளப் படும் முயற்சியினை 'யோகம்' என்று அரவிந்தர் குறிப்பிடுகிறார். யோகத்தின் வழியேதான் தன்னுள் ஒடுங்கிக்கிடக்கும் ஆற்றல்கள் யாவற்றையும் ஒரு மனிதனால் வெளிக்கொணர முடிகிறது; உள்ளம் உயர்நிலை எய்த இது உதவுகிறது. மனிதனை தெய்வநிலைக்கு உயர்த்துகிறது.

கல்வி தாய்மொழி வாயிலாகவே இருத்தல் வேண்டுமென்பது அரவிந்தரது கருத்து. கற்பித்தலில் அண்மை அனுபவங்களி லிருந்து தொடங்கி பின்னரே பிற தொலைவான அனுபவங்களுக்குச் செல்லுதல் வேண்டும் என்பதனையும் அரவிந்தர் சுட்டிக்காட்டி யுள்ளார். இது ஸ்பென்சர் (Herbert Spencer) என்பாரது கற்பித்தல் கோட்பாடுகளை நினைவுபடுத்துகிறது. உடல் நலம், உடல் வலிமை ஆகியன உள்ளத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை, கல்வித்திட்டத்தில் மனித வளர்ச்சியின் உயர்வுக்கு இன்றியமையா தனவான ஒழுக்க - சமயக் கல்விக் கூறுகள் நடுவிடம் பெறுதல் வேண்டும். கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரை ஆசிரியர் ஒரு துணைவன், நண்பன், வழிகாட்டி என்ற முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்பது அரவிந்தரது கருத்து.

மகான் அரவிந்தரது வாழ்க்கைத் தத்துவங்களையும் கல்விக் கருத்துகளையும் நடைமுறைப்படுத்தி செயலாற்றும் வகையில் இன்று புதுவையில் அரவிந்த ஆசிரமம் இயங்கிவருகிறது. இவர் வலியுறுத்திய அனைத்துலக ஆன்மிக ஒருமைப்பாட்டினுக்கு

எடுத்துக்காட்டாக அங்கு நிறுவப்பட்டுவரும் 'ஆரோவில்' நகரமு் விளங்கும் என நாம் எதிர்பார்க்கலாம்.

**கவி இரவீந்திரநாத தாகூர் (1861 - 1941)**

கல்கத்தா நகரில் 1861-ஆம் ஆண்டு ஓர் உயர் குடும்பத்தில் பிறந்த இரவீந்திரநாதர், முறைப்படி பள்ளிக்கல்வி பெருவிடினும் பாரதநாட்டின் மேதைகளுள் ஒருவராகச் சிறந்து விளங்குகிருர். இலக்கியம், தத்துவம், கல்வி, கலே போன்ற பல்வேறு துறைகளில் தாகூர் ஆற்றிய பணி மகத்தானதாகும். 1913-ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபெல் பரிசு அவரது 'கீதாஞ்சலி' என்னும் கவிதை நூலுக்கு வழங்கப்பட்டது. அவரது வாழ்க்கைத் தத்துவத்தின் ஆதாரமாக விளங்குவது மனித இனத்தின்பால் அவருக்கு இருந்த ஆழ்ந்த பற்ருகும். 'சாந்தி நிகேதனம்' என்று 1901-ஆம் ஆண்டு வங்கத்தில் தொடக்கப்பெற்று பின்னர் பல்கலேக்கழகமாக 'விசுவபாரதி' என விரிவாக்கப்பட்ட அமைப்பு தாகூரின் மேன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் விளங்குகிறது.

இரவீந்திரநாத தாகூரின் கவிதைகள் அவரது தத்துவக் கோட்பாடுகளின் பிரதிபலிப்புகளாக விளங்குகின்றன. வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு அறிவு போன்றே மனவெழுச்சிகளும் பங்கு பெறுகின்றன என்பது தாகூரது கருத்தாகும். மாறுபட்ட கொள்கைகள், முரணுன கோட்பாடுகள் போன்றவற்றை இணைக்கும் முறையில் இரவீந்திரநாதரது வாழ்க்கைத் தத்துவம் அமைவதாகும். இச்சமரசப் போக்கும் தீவிரங்களுக்கிடையே மையநிலே ஒன்றினே நாடும் மனப்பான்மையும் கவி தாகூரின் வாழ்க்கையின் எல்லாக் கூறுகளிலும் காணப்படுகின்றன. இவரது கல்வித் தத்துவமும் இத்தகைய தன்மையதேயாம்.

மகிழ்ச்சி பரவிய சூழ்நிலேதான் கற்றலுக்கு உதவவல்லது; இத்தகைய சூழ்நிலேயில் பெறப்படும் கல்வி வாழ்க்கைப் பயன் மிகுந்து காணப்படும் என்கிருர் தாகூர். கல்வியின் இறுதி நோக்கம் தனி மனிதன் இசைந்த முழுவளர்ச்சி பெறுதலாகும். இது உண்மை நிலேயுடன் முரண்பாடின்றிப் பொருந்திவாழ அவனுக்குத் துணே செய்யும்.

தாகூரின் கல்வித் தத்துவத்தில் சில பண்புகள் மேலோங்கிக் காணப்படுகின்றன.

அவரது கல்வித்தத்துவம் இயற்கைக் கோட்பாட்டினே (naturalism) ஒத்ததாகும். இயற்கையின் மத்தியில் அதனுடன்

ஒன்றி வாழ்தலை தாகூர் பெரிதும் வலியுறுத்தினார். பண்டைய இந்திய நாகரிகம் இத்தகைய நிலையினின்றும் வளர்ச்சி பெற்றதாகும். படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களின் உறவினையும் தொடர்பினையும் இயற்கைச் சூழ்நிலை வாழ்க்கை நமக்குத் தெளிவாக்கவல்லது. இயற்கையான, இயற்கை யோடிணைந்த சூழ்நிலையில்தான் குழந்தைகள் கல்விபயிலுதல் வேண்டும். இதனையே குழந்தைகள் விரும்புகின்றனர். இயற்கை யோடு ஒட்டிச் செயற்படுதல் கல்வியாக அமைகிறது. இது குழந்தைகளது வளர்ச்சிக்கேற்ற நல்ல ஒரு சூழ்நிலையையும் தோற்றுவிக்கும். கட்டடங்கள், பாடநூல்கள், கற்பித்தல் முறைகள் போன்ற யாவற்றைக் காட்டிலும் இச்சூழ்நிலை கல்விக்கு இன்றியமையாததாகும் என்று கவி தாகூர் கருதினார். இதனை யொட்டியே தமது சாந்தி நிகேதனத்தில் திறந்தவெளியில் மரங் களின் நிழலில் வகுப்புக்களை நடத்த முற்பட்டார். தாகூரின் இயற்கைக்கொள்கை அவரது ஆன்மிக உணர்வுக்குத் துணை செய்வதாக அமைந்துள்ளது. மற்றும், தாகூருக்கு மனிதனது தனித்தன்மையில் மதிப்பும் நம்பிக்கையும் பெரிதும் உண்டு. குழந்தையின் தனிப்பட்ட முயற்சிதான் அதன் கல்வி வளர்ச்சிக்கு காரணமாக அமைவதாகும் என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கைச் சூழ்நிலையில் குழந்தை 'கல்வி பயிலுதலை வலியுறுத்திய இரவீந்திரநாத் தாகூர் குழந்தையின் சமூக நடத்தையின் நல்வளர்ச்சிக்கும் கல்வி உதவ வேண்டுமென்பதனைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பல்வேறு ஆக்கச் செயல்களில் ஈடுபட்டுத் தனது திறன்களை வெளிப்படுத்திக்கொள்ள உதவும் வாய்ப்புக்களையும் (creative self expression) கல்வி குழந்தைக்கு அமைத்துத்தரவேண்டும். எனவே கைப்பணிகள், இசை, பிற நுண்கலைகள் போன்றன யாவும் கல்வி அமைப்பில் இடம் பெறுவதன் இன்றியமையாமையை இவர் வலியுறுத்தினார்.

இரவீந்திரநாதர் மனித குலத்தின்பால் முழுமையான பற்றும் மனித வாழ்க்கை மனிதனது சிறப்பியல்புகள் ஆகியவற்றில் மாறாத நம்பிக்கையும் கொண்டிருந்தார். மனிதப் பண்புகளெனப் படும் சிறப்புப் பண்புகளை ஒவ்வொருவனும் பெறச்செய்தல் கல்வியின் இலக்காக இருத்தல்வேண்டும் என்பது இவரது கருத்தாக இருந்தது. தாகூரின் மனித இனப்பற்று (humanism) கடவுளை மனிதரிடம் காணச்செய்தது; மனித இனத்தின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தத் தூண்டிற்று; மனிதனது கலையுணர்விலும் ஆக்கச் செயல்களிலும் ஆர்வத்தினைத் தோற்றுவித்தது. அனைத்துலக மனப்பான்மையினை (internationalism) எழச்செய்தது. உலகின் இரு எதிர் பிரிவுகளாகக் கருதப்படும் மேலை கீழை நாடுகளிடையே

பிணைப்பினையும் தொடர்பினையும் உருவாக்க தாகூர் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். இவை இரண்டிலும் காணப்படும் சிறப்புக்களை ஒன்றுபடுத்தி ஒருங்கிணைக்க முயன்றார். இத்தகைய முயற்சிக்குப் புறச்சான்றாக இவரது விசுவபாரதி பல்கலைக்கழகம் திகழ்கின்றது.

தாகூரது கல்வித்தத்துவத்தில் கருத்துக்கொள்கையின் (idealism) சாயல்களும் காணப்படுகின்றன. ஆன்மிக அறிவு பெறுதற்கான ஒரு கருவியாக உலகோடு இசைந்து வாழ்தல் அமையவேண்டும் என்று இவர் குறிப்பிடுகிறார். உண்மைக் கல்வியானது குழந்தையின் வாழ்க்கையுடன் தொடர்பற்றிராமல் அதன் ஒரு பகுதியாக விருத்தல்வேண்டும். முழு ஆன்மிகச் சுதந்திரம் கல்வி வளர்ச்சிக்கு அவசியமாகும் என்று இவர் கருதினார். தாய்மொழிவழியே கல்வி கற்பித்தலை முழுமையாக ஆதரித்தார்; பெண்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்; தொடர்ந்து கற்றுவரும் ஆசிரியரே உண்மையான ஆசிரியர் என்று குறிப்பிட்டார். சுதந்திர பாரதத்தின் கல்வி வளர்ச்சியில் தாகூரின் கல்விக் கருத்துகள் குறிப்பிடத்தக்க செல்வாக்கு பெற்றவை என்பது தெளிவு.

**மகாத்மா காந்தி (1869 - 1948)**

இவ்விருபதாம் நூற்றாண்டில் இந்தியக் கல்வி வளர்ச்சி பற்றிய வரலாற்றில் நமது தேசத் தந்தை காந்தியடிகளது கல்வித் தத்துவமும் கருத்துக்களும் மிகுந்த செல்வாக்கு பெற்றுக் காணப் படுவனவாம்.

தாம் புதிதாக வாழ்க்கைத்தத்துவம் எதனையும் உருவாக்க வில்லையென்றும், உலகப் பெருஞ் சமயங்களில் பொதிந்துள்ள, எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய உண்மைகளைத் தமது வாழ்க்கையில் தாம் கடைப்பிடிக்க முயன்றதாகவும் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார். இந்து சமயத்தின் கருத்துகளின் அடிப் படையில் தமது வாழ்க்கையைத் தொடங்கினாரெனினும், அவர் பிற எல்லாச் சமயங்களிடமும் மதிப்பு கொண்டு அவற்றின் பேருண்மைகளையும் ஏற்றுக்கொண்டார். காந்தியடிகளைப் பொறுத்தவரை வாய்மையே உண்மையாகும்; வாய்மையின் வழியேதான் கடவுளை அடைதல் இயலும். கடவுள் உலகின் உயிர்களில் பொதிந்தும் இதேபோது உலகிற்கு அப்பாற்பட்டும் இருப்பவராக காந்தியடிகள் கருதுகிறார். சமுதாயத்தில் பிறர்க்கு உண்மையான தொண்டு செய்வதன் வழியே கடவுளை அடைதல் கூடும் என்னும் கருத்தினை இவர் வலியுறுத்துகிறார். வாழ்க்கையில் அறநெறிக் கோட்பாடுகளுக்கு காந்திஜி நடுவிடம் தருகிறார்.

'சத்தியம்', 'அகிம்சை' ஆகியன இவரது வாழ்க்கைத் தத்துவத்தின் ஆதாரங்களாக மிளிர்கின்றன. நாம் அடைய விழையும் இலக்கு மட்டும் தூய்மையாகவிருத்தல் போதாது, அதனை அடைய நாம் மேற்கொள்ளும் வழிகளும் தூய்மையானவையாகவிருத்தல் வேண்டும் என்பதனை காந்தியடிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததுடன் தம் வாழ்நாள் முழுவதும் இதனைத் தாமே கடைப் பிடித்தார். முழுமையினையும் தன்னுணர்வினையும் (Perfection and self realization) அடைதல் வாழ்க்கையின் இலட்சியமாகும் என்று இவர் குறிப்பிட்டுள்ளார்; உடலுழைப்பின் மேன்மையைச் சுட்டிக்காட்டியுள்ளார். சமுதாயத்தில் இயந்திரங்கள் அளவுக் கதிகமாக இடம் பெறுவதனின்றும் எழக்கூடிய தீமைகளை நன்கு தெளிவாக்கியுள்ளார். இக்கருத்துகள் யாவும் அவரது கல்வித் தத்துவத்திலும், அதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்ட ஆதாரக்கல்வி முறையிலும் (basic education) இடம் பெற்றுள்ளன.

நம் நாடு ஆங்கிலேயரது ஆளுகைக்குள் அடங்கிக்கிடந்த போது நம் நாட்டுக் கல்விமுறை பெருமளவு ஆங்கிலேயரது கல்விக் கருத்துகளின் அடிப்படையிலும் அவர்களது ஆட்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்திருந்தது. நமது பண்பாட் டுடன் இணைந்ததாகவோ நமது மக்களின் தேவைகளை, குறிப்பாக நமது சிற்றூர்களில் வாழும் மக்களது தேவைகளை, நிறைவுசெய்யும் முறையிலோ அது அமைந்திருக்கவில்லை. எல்லோர்க்கும் கட்டாய மாக தொடக்கக்கல்வி என்ற குறிக்கோளை நோக்கிச் செயற்படுவ தற்கு நிதி நிலைமை இடம் தரவில்லை எனப்பட்டது. மேலும் கல்வி வாய்ப்புகள் மக்கள் யாவருக்கும் சமமான வகையில் பரவி உதவும் வகையிலும் அமைந்து காணப்படவில்லை. கல்வி ஏற்பாடும் பாடத் திட்டங்களும் எதிர்காலத்தில் தன்னம்பிக்கையுடன் மாணவன் வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் அறிவையும் பயிற்சியையும் அளிப்பதாகவுமில்லை. இத்தகைய கல்விமுறை வீண் என்பதுமட்டுமன்று; பெருமளவு தீமைபயக்கக்கூடியது மாகும் என்று காந்தியடிகள் கருதினர். இந்நிலையினை மாற்ற உதவக்கூடிய வழியினை அவர் சிந்தித்தார். தென்னாப்பிரிக்காவில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய காலந்தொட்டே பயனுள்ள கல்விமுறை பற்றி காந்தியடிகள் சிந்தித்து வந்திருந் தார். உண்மைக்கல்வி எவ்வாறு அமைதல்வேண்டும் என்பது பற்றி அவர் சிந்தித்துப்பெற்ற முடிவுகளின் அடிப்படையில் நமக்கு உதவக்கூடிய, நமது அப்போதைய நிலைமைக்குப் பொருத்தமான கல்விமுறை ஒன்றை காந்திஜி உருவாக்கித்தந்தார். இந்தியா போன்ற நிதி வசதி குறைந்த நாடுகளுக்கு உகந்தது சிக்கன

மானதும் நடைமுறைப்பயன் மிக்கதுமான கல்விமுறை ஒன்றே யாகுமென்றும் இத்தகைய கல்வியானது நாட்டுமக்களது வாழ்க்கையுடன் இணைந்து அதனை உயர்த்தும் கருவியாக அமைதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார். காந்தியடிகளின் கல்விக் கருத்துகள் உருவானதில் ரஸ்கின், டால்ஸ்டாய் போன்றோரது நூல்களும் வாழ்க்கையும் ஓரளவு பங்குபெற்றன.

கல்வி எனப்படுவது குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயல் முறை யாகும் என மகாத்மா காந்தி விளக்கம் தந்தார். எழுத்தறிவு பெறுவது கல்வியின் முடிவன்று; அதன் தொடக்க நிலையேயாகும். மற்றும், உண்மைக்கல்வி வெறும் ஏட்டுப்படிப்பை மட்டும் கொண்ட தாகவிருத்தல் கூடாதென்றும் பயனுள்ள உதலுழைப்பு செய் திறன்களின் வளர்ச்சி ஆகியனவும் அதில் முக்கிய இடத்தினைப் பெறுதல் வேண்டுமென்றும் அவர் நன்கு உணர்ந்திருந்தார்;

தமது கல்விக் கருத்துகளினின்றும் எழுந்த ஆதாரக் கல்வித் திட்டத்தை (basic education) 1937-ஆம் ஆண்டில் நாட்டிற்கு அறிமுகப்படுத்தினர் காந்தியடிகள்; ஆதாரக் கல்வியினை ஒரு புதிய கல்விமுறை என்று குறிப்பிடுவதைக்காட்டிலும் பள்ளிகளில் ஒரு புதிய அமைப்பினையும் சூழ்நிலையினையும் தோற்றுவிக்கும் வழி எனக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஆதாரக்கல்வி முறைபற்றி ஆராய்ந்து முடிவெடுக்கக டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களது தலைமையில் நிறுவப்பட்ட குழு இம்முறையின் முக்கிய கொள்கை களைத் தெளிவாக்கியது. எல்லாக் குழந்தைகளுக்கும் ஏழு ஆண்டுகள் கட்டாயமாக இலவசக் கல்வி அளிக்கப்படவேண்டும்; கல்வியின் பயிற்றுமொழியாகத் தாய்மொழியே அமைதல் வேண்டும்; கல்வித்திட்டம் ஒரு கைப்பணி (craft) போன்ற உற்பத்தித் தொழிலை மையமாகக்கொண்டு அமைதல் வேண்டும்; இக்கைப்பணி மூலம் பெறப்படும் பணம் கல்விக்காகும் செலவில் ஒரு பகுதியையேனும் ஈடுசெய்ய வேண்டும்; என்பன இவையாகும்.

பின்னர் பி. ஜி. கெர் (B. G. Kher) என்பாரது தலைமையில் செயற்பட்ட மத்திய கல்வி ஆலோசனைக் குழுவும் ஆதாரக் கல்வி முறையினை ஆராய்ந்து இதன் அடிப்படைகளை ஏற்றுக்கொண்டது. இதேபோது ஆதாரக்கல்வி முறையின் மையக் கைப்பணியினை உற்பத்திக் கருவியாக நாம் கருதத் தேவையில்லை என்றும் கல்விக் காகும் செலவை கைப்பணி உற்பத்தி ஓரளவேனும் ஈடுசெய்ய வேண்டுமென்பதில்லை என்றும் கருத்துத் தெரிவித்தது. ஆதாரக் கல்வியினை அதற்கடுத்த மேல் கல்விக் கட்டத்துடன் இணைக்கும் முறைபற்றியும் இக்குழு ஆராய்ந்தது.

நம் நாட்டில் அண்மைவரை பரவலாக செயற்படுத்தப்பட்ட ஆதாரக்கல்வி முறையின் முக்கிய கோட்பாடுகள் பின்வருவனவாம். (1) கட்டாய இலவசக்கல்வி எல்லாக் குழந்தைகளுக்கும் ஏழு ஆண்டுகளுக்கு (7 முதல் 14 வயதுவரை) அளிக்கப்படவேண்டும். (2) இக்கல்வி தாய்மொழி வாயிலாகத் தரப்படல்வேண்டும். (3) ஆதாரக்கல்வியின் மையமாக ஒரு கைப்பணி இருத்தல் வேண்டும். பள்ளி அமைந்திருக்கும் சமூகச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் இக்கைப்பணி தேர்ந்தெடுக்கப்பட்டு இதனைச்சுற்றி இணைக்கப்பட்ட வகையில் (correlation) பிறபாடங்கள் கற்பிக்கப் படவேண்டும். (4) ஆதாரக்கல்வி முறையில் பாடநூல் கற்றலில் நடுவிடம் வகித்தல்கூடாது. புறத்தேர்வுக்கும் இம்முறைப்பள்ளி களில் இடம் இருத்தல்கூடாது. மாணுக்கர்களது அன்றாடப் பணிகளை ஆசிரியர் சீர்தூக்கிப் பார்த்து அவர்களது முன்னேற் றத்தினை அளவிடவேண்டும். (5) துப்புரவுப்பணி, குடிமைப் பயிற்சிச் செயல்கள், பொழுதுபோக்குச் செயல்கள், ஆன்மிக - சமய நற்பணிகள் ஆகியன யாவும் ஆதாரப்பள்ளிகளில் சிறப்பிடம் பெறவேண்டும். வாழ்க்கைக்கான, வாழ்க்கை வழியே அளிக்கப் படும் கல்வி ஆதாரக்கல்வி எனப்பட்டது. குடும்பம், பள்ளி, சமுதாயம் ஆகியவற்றை இணைக்கும் வகையில் இக்கல்விமுறை அமைகிறது.

காந்தியடிகளது ஆதாரக்கல்வி முறைக்கு இப்பெயர் பொருத்த மாக உள்ளது எனலாம். ஏனெனில் இக்கல்வி முறை நமது பாரதப் பண்பாட்டினையும் நாட்டின் ஆதாரத் தேவைகளையும் கொண்டிருப்பதாகும். மற்றும், இக்கல்விமுறை குழந்தைகளது அடிப்படை வளர்ச்சித் தேவைகளையும் கல்வித் தேவைகளையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது; கல்வியின் அடிப்படை நிலையான துவக்கக்கல்வி நிலைக்குப் பொருத்தமாக உருவாக்கப் பட்டது. மேலும் மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் எனப்படும் உணவு, உடை போன்றவற்றுடன் இணைந்த செயல்களை மையமாகக்கொண்டு குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட முற்படு கிறது. காந்தியடிகளது ஆதாரக்கல்வித் திட்டத்தில் 'வாழ்க்கை யோடு இணைந்த கல்வி', 'செயல்வழியே கல்வி, வேலையோடு கல்வி போன்ற, இன்று கல்வியுலகில் பெருமளவு வலியுறுத்தப்படும் கருத்துகள் யாவும் காணப்படுகின்றன. பள்ளி ஒரு குடியாட்சிச் சமுதாயம் போன்று இணக்கமாகச் செயற்படுவதன் விளைவாக, குழந்தைகளிடையே சிலபோது காணப்படக்கூடிய குறுகிய மனப் பான்மைகள் விரிவடைய இக்கல்விமுறை வழிசெய்கிறது; இத்தகைய பள்ளி வாழ்க்கை சிறந்த குடிமைப் பயிற்சியாகவும் அமைகிறது. பள்ளிக்கல்வி தொழில் சார்புடையதாக (vocatio-

nalization) அமைக்கப்படவேண்டும் எனப்படும் கருத்து ஆதாரக் கல்வி முறையில் செயற்படுகிறது.

ஆதாரக் கல்விமுறை நடைமுறையில் செயற்படும்போது பல குறைகள் எழுந்தன. இக்கல்விமுறை கிராமங்களுக்கு மட்டுமே பொருந்துமென்றும், இது பள்ளியை ஒரு குடிசைத் தொழில் நிலையமாக மாற்றிவிடும் என்றும் ஒரு கைப்பணியை மையமாகக் கொண்டு எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் இயலாது என்றும் கூறப்பட்டன. மற்றும் இதில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி உயர்கல்வி ஆகியவற்றுக்கு இடமில்லை எனப்பட்டது. தொழில்நுட்ப சமுதாய வளர்ச்சிக்கு இக்கல்விமுறை ஒவ்வாதது என்றும் கூறப்பட்டது. ஆனால் இவை காந்தியடிகளது கருத்துகளினின்றும் எழவில்லை; இக்கல்வி முறையைச் செயற்படுத்தியோரது கவனக்குறைவு, திறமைக்குறைவு ஆகியவற்றினின்றும் எழுந்தனவாகும். ஆதாரக்கல்வி முறையின் வெற்றிக்கு அடிப்படை இதன் தத்துவங்களில் முழுநம்பிக்கை கொண்டு உற்சாகத்துடன் செயலாற்றவிழையும் ஆசிரியர்களாகும். இத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவு ஆதாரக்கல்வி முறையின் வளர்ச்சியில் குறுக்கிட்டு அதனின்றும் பாரத சமுதாயம் பெறக்கூடிய பல பயன்களையும் இழக்கச்செய்தது. டாக்டர் கொத்தாரி அவர்களது தலைமையில் அண்மையில் செயலாற்றிய கல்விக்குழு ஆதாரக் கல்வியினைத் தனியான ஒரு கல்விநிலை எனக் கருதத் தேவையில்லை என்றும் ஆதாரக்கல்வியின் அடிப்படைக் கருத்துகள் கல்வியின் எல்லாக் கட்டங்களுக்குமே பொருந்தும் என்றும் குறிப்பிட்டுள்ளது. எல்லா மாணக்கர்களுக்கும் கல்வியின் எல்லா நிலைகளிலும் வேலை அனுபவங்கள் (work experiences) அளிக்கப்படவேண்டுமென்று கொத்தாரி கல்விக்குழு பரிந்துரைத்திருப்பது காந்தியடிகளது கல்வித்தத்துவத்துக்கு ஏற்பவே அமைந்துள்ளது எனலாம்.

ஆதாரக்கல்வியினை உருவாக்கித்தந்தவர் என்பதுடன் நாட்டிற்கான பொதுமொழி பற்றியும் காந்தியடிகள் சிந்தித்துத் தமது கருத்தைத் தெரிவித்துள்ளார். ஆங்கிலம் பயிற்றுமொழியாக நீடித்தலை அவர் எதிர்த்தாலும் அம்மொழிவழியே பெறக்கூடிய பிறபயன்களை அவர் புறக்கணிக்கவில்லை. ஆனால் ஆதாரப்பள்ளிகளில் ஆங்கிலம் விருப்பப்பாடமாகக் கற்பிக்கப்படுவதையும் அவர் விரும்பவில்லை. பெண்கல்வி, முதியோர்கல்வி ஆகியவை பற்றியும் காந்தியடிகள் ஆக்கமளிக்கும் பல கருத்துகளை நமக்குத் தந்துள்ளார்கள். அவர் நடத்திவந்த 'ஹரிஜன்' இதழில் பல்வேறு பிரச்சினைகளின் இடையில் கல்விப் பிரச்சினைபற்றிச் சிந்தித்துப்

பல கருத்துகளை வழங்க காந்தியடிகள் என்றுமே தவறியதில்லை.

### சில பொதுக் கருத்துகள்

இதுவரை நாம் ஆராய்ந்த இந்தியக் கல்வியாளர்களது கல்வித்தத்துவம் கல்விக் கருத்துகள் ஆகியவற்றிடையே பல ஒற்றுமைகள் இருத்தல் தெளிவு. இப்பெரியோர்களது கல்வி பற்றிய சிந்தனை முடிவுகள் இன்றும் நமது கல்வியுலகில் அவ்வப் போது காணப்படும் குழப்ப நிலைமையைத் தவிர்க்க உதவக்கூடும். இவர்கள் யாவருமே கல்வியின் நோக்கம் முழுவளர்ச்சி பெற்று, முழுமை எய்த ஒருவனுக்கு உதவுதலாகும் என்பதனைப் பொதுவாக ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு முழுமை பெறுதலில் சமய - ஆன்மிகக் கூறுகளின் சிறப்புப்பங்கினை வலியுறுத்தி, கல்வியில் இவை நடுவிடம் பெறுதலையும் யாவரும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேபோது கல்வி நோக்கத்தின் பிறகூறுகளை இவர்கள் புறக் கணித்ததாகக் கூறமுடியாது. 'முழுமை' என்பதில் இவையாவுமே அடங்கியுள்ளன. மற்றும், இத்தலைசிறந்த கல்வி வல்லுநர் எல்லோரும் பிறமுக்கிய கல்வி இலக்குகளுக்கும் தங்கள் கல்வி முறைகளில் அவற்றுக்கான இடத்தினை அளித்துள்ளனர். ஆன்மிக மலர்ச்சிக்கு உடல் நலமும் வலிமையும் இன்றியமையாதவை என்பதனை நன்குணர்ந்து உடல்நலப் பயிற்சியினை வலியுறுத்தி யுள்ளனர். புலனடக்கம் அல்லது பிரம்மசரியம் இதற்கு அடிப்படை என்பதனைத் தெளிவாக்கியுள்ளனர். அறிவு வளர்ச்சியினை இவர்கள் ஒதுக்கித்தள்ளவில்லையாயினும் அதுமட்டும் கல்வியின் நோக்கமாகாதென்றும், ஆன்மிக மலர்ச்சிக்கு அது ஒரு துணையாகு மென்றும் கருதினர். தனி மனிதனது வளர்ச்சிபற்றிக் குறிப் பிடுகையில் நாட்டின் சமுதாய வளர்ச்சிபற்றி இவர்கள் மறக்க வில்லை. முக்கியமாக, இந்தியக் கல்வி இந்தியப் பண்பாட்டின் அடிப்படையில் அமைதலை மிகவும் வலிமையாக இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கல்வி ஏற்பாடு பொருத்தவரை காந்தியடிகளைத்தவிர பிறர் குறிப்பிடும் பாடங்களும் செயல்களும் முழுமையாக இன்றைய நமது நிலைமைக்கும் கல்வித் தேவைகளுக்கும் பொருந்தும் எனக் கொள்ளவியலாது. கல்வி ஏற்பாடு காலநிலைமைக்கு ஏற்ப மாற்றம் பெறுவதாகும். இன்றைய சூழ்நிலையில் வேதகாலக் கல்வி அளிப்பது இயலாதது மட்டுமன்று; தேவைப்படுவதுமன்று. ஆனால் இன்றும் கல்வி ஏற்பாட்டில் ஆன்மிக - ஒழுக்க - சமய கூறுகளுக்கு இடம் உண்டு. இவற்றைப் புறக்கணிப்பது தவறு என்பதனை நாம் உணரவேண்டும். பரவலாகக் காணப்படும்

மாணுக்கர் ஒழுங்கின்மைக்கு மாற்று நல்ல ஆசிரிய - மாணுக்க உறவாகும். பண்டைய குருகுல முறையில் கல்வியின் அடிப் படையில் இந்நல்லுறவு அமைந்து காணப்பட்டது. இத்தகைய உறவினை மீண்டும் நமது கல்விக்கூடங்களில் ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை இக்கல்வியாளர்கள் யாவரும் எடுத்துக்காட்டி யிருத்தல் குறிப்பிடத்தக்கது.

## வினுக்கள்

1. சுவாமி தயானந்தரது கல்வித் தத்துவத்தையும் கல்விக் கருத்துகளையும் விளக்குக.
2. கல்விபற்றிய சுவாமி விவேகாநந்தரது கருத்துகளைத் தெளிவாக்குக.
3. அரவிந்தரது கல்விக் கருத்துகளைச் சுருக்கி வரைக.
4. கவி இரவீந்திரநாத தாகூரின் கல்வித் தத்துவத்தில் காணப்படும் சிறப்புப் பண்புகள் யாவை ?
5. காந்தியடிகளது ஆதாரக்கல்வித் திட்டத்தின் முக்கிய கூறுகள் யாவை? இத்திட்டத்தின் முழுவெற்றிக்குத் தடைகளாக எவை அமைந்தன ?
6. பல்வேறு இந்தியப் பெரியோர்களது கல்விக் கருத்து களிடையே காணப்படும் பொதுக் கருத்துகளைக் குறிப்பிடுக.

# 13. மாகாண சுயாட்சிக் காலத்தில் இந்தியக் கல்வி

## மாகாண சுயாட்சி அமைப்பு

*1935*-ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தின் விளைவாக, *1937*-ஆம் ஆண்டில் மாகாண சுயாட்சி (provincial autonomy) செயலுக்கு வந்தது. பதினொரு மாகாணங்களில் இந்தியர்களைக் கொண்ட அமைச்சரவைகள் பதவி ஏற்றன. இவற்றுள் ஏழு காங்கிரஸ் அமைச்சரவைகளாகும். இவ்வமைச்சரவைகளுக்குப் போதிய அளவு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்ததன் விளைவாக நாட்டு வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்த இவை முயற்சி மேற்கொண்டன. இவற்றுள் கல்வித் திட்டங்கள் முக்கிய இடத்தினைப்பெற்றன. பொதுக் கல்வியில்மட்டுமன்றி, பெண்கள்கல்வி, முதியோர்கல்வி போன்ற சிறப்புத்துறைகளிலும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. 1937-ஆம் ஆண்டில் தமது ஆதாரக்கல்வி முறையினை நாட்டிற்கு மகாத்மா காந்தி அறிமுகப் படுத்தினார். இது கல்வியுலகில் மிகுந்த உற்சாகத்தைத் தோற்று வித்ததோடு இம்முறை வழியே கட்டாய இலவசத் தொடக்கக் கல்வியை விரைவில் நாட்டில் அமலாக்கமுடியும் என்ற நம்பிக்கையையும் தோற்றுவித்தது. ஆனால் 1939-ஆம் ஆண்டில் தொடங்கிய இரண்டாம் உலகப் போரினால் கல்வி வளர்ச்சி பாதிக்கப்பட்டது. காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவியினை விட்டு விலகின. பிரசித்திபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தீவிரமடைந்து மக்களின் முழுக்கவனமும் அரசியலில் திரும்பியது. கவர்னர்களைக் கொண்டும் ஆலோசகர்களைக் கொண்டும் நடத்தப்பட்டுவந்த மாகாண அரசுகள் போர் முயற்சி யிலேயே தங்களது கவனத்தைச் செலுத்திவந்தன. கல்விக்கான நிதிவசதி பெருமளவு குறைக்கப்பட்டது. இக்காலத்தை 'இந்தியக் கல்வியின் இருண்டகாலம்' எனல் பொருந்தும். இருப்பினும் இப்போதும் பல்வேறு மாகாண அரசுகள் கல்வி வளர்ச்சிக்கென சிறுசிறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவந்தன.

**கல்வி வளர்ச்சி**

இரண்டாம் உலகப் போரின்போது கல்விக்கூடங்களின் எண்ணிக்கையில் கீழ்நோக்கிய திருப்பம் காணப்பட்டது; போர் முடிந்தபிறகு மீண்டும் இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. மாகாண சுயாட்சிக் காலத்தில் கல்விக்காக செலவிடப்பட்ட தொகை சிறிது சிறிதாக அதிகரித்துக்கொண்டு சென்றது. இதில் பெருமளவு தொடக்கக்கல்விக்கும், உயர்நிலைக் கல்விக்கும் சென்றது. ஓரளவு உயர்கல்வியும் பயனடைந்தது. ஆனால் பொறியியல் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் போன்றவற்றைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. இவை புறக்கணிக்கப்பட்டன என்றுகூட கூறத் தோன்றுகிறது.

மாகாண சுயாட்சியின் காலத்தின் தொடக்கத்தில் பம்பாய், ஐக்கிய மாகாணம் போன்றவற்றில் கல்விக்குழுக்கள் நியமிக்கப் பட்டன.

1938-ஆம் ஆண்டில் பம்பாய் அரசாங்கம் அமைத்த குழு செகண்டரி கல்வி எனப்படும் உயர்நிலைப்பள்ளிக் கல்வியைச் சீர்த்திருத்தி அமைக்க ஏற்படுத்தப்பட்டது. நான்கு ஆண்டு களுக்கான ஒரு பாடத் திட்டத்தை இக்கல்வி நிலைக்கு இது வகுத்தது. ஏழாண்டு தொடக்கக் கல்விக்குப்பின் இந்நான்காண்டு உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கட்டம் அமையும். இப்பாடத்திட்டம் பொதுப்பாடங்கள், அறிவியற் பாடங்கள் என்னும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இலக்கியம், கலை, வணிகவியல் (commerce) போன்றன பொதுப்பாடப் பிரிவிலும் விவசாயம், தொழில்நுட்பப் படிப்பு, அறிவியல், வாழ்க்கைத் தொழிற்பாடங்கள் (vocational subjects) ஆகியன அறிவியற் பாடப்பிரிவிலும் இடம் பெற்றன. கல்விச் சோதனைகள் (experimental education) எனப்பட்ட பாடப் பிரிவு எல்லா பாடத்திட்டங்களிலும் இடம்பெறும் எனப்பட்டது. இத்திட்டம் ஓரளவு சிறப்புடையது எனலாம்.

**நரேந்திரதேவர் கல்விக்குழுவின் கருத்துகள்**

1939-ஆம் ஆண்டில் ஐக்கிய மாகாண அரசாங்கம் தொடக்க உயர்நிலைப்பள்ளிக் கல்விநிலைகளைச் சீர்த்திருத்தும் நோக்கத்துடன் பல சிறந்த இந்தியக் கல்வியாளர்களை உறுப்பினர்களாகக்கொண்டு ஆசாரிய நரேந்திரதேவரைத் தலைவராகக்கொண்டும் ஒரு கல்விக் குழுவினை ஏற்படுத்தியது. இது கல்விச் சீர்த்திருத்தம்பற்றி பல கருத்துகளைத் தெரிவித்தது. அன்றைய கல்வி வாழ்க்கையின் பல்வேறு தேவைகளுக்கு உதவாததுடன் வேலையில்லாதோர் பிரச்சினைக்கு விடைகாணும் வகையிலும் அமைந்திருக்கவில்லை

என்று இக்குழு கருதியது. உயர்நிலைப்பள்ளிக் கல்வி பல்கலைக் கழகக் கல்விக்குத் துணையாக நிற்பது என்பது கூடாது. அது தனி முழுமைபெற்று இருக்கவேண்டும். அதன் பாடத்திட்டம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவுசெய்யப் போதுமானதாக அமைக்கப்படவேண்டும். உயர்நிலைப்பள்ளிக் கல்வி 12 வயது முதல் 18 வயது வரையிலான மாணுக்கர்களுக்கான கல்வி நிலையாகும். இக்கல்வியை அளிக்கும் கூடங்களை 'கல்லூரிகள்' என்பது பொருந்தும். ஏனெனில் இவற்றில் அளிக்கப்படும் கல்வியின் தரம் இண்டர்மீடியட் கல்லூரிகளது தரத்தைவிட உயர்ந்தே காணப்படும். இவ்வுயர்நிலைக் கல்விக் கல்லூரிகள் முதல் இரண்டாண்டுக்கான பாடத்திட்டம் ஆதாரப்பள்ளிகளின் இறுதி இருவகுப்புக்களுக்குச் சமமாகக் காணப்படும். ஆனல் கைப்பணி அவ்வளவு வலியுறுத்தப்படாது; ஆங்கிலமொழி கட்டாய பாடமாக இருக்கும். மொழி, இலக்கியம், சமூகப்பாடம், கணிதம், இயற்கை அறிவியல் கலைகள், வணிகவியல், தொழில்நுட்பப் பாடங்கள் போன்றன பாடத்திட்டத்தில் இடம்பெறும். மனையியல் பெண் களுக்குக் கற்பிக்கப்படும், ஆங்கிலத்துடன் பொருளறிவியலும் (physical science) பொதுஅறிவும் கட்டாய பாடமாகவிருக்கும். இவ்வுயர்நிலைக் கல்லூரிகளுக்கு மாணுக்கர்களைச் சேர்ப்பது ஆதாரக்கல்வி முடிந்த பின்னரோ ஏழாண்டு தொடக்கக்கல்விக்குப் பின்னரோ இருக்கும். கல்வியின் பயிற்றுமொழி இந்துஸ்தானி யாகும். மாணுக்கர்களது ஒழுக்கம், சமூகப்பண்பு ஆகியன வளர பல்வேறு பாடஇணைச் செயல்களுக்கு இடம் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய 'கல்லூரி'களைத் திறப்பதற்கும் கல்வித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் அறிவுரை வாரியங்கள் (advisory boards) அமைக்கப்படவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுடன் நரேந்திர தேவர் குழு பெண்கள் கல்வி, தொழிற்கல்வி, ஆசிரியப்பயிற்சி, பாட புத்தகங்களின் தரத்தினை உயர்த்துதல், தேர்வு முறையினைச் சீரமைத்தல், மாணுக்கர் ஒழுங்கு போன்ற பல கல்விப் பிரச்சினைகள் பற்றி பயனுள்ள கருத்துகளைத் தெரிவித்தது.

### சார்ஜென்ட் திட்டம்

1944-ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் முடியும் தறுவாயில் இந்தியாவின் ஆங்கில அரசு பல்வேறு துறைகளில் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க எண்ணியது. இதற்கேற்ப சார்ஜென்ட் திட்டம் (Sargent scheme) எனப்பட்ட கல்வித்திட்டம் உருவாயிற்று. சர் ஜான் சார்ஜென்ட் என்பவர் இந்திய அரசாங்கத்தின் கல்வி ஆலோசகராகப் (educational advisor) பணியாற்றிவந்தார். மையக் கல்வி அறிவுரை வாரியத்தின்

பல்வேறு உட்குழுக்களது அறிக்கைகளின் அடிப்படையில் சார்ஜென்ட் திட்டம் தயாரிக்கப்பட்டது. இது குழவிக்கல்விநிலை (nursery education) முதல் பல்கலைக்கழகநிலை வரையிலான கல்விக் கட்டங்கள் யாவற்றையும் ஆராய்ந்து வரையப்பட்ட திட்டமாகும். இப்பல்வேறு கல்விநிலைகளின் அமைப்பு, குறைபாடுகள், இவற்றை நீக்க உதவும் வழிகள்போன்ற யாவும் சார்ஜென்ட் அறிக்கையில் காணப்படுகின்றன. நாட்டின் கல்வி அமைப்பு முழுவதையும் விரிவாக ஆராய்ந்து வெளியிடப்பட்ட முதல் திட்டமாக இது அமைகிறது எனலாம். இதன் செல்வாக்கு போருக்குப் பின் எடுத்துக்கொள்ளப்பட்ட எல்லா முன்னேற்றத் திட்டங்களிலும் ஓரளவு காணப்படுகிறது.

சார்ஜென்ட் திட்டத்தில் காணப்படும் முக்கிய கருத்துகளும் பரிந்துரைகளும் பின்வருவனவாம் :

5 அல்லது 6 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு கட்டாய இலவச தொடக்கக்கல்வி அளிக்கப்படவேண்டும். 6 முதல் 11 வயதுவரையிலான வயதுள்ள குழந்தைகள் இளநிலை ஆதாரப்பள்ளிக் கல்வியைப் பெறுவர்; உயர்நிலைப்பள்ளிக் கல்வியைத் தொடர விருப்பமில்லாத அல்லது இயலாத குழந்தைகள் 11 முதல் 14 வயதுவரை முதுநிலை ஆதாரப்பள்ளிக் கல்வி பெறுவர். இத்தொடக்கக்கல்வி நிலைக்கு முந்திய கட்டமாக முன் தொடக்கநிலை (pre-primary) ஒன்று இருத்தல்வேண்டும். இது 3 முதல் 6 வயதிலான குழந்தைகளுக்கானதாகும். இந்நிலை சமூக நடத்தை, ஒழுங்கு ஆகியவற்றில் இவ்விளங்குழந்தைகளுக்குத் தொடக்கப் பயிற்சியளிப்பதாகவிருக்குமே தவிற முறையான கல்வி புகட்டப்படும் நிலையாகவிருக்காது. இத்தகைய குழந்தைகளுக்காக நர்சரி பள்ளிகள் ஏற்படுத்தப்படவேண்டும். கிராமப்புரங்களில் இப்பள்ளிகள் இளநிலை ஆதாரப்பள்ளிகளுடன் இணைக்கப்படலாம். நர்சரி கல்வி இலவசமாகும். தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரை முதுநிலை (senior) ஆதாரப்பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படுதலைக் குறித்து மாகாண அரசு முடிவெடுக்கும். தொடக்கக்கல்வி நிலைக்கு இறுதியில் பள்ளித் தேர்வுகள் மட்டும் இருக்கும்; பொதுத் தேர்வுகள் தேவையில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஓரளவு திறமையுள்ள 11 முதல் 17 வயது மாணக்கர்களுக்கு உயர்நிலைப்பள்ளிக் கல்வி அளிக்கப்படவேண்டும். இத்தகைய மாணக்கர்கள் தொடக்கப்பள்ளிக் கல்வி முடித்தோர்களது எண்ணிக்கையில் சுமார் 20% இருக்கக்கூடும். உயர்நிலைப்பள்ளிகள் இருவகைப்பட்டிருக்கும். ஒருவகை ஏட்டுக் ல்வித் தொடர்புடையது (academic); மற்றொன்று தொழில்

நுட்பத் தொடர்புடையது (technical). ஏட்டுக்கல்வித் தொர்புடைய உயர்நிலைப்பள்ளிகளில் தாய்மொழி, ஆங்கிலம், வரலாறு, பண்டைய இந்திய மொழிகள், பிற தற்காலமொழிகள், புவியியல், கணக்கு, அறிவியல், சுகாதாரம், வேளாண்மைப்பாடம், இசை, பொருளியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும். தொழில் நுட்பத் தொடர்புடைய பள்ளிகளில் மரவேலை, பொறியியல், ஓவியம், தட்டெழுத்துப் பயிற்சி போன்றன கற்பிக்கப்படும். தாய் மொழியே பயிற்றுமொழியாகும். இவ்வுயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணுக்கர்களில் 50 சதவிகிதத்தினர் இலவசமாகக் கல்வி பயில அனுமதிக்கப்படுவர்.

இரண்டாண்டு இண்டர்மீடியட் படிப்புமுறை மாற்றப்பட்டு அதன் முதலாண்டு உயர்நிலைப்படிப்புக்கும் இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்புக்கும் அளிக்கப்படவேண்டும். மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேருவோரில் 15க்கு ஒருவர் என்ற கணக்கில் பட்டப் படிப்புக்குப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். கல்லூரிகளில் ஆசிரிய - மாணுக்கர்களிடையே நேர்த் தொடர்பு (personal contact) இருத்தல்வேண்டும். பணிநிலைமை ஊதியம் ஆகியன ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் உயர்த்தப் படுதல் அவசியமாகும். பல்கலைக்கழகங்கள் நன்கு இணைந்து செயற்பட ஒரு பல்கலைக்கழக மானியக்குழு (university grants commission) ஏற்படுத்தப்படுவதை சார்ஜெண்ட் திட்டம் குறிப்பிட்டது.

நாட்டின் வளர்ச்சிக்கு நான்கு வகைப்பட்ட பணிபுரிவோர் தேவைப்படுவர். முதன்மை நிருவாகிகள் (chief executives), துணை நிருவாகிகள் (minor executives), திறமைமிக்க தொழிலாளர்கள் (skilled craftsmen), திறமை தேவைப்படா உடலுழைப்பினை அளிக்கும் தொழிலாளர்கள் (unskilled labour) ஆகியோர் இவர்களாவர். இவர்களுக்கேற்ற தொழில்நுட்பக் கல்வி அளிக்கப் படவேண்டும். முதன்மை நிருவாகிகள் பல்கலைக்கழக தொழில் நுட்பப் பிரிவில் கல்வி பயின்றவர்கள். துணை நிருவாகிகள் தொழில்நுட்ப உயர்நிலைப்பள்ளியை முடித்தவர்கள். திறமை மிக்க தொழிலாளர்கள் தொழில்நுட்பப் பள்ளிகளில் முதுநிலை வகுப்புக்கள் முடித்தவர்களாவர். முதுநிலை ஆதாரப்பள்ளிகளில் ஓரளவு கைப்பணிகளைக் கற்றவர்கள் அதிகம் திறமை தேவைப் படாத பணிகளுக்கு நேரடியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். இவர்களுக்கும் பிறகு அனுபவம் ஏற்பட்டால் திறன்மிக்க தொழிலாளர்களாக உயரவியலும். தொழில்நுட்ப, கலை, வணிகவியல் பயிற்சிக்கு பகுதிநேர அடிப்படையிலும் போதிய (part time)

வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் சார்ஜென்ட் அறிக்கை சுட்டிக்காட்டியது.

ஆசிரியப் பயிற்சியின் முக்கியத்துவத்தையும் இதற்கான வாய்ப்புகள் போதிய அளவு அதிகரிக்கப்பட வேண்டுமென்பதையும் சார்ஜென்ட் அறிக்கை குறிப்பிட்டது. பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் ஓராண்டு காலப் பயிற்சி அளிக்கலாம். இக்கல்லூரிகளில் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது. பட்டம் பெறுதவர்களுக்கு மூவகை ஆசிரியப் பயிற்சிகள் அளிக்கலாம். முன்தொடக்க ஆசிரியப் பயிற்சி, ஆதாரப்பள்ளி ஆசிரியப் பயிற்சி, உயர்நிலைப்பள்ளிகளில் பட்டதாரியில்லா ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆகியன இவையாம். பட்டம் பெறுதோர்க்கான ஆசிரியப்பயிற்சிக் காலம் இரண்டாண்டுகளாகும். ஆசிரியர்களுக்கு அவ்வப்போது புதுப்பிக்கும் பயிற்சி (refresher course) ஏற்படுத்தப்படவேண்டும். தொழில்நுட்ப, வணிகவியல் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க தனியான பயிற்சிக் கல்லூரிகள் தேவையில்லை; தொழில்பள்ளிகளே இப்பயிற்சியை அளிக்கும். கீழ்வகுப்புக்களில் 30 மாணுக்கர்களுக்கு 1 ஆசிரியர் என்ற விகிதத்திலும் உயர்நிலை வகுப்புக்களில் 20க்கு ஓராசிரியர் என்றும் இருக்கவேண்டும். சிறந்தவர்களை ஆசிரியப்பணிக்கு அழைக்க உதவும் வகையில் ஆசிரியர்களின் ஊதியம் அதிகரிக்கப்படவேண்டும்.

கட்டாய உயர்கல்விக்கும், மாணுக்கர் மருத்துவசோதனைக்கும் போதியவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மருத்துவ சோதனைவழியே குழந்தைகளது உடல் நிலைபற்றிய விவரங்கள் 6, 11, 14 வயதுகளில் பெறப்பட்டுக் குறித்து வைக்கப்படவேண்டும். பள்ளிகளின் கட்டடங்களும் பிற வகுப்பறை ஏற்பாடுகளும் மாணுக்கர்களது உடல்நல வளர்ச்சியில் குறுக்கிடாதவாறு அமைக்கப்படவேண்டும். இம்மாதிரியே கல்விக்கூடங்களில் அதிக அளவில் சமூகச் செயல்களுக்கும் பொழுதுபோக்குச் செயல்களுக்கும் வாய்ப்புகள் இருக்கவேண்டும்.

10 வயது முதல் 40 வயது வரையிலானவர்களுக்கான முதியோர்கல்வி செயற்படுத்தப்படவேண்டும். முதியோர்க்கான கல்வி பொதுக்கல்வியாகவும் வாழ்க்கையில் அவர்களுக்கு உதவக் கூடியதாகவும் இருக்கவேண்டும். சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் தனித்தனியே வகுப்புக்கள் நடத்தப்படவேண்டும். பெண்களுக்கான முதியோர் கல்வியிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். முதியோர் கல்வியின் உடனடிக் குறிக்கோள் எழுத்தறிவாகும். முதியோர்கல்வியை மேலும் கவர்ச்சியுள்ளதாக ஆக்க

திரைப்படங்கள், இசைத்தட்டுக்கள், வானொலி, இசை, கிராமிய நடனங்கள், நாடகம் போன்றனவும் பயன்படுத்தப்படவேண்டும். பொது நூலகங்களும் நிறுவப்படவேண்டும்.

உடல் ஊனமுற்றோர் ஊனக்குறைபாடுள்ளோர் ஆகியோர்க்கான சிறப்புப்பள்ளிகள் ஏற்படுத்தப்படவேண்டும். வேலை வாய்ப்புபற்றி அறிவிக்கும் நிறுவனங்களின் (employment bureaus) தேவைபற்றியும் சார்ஜென்ட் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. மைய அரசிலும் மாகாண அரசுகளிலும் நன்கமைக்கப்பட்ட கல்வித் துறைகள் இருத்தலின் இன்றியமையாமையையும் இது சுட்டிக் காட்டியுள்ளது.

சார்ஜென்ட் திட்டம் பற்றிய மதிப்பீடு

சார்ஜென்ட் திட்டம் சில நல்லியல்புகளைக் கொண்டிருந்தது. நாட்டின் முன்னேற்றத்தினைக் கருத்தில்கொண்டு தீட்டப்பட்ட விரிவான ஒரு திட்டமாகும் இது. கல்வியின் பல்வேறு பிரச்சினை இத்திட்டத்தில் நன்கு பகுத்தாராயப்பட்டுள்ளன. மாணுக்கனது முழுமையான கல்வி வளர்ச்சிக்கு வகை செய்வதாகவும் இது அமைந்துள்ளது. கல்வித்திட்டங்களில் வெற்றியில் ஆசிரியரது முக்கிய பங்கினை உணர்ந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இதேபோது இதில் குறைபாடுகளும் உள்ளன. 40 ஆண்டுகளில் இத்திட்டத்தின் வழியே இந்தியக் கல்வி இங்கிலாந்தின் இப்போதைய கல்விநிலையை அடைய வேண்டுமென்று சார்ஜென்ட் குறிப்பிட்டிருப்பது உற்சாகப்படுத்தும் வகையில் இல்லை. இந்நாற்பது ஆண்டுகளை ஐந்தாண்டுப் பிரிவுகளாக சார்ஜென்ட் பிரித்திருக்கிறார். நாட்டுக்கல்வி வளர்ச்சிக்கு இவ்வளவு காலம் காத்திருப்பது இயலாது; அவ்வாறு காத்திருப்பது நாட்டிற்குத் தீமைபயப்பதுமாகும். சார்ஜென்ட் திட்டத்தினைச் செயற்படுத்தத் தேவைப்படும் நிதிவசதி அதிகமாகும். இதனை எவ்வாறு இந்தியா போன்ற ஏழைநாடு திரட்டுவது என்பது பற்றி சார்ஜென்ட் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. கல்வி அமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பதற்குதவும் சில பரந்த நோக்கங்களை சார்ஜென்ட் அறிக்கை குறிப்பிட்டதே தவிற இவற்றை அடையத் திட்டவட்டமான நடைமுறை நிரல் ஒன்றை வரையவில்லை. மற்றும் நம் நாட்டுக்கல்வி இங்கிலாந்தின் மாதிரியில் தான் வளர்ச்சிபெற வேண்டுமென்பதில்லை. வேறுசில நாடுகளும் நமது கல்விக்கு முன்மாதிரிகளாக அமையலாம் என்பதனை இவ்வறிக்கை மறந்துவிட்டது.

சார்ஜென்ட் அறிக்கையின் நோக்கங்களையும் சில பரிந்துரைகளையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. ஒரு சில பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டன. நாடு சுதந்தரம் பெற்றபின் எழுந்துள்ள கல்வி வளர்ச்சிக்கு இவ்வறிக்கையின் கருத்துகளும் ஓரளவு துணை செய்தனவெனலாம்.

## வினாக்கள்

1. மாகாண சுயாட்சிக் காலத்தில் இந்தியக் கல்வி அமைப்பில் எழுந்த முன்னேற்றம் பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

2. ஆசாரிய நரேந்திர தேவரின் தலைமையில் ஐக்கிய மாகாணத்தில் செயற்பட்ட கல்விக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் யாவை ?

3. சார்ஜென்ட் திட்டத்தில் காணப்படும் முக்கிய கருத்துகள் யாவை ? இவற்றின் நல்லியல்புகளையும் குறைபாடுகளையும் குறிப்பிடுக.

# 14. பல்கலைக் கழகக்கல்வி ஆய்வுக்கு குழு (1949)

## ஆய்வுக்குழு அமைப்பு

*1947-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15-ஆம் நாள் நாடு விடுதலை பெற்றது. தங்களது கல்வி வளர்ச்சியினைத் தங்களது தேவைகளுக் கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்தக்கூடிய முழு வாய்ப்பினை இது மக்களுக்கு அளித்தது. இவ்வாய்ப்பு அவர்களது பொறுப்புகளை யும் அதிகப்படுத்துவதாக அமைந்தது. சுதந்தர பாரதத்தின் கல்வி அமைப்பு நாட்டின் வளர்ச்சிக்குத் துணையாகவும், அதன் அடிப்படையாகவும் அமையவேண்டுமென்ற கருத்தினைக்கொண்டு நமது நாட்டில் சுதந்தரம் பெற்றபின் கல்விச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விஞ்ஞான அறிவு, தொழில் நுட்பத் திறன், மனித சக்தியைச் சிறந்த முறையில் பயன்படுத் துதல் போன்றவற்றின் விளைவாகவே நாட்டின் வளர்ச்சி எழுவதா தலால் இவற்றுக்கு உதவும் வகையில் நாட்டின் கல்வி முறையை மாற்றியமைக்க நமது நாட்டில் முயற்சிகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. எல்லோர்க்கும் கல்வி வாய்ப்புகளை வேறு பாடின்றிப் பரவலாக அளிப்பது, கல்வியின் எல்லா நிலைகளிலும் தரத்தினை உயர்த்துவது, கல்வியின் வழியே நாட்டு மக்களிடையே சிறந்த குடிமைப் பண்புகளையும் மனவெழுச்சி முறைப்பட்ட ஒற்றுமை ஒருமைப்பாடு ஆகியவற்றினையும் வளர்ப்பது ஆகிய நோக்கங்களை அடைய மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து செய லாற்றி வருகின்றன. கல்விக்கான முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டி உருவாக்குவதற்கு முதற்படியாக கல்வி நிலைமைகளை வல்லு நர்களது துணைகொண்டு ஆராய்ந்து அவற்றில் காணப்படும் குறை பாடுகள், இவற்றைக் களையும் முறைகள், நாட்டின் வளர்ச்சித் தேவைகளைக் கருத்தில்கொண்டு கல்வி அமைப்புகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள், புகுத்தப்படவேண்டிய புதுப் போக்குகள் போன்றனபற்றிய பரிந்துரைகளைப் பெறுவதன் அவசியத்தை இந்திய அரசு நன்கு உணர்ந்திருந்தது; இதற்கான கல்வி ஆய்வுக்*

குழுக்களையும் அவ்வப்போது நியமித்து வந்துள்ளது. 1949-ஆம் ஆண்டின் பல்கலைக் கழகக் கல்விக்குழு, 1952-ஆம் ஆண்டின் உயர் நிலைப் பள்ளிக் கல்விக்குழு, 1964-'66 ஆண்டுகளில் செயற்பட்ட பொதுக்கல்வி ஆய்வுக்குழு ஆகியன இதற்குச் சான்றுகளாகும்.

நாடு சுதந்தரம் பெற்றதும், நாடு துண்டாடப்பட்டதும் இணைந்து ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளாகும். இதன் பின் பல புதிய பல்கலைக் கழகங்கள் நாட்டில் ஏற்படுத்தப்பட்டன. பல்கலைக் கழகங்கள் தலைவர்கள், அறிஞர்கள் ஆகியோரை நாட்டுக்கு உருவாக்கி அளிக்கும் வளர்ப்புப் பண்ணைகளாகும். நாட்டு வளர்ச்சியில் அவை தங்களது முக்கிய பங்கினை உணர்ந்து செயலாற்றினால் தான் பல்கலைக் கழகக் கல்வி தனது நோக்கங்களை அடைந்துள்ளதாகக் கூறமுடியும். ஆனால் சுதந்தரம் பெற்றபின் பல்கலைக்கழகக் கல்வியின் நிலைமை மனநிறைவு தரக்கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை; பல பல்கலைக் கழகங்களின் அமைப்பிலும், செயல்முறைகளும் குறைபாடுகளும் காணப்பட்டன; கல்வியின் தரம் எதிர் பார்க்கும் அளவு சிறப்பாக அமையவில்லை. நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப பல்கலைக் கழகக் கல்வியின் நோக்கமும், இலட்சியங்களும் அமைந்து காணப்படவில்லை என்னும் கருத்தும் அன்று பரவலாக நிலவியது. இந்தியப் பல்கலைக் கழகக் கல்வியினைச் சீர்த்திருத்தி விரிவாகத் தொடங்குமுன் பல்கலைக் கழகங்களின் நிதி நிலைமை, கல்வித் தகுதிகள் போன்ற பலவற்றை முற்கூட்டி ஆராய்வது தேவைப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு பல்கலைக் கழக இணைப்பு வாரியம் (inter university board) மத்தியக் கல்வி அறிவுரை வாரியம் (central advisory board of education) ஆகியன ஹன்டர் குழு போன்ற ஒரு கல்விக்குழுவினை நியமிக்க இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்தன. இதன் விளைவாக 1948-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் பல்கலைக் கழகக் கல்வி ஆய்வுக்குழு (university education commission) ஒன்று நியமிக்கப்பட்டது. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். தலைசிறந்த பல இந்தியக் கல்வியாளர்களும் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாட்டின் கல்வி வல்லுநர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாகச் செயற்பட்டனர். இராதாகிருஷ்ணன் குழு தனது அறிக்கையை 1949-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25-ம் நாள் அரசுக்குச் சமர்ப்பித்தது.

## ஆய்வுக்கு விடப்பட்ட பிரச்சினைகள்

பல்கலைக் கழகக் கல்விக் குழுவிடம் ஆய்வுக்கு விடப்பட்ட பிரச்சினைகள் (terms of reference) இக்கல்வி நிலையின் முழு அமைப்போடு தொடர்புடையவையாக விருந்தன. நாட்டின் எதிர்காலத்

தையும், உலகின் நிலைமையையும் கருத்தில்கொண்டு இக்குழு இந்தியப் பல்கலைக் கழகங்களின் நோக்கம், இலட்சியங்கள், ஆராய்ச்சிப் பணிகள், அமைப்பு, நிருவாகம் போன்றவற்றையும் இவற்றின் நிதிப் பிரச்சினைகள், ஆசிரியப் பிரச்சினைகள், கல்வி ஏற்பாடுகள், பயிற்றுமொழிப் பிரச்சினை, சேர்க்கைப் பிரச்சினை, மாணுக்கரது ஒழுங்கு போன்றவற்றையும் ஆராயப் பணிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களுடன் தொடர்புள்ள எந்த ஒரு கூறும் விடப்படவில்லை. இக்கல்விக்குழுவின் அறிக்கை முழுமையும் சிறப்புப் பெற்று அமைந்து, நாட்டின் பல்கலைக் கழகக் கல்வி வளர்ச்சி வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தினையும், முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளது.

**பல்கலைக் கழகக் கல்வியின் நோக்கங்கள்**

பல்கலைக் கழகக் கல்வியின் நோக்கங்களும், இலட்சியங்களும் எத்தகையனவாக இருத்தல்வேண்டும் என்பது பற்றி இராதா கிருஷ்ணன் குழு கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. நாடு விடுதலை பெற்றபின் பல்கலைக் கழகங்களின் கடமையும், பொறுப்பும் பெருகியுள்ளன. அரசியல், நிருவாகம், பல்வேறு உயர் தொழில்கள், வாணிபம், தொழில்துறை போன்றவற்றிற்குத் தேவைப்படும் தலைமையை உருவாக்கி நாட்டிற்கு அவை அளிக்கவேண்டும். பல்கலைக் கழகங்கள் பண்பாட்டின் செயற்கூறுகளாகும்.. பண்பாட்டினை உருவாக்கும் அறிவு சிறந்த முன்னோடிகளைக் கண்டுபிடித்துப் பயிற்சியளிப்பவை பல்கலைக் கழகங்களாகும். இத்தகையோர் பின்னர் தேவைகள் எழும்போதும், நெருக்கடி நிலைமைகள் தோன்றும்போதும் நாட்டினை நல்வழியில் செலுத்திச் செல்பவர்களாக இருப்பர். நாம் நமது பழம் பெருமைகளைப் பற்றியே பேசிக் கொண்டிராமல் அதனைவிடச் சிறந்த ஓர் எதிர்காலத்தைத் தோற்றுவிக்க முயலவேண்டும். இம்முயற்சிக்கு அடிப்படையான ஆக்கத் திறனையும், துணிவு மனப்பான்மையையும் பல்கலைக் கழகங்கள் வளர்க்கவேண்டும். உயர்கல்வி பொருளறிவு (knowledge) மெய்யறிவு (wisdom) ஆகிய இரண்டையும் பெற உதவுவதாக அமைய வேண்டும். நமது சமூக அமைப்பு சிறப்பான சில இலட்சியங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை அடைய நமது இளைஞர்களுக்கு பல்கலைக் கழகக் கல்வி உதவவேண்டும். குடியாட்சிப் பண்புகள், நேர்மை, சுதந்தர உணர்வு, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை இளைஞர்களிடையே வளர்த்து உண்மையான சுதந்தரத்தைப் பாதுகாக்க அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் குறுகிய சிறப்புப்பயிற்சி பெறுதல் ஆன்மீக அறநெறி வளர்ச்சிகளில் குறுக்கிடும்; எனவே பல்கலைக் கழகங்கள் வாழ்க்கையின்

உயர் மதிப்புகள் எனப்படுவனவற்றைப் புறக்கணிக்கக்கூடாது. அன்பு, பிறர்பால் பரிவு, மனித இன ஒருமைப்பாட்டில் தளரா நம்பிக்கை, சுதந்தரம் அமைதி ஆகியவற்றில் குன்றா ஆர்வம், நீதி நேர்மை ஆகியவற்றை ஆதரித்தலில் உறுதி போன்றன விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றுடன் இசைந்த முறையில் இணைக்கப் படவேண்டும். இளைஞர்களுக்கு உளவலிமை, உடல் வலிமை ஆகிய இரண்டும் இன்றியமையாதவை; எனவே இவ்விரண்டின் வளர்ச்சியிலும் பல்கலைக் கழகங்கள் நாட்டம் செலுத்தவேண்டும்; இளைஞர்களிடம் மறைந்து கிடக்கும் இயற்கையான திறன்களை உற்றறிந்து இவை மலர்ந்து வெளிப்பட உதவும் பயிற்சியினையும் அளித்தல் வேண்டும். புதிய மதிப்புகள், தேவைப்படும் மாற்றங்கள் ஆகியவற்றை உருவாக்குவதும், சமூக முன்னேற்றத்துக்கு அவசியமான தலைமைக்கான பயிற்சியினை அளிப்பதும் பல்கலைக் கழகங்களின் நோக்கங்களில் இடம் பெறவேண்டும். வேறுபாடுகளுக்கிடையே அடித்தளத்தில் காணப்படும் இந்தியப் பண்பாட்டின் ஒற்றுமையினையும், ஒருமைப்பாட்டினையும் பரப்புவதும் பல்கலைக் கழகங்களின் பணியாகும். நமது பண்டைய மதிப்புகளை ஆராய்தலின்றி புறக்கணிப்பதோ அல்லது ஆதிகாலத்தவை அவை என்பதனால் அவற்றை விடாப்பிடியாகப் பற்றி நிற்பதோ தவறு. பண்டைய வாழ்க்கை முறையையும், குறிக்கோள்களையும் பகுத்தாராய்ந்து அவற்றில் சிறந்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்து இன்றைய தேவைகளுக்கேற்ப அவற்றை மாற்றியமைத்து வாழ்க்கையில் இடம் பெறச் செய்வதற்குப் பல்கலைக் கழகக் கல்வி உதவ வேண்டும். இன்றைய உலகச் சூழ்நிலையில் எந்த ஒரு நாடும் தனித்து இயங்க முடியாது. அந்நாட்டு நிகழ்ச்சிகள், பிறநாடுகளது பண்பாடு, நாட்டுப் பற்றுக்கும் அனைத்துலக மனப்பான்மைக்குமிடையேயுள்ள தொடர்பு, போர்களுக்குப் பின்னனிமையும் நெருக்கடி நிலைமைகள், உலக அமைதிக்காகப் பாடுபடும் நிறுவனங்கள் போன்றன பற்றிய அறிவை இளைஞர்களிடையே பரப்புவதும் பல்கலைக் கழகங்களது நோக்கமாக விருக்கவேண்டும் என்பதனையும் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

**முக்கிய பரிந்துரைகள்**

இனி இக்குழுவின் முக்கிய பரிந்துரைகளைக் கவனிப்போம்;

ஆசிரியர்களைப் பற்றிய பிரச்சினை மிக முக்கியமான ஒன்றாகும் என்று இக்குழு குறிப்பிட்டுள்ளது. ஆசிரியர்களது திறன், மனப்பான்மை ஆகியவற்றைச் சார்ந்தே ஒரு கல்வித் திட்டத்தின் வெற்றி அமைவதாகும். பல்கலைக் கழகக் கல்வியின் தரம் தாழ்ந்து காணப்படுவதற்கு ஆசிரியர்கள் ஒரு காரணமாவர். இதற்கு ஆசிரியர்களைமட்டும் குற்றம் கூறமுடியாது; பல்கலைக் கழகங்களும்

அரசும் ஓரளவு பொறுப்பேற்கவேண்டும். பல்கலைக் கழகங்களில் நூலக வசதிகள், ஆராய்ச்சி வசதிகள் போன்றன குறைந்து காணப் படுதல், பல்கலைக் கழகங்களில் அரசியல் நுழைவு போன்றன ஆசிரியர்களது திறமையையும் மனப்போக்கினையும் பாதித்துள்ளன. ஊதியக் குறைவு, பணி நிலைமைக் குறைபாடுகள் போன்றனவும் இவர்களது உற்சாகத்தையும் ஆர்வத்தையும் குறைத்து, தங்களது பணியில் முழுக்கவனம் செலுத்தவொட்டாமல் செய்துள்ளன. இந் நிலைமாறி ஆசிரியர்களது நிலைமையிலும் மதிப்பு நிலையிலும் முன் னேற்றத்தினைத் தோற்றுவிக்க இக்கல்விக்குழு சில கருத்துகளைத் தெரிவித்துள்ளது. பல்கலைக் கழக ஆசிரியர்கள், பேராசிரியர்கள், ரீடர்கள் (readers) எனப்படும் சிறப்பு விரிவுரையாளர்கள், விரிவுரை யாளர்கள், கற்பிப்போர் (instructors) என நான்கு வகைகளாக இருத்தல்வேண்டும். இவர்களோடு ஆராய்ச்சிக்கான கல்வி உறுப் பினர்களும் (research fellows) இருக்கவேண்டும். ஆசிரியர்களது பதவி உயர்வு அவர்களது தகுதியின் அடிப்படையிலேயே அளிக்கப் படவேண்டும். ஆசிரியர்களில் இளநிலை முதுநிலைப் பதவி வகிப் போரது விகிதம் 2 : 1 என்று காணப்படவேண்டும். பதவி ஓய்வு வயது 60 ஆக நிர்ணயிக்கப்படவேண்டும்; தேவைப்பட்டால் பேராசிரியர்கள் ஓய்வு பெறுவது 64 வயதுவரை நீட்டிக்கப்பட லாம். ஆசிரியர்களது சேமநல நிதி (provident fund) வசதியை அதிகரிக்கவேண்டும். இந்நிதிக்கு ஆசிரியர் தன் ஊதியத்தில் 8 சத விகிதமும் பல்கலைக் கழகம் அதே அளவுத் தொகையையும் அளிக்க வேண்டும். ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரு வதும் பல்கலைக் கழகங்களது பொறுப்பாக இருக்கவேண்டும். ஆசிரியர்களது வேலை நேரங்கள், வேலைப்பளு (work load), விடுப் புக்கான விதிகள் போன்றன பற்றியும் இக்குழு தன் அறிக்கையில் பரிந்துரைகளைக் கூறியுள்ளது. சம்பள உயர்வு பற்றியும் குறிப்பிட் டுள்ளது. ஆசிரியர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் இடையே தகராறுகள் எழுந்தால் இவற்றைத் தீர்க்கும் முறைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

பல்கலைக் கழகத் தேர்வுகளில் மாணாக்கர் பெரும் விகிதத்தில் தோல்வியடைவது கல்வியின் தரக்குறைவின் ஒரு சின்னமாகும். எனவே பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் கற்பித்தல் தரம் உயர உதவக்கூடிய வழிகள் பலவற்றை இராதாகிருஷ்ணன் கல்விக் குழு எடுத்துக் கூறியுள்ளது. பல்கலைக் கழக நுழைவிற்கு இண்டர் மீடியட் படிப்பு அடிப்படைத் தகுதியாகும். அதாவது பட்டப் படிப்பில் சேருவதற்கு முன் மாணாக்கர் 12 ஆண்டுகள் கல்வி பயின் றிருத்தல் வேண்டும். இதற்குதவ பல இண்டர்மீடியட் கல்லூரிகள் திறக்கப்படவேண்டும். இதேபோது பட்டப்படிப்பு தகுதியும் அதில் நாட்டமும் இல்லாதோர்க்கென தொழிற்சார்ந்த பள்ளி

களையும், நிறுவனங்களையும் (vocational schools and institutions) ஏற்படுத்தவேண்டும். 10 அல்லது 12 ஆண்டுகள் படிப்பை முடித்த மாணாக்கர்கள் இவற்றில் சேரலாம். பல்கலைக் கழக அறிவியல் மனிதவியற் பாடத் துறைகளின் மாணாக்கர்களது மொத்த எண்ணிக்கை 3000-க்கு மேற்படாமலும், இணைந்துள்ள கல்லூரிகளில் (affiliated colleges) 1500-க்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். புதுப்பிக்கும் பயிற்சிகள் (refresher courses) உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தப்படவேண்டும். பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் ஆய்வகங்கள், நூலகங்கள் ஆகியன மிகச் சிறப்பாக இருத்தல் அவசியமாகும். மாணாக்கர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களது படிப்பினை நேரடியாக மேற்பார்வை செய்ய உதவும் டுடோரியல் முறை, விரிவுரைகளுடன் இணைக்கப்பட்டு நன்கு செயற்படுத்தப்படவேண்டும். விரிவுரைகள் ஆசிரியர்களால் நன்கு திட்டமிடப்பட்டு ஆற்றப்படுவதுடன் நூலகவேலை, எழுத்துப்பயிற்சி ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டும். கல்லூரி, பல்கலைக் கழக வகுப்புகள் ஆகியவற்றுக்கான வேலை நாட்கள் 180-க்குக் குறையக் கூடாது.

பல்கலைக் கழகத்திற்கான கல்வி ஏற்பாட்டில் பொதுக் கல்வி, சுதந்தரப் போக்கும் திறனாய்வுத் தன்மையும் கொண்ட முற்போக்குக் கல்வி, வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆகிய மூன்று நோக்கங்களையும் அடைய உதவும் பாடங்களும், செயல்களும் இடம்பெற வேண்டும். பயனுள்ள பலவகை வாழ்க்கை அனுபவங்களை மாணாக்கர்கள் பெறும் வகையில் பொதுக்கல்வி அமைக்கப்படல் வேண்டும். இதற்கான பாடத்திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகள் பல்கலைக் கழகங்கள் ஆகிய இரண்டும் இணைந்து ஆராய்ந்து உருவாக்கி, இண்டர் மீடியட், பட்ட வகுப்புக்களில் புகுத்தவேண்டும். பொதுக் கல்விக்கும் சிறப்பாக ஓரிரு பாடங்களில் மிகு தேர்ச்சி பெற உதவும் கல்விக்குமிடையேயுள்ள தொடர்பு ஆராயப்பட்டு, பல்வேறு பாடத் திட்டங்களுக்கு ஏற்றவகையில் இத்தொடர்பு செயற்படுத்தப்படவேண்டும். மாணாக்கனது கவர்ச்சிகள், தொழில் நாட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவனது ஆளுமை வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படவேண்டும். ஆனர்சு பட்டம் (honours course) பெற்று ஓராண்டுக்குப் பின்னரும் சாதாரண பட்டப் படிப்புக்கு இரண்டாண்டுகளுக்குப் பின்னரும் எம். ஏ., எம். எஸ்சி. போன்ற முதுநிலைப் பட்டங்கள் அளிக்கப்படவேண்டும். இவ்வகுப்புகளுக்கு அகில இந்திய அடிப்படையில் மாணாக்கர்கள் தேர்ந்தெடுத்துச் சேர்க்கப்படுவதையும் இந்நிலையில் ஆசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு

இருக்கவேண்டியதன் அவசியத்தையும் இராதாகிருஷ்ணன் குழு வலியுறுத்தியுள்ளது.

பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இதற்கான எல்லா வாய்ப்புகளும் இருத்தல் வேண்டும். பி.எச்டி. பட்டம் பெற மாணுக்கர்கள் இரண்டாண்டுகள் ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபட்டிருக்கவேண்டும். பி. எச்டி. வகுப்பிற்கும் அகில இந்திய அடிப்படையில் சிறந்த மாணுக்கர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் விரும்பத்தக்கது. இவர்களது ஆராய்ச்சிக் காலத்தில் உதவித்தொகை அளிக்கப்படவேண்டும். இவர்களுக்குப் பட்டம் வழங்குமுன் இவர்களது பொது அறிவினையும், பாடச் சிறப்பறிவினையும் சோதிக்க வாய்மொழித் தேர்வு (viva voce) ஒன்று நடத்தப் பெறவேண்டும். எம்.எஸ்.சி., பி. எச்டி. வகுப்பின் சிறந்த மாணுக்கர்களுக்கு கல்வி அமைச்சகமும் பொருளுதவி செய்தல் வேண்டும். விஞ்ஞானப் பிரிவில் கற்பித்தலின் தேவைக்கு மேல் ஆராய்ச்சியை மேற்பார்வை செய்து வழிகாட்டுதற்கென்று அதிகப் படியான சில ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். உயிரியல்-இரசாயனம், உயிர்-பொருளறிவியல் போன்ற புதுத்துறைகள் பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தப்படவேண்டும். பல்கலைக் கழக, கல்லூரி ஆசிரியர்கள் தாங்களும் ஆராய்ச்சியில் ஈடுபட ஊக்குவிக்கப்படவேண்டும். புதுமையும் சிறப்பும் கொண்ட ஆராய்ச்சிகளுக்கு டி. லிட்., டி. எஸ்சி. பட்டங்கள் அளிக்கப்படலாம்.

தொழிற் கல்வி பற்றியும் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு பல பயன்மிக்க பரிந்துரைகளைச் செய்துள்ளது. இந்தியா அடிப்படையில் விவசாய நாடாகும் என்பதனைக் கருத்தில் கொண்டு விவசாயக் கல்வி வளர்ச்சியை ஆராய்ந்துள்ளது. விவசாயக்கல்வி (agricultural education) நாட்டுப் பிரச்சினையாகக் கவனிக்கப்பட்டு, இதற்கு தொடக்க, உயர்நிலைப்பள்ளி, உயர்கல்வி நிலைகளின் பாடத்திட்டங்கள் யாவற்றிலும் முக்கிய இடம் அளிக்கப்படல் வேண்டும்; விவசாயக் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான பொறுப்பு இத்துறையில் அறிவும் அனுபவமும் பெற்றுள்ள வல்லுநர்களிடம் விடப்படவேண்டும். வேளாண்மைக் கல்லூரிகளில் செயல்முறைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் முக்கிய இடம் பெறவேண்டும். இக் கல்லூரிகள் கிராமப்புரங்களில் அமைக்கப்பட்டு, கிராமப் பல்கலைக் கழகங்களுடன் (rural universities) இணைக்கப்படவேண்டும். வேளாண்மைக் கல்வி வளர்ச்சிக்குதவ விவசாயப் பண்ணைகள், ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றன அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே செயற்பட்டுக்கொண்டிருப்பவை வளர்க்கப்படவேண்டும். முக்கியமாக, விவசாய ஆராய்ச்சிக்கான இந்

தியக் கழகம் (indian council of agricultural research) சிறந்த முறையில் வளர்க்கப்படவேண்டும்.

வாணிபக் கல்வி (commercial education) பெறும் மாணுக்கர்கள் புத்தக அறிவு பெறுவதுடன் சில நிறுவனங்களில் செயலாற்றிப் பயிற்சி பெறுவதனை இக்குழு விரும்பியது. பட்டம் பெற்றபின் ஒருசில மாணுக்கர்கள் வாணிபத்தின் பல்வேறு துறைகளில் சிறப்புப்பயிற்சி பெறலாம். ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரிகளது தரத்தினை உயர்த்தலோடு மேலும் இத்தகைய கல்லூரிகள் ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தையும் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு சுட்டிக்காட்டியது. இவற்றில் போதிக்கப்படும் கல்வி புத்தகக் கல்வியாக இருத்தல் பயனற்றது. இவற்றுக்கான பாடத் திட்டத்தினைப் புதுப்பித்தலோடு, செய்முறைப் பயிற்சிக்கு முதலிடம் தருவது அவசியமாகும். பல்வேறுநிலைப் பொறியியற் பள்ளிகளும் தொடங்கப் பெற வேண்டும். இவற்றில் தொழில்களுக்கான மேற்பார்வையாளர், பணியாளர், கண்காணிப்பாளர், நுணுக்கப்படம் வரைவோர் (draftsmen) போன்ருேர்க்குப் பயிற்சியளிக்கலாம். பொறியியல் துறைக்கான ஆராய்ச்சி மையங்கள் (research centres) சிலவும் ஏற்படுத்தப்படவேண்டும். பொறியியற் கல்வியின் பாடத் திட்டத்தில் காலம், இடம் ஆகியவற்றிற்கேற்ப மாற்றங்கள் செய்யப்படுவது தேவை.

ஆசிரியக் கல்வி பற்றியும் இக்கல்விக்குழு பல கருத்துகளைத் தெரிவித்துள்ளது. பயிற்சிக் கல்லூரிகளது பாடத்திட்டம் புதுப்பிக்கப்பட்டு, கற்பித்தல் பயிற்சிக்கும் செய்முறைப் பயிற்சிக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவது அவசியமாகும். கற்பித்தல் பயிற்சிக்கு (teaching practice) சிறந்த பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். சிறந்த பள்ளிகளில் பின்பற்றப்படும் முறைகளை மதிப்பீடு செய்தலிலும் ஆசிரிய - மாணுக்கர் பயிற்சி பெறுதல்வேண்டும். போதிய கற்பித்தல் அனுபவம் பெற்ற ஆசிரியர்களே பெரும்பாலும் பயிற்சி கல்லூரிகளில் நியமிக்கப்பட வேண்டும்; கல்விக் கோட்பாடு பற்றிய கருத்துகள் நெகிழ்ச்சியுள்ளவையாகவும் (flexible) சூழ்நிலைக்கு ஏற்றவையாகவும் இருத்தல்வேண்டும். பல ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் பெற்றவர்களே கல்விக்கான மேற்படிப்பு வகுப்புக்களில் (எம். எட். போன்றவை) சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள் ஆராய்ச்சி மேற்கொள்கையில் அனைத்திந்திய நோக்குடன் இவற்றிற்குத் திட்டமிடுதல் தேவைப்படுவதாகும்.

விஞ்ஞானக் கல்வி (science education) வளர்ச்சிக்கு இதற்கான பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு மாற்றியமைக்கப்படுவதையும் ஆய்வக - செய்முறைப் பயிற்சிக்கு முக்கியத்துவம் தரப்படுவதையும் இக்கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. சட்டக் கல்வி, மருத்துவக் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் இக்கல்விக்குழு பல கருத்து களைத் தெரிவித்துள்ளது. பொது நிருவாகம், வணிகத்துறை நிருவாகம், தொழில் வாணிபம் போன்ற துறைகளில் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கான புது வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் விரும்பியது.

சமயக் கல்வியின் இன்றியமையாமையை இக்கல்விக்குழு சிறப்பாக வலியுறுத்தியுள்ளது; இதன் கருத்துகள் நம் நாட்டின் சமய - சார்பற்ற இலட்சியத்தினை அடிப்படையாகக் கொண்டவை யாகும். கல்லூரி தொடங்குமுன் சிறிது நேரம் மௌன வழிபாட்டுடனோ தியானத்துடனோ பணி தொடங்கலாம். பட்டப் படிப்பின் முதல் ஆண்டில் உலகின் சிறந்த பெரியோர்கள் எனப்படும் புத்தர், கன்பூசியஸ், ஜொராஸ்டர், சாக்ரடீஸ், ஏசுநாதர், சங்கரர், இராமானுஜர், மத்லர், முகம்மது நபிகள் நாயகம், கபீர், காந்தியடிகள் போன்றோரது வாழ்க்கைச் சரிதங்களை மாணுக்கர் பயிலலாம். இரண்டாம் ஆண்டில் இவர்க்கு, பல்வேறு சமயத் திரு நூல்களில் காணப்படும் பொதுக் கருத்துகளைத் தேர்ந்தெடுத்து போதிக்கலாம். மூன்றும் ஆண்டு மாணுக்கர்கள் சமயத்தத்துவத்தின் (philosophy of religion) அடிப்படைகளைக் கற்பர். மனிதன் ஆன்மிகத்தன்மை பெற்றவன். இவ்வுண்மையை உணர மாணுக்கர்க்குக் கல்வி கருவியாக அமைதல் வேண்டும் என்பதனை இக்குழு வலியுறுத்தியுள்ளது.

பெண்கல்வி பற்றிக் குறிப்பிட்டு, இக்கல்விக்குழு பெண் களுக்கென பல கல்லூரிகள் திறக்கப்பட வேண்டுமென்றும், வாழ்க்கையில் பெண்களது சிறப்புப் பங்குக்கேற்ப மனையியல், குடும்ப நிருவாகம், குடும்பப் பொருளாதாரம் போன்ற பாடங்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது. உயர்நிலைப்பள்ளி நிலையில் இருபால் கூட்டுக் கல்வி தேவையில்லை யெனினும் பெண்கள் கல்லூரி செயற்படாத இடங்களில் ஆண்கள் கல்லூரிகளில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுவதை இக்குழு ஆதரித்தது. இத்தகைய கூட்டுக் கல்விக் கல்லூரிகளில் ஆண் களுக்கு அளிக்கப்படும் எல்லா வாய்ப்புகளும் வசதிகளும் பெண் களுக்கும் அளிக்கப்படவேண்டும். ஆண் பெண் ஆசிரியர்களுக் கிடையே ஊதியத்தில் வேறுபாடு இருக்கக்கூடாது. இவ்வாறே கிராமப்புறக்கல்வி (rural education) வளர்ச்சி பற்றியும் சில கருத்து களைக் கூறியுள்ளது. கிராமப் பல்கலைக்கழகங்கள் (rural

universities) ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், கிராமக் குழந்தைகளுக்குப் பொதுக் கல்வியளிப்பது, அவர்களது தனிப்பட்ட கவர்ச்சிகளை வளர்ப்பது ஆகியன இவற்றின் முக்கிய நோக்கங்களாக அமைய வேண்டுமென்றும், இப்பல்கலைக் கழகங்களிலும் நூலகம், ஆய்வகம், விளையாட்டரங்கு போன்ற பல வசதிகள் அமைத்துத்தரப்பட வேண்டுமென்றும் இது குறிப்பிட்டது. இத்தகைய பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தில் செயல்களுக்கு நடுவிடம் அளிக்கப்படவேண்டும். கிராமக் கல்விக்கான 'அகில இந்திய நிறுவனம்' (all india institute of rural education) ஒன்று நிறுவப்படுதலை இக்குழு விரும்பியது.

பயிற்றுமொழி பற்றிய இக்குழுவின் கருத்துகளாவன: நாட்டின் பொதுமொழியான இந்தி வளப்படுத்தப்படவேண்டும். பன்னாட்டுக் கலைச்சொற்கள் (international technical terms) தேவையான சிறு உச்சரிப்பு எழுத்துக் கூட்டல் மாற்றங்களுடன் நமது மொழிகளில் பயன்படுத்தப்படவேண்டும். உயர்கல்வி முழுப் பயனுள்ளதாக அமையவேண்டுமாயின் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கும் நிலைமாறி பிராந்திய மொழிகளும் தாய் மொழிகளும் பயிற்றுமொழிகளாக வேண்டும். மாணாக்கர் விரும்பினால் தாய்மொழிக்குப் பதில் நாட்டுமொழியான இந்தியை தேவநாகரி லிபியில் பயன்படுத்தலாம். உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் தாய்மொழி, நாட்டுமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஓரளவு திறனுடன் விளங்கவேண்டும். நாட்டின் இணைப்புமொழியும் பிற தேசீய மொழிகளும் வளர்ச்சி பெற ஒரு வாரியம் அமைக்கப்படவேண்டும். கலைச் சொல்லகராதிகள், நூல்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் இதன் முக்கிய பொறுப்புகளாக இருக்கும். உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் தொடர்ந்து கற்பிக்கப்படவேண்டும். சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு ஆவன செய்யப்பட வேண்டுமெனினும், இது இந்திக்குப் பதில் தொடர்பு மொழியாகவோ பயிற்று மொழியாகவோ இருத்தல் இயலாது என்று இக்கல்விக்குழு கருத்து தெரிவித்துள்ளது.

தேர்வு முறையினை முழுமையாக மாற்றியமைத்தலின் இன்றியமையாமையைப் பல்கலைக்கழகக் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. பல்கலைக்கழகச் சீர்த்திருத்தம்பற்றி ஏதாகிலும் ஒரே ஒரு கருத்து மட்டும் குறிப்பிடப்படவேண்டும் என்றால் அது தேர்வு முறையைப் பற்றியதாகத்தான் இருக்கவேண்டும் என்று இது கூறியுள்ளது. கட்டுரை வினாக்களுடன் புறவயத்தன்மை பெற்ற சிறு விடை வினாக்களும் தேர்வுகளில் பயன்படுத்தப்படவேண்டும். வகுப்பறையில் மாணாக்கனது தேர்ச்சியும் தொடர்ந்து மதிப்பிடப்பட்டு,

இறுதித்தேர்வின் மதிப்பெண்களில் மூன்றில் ஒரு பங்கு இம்மதிப்பீட்டிற்கு ஒதுக்கப்படவேண்டும். மூன்றுண்டு பட்டப்படிப்பின் ஒவ்வோர் ஆண்டின் இறுதியில் சில பாடங்களில் தேர்வு நடத்தப்படவேண்டும். இதற்கேற்ற முறையில் பாடத்திட்டங்கள் உருவாக்கப் பெறவேண்டும். தேர்வாளர்கள் நல்ல முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்கள் குறைந்தது ஐந்தாண்டுகள் கற்பித்தல் அனுபவமேனும் பெற்றிருக்கவேண்டும்; இவர்கள் தொடர்ந்து மூன்ருண்டுகள் தேர்வாளர்களாகப் பணிபுரியலாம். தேர்வில் வெற்றி பெற்ருேர் மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்படலாம். 70%-ம் அதற்குமேலும்—I வகுப்பு; 55%—69%—II வகுப்பு; 40%—54%—III வகுப்பு). தொழிற்கல்விக்கான தேர்வுகளில் வாய்மொழி தேர்வும் (viva voce) இடம் பெறவேண்டும்.

மாணுக்கர்களது செயல்கள், நலம் ஆகியவைபற்றி இராதா கிருஷ்ணன் கல்விக்குழு பல கருத்துகளைக் கூறியுள்ளது. மாணுக்கனது திறமை, உழைப்பு, நடத்தை ஆகியவற்றின் அடிப்படையிலேயே உயர்கல்விக்கான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். பிறகாரணிகள் குறுக்கிடக்கூடாது. திறமைமிக்க ஏழை மாணுக்கர்களுக்குப் படிப்புதவிப் பணம் அளிக்கப்பட வேண்டும். இதற்காகத் தேர்வு ஒன்று நடத்தப்படவேண்டும். மாணுக்கர்களது உடல் நலம் பேணப்பட மருத்துவ வசதிகள் விரிவாக்கப்படவேண்டும். கல்லூரிகளிலும் மருத்துவவிடுதிகள் இருத்தல் தேவை. நல்ல குடிதண்ணீர் வசதிகள், துப்புரவான கல்லூரிச் சூழ்நிலை, மாணவரில்லச் சூழ்நிலை போன்றன இன்றியமையாதனவாகும். முழுநேர உடற்கல்வி இயக்குநர் ஒருவரை நியமித்து கல்லூரிகளில் உடற்கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தேசிய மாணவர் படை (N.C C.) அமைக்கப்படவேண்டும். மாணவர் பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபட எல்லா வாய்ப்புகளும் கல்லூரி களில் இருத்தல் வேண்டும். மாணவர் மன்றம் (students union) அமைத்து, இதன் செயல்கள் மாணுக்கர்களது ஒழுங்கும் கட்டுப்பாடும் வளரும் வகையிலும் அவர்களது சிறப்புத்திறன்கள் நன்கு வளரும் வகையிலும் திட்டமிடப்படவேண்டும்; இம்மன்றம் அரசியல் நோக்குடன் செயற்படக்கூடாது. மாணுக்கர்களுடன் ஆசிரியர்கள் நெருங்கிப்பழகி, தமது செல்வாக்கின் துணைகொண்டு அவர்களிடையே சிறந்த சமூகப் பண்புகளையும் நற்பழக்கங்கள் நற்மனப்பான்மைகள் ஆகியவற்றையும் வளர்க்க முற்படவேண்டும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் மாணவர் நலத்துறைத் தலைவர் (dean of student's welfare) ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.

மாணவர் நலனுக்கு அறிவுரை வழங்கவும் அவர்களது பிரச்சினைகளை ஆராயவும் ஒரு வாரியம் அமைக்கப்படுவதும் தேவையாகும்.

பல்கலைத்கழகங்களின் நிருவாகம் பற்றியும் இக்கல்விக்குழு சில பரிந்துரைகளைக் கூறியுள்ளது. பல்கலைக்கழகக் கல்வி மத்திய - மாநில அரசுகளின் இணைந்த பொறுப்பாகவிருத்தல் வேண்டும். அகில இந்திய அடிப்படையில் மத்திய அரசு பல்கலைக்கழகங்களின் நிதியினை மேற்பார்வை இடல்வேண்டும். பல்கலைக்கழக மானியக் குழு ஒன்று (university grants commission) ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு குறிப்பிட்டது.

மத்திய கல்வி அறிவுரை வாரியம் (C.A.B.E.) 1950 ஏப்ரல் மாதம் கூடி இராதாகிருஷ்ணன் கல்விக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்தது. இவற்றுள் பலவற்றை முழுமையாகவோ தேவையான மாற்றங்களுடனோ ஏற்றுக்கொண்டது. இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட முக்கியமான பரிந்துரைகளில் ஒன்று பல்கலைக் கழக மானியக் குழுவினைப் பற்றியதாகும். இதுபற்றி அடுத்து ஆராயலாம்:

## மதிப்பீடு

இராதாகிருஷ்ணன் கல்விக்குழுவின் அறிக்கை மிகச் சிறந்த ஒன்றாகும். நாட்டின் இன்றைய வளர்ச்சித் தேவைகளைக்கருத்தில் கொண்டு அது தனது பரித்துரைகளைத் தந்துள்ளது. மேற்கத்திய இந்தியப் பண்பாடுகளின் சிறந்த கூறுகளை இசைந்த முறையில் இணைக்க முயன்றுள்ளது. உயர்கல்வித் துறையில் காணப்பட்ட குறைபாடுகளை நன்கு ஆராய்ந்து இவற்றினைக் களைய பயனுள்ள வழிகளையும் குறிப்பிட்டுள்ளது. கிராமப் பல்கலைக்கழகங்களைப் பற்றிய பரிந்துரை வரவேற்கத்தக்கதாகும். இன்று நம் நாட்டின் உயர்கல்வி வளர்ச்சியில் இவ்வறிக்கைக்குப் பெரும் பங்கு உண்டு என்பது தெளிவு. இதேபோது பயிற்றுமொழி பற்றிய இதன் கருத்துகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை; இவை ஓரளவு குழப்பமானவையாகும். பெண்கல்வி பற்றிய இதன் கருத்து களும் போதியனவாகவில்லை; தேர்வுமுறை, சமயக் கல்விபற்றிய பரிந்துரைகளும் சிறிது குழப்பமானவையாகவே தோன்றுகின்றன; நுண்கலைகளின் முக்கிய பங்கு ஓரளவு இவ்வறிக்கையில் புறக்கணிக் கப்பட்டுள்ளது. எனினும் உலகின் சிறந்த நாடுகளின் பல்கலைக் கழகக் கல்விக்கு ஈடாக நமது பல்கலைக் கழகங்களின் தரத்தை உயர்த்த முற்பட்ட சிறப்பு இக்கல்வி அறிக்கைக்குக் கட்டாயம் உண்டு.

**பல்கலைக் கழக மானியக் குழு**

இராதாகிருஷ்ணன் கல்விக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, பல்கலைக் கழக மானியக் குழு (university grants commission) ஒன்று 1953-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நியமிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களுக்கு மானியத்தை பகிர்ந்தளிக்கவும், பல்கலைக் கழகங்களின் பணிகளை இணைக்கவும் உயர் கல்வியின் தரத்தைக் காக்கவும் இது அமைக்கப்பட்டது. இக்குழுவின் அதிகாரங்களும் பொறுப்புகளும் 1954-ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டன. 1956-ஆம் ஆண்டில் நாடாளுமன்றம் இவ்வமைப்பைச் சட்டப்படி அங்கீகரித்தது. அதிலிருந்து இக்குழுவில் தலைவருடன் எட்டு உறுப்பினர்கள் உள்ளனர். பல்கலைக் கழக மானியக் குழுவின் பணிகள் பின்வருவனவாம்: பல்கலைக் கழகங்களின் நிதித் தேவைகளை ஆராய்ந்து மானியத்தை இவற்றிடையே பகிர்ந்தளித்தல், பல்கலைக் கழகங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவி அளித்தல், பல்கலைக் கழகங்களின் குறிப்பிட்ட சில சிறப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி செய்தல், பல்கலைக் கழகக் கல்வித் தரத்தினை உயர்த்தப் பல்கலைக் கழகங்களுக்கு வழிவகைகளைக் குறிப்பிடுதல், புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிவுரை கூறுதல், பல்கலைக் கழகங்கள் பற்றிய பல்வேறு விவரங்களைத் திரட்டுதல், மற்றும் உயர் கல்வி வளர்ச்சியோடு தொடர்புடைய பிரச்சினைகள் இக்குழுவின் கவனத்திற்கு விடப்பட்டால் அவை பற்றி ஆராய்தல் ஆகியன இவையாகும். மையப் பல்கலைக் கழகங்களுக்கு மானியக் குழு நிருவாகச் செலவினையும் பிற பல்கலைக் கழகங்களுக்கு இது வளர்ச்சிக்கான செலவினையும் அளிக்கிறது. பல்கலைக் கழகங்கள் தயாரித்தனுப்பும் ஐந்தாண்டுகளுக்கான வளர்ச்சித் திட்டங்களை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் வளர்ச்சிக்கான நிதியினை மானியக் குழு ஒதுக்கீடு செய்கிறது. இத் திட்டங்களில் அடங்கிய பல்வேறு பகுதிகளை முன்னுரிமையின் அடிப்படையில் ஆராய்கிறது. சில செலவினங்களுக்கு முழு உதவியும், சிலவற்றுக்கு மாநில அரசு அளிக்கும் தொகைக்கு ஏற்ற வகையிலும் மானியம் வழங்கப்படுகிறது. சிறந்த இளைஞர்களை கல்லூரிகளில் ஆசிரியப் பணி புரிவதில் ஊக்குவிக்கப் புதிய ஊதிய விகிதங்களைக் குறிப்பிடுவதுடன், அதிகப்படியாகும் ஊதியச் செலவில் பெரும் பகுதியை ஒரு சில காலத்துக்குத்தான் அளித்து வருவதாகவும் மானியக்குழு குறிப்பிட்டு, இதன்படி செயலாற்றியுள்ளது. மாணவரில்லங்கள், ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் போன்றவற்றைக் கட்டுவதற்கும் நூலகம், ஆய்வகம் ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்கும் பல்கலைக் கழக மானியக் குழு நிதி உதவி செய்கிறது. உயர் கல்வித் துறையில் ஆராய்ச்சி, கல்லூரி மாணாக்கரிடையே காணப்படும் ஒழுங்குப் பிரச்சினை போன்ற பலவற்றில்

இது கவனம் செலுத்தி வருகிறது. தற்போது தேர்வு முறையினைச் சீர்த்திருத்துதலில் கவனம் செலுத்தி, அகமதிப்பீடு (internal assessment), வினா வங்கிகள் (question banks), விடைகளை மதிப்பிடுதல் (grading) போன்றவற்றைப் பற்றிப் பல கருத்துகளை வெளியிட்டுள்ளது. சமீப காலத்தில் உயர் கல்வித்தரத்தை உயர்த்த, தனித்தியங்கும் கல்லூரிகள் (autonomous colleges) பற்றிய கருத்துகளையும் இது வெளியிட்டது.

## வினாக்கள்

1. பல்கலைக் கழகக் கல்வி ஆய்வுக் குழுவின் கருத்துப்படி, பல்கலைக் கழகக் கல்வியின் நோக்கங்கள் யாவை?

2. உயர் கல்வித்தரங்கள் தொடர்ந்து குறைந்துகொண்டு வருகின்றன என்பதனை நீவிர் ஏற்கின்றீரா? அவ்வாறாயின் தரம் குறைதலை எவ்வாறு தடுக்கவியலும்?

3. 'உயர் கல்வியின் சீர்கேட்டிற்கு முக்கிய காரணம் தேர்வு முறையாகும்' என்னும் கூற்றினை ஆராய்க. தேர்வுமுறை சீர்த்திருத்தம் பற்றி பல்கலைக் கழகக் கல்வி ஆய்வுக் குழுவின் முக்கிய பரிந்துரைகள் யாவை?

4. ஆசிரியர்களது நிலை, கற்பித்தல் தரம் ஆகியவற்றின் உயர்வுக்கு இராதாகிருஷ்ணன் குழு குறிப்பிட்டுள்ள கருத்துகளைக் குறிப்பிடுக.

5. பயிற்று மொழி, சமயக் கல்வி ஆகியன பற்றிய பல்கலைக் கழகக் கல்விக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து மதிப்பிடுக.

6. மாணாக்கர்கள் நல வளர்ச்சிக்கு பல்கலைக் கழகக் கல்வி ஆய்வுக் குழு என்னென்ன பரிந்துரைகளைத் தந்துள்ளது?

7. சிறு குறிப்பு வரைக,
பல்கலைக் கழக மானியக் குழு.

# 15. உயர்நிலைப் பள்ளிக் (செகண்டரி) கல்விக் குழுவின் அறிக்கை

## கல்விக் குழு அமைப்பு

ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியினை வளர்த்ததன் முக்கிய காரணம் அவர்களது நிருவாகத்திற்கு உதவக்கூடிய அலுவலர்கள், எழுத்தர்கள் ஆகியோரை உருவாக்குதல் என்பதாகும். இக்குறுகிய தவறான நோக்கம் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி அமைப்பில் வெகு நாட்களுக்குக் காணப்பட்டது. சுதந்தரம் பெற்ற பின்னரும் சிறிதுகாலம் இக்கல்வி நிலையின் நோக்கம் தெளிவானதாக அமையவில்லை. உயர் கல்வியின் நுழைவாயிலாக இது தவறாகக் கருதப்பட்டு வந்தது. இக்காலத்தில் உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கான கல்வி ஏற்பாடும் பாடத் திட்டங்களும் பயனுள்ளவையாகவும், மாறியும் வளர்ந்தும் வரும் சுதந்தர இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்றவாறும் அமைந்திருக்கவில்லை; இதே சமயம் குழந்தைகளது இயல்புகளுக்கு ஏற்பவும் இவை காணப்படவில்லை. இந்நிலை உயர்நிலைப் பள்ளிகளில் ஒழுங்குப் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்தது. இவ் ஒழுங்குப் பிரச்சினை தீவிரமடைவதில் அரசியல் காரணிகள், தேர்வு முறையின் குறைபாடுகள், ஆசிரியர்கள் பொறுப்புணர்ச்சியும் திறமையும் குன்றிக் காணப்படுதல், பெற்றோர்கள் தங்களது கடமைகளைப் புறக்கணித்தல் போன்ற பலவும் உதவின. கல்வித்தரம் குறைவது மிகத் தெளிவாகப் புலப்பட்டது. உயர்நிலைப்பள்ளி நிருவாகமும், முக்கியமாக சில தனியார் பள்ளி நிருவாகமும் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்து, சூழ்நிலையைக் குலைத்து, கல்வித்தரம் குறைதலுக்குதவின. உயர்நிலைப் பள்ளிக் கல்வி எனப்படும் செகண்டரி கல்வியின் (secondary education) இத்தகைய நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து இவற்றை நீக்கி, இக்கல்வி அமைப்பினைச் சீர்திருத்துவதற்கான தேவை எல்லோராலும் உணரப்பட்டது. 1948-ஆம் ஆண்டிலேயே மத்திய கல்வி அறிவுரை வாரியம் செகண்டரி கல்வி முறையினை ஆராய்ந்து அதனைச் சீரமைக்க ஒரு கல்வி ஆய்வுக் குழுவினை நியமிக்கவேண்டும் என்று தீர்மானித்தது. இத் தீர்மா

னத்தை 1951-ஆம் ஆண்டில் அவ்வாரியம் மீண்டும் வலியுறுத்திற்று. இந்திய அரசும் இத் தேவையை யுணர்ந்து 1952-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் நாள் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை ஆராய, செகண்டரி கல்வி ஆய்வுக் குழுவினை (secondary education commission) நியமித்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் அன்றைய துணை வேந்தராகவிருந்த டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். இதனால் இது 'முதலியார் கல்வி ஆய்வுக்குழு' எனவும் குறிப்பிடப்படுகிறது. நாடு முழுவதும் பயணம் செய்து பல்வேறு இடங்களில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி செயற்படுவதை ஆராய்ந்து, 1953-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 29-ம் நாள் இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ள பரிந்துரைகளை மத்திய கல்வி அறிவுரை வாரியம் ஆராய்ந்தபின் இந்திய அரசு இவற்றை ஏற்றுக்கொண்டது.

### ஆய்வுக்கு விடப்பட்ட பிரச்சினைகள்

முதலியார் கல்விக் குழுவின் ஆய்வுக்கு விடப்பட்ட முக்கிய பிரச்சினைகள் பின்வருவனவாகும் :

(i) இந்தியாவில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் எல்லாக் கூறுகளையும் ஆராய்ந்து, அதன் அப்போதைய நிலைமையை விவரித்தல் ;

(ii) அதன் நோக்கங்கள் அமைப்பு பாடங்கள், தொடக்கப் பள்ளிக் கல்வி, ஆதாரக் கல்வி, உயர் கல்வி ஆகியவற்றுடன் அதன் தொடர்பு போன்ற யாவற்றையும் கருத்தில் கொண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியினைச் சீர்த்திருத்துவதற்கும் அதன் தரத்தினை உயர்த்துவதற்கும் வழிவகைகளைக் குறிப்பிடுதல் ;

(iii) பல்வேறு வகையான உயர்நிலைப் பள்ளிகளிடையே காணப்படும் தொடர்பு பற்றி ஆராய்தல் ;

(iv) மற்றும், இப் பிரச்சினைகளுடன் இணைந்தவற்றையும் ஆராய்ந்து நமது நாட்டின் தேவைகளுக்கும் வசதிக்கும் ஏற்றதும் நாடு முழுவதற்கும் ஓரளவு ஒரே முறையில் அமையக்கூடியதுமான உயர்நிலைப் பள்ளிக் கல்வி அமைப்பினை உருவாக்குதல்.

### உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் குறைபாடுகள்

முதலியார் கல்விக்குழு அன்று காணப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளின் குறைபாடுகளை மிகத் தெளிவாகத் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியானது வாழ்க்

கையுடன் தொடர்பற்றிருந்தது. புத்தகத்தை நெட்டுரு செய்யத் தூண்டும் வெறும் ஏட்டுக் கல்வியாக விருந்தது. குறுகிய நோக்க முடையதாகக் காணப்பட்டதன் விளைவாக, மாணுக்கர்களது ஆளுமையின் இசைந்த முழுமையான வளர்ச்சிக்கு அது உதவவில்லை. ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்ததன் விளைவாக அதில் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அதிக அளவில் காணப்பட்டது. சமூகப் பயனும் நடைமுறைப் பயனும் மிக்க பல பாடங்கள் இதனுல் அக்கல்வி அமைப்பில் இடம் பெற இயலாமற் போயிற்று. கற்பித்தல் முறைகள் கவர்ச்சியும் சுவையும் அற்றவையாக இருந்தன. கற்றலில் தன்னம்பிக்கை எழ இவை மாணுக்கருக்கு உதவுவதாகவில்லை. நெட்டுருச் செய்தல் சிந்தனைத் திறனையும் கற்பனையாற்றலையும் வளரவொட்டாமல் தடுத்தது. இதற்கு முக்கியமாக தேர்வு முறை (examination system) காரணமாகும். மாணுக்கர் எண்ணிக்கை மிகுந்து காணப்பட்டதால் ஆசிரிய மாணுக்கரிடையே நேர்முகத் தொடர்புகள் எழ வாய்ப்பில்லை. இதனுல் மாணுக்கர்களது ஒழுக்க—மனப்பான்மை வளர்ச்சிகளில் ஆசிரியர் செல்வாக்குப் பெற இயலவில்லை. இது ஒழுங்கீனத்தினைத் (indiscipline) தோற்றுவிக்கத் துணை செய்தது. ஆசிரியர்களது நிலையும் சிறப்பாக அமைந்திருக்கவில்லை. சிறந்த ஆசிரியர்களது திறமை வெளிப்படுவதற்கும் கல்வி அமைப்பு இடமளிப்பதாக இல்லை. ஆசிரியத் தொழிலில் ஆர்வமும் நாட்டமும் கொண்டவர் களின் எண்ணிக்கையும் குறைந்து காணப்பட்டது. மற்றும், செகண்டரி நிலையுடன் படிப்பை முடித்தோர்க்கு வேலைவாய்ப்பு களுக்கேற்ற பயிற்சியின்மையால் வேலை கிடைப்பது மிக அரிதாக விருந்தது. இத்தகைய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய பின்னர் செகண்டரி கல்வி நிலையின் சீரமைப்புக்கான பல பரிந்துரைகளை டாக்டர் ஏ. எல். முதலியார் கல்விக்குழு தெரிவித்தது.

**கல்வி அமைப்பு**

உயர்நிலைக் கல்வியின் அமைப்பு (organisational pattern) எவ்வாறு இருக்கவேண்டுமென்பது பற்றிய இக்குழுவின் கருத் துகள் பின்வருவனவாம். நமது குடியாட்சி சமுதாயத்தில் மக்கள் ஆக்கத்திறனுள்ள சிறந்த குடிமக்களாக வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் அறிவையும் ஒழுக்கத்தையும் பெற்றவர்களாகவும், நாட்டின் தொழில் வளம் வாழ்க்கை நிலை ஆகியவற்றின் வளர்ச் சிக்கும் உயர்வுக்கும் பாடுபடக்கூடிய செயல் திறனும் தலைமைப் பண்பும் உள்ளவர்களாகவும், நமது பண்பாட்டுக்கு ஏற்றவகையில் சிறப்பான ஆளுமை வளர்ச்சி பெற உதவும் இலக்கியம் கலைகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டவர்களாகவும் வளர, நமது மாணுக்கர்களுக்குப் பயிற்சியளிப்பது இன்றைய கல்வியின் அடிப்

படை நோக்கமாக அமையவேண்டும் என்பதனை முதலியார் குழுவின் அறிக்கை தெளிவுபடுத்தியது. இதற்கான கல்வி அமைப்பு நான்கு அல்லது ஐந்து ஆண்டு தொடக்கக் கல்விக்குப் பிறகு உயர் நிலைப் பள்ளிக் கல்விக்காலம் ஏழு ஆண்டுகளாக விருத்தல் வேண்டும். இவ்வேழு ஆண்டுகளில் முதல் மூன்று ஆண்டுகள் நடுநிலை அல்லது முதுநிலை ஆதாரக் கல்விநிலை அல்லது ஜூனியர் உயர்நிலைப்பள்ளி எனப்படும். அடுத்த நான்கு ஆண்டுகள் ஹையர் செகண்டரி நிலை (higher secondary) எனப் படும் உயர் செகண்டரி வகுப்புக்களைக் கொண்டிருக்கும். இண்டர் மீடியட் வகுப்பு நீக்கப்படும். அதன் ஓராண்டு உயர்நிலைப் பள்ளி நிலையில் சேர்க்கப்பட்டு தற்போதுள்ள மூன்றாண்டுகள் நான்காண்டு களாகும்; இண்டர்மீடியட் வகுப்பின் மற்றோர் ஆண்டு பட்டப் படிப்புக்கான தற்போதைய இரண்டாண்டுகளுடன் சேர்க்கப்பட்டு அதன் காலம் மூன்று ஆண்டுகளாக நீடிக்கப்படும். தற்போ துள்ள முறைப்படி உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்து வெளி வருவோர்க்கு ஓராண்டு புகுமுக வகுப்பு (pre-university) இருக்கும். இதனை முடித்தபின் அவர்கள் பட்டப் படிப்பில் சேரலாம். ஹையர் செகண்டரி பள்ளிக் கல்வியையோ அல்லது புகுமுக வகுப்பையோ முடித்தவர்கள் நேரடியாக உயர் தொழிற் கல்லூரிகளில் (professi-onal colleges) சேர்த்துக்கொள்ளப்படுவர். மற்றும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் பல்நோக்குப் பள்ளிகளும் (multi purpose schools) இவற்றில் பல்துறைப் பாடங்களுக்கான (diversified courses) வாய்ப்புகளும் இருக்கும். இவை குமரப்பருவ மாணாக் கர்களது பலவகைப்பட்ட நோக்கங்கள், ஆற்றல்கள், நாட்டங்கள் ஆகியவற்றுக்கேற்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பயில அவர் களுக்கு உதவும். பல்துறைப் பாடங்களில் தேர்ச்சி பெற்ற உயர் நிலைப்பள்ளி மாணாக்கர் மேலும் சிறப்புப் பயிற்சிபெற, பல்தொழிற் பள்ளிகளிலும் (polytechnics) தொழில் நுட்ப நிறுவனங்களிலும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். கிராமப் பள்ளிகளில் தோட்டக் கலை, குடிசைத் தொழில்கள், விலங்கு வளர்ப்பு போன்றவற்றிற்கும் முக்கியமாக விவசாயத்திற்கும் நடுவிடம் அளிக்கவேண்டும்.

தொழில் நுட்பப் பள்ளிகள் பல உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். இவை தனிப்பட்டவையாகவோ பல்நோக்குப் பள்ளி களின் பகுதியாகவோ இயங்கலாம். பெரிய நகரங்களில் பல பல்நோக்குப் பள்ளிகளுக்கு உதவக்கூடிய மையத் தொழில் நுட்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படலாம். தொழில் நுட்பப் பள்ளிகள் இயன்றவரையில் தொழிற் பகுதிகளில் நிறுவப்பட்டு, பல்வேறு தொழில்களுடன் இணைந்து செயற்படவேண்டும். தொழில்நுட்பக் கல்வியில் மாணாக்கர்களுக்கான தொழிற்

பயிற்சியினை (apprentice ship) அளிப்பது தொழிற்கூடங்களின் கடமையாக ஆக்கப்படவேண்டும். தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு திட்டமிடுதலில் தொழில் துறையினரும் வணிக வல்லுநர்களும் உதவுதலும் ஒத்துழைத்தலும் அவசியமாகும். பாடத்திட்டம் தயாரித்தலிலும் இவரது ஒத்துழைப்புத் தேவைப் படும். சிறிய அளவில் தொழிற்கல்வித் தீர்வை (industrial education cess) ஒன்று விதித்து இதனின்றும்வரும் நிதியை தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதை முதலியார் குழு ஆதரித்தது.

பொதுப்பள்ளிகள் (public school) தாம் அளித்துவரும் மேற்கத்திய முறைக்கல்விக்குப் பதில் தேசிய முறைப்பட்ட பொதுக் கல்வியினை அளிக்க வேண்டுமென்றும், மைய மாநில அரசுகள் திறமைமிகுந்த மாணுக்கர்களுக்கு படிப்புதவிப் பணம் அளிக்க வேண்டுமென்றும், ஊனமுற்ற (handicapped) அல்லது உடல் - ஊனக் குறைபாடுகளுள்ள குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட தனிப் பள்ளிகள் எற்படுத்தப்பட வேண்டுமென்றும், ஆசிரிய - மாணுக்கர் தொடர்பினை வலுப்படுத்தும் பொருட்டு தங்கிப் பயிலும் (residential) பள்ளிகளை நிறுவப்பட வேண்டுமென்றும், பெண்கள் பள்ளிகள் அதிக எண்ணிக்கையில் தொடங்கப்பட வேண்டுமென்றும் தேவைப்பட்டால் கூட்டுக்கல்வி வசதிகளும் (co educational facilities) அதிகரிக்கப்படலாம் என்றும், முதலியார் கல்விக் குழு குறிப்பிட்டுள்ளது.

மாணுக்கர் கற்கவேண்டிய மொழிகள் பற்றியும் பயிற்று மொழிப் பிரச்சினை பற்றியும் இக்கல்விக்குழு ஆராய்ந்தது. உயர் நிலைக் கல்வி நிலையில் தாய்மொழியோ பிராந்திய மொழியோ பயிற்று மொழியாகவிருக்கும். சிறுபான்மை மொழியினருக்கு அவர்களது மொழியிலே உயர்நிலைப்பள்ளிக் கல்வி பெறவும் வசதிகள் செய்துத் தரப்படவேண்டும். கற்பிக்கப்படவேண்டிய மொழிகளைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், நடுநிலைப்பள்ளி களில் (middle schools) ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தது இருமொழிகள் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், இளநிலை ஆதாரக் கல்வியின் (junior basic stage) இறுதியில் ஆங்கிலம் இந்தி ஆகிய மொழிகளைக் கற்பித்தல் தொடங்கப்பெற வேண்டுமென்றும், ஆனால் எந்த ஓர் ஆண்டிலும் ஒரே சமயத்தில் இவ்விருமொழிகள் கற்பிக்கப்படுவது தொடங்கப்படக் கூடாதென்றும் முதலியார் கல்விக்குழு குறிப்பிட்டது. முதுநிலை (senior) அல்லது உயர் ஹையர் செகண்டரி கட்டத்தில் தாய்மொழி அல்லது வட்டார மொழி உள்ளிட்ட இருமொழிகளை மாணுக்கர் கற்கவேண்டும்.

**கல்வி ஏற்பாடு பற்றிய பரிந்துரைகள்**

உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கான கல்வி ஏற்பாடு (curriculum) பற்றிய செகண்டரி கல்வி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் இப் பிரச்சினையின் உண்மை நிலையினைக் கருத்தில் கொண்டு தெரிவிக்கப்பட்டவை. நடுநிலைப்பள்ளிக் கல்விக் கட்டத்தில் மொழிகள், சமூகப்பாடம், பொது அறிவியல், கணக்கு, கலையும் இசையும், கைப்பணி, உடற்கல்வி ஆகியன கல்வி ஏற்பாட்டில் இடம்பெற வேண்டும். உயர்நிலைப்பள்ளி அல்லது ஹையர் செகண்டரி கட்டத்தில் பல்துறைப் பாடங்களுக்கான (diversified courses) வாய்ப்புகள் மாணுக்கர்களுக்குத் தரப்படவேண்டும். இவற்றுள் எந்த ஒரு பிரிவை மாணுக்கர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் இப் பிரிவுகள் யாவற்றுக்கும் பொதுவாகச் சில மையப் பாடங்கள் (core subjects) இருக்கும். மொழிகள், பொது அறிவியல், சமூகப்பாடம், கைப்பணி ஆகியன இவையாகும். பல்துறைப் பாடங்களுள் மனிதவியற் பாடங்கள், அறிவியல் பாடங்கள், தொழில்நுட்பப் பாடங்கள், வணிகவியற் பாடங்கள், வேளாண்மைப் பாடங்கள், நுண்கலைப் பாடங்கள், மனையியல் ஆகியன இடம்பெறும். தேவைப்பட்டால் மேலும் சில வகைப் பாடங்கள் இப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படலாம். பல்துறைப் பாடங்கள் உயர்நிலைப்பள்ளி அல்லது ஹையர் செகண்டரி பள்ளியின் இரண்டாம் ஆண்டில் தொடங்கப்பெறவேண்டும். செகண்டரி கல்விக்குழுவின் கல்வி ஏற்பாடு பற்றிய இப் பரிந்துரைகள் இந்நிலைக்கான கல்வி வெறும் ஏட்டுப் படிப்பாகவும் புத்தகங்களை நெட்டுருச் செய்வதாகவும் முன்பு காணப்பட்டது போன்று அமையாமல் வாழ்க்கையுடன் தொடர்பும் வாழ்க்கைப் பயனும் உள்ளதாக அதை மாற்றும் நோக்கத்துடன் செய்யப் பட்டவையாகும்.

**பாட நூல்கள்**

இதேபோது கல்விமுறையில் தரமான பாட நூல்களின் (text books) பங்குபற்றியும் செகண்டரி கல்விக்குழு குறிப்பிட்டது. பாட நூல்களின் தரத்தை உயர்த்தப் பல கருத்துகளை இது வெளியிட்டது. உயர்மட்டக் குழு ஒன்று பாட நூல்கள் சிறந்த முறையில் வெளியிடப்படுவதற்கான மேற்பார்வைப் பொறுப்பினை ஏற்க அமைக்கப்படவேண்டும். இத்தகைய பாடநூற் குழுவில் (text book committee) உயர்நீதிமன்ற நடுவர் ஒருவர், அரசுப் பணித் தேர்வுக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அவ் வட்டாரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், ஒரு தலைமையாசிரியர் அல்லது தலைமையாசிரியை, இரு கல்வி வல்லுநர்கள், பொதுக் கல்வி

இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாகவிருப்பர். இப் பாட நூற் குழு சுதந்தரமாகச் செயற்படவேண்டும். பாட நூல்களின் தரம், அச்சு, கட்டமைப்பு போன்ற பலவற்றை உயர்த்த இக் குழு அறிவுரை தரும். ஒரு பாடத்திற்கு ஒரு பாடநூலைக் குறிப்பிடுவதற்குப் பதிலாகப் பல பாடநூல்கள் குறிப்பிடப்படுவது விரும்பத்தக்கதாகும். பாடநூல்கள் அடிக்கடி மாற்றப்படுவது தவிர்க்கப் படல்வேண்டும்.

## கற்பித்தல் முறைகள்

கற்பித்தல் முறைகள் முழு அளவில் மாற்றியமைக்கப்படுதலின் அவசியத்தை செகண்டரி கல்விக்குழு வலியுறுத்தியது. கற்பித்தல் முறைகள் ஆர்வத்தினையும் கவர்ச்சியினையும் தோற்றுவிக்கக்கூடிய, செயல்களின் அடிப்படையில் அமைந்த, இயங்கும் தன்மை பெற்ற முறைகளாக (dynamic methods of teaching) இருத்தல்வேண்டும். வெறும் பொருளறிவை மாணுக்கர்களுக்குப் புகட்டுதல் மட்டும் கற்பித்தல் முறைகளின் நோக்கமாக அமைதல்கூடாது; விரும்பத்தக்க வாழ்க்கை மதிப்புகள், நேர்மையான மனப்பான்மைகள், நற்பழக்கங்கள், வேலையில் ஆர்வம் போன்றவற்றினையும் மாணுக்கர்களிடையே தோற்றுவிப்பனவாக இவை அமைதல்வேண்டும். பொருளுணராமல் சொற்களை நெட்டுருச் செய்தல் என்ற நிலை மாற்றப்பட்டு, கற்பித்தல் எனப்படுவது உண்மை நிலைமைகள், நோக்கங்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணப்படவேண்டும். செயல் முறைகள் (activity methods), செயல் திட்டமுறை (project method) போன்றன கற்பித்தல் முறைகளில் சிறப்பிடம் பெறவேண்டும். பேசுவது, எழுதுவது ஆகிய செயல்களில் தெளிந்த சிந்தனையும் தெளிவான கருத்து வெளியீடும் மாணுக்கர்களிடையே எழுவதற்கு இத்தகைய கற்பித்தல் முறைகள் உதவும்; எல்லாப் பாடங்களிலும் பல்வகையான வெளியீட்டுச் செயல்கள் (expression work) இடம் பெறவேண்டும். தாங்களே படித்து, தங்களது சொந்த ஆர்வம், முயற்சி ஆகியவற்றின் மூலம் பலவற்றைக் கற்பதற்கு மாணுக்கர்களுக்குத் துணை செய்வதாகக் கற்பித்தல் திட்டமிடப்படவேண்டும். இதற்கேற்ப, மாணுக்கர்களிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகளைக் (individual differences) கருத்தில் கொண்டு ஆசிரியர் செயற்படவேண்டும். தங்களது திறமைக்கு ஏற்ற வகையில் கல்வியில் முன்னேற மாணுக்கர் யாவருக்கும் வாய்ப்பளிப்பதாகக் கற்பித்தல் முறைகள் அமைய வேண்டும். குழுச் செயல்கள் (group work) வழியே மாணுக்கர்களிடையே குழு உணர்வும் ஒத்துழைப்பு மனப்பான்மையும் வளரச் செய்தலும் அவசியமாகும். மாணுக்கர்களது இலக்கிய, பண்பாட்டு ரசனையை வளர்த்தலில் பள்ளி நூலகம், வகுப்பு நூலகம், பாட

நூலகம் ஆகியவற்றிற்கு முக்கிய பங்கு உண்டென்றும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பயிற்சிபெற்ற நூலகர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், பொது நூலகங்கள் ஊரில் அமைந்திராவிடின், பொது மக்களுக்கும் பள்ளி நூலகம் பயன்படவேண்டுமென்றும், இக்கல்விக் குழு குறிப்பிட்டது. மற்றும், புதிய இயங்குமுறைக் கற்பித்தலைப் பரவலாக்க உதவ, பெருமளவு சுதந்தரமாகச் செயற்படும் சோதனை அல்லது முன்மாதிரிப் பள்ளிகள் (experimental or demonstration schools) சில ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இது கூறியது.

### தேர்வு முறை

தேர்வுமுறை, மதிப்பீட்டு முறைகள் ஆகியன கல்வியில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மாணாக்கர்களது அடைவு நிலை (level of achievement) என்ன, அவர்களது முன்னேற்றம் எவ்வாறு காணப்படுகிறது என்பதுபற்றி அவர்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவ்வப்போது தெரிந்துகொள்ளவேண்டும். தற்போதைய தேர்வு முறையினைச் சீர்திருத்துவது மிகவும் முக்கியமானதாகும். உயர்நிலைக் கல்வியில் புறத்தேர்வுகளின் (external examinations) எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்படவேண்டும். வினாக்களின் அமைப்பை மாற்றுவதன் மூலமும் புறவய (objective) புதுமுறை வினாக்கள் புகுத்தப்படுவதன் மூலமும் கட்டுரை வினாக்களின் அகவயத்தன்மை (subjectivity) குறைக்கப்படவேண்டும். மாணாக்கனது முன்னேற்றம் பற்றிய அறிக்கை பள்ளியில் நல்ல முறையில் தொகுத்து வைக்கத் 'திரள் பதிவுகள்' (cumulative records) இருத்தல்வேண்டும். பள்ளியின் ஆண்டு இறுதித் தேர்வில் பள்ளியாண்டில் வகுப்பில் நடத்தப்பட்டப் பல்வேறு தேர்வு முடிவுகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். மதிப்பெண்களைத் தருவதைக் காட்டிலும் தரச்சின்னங்கள் அல்லது தரக்குறியீடுகளைப் (grades) பயன்படுத்தலாம். உயர்நிலைப்பள்ளிக் கல்விக் கட்டத்தின் இறுதியில் ஒரு பொதுத்தேர்வு மட்டுமே இருக்கவேண்டும். தனித் தனிப் பாடங்களுக்கான தேர்வுகளைவிட ஒருசில பாடங்களின் தொகுப்புகளுக்கு ஒரு தேர்வு என வைப்பது செகண்டரி கல்வி நிலையில் தேக்கம், கழிவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உதவும் எனவும் இக் குழு அபிப்பிராயப்பட்டது.

### உடற்கல்வி

மாணாக்கர்களது உடல் நலத்தில் பள்ளிகள் பெருங்கவனம் செலுத்த வேண்டுமென்று செகண்டரி கல்விக் குழு வலியுறுத்தியது. மருத்துவ சோதனைகள், பின்னர் தொடர் வேலைகள் (follow up) ஆகியவற்றின் வழியே மாணாக்கர்களது உடல் நலம்

காக்கப்படவேண்டும். ஆசிரியர்கள் உடல் நலக் கல்வி, முதலுதவிப் பயிற்சி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படவேண்டும். உடற்கல்வி அளிப்பதிலும் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். 40 வயதுக்குக் குறைந்த ஆசிரியர்கள் தாங்களே பள்ளியின் பல்வேறு உடற்கல்வி விளையாட்டுச் செயல்களில் பங்கு பெறுதல்வேண்டும். மாணுக்கர்கள் யாவரும் இத்தகைய செயல்களில் பங்குகொள்ள ஊக்குவிக்கப்படுவதுடன் அவர்களது பங்கு, முன்னேற்றம் ஆகியவை பற்றிய விவரமான குறிப்புகள் தொகுத்து வைக்கப்படுவதும் தேவை. பள்ளிகளில் உடற்கல்விக்கான வாய்ப்புகள் நன்கு அமைக்கப்படுவதுடன் பள்ளி, மாணவரில்லம் ஆகியவற்றின் சுற்றுப்புறம் துப்புரவாகவும் அழகாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்வதும் இன்றியமையாதது.

### ஒழுக்கக் கல்வி

ஒழுக்கமும் (character) கட்டுப்பாடும் கற்றோரது இன்றியமையாப் பண்புகளாகும். இவற்றின் வளர்ச்சிக்கு உதவாத கல்விமுறை, பிற சிறப்புகளைப் பெற்றிருப்பினும், குறைபாடுடையதாகும். பள்ளி மாணுக்கர்களிடையே கட்டுப்பாடின்மை அதிகரிக்குமாஞல் எத்தகைய கல்விச் சீர்த்திருத்தமும் பயனற்றுப்போகும். எனவே ஒழுக்கக்கல்வி கல்வித்திட்டத்தில் பெருமளவு வலியுறுத்தப் படவேண்டும்; இதற்கான பொறுப்பினை எல்லா ஆசிரியர்களும் ஏற்கவேண்டும். ஆசிரியர்கள், மாணுக்கர்கள் ஆகியோரிடையே நெருக்கமான நேர்முகத் தொடர்பு ஒழுக்க வளர்ச்சிக்கு இன்றியமையாதது. எல்லாப் பள்ளிகளிலும் மாணுக்கர் தன்னுட்சி முறையைச் (pupil self government) செயற்படுத்துவது ஒழுங்கு, கட்டுப்பாடு, விதிகளை மதித்துச் செயற்படுதல் ஆகியவற்றை வளர்த்தலில் உதவும். விளையாட்டுச் செயல்களும் போட்டிகளும் குழுச் செயல்களும் இதற்கு உதவும். பாட இணைச் செயல்களுக்கும் (extra curricular activities or co-curricular activities) இதில் பங்கு உண்டு. இச் செயல்கள் கல்வியின் ஒரு பகுதியாகும். இவற்றில் ஆசிரியர்கள் யாவரும் பங்குபெறுதல் வேண்டும். சாரணரியக்கம், தேசிய மாணவர் படை, செஞ்சிலுவைச் சங்கம் போன்றனவும் பள்ளிகளில் இடம்பெறவேண்டும். மாணுக்கர்கள் விருப்பத்தின் அடிப்படையிலேதான் சமய போதனை பள்ளிகளில் நடைபெற வேண்டும்; இப் போதனையும் பள்ளி வேலைக்காலத்துக்குப் பின்னர் நடைபெறவேண்டும். குறிப்பிட்ட சமயத்தினைச் சார்ந்த மாணுக்கர்களுக்கு அவர்களது பெற்றோர், பள்ளி நிருவாகிகள், ஆகியோரது அனுமதியுடன் அச் சமயம் பற்றிய கல்வி அளிக்கப் படலாம். பள்ளி மாணுக்கர்களிடையே கட்டுப்பாடின்மைக்கு அரசியல்வாதிகளது சுயநலத்தின் அடிப்படையில் எழும் தலையீடு

ஒரு முக்கிய காரணமாகும் என்பதனை உணர்ந்த இக் கல்விக் குழு, 17 வயதுக்குக் குறைந்த மாணுக்கர்களை அரசியல் நலன்களுக்கும் செயல்களுக்கும் ஈடுபடுத்துவது குற்றமாகும் எனச் சட்டம் இயற்றப்படுவதை விரும்பியது.

## வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும்

மாணுக்கர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைக் கருத்தில்கொண்டு தங்களது எதிர்காலத்தைத் திட்டமிட வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும் (guidance and counselling) அவர்களுக்குத் தேவைப்படுவதாகும். ஆனல், இவற்றிற்கான வசதி நமது பள்ளிகளில் இல்லையென்னும் அளவுக்குக் குறைந்து காணப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும். பல்வேறு தொழில்கள், வேலைகள் போன்றவற்றின் தன்மை, பரப்பு இவற்றுக்கான பண்புகள், தேவைப்படும் பயிற்சி போன்றவற்றைப்பற்றி உயர்நிலைப் பள்ளி மாணுக்கர்களுக்குத் திரைப்படங்கள், விளக்கவுரைகள், சிறு நூல்கள், சென்று பார்த்தல் போன்றன வழியே அறிவு அளிக்கப் படவேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற வழிகாட்டும் அலுவலர்களும் (guidance officers) தொழில் தேர்வுக்கு அறிவுரை கூறும் சிறப்பாசிரியர்களும் (career masters) நியமிக்கப்பட வேண்டும். இத்தகையோரது பயிற்சிக்கான மையங்களைத் திறப்பது மத்திய அரசின் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

## ஆசிரியர்கள்

எந்த ஒரு கல்விச் சீர்த்திருத்தத் திட்டத்திலும் ஆசிரியர் மையமானவர். எனவே, ஆசிரியர்களது தரம், திறமை, சமூக நிலைமை, பொருளாதார நிலை ஆகியவற்றை உயர்த்தப் பல கருத்துகளை செகண்டரி கல்விக்குழு எடுத்துக் கூறியுள்ளது. ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துப் பணிக்கமர்த்தும் முறை நாடு முழுவதிலும் ஒரே மாதிரியில் அமையவேண்டும். தனியார் பள்ளிகள், ஊராட்சி நிறுவனப் பள்ளிகள் ஆகியவற்றில் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க, குழுக்கள் நியமிக்கப்படலாம். இக் குழுக்களில் பள்ளித் தலைமையாசிரியர் கட்டாயம் இடம் பெறவேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களே பணிக்கமர்த்தப்படவேண்டும். ஒரே படிப்புத் தகுதி பெற்றுள்ள ஆசிரியர்களது ஊதியம், எத்தகைய பள்ளிகளில் பணியாற்றினும், ஒரேமாதிரி இருக்கவேண்டும். சேமநல நிதி, ஓய்வுக்கால ஊதியம், காப்பு வசதி போன்றன (triple benefit scheme) எல்லா ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும். ஆசிரியர்களது ஊதியத்தினை ஆராய்ந்து அவற்றினை மாற்றியமைத்தற்கான ஒரு குழு அமைக்கப்படவேண்டும். வாழ்க்கைப்புள்ளி மாற்றங்களுக்கேற்ப ஆசிரியரது ஊதியங்களும் உயர்த்தப்படவேண்டும்.

ஆசிரியர்களது தகுதிகாண் பருவம் (probationary period) ஓராண்டாக இருக்கவேண்டும்.

உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் குறைந்தபட்சம் பட்டம் பெற்றவர்களாகவும் ஆசிரியப் பயிற்சி பெற்று இதிலும் பட்டம் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். ஹையர் செகண்டரி பள்ளிகட்கான ஆசிரியர்களுக்கு இதனைக் காட்டிலும் உயர் கல்வித் தகுதி தேவை. ஆசிரியர்களுக்கும் நிருவாகத்தினருக்கு மிடையே எழக்கூடிய தகராறுகளை ஆராய்ந்து முடிவு கூற சமரசக் குழுக்கள் ஏற்படுத்தப்படவேண்டும். ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் மாணுக்கர்களுக்குக் கற்பிப்பதை (private tutions) தடை செய்தலை இக்குழு விரும்பியது. மற்றும், ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளித்தல், ஆசிரியர்களுக்குத் தேவைப்படும்போது அவர்களுக்கு எளிய முறையில் கடன் வழங்குதல், கல்வி மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளப் பயண வசதிகள், தளர்த்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ள விடுப்பு விதிகள் போன்றன பற்றியும் செகண்டரி கல்விக்குழு தனது பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ளது. ஆசிரியர்கள் தங்களது தகுதியை உயர்த்திக் கொள்ள மேற்படிப்புக்குச் செல்ல விரும்பினுல் அவர்களுக்கு இதற்கான விடுப்பு அளிக்கப்படவேண்டும் என்பதனையும் குறிப்பிட்டது.

ஆசிரியப் பயிற்சியைப் பொறுத்தவரையில் இருவகைப் பயிற்சிகள் மட்டும் இருக்கவேண்டும். மெட்ரிகுலேஷன் அல்லது உயர் நிலைப்பள்ளி இறுதி வகுப்பு தேறியவருக்கு இரண்டாண்டுகாலப் பயிற்சியும் பட்டதாரிகளுக்கு ஓராண்டுகாலப் பயிற்சியும் இவையாம். பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பயிற்சிக் காலத்தை இரண்டாண்டுகளாக நீடிக்கவேண்டிய தேவை எழக்கூடும் என்பதனையும் இது சுட்டிக்காட்டியுள்ளது. புதுப்பித்தல் பயிற்சி (refresher courses), சில பாடங்களுக்கான குறுகிய கால தீவிரப் பயிற்சி, செயலரங்குகளின் (workshops) வழியே செயற்பயிற்சி, கருத்தரங்குகள் போன்றன பயிற்சிக் கல்லூரிகளின் பணிகளில் இடம் பெறவேண்டும். ஆசிரியப் பயிற்சிக் காலத்தில் ஆசிரிய மாணுக்கர்களுக்கு ஒருசில பாட இணைச் செயல்களில் பயிற்சியளிப்பதும் விரும்பத்தக்கதாகும். மூன்ருண்டு காலமேனும் அனுபவம் பெற்ற பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே எம். எட். வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். கல்வியின் பல்வேறு பகுதிகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதும் ஓர் உடனடித் தேவையாகும். பயிற்சி பெற்ற ஆசிரியைகளில் காணப்படும் பற்ருக்குறையை நீக்க, பெண்களுக்கென தனிப்பட்ட பகுதி நேரப் பயிற்சியளித்தலை இக் கல்விக்குழு ஆதரித்தது.

## பிற பரிந்துரைகள்

உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடம், நூலகம் போன்றன பற்றிய பரிந்துரைகளும் செகண்டரி கல்விக் குழுவின் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. பள்ளிக்கான கட்டடம் நன்கு திட்டமிடப் பட்டுக் கட்டப்படவேண்டும். காற்றோட்டமும் வெளிச்சமும் நிறைந்திருக்கவேண்டும். ஊருக்குச் சற்றுத் தள்ளி அமைதியான இடத்தில் பள்ளி அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. பள்ளிகளுக்கு விளையாட்டரங்கு இன்றியமையாதது. நெரிசலான நகரங்களின் பள்ளிகள் பல ஒரு விளையாட்டரங்கைப் பயன்படுத்திக் கொள்ள லாம். ஒரு வகுப்பில் 40 மாணாக்கர்களுக்கு மேல் இருக்கக்கூடாது; ஒரு பள்ளியின் மொத்த மாணாக்கரது எண்ணிக்கை 750-க்கு மிகாமல் இருக்கவேண்டும். உயர்நிலைப்பள்ளி ஓர் ஆண்டில் குறைந்தது 200 நாள்களாகிலும் வேலை செய்யவேண்டும். பள்ளி வாரத்தில் 5½ நாள்களுக்கும், இவற்றில் ஒவ்வொன்றும் சுமார் 45 நிமிடங்களைக் கொண்ட 35 பாடவேளைகளுக்கும் செயல்பட வேண்டும். ஆண்டில் இரண்டு மாத கோடை விடுமுறையுடன், 10-15 நாள்களுக்கான இரு சிறு விடுமுறைக் காலங்கள் இருக்கலாம். உயர்நிலைப் பள்ளிகள் யாவற்றிலும் பொது நூலக வசதியும் வகுப்பு நூலக வசதியும் இருக்கவேண்டும். நூலகத்தில் மாணாக்கர் படிப்ப தற்கென தனியிடம் இருத்தல் தேவை. பயிற்சி பெற்ற நூலகர் பள்ளிகளில் இருத்தல் விரும்பத்தக்கது. மற்றும் பயிற்சிக் காலத்தில் ஆசிரியர்களுக்கு நூலக அமைப்பு, நூலக விதிகள் போன்றனபற்றி கற்பிக்கப்படுதல் நல்லது.

**பள்ளிக்கல்வி** நிருவாகம், நிதிவசதி ஆகியன பற்றிய பரிந் துரைகள் பின்வருவனவாம். கல்வி இயக்குநர் அரசாங்க இணைச் செயலாளர் அந்தஸ்துடன் அமைச்சரை நேரில் அணுகி அறிவுரை கூறும் நிலையில் இருக்கவேண்டும். மத்தியிலும் மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு, கல்விக்கென கிடைக்கும் நிதியினைப் பல் வேறு வகைப்பட்ட, பல நிலையிலான கல்விப் பிரிவுகளுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதனை இவை ஆராயவேண்டும். கல்வி இயக்குநரைத் தலைவராகக் கொண்டும் 25-க்கு மேற்படாத பிற உறுப்பினர்களைக் கொண்டதுமான உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் (board of secondary education) மாநிலங்களில் ஏற்படுத் தப்படவேண்டும். இவ்வாரியத்தின் உட்குழு (sub-committee) ஒன்று தேர்வு சார்ந்த பிரச்சினைகளில் தனிக்கவனம் செலுத்தும். மைய கல்வி அறிவுரை வாரியம் தொடர்ந்து செயல்பட்டு, மாநிலங் களது பணிகளை இணைத்தலில் ஈடுபடும். கல்வித்துறை ஆய்வா ளர்கள் கல்வித்தர உயர்வுக்கு ஆற்றக்கூடிய பணிகளைக் குறிப்

பிட்டு, இவர்கள் ஆசிரியர்களுக்கு ஆலோசனை கூறும் நிலையில் செயல்படவேண்டுமென்று செகண்டரி கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. தனியார் பள்ளி நிருவாகத்தில் பலபோது காணப்படும் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு, சரியானபடி நிருவகிக்கப் படும் பள்ளிகளுக்கு மட்டுமே அரசு அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டுமென்று இக் குழு வலியுறுத்தியது. தனியார் பள்ளிகளுக்கான நிருவாகக் குழுக்கள் பதிவு செய்யப்படவேண்டும்; இவற்றில் பள்ளிகளது தலைமையாசிரியர்கள் கட்டாயம் இடம் பெறவேண்டும். பள்ளிகளின் அன்றாடச் செயல்களில் நிருவாகக்குழு உறுப்பினர்கள் எவரும் தலையிடலாகாது. நிருவாகக் குழுக்கள் எவ்வாறு செயற்படவேண்டுமென்பதற்கான திட்டவட்டமான விதிகள் உருவாக்கப் படவேண்டும்; இவற்றை இவை பின்பற்றுதலைக் கல்வித் துறை கண்காணிக்கவேண்டும். விதிகள் மீறப்பட்டால் பள்ளிகளது அரசு அங்கீகாரம் திரும்பப் பெறப்படவேண்டும்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கான நிதிப் பிரச்சினையைச் சமாளித்தலில் மைய மாநில அரசுகள் நெருங்கிய தொடர்பு கொண்டு செயற்படவேண்டும். தொழில் நுட்பக்கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத் தொழிற்கல்வித் தீர்வை (industrial education cess) விதிப்பதை செகண்டரி கல்விக்குழு வரவேற்றுள்ளது. தபால் தந்தி, இரயில்வே ஆகிய இலாக்காக்களின் வருவாயில் ஒரு பகுதி தொழிற்கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கப் படலாம். உயர்நிலைப் பள்ளிகளுக்கு நன்கொடையாக அளிக்கப் படும் பணத்திற்கு வருமான வரியினின்றும் விலக்களிக்கலாம். பள்ளிகளுக்கு இலவசமாக மனையிடம் அரசாங்கத்தாரால் ஒதுக்கப் படலாம். பொதுவாக நிதியினைப் பொறுத்தவரை மத்திய அரசு அதிகமான பொறுப்பினை வகிக்கவேண்டும் என்று இக் கல்விக் குழு குறிப்பிட்டது.

## மதிப்பீடு

செகண்டரி கல்விக் குழுவின் பரிந்துரைகள் பொதுவாகப் பயனுள்ளவையாகவும் செயற்படுத்தக்கூடியவையாகவும் அமைந்துள்ளன. நாட்டின் இன்றைய வளர்ச்சித் தேவைகளுக்கேற்ப செகண்டரி கல்வியின் நோக்கங்கள் எத்தகையனவாக இருக்க வேண்டுமென்பதனை இக் கல்விக்குழு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. குடியாட்சிப் பண்புகளை வளர்த்தல், ஆக்கமுறைப் பட்ட தொழில்நுட்ப, தொழில் திறன்களை மாணாக்கர்களிடையே வளர்த்தல், தலைமைப்பயிற்சி, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்த்தல், ஆளுமையின் சிறப்பான வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியன இக் கல்வியின் நோக்கங்களில் இடம் பெறுதலை இக் குழு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் காணப்படும் குறைபாடுகள் யாவற்றையும் குறிப்பிட்டு அவற்றை அகற்றப் பல பரிந்துரைகளைக் கூறியுள்ளது. பள்ளிகள் பல்துறைப் பாடங்களுக்கு வாய்ப்பளிப்பனவாக இருக்கவேண்டுமென்று கூறியுள்ளது பயன்மிகுந்த கருத்தாகும். தேர்வுமுறைச் சீர்திருத்தம், அகமதிப்பீடு, ஆசிரியர்களது நிலை, ஆசிரியப் பயிற்சி ஆகியனபற்றியும் ஒழுங்குபற்றியும் இக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ள கருத்துகள் யாவும் சிறப்பானவையாகவுள்ளன என்பதில் ஐயமில்லை. பள்ளிகளில் வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் ஆகியன இடம்பெற வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்க சிறந்த பரிந்துரையாகும். இன்று இக் கருத்தின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டு, கல்வியின் எல்லா நிலைகளிலும் வழிகாட்டுதலின் தேவை வலியுறுத்தப்படுகிறது.

## மதிப்பீடு

எனினும், செகண்டரி கல்விக்குழுவின் பரிந்துரைகளில் சில குறைபாடுகள் காணப்படுவதைக் குறிப்பிடத்தான் வேண்டும். முழுமையாக ஒரு புதிய உயர்நிலைப்பள்ளிக் கல்வி அமைப்பை உருவாக்குவதற்குப் பதிலாக, ஏற்கெனவே நாட்டில் காணப்பட்ட கல்வி அமைப்பினை மாற்றியமைக்க முற்பட்டதன் விளைவாக அதில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்ந்து இடம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஓராண்டு புகுமுக வகுப்பு செயற்பட்டு வரும் முறைபற்றி இன்று பரவலாக அதிருப்தி காணப்படுகிறது. பல்துறைப் பாடங்கள் மாணாக்கர்களைக் கவருவனவாக அமையவில்லை. பெரும்பான்மையான மாணாக்கர்கள் தொடர்ந்து கல்லூரிப் படிப்புக்கேற்ற பாடப் பிரிவையே தேர்ந்தெடுக்கின்றனர். பல்நோக்குப் பள்ளிகளும் போதிய எண்ணிக்கையில் நிறுவப்படவில்லை. வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் ஆகியன ஏட்டளவிலேதான் இருக்கின்றனவே தவிர பள்ளிகளில் செயலாக்கப்படவில்லை. இக் குறைபாடுகள் பெருமளவு நிதி வசதிக் குறைவினின்றும் எழுந்தவையாகுமென்றாலும், இக் கல்விக் குழு தனது பரிந்துரைகளைக் கூறுகையில் நாட்டின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இவற்றைக் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டத் தோன்றுகிறது. பெண்கள் கல்விபற்றி செகண்டரி கல்வி ஆய்வுக் குழு போதிய கவனம் செலுத்தவில்லை. முன்பு கூறப்பட்ட கருத்துகளையே சாதாரணப் போக்கில் தானும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆண்களுக்கான பாடத் திட்டத்திற்கும் பெண்களுக்கான பாடத்திட்டத்திற்கும் இடையே தேவைப்படும் வேறுபாடுகளையும் இக்கல்விக்குழு குறிப்பிடவில்லை. இக் குறைபாடுகள் தீவிரமானவையல்ல. கல்வி எனப்படும் சங்கலித்தொடரில் மிகவும் வலுக்குன்றிய இணைப்பு செகண்டரிக்

கல்வியாகும் என இக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. இதன் பரிந்துரைகள் முழுமையாகச் செயற்படுத்தப்பட்டால் இவ்விணைப்பு கட்டாயம் வலுவடையும் எனலாம்.

## வினாக்கள்

1. உயர்நிலைக் கல்விபற்றி ஆராய நியமிக்கப்பட்ட முதலியார் கல்விக் குழுவின் ஆய்வுக்கு விடப்பட்ட பிரச்சினைகள் யாவை ?
2. உயர்நிலைப் பள்ளிகளிற் காணப்படும் குறைபாடுகள் என எவற்றை செகண்டரி கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது?
3. உயர்நிலைக் கல்வியின் அமைப்பு, இந்நிலைக்கான கல்வி ஏற்பாடு ஆகியவைபற்றி உயர்நிலைப்பள்ளிக் கல்வி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளைச் சுருக்கி வரைக. இவற்றைக் கொத்தாரி கல்விக் குழுவின் பரிந்துரைகளுடன் ஒப்பிடுக.
4. உயர்நிலைப் பள்ளிகளில் கற்பித்தல் முறைகளைப்பற்றிய செகண்டரி கல்விக்குழுவின் கருத்துகளை ஆராய்க.
5. உயர்நிலைப் பள்ளிகளில் மதிப்பீடு, தேர்வுகள் ஆகியவற்றைச் சீர்த்திருத்தலில் உதவக்கூடிய கருத்துகளைக் குறிப்பிடுக.
6. உயர்நிலைக் கல்வி மட்டத்தில் 'பல்துறைப் பாடங்களுக்கான வாய்ப்புகளை' ஏற்படுத்துவதன் தேவையினை விளக்குக.
7. ஆசிரியர்களது நிலை, ஆசிரியப் பயிற்சியின் தரம் ஆகியன பற்றி உயர்நிலைக் கல்விக்குழுவின் பரிந்துரைகளைக் குறிப்பிடுக.
8. பள்ளிக் கல்வி நிருவாகம், இக் கல்விக்கான நிதிவசதிகளைத் திரட்டுதல் ஆகியவைபற்றி செகண்டரி கல்விக்குழுவின் கருத்துகளைக் கூறுக.
9. முதலியார் கல்விக்குழுவின் அறிக்கையில் தரப்பட்டுள்ள பரிந்துரைகளின் சிறப்புகள், குறைபாடுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, இக் கல்விக்குழுவின் பணியினை ஆராய்ந்து மதிப்பிடுக.

# 16. கொத்தாரிக் கல்விக்குழுவின் பரிந்துரைகள்

## கொத்தாரி கல்விக்குழுவின் அமைப்பு

கல்விமுறை ஒரு நாட்டின் தேவைகளுடன் இணைந்தது. இத் தேவைகள் காலம் செல்லச் செல்ல மாறிவருவனவாகும். எனவே, கல்விமுறை தொடர்ந்து ஆராயப்பட்டு, தேவைகளுக் கேற்பச் சீரமைக்கப்பட்டால்தான் அது பயன்தரத்தக்கதாகச் செயற்படும். நாட்டின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி அடிப் படையாக அமைகிறது. கல்வித்தரம் உயர உயர நாட்டின் நலன்கள் பெருகி, நிலை உயர்ந்து, நாட்டில் அமைதியும் ஒருமைப் பாடும் நிலவும். மாறிவரும் கல்வித் தேவைகளையும் வளர்ச்சித் தேவைகளையும் கருத்தில் கொண்டு, நமது நாட்டிற்கான கல்வி அமைப்பு (National Pattern of Education) பற்றியும் கல்வியின் பல்வேறு நிலைகள், கூறுகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பின்பற் றப்படக்கூடிய பொதுக்கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியன பற் றியும் ஆராய்ந்து அரசிற்கு அறிவுரை கூற ஒரு கல்வி ஆய்வுக்குழு (Education Commission) 1964ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் நாள் இந்திய அரசினால் நியமிக்கப்பட்டது. இக் கல்வி ஆய்வுக் குழுவுக்கு அன்றைய பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவரான டாக்டர் டி. எஸ். கொத்தாரி (Dr. D. S. Kothari) தலைவராக நியமிக்கப் பட்டார். இக் குழுவின் உறுப்பினர் - செயலராக ஜே. பி. நாயக் நியமிக்கப்பட்டார். இக் கல்விக் குழுவில் நம் நாட்டுக் கல்வி வல்லுநர்களுடன் இங்கிலாந்து, ஜப்பான், சோவியத் யூனியன், அமெரிக்கா போன்ற நாடுகளினின்றும் கல்வி வல்லுநர்களும் உறுப்பினர்களாகச் செயலாற்றினர். இக் குழுவின் மொத்த உறுப்பினர்களது எண்ணிக்கை பதினேழு. சட்டக் கல்வி, மருத்துவக் கல்வி ஆகியனபற்றி இக் குழு நேரடியாக ஆராயுமாறு கேட்டுக்கொள்ளப்படவில்லை. கொத்தாரி கல்விக்குழு தனது முழுமையான அறிக்கையை 1966ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் நாள் அரசிடம் அளித்தது. இவ்வறிக்கை நான்கு பகுதிகளைக் கொண்ட தாகும். 'கல்வியும் நாட்டின் வளர்ச்சியும்' (Education and National

Development) என்ற தலைப்புடன் அளிக்கப்பட்ட இவ்வறிக்கையின் முதற்பகுதி பொதுப் பிரச்சினைகள் பற்றியது; பல்வேறு நிலைக் கல்விக் கட்டங்கள், கல்வியின் பல்வேறு கூறுகள் ஆகியன இரண்டாம் பகுதியில் ஆராயப்படுகின்றன; மூன்றும் பகுதி பரிந்துரைகளைக் (recommendations) கொண்டது; பல துணைக் குறிப்புகளும் விவரங்களும் அறிக்கையின் நான்காம் பகுதியில் இடம் பெற்றுள்ளன. கொத்தாரிக் கல்விக்குழு கல்விச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த மூன்று இணைந்த வழிகளைக் குறிப்பிட்டுள்ளது; கல்வி அமைப்பினை நாட்டின் தேவைகள், இலட்சியங்கள் ஆகியவற்றுக்கேற்ப மாற்றியமைத்தல், தர உயர்வுக்கு வழிவகுத்தல், கல்வி வசதிகளை விரிவாக்குதல் ஆகியன இவையாகும்.

### கல்விக்கான தேசியக் குறிக்கோள்களும் நோக்கங்களும்

நமது நாட்டின் எதிர்காலம் நமது பள்ளிகளின் வகுப்பறைகளில் நிர்ணயிக்கப்படுகிறது என்று குறிப்பிடுவது மிகையன்று. நாட்டு வளர்ச்சித் திட்டங்கள் யாவற்றுக்கும் கல்வித் திட்டங்கள் அடித்தளங்களாக அமைகின்றன. சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள், வளர்ச்சிகள் போன்ற யாவற்றுக்கும் கல்வி வலுவான ஒரு கருவியாகச் செயற்படுகிறது; இவ்வாறு மக்களையும் சமுதாயத்தையும் மாற்றியமைப்பதில் அதன் செல்வாக்கு சிறப்பானதாகும். எனவே, மக்களுடைய இலட்சியங்களின் அடிப்படையில் நாட்டு வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்படும்போது, இவற்றுடன் கல்வித் திட்டங்களும் இணைந்து காணப்படுகின்றன. நமது நாட்டின் நெடுநாளைய அல்லது நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கல்வி துணை செய்வதோடு, அவ்வப்போது வளர்ச்சிப் போக்கில் எழும் பல்வேறு இடைக்காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கல்வி உதவுதல் வேண்டும். நம் நாடு இன்று சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் பலவாகும். இவற்றுள் முக்கியமானவையாக உணவில் தன்னிறைவு பெறுதல், வறுமையை ஒழித்தல், படித்தோரிடம் காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குதல், நாட்டில் அவ்வப்போது தலைதூக்கும் பிரிவினைச் சக்திகளை ஒடுக்கி மக்களிடையே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டுணர்ச்சியையும் வளர்த்தல், குடியாட்சிக்கு அடிப்படையாக அமையும் சமூகப் பண்புகளில் மக்களுக்குப் பயிற்சியளித்தல், நமது பாதுகாப்புத்திறனைப் பெருக்கிக்கொள்ளுதல் போன்றன காணப்படுகின்றன; நாட்டின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமாயின் உலகின் முன்னேறியுள்ள பிற நாடுகளின் நிலைக்கு நமது தொழில் வளத்தைப் பெருக்கவேண்டும். இதற்கு நாட்டினை நவீனமாக்குவதற்கான (modernization) முயற்சி உடனடியாகத் தேவைப்படும். மேலே குறிப்பிடப்பட்டவை தவிர பாரதநாட்டின் சிறப்புப் பண்பு

களெனக் கருதப்படும் பண்பாட்டு ஆன்மிகக் கூறுகளின் வளர்ச்சியும், நாட்டு மக்களிடையே இவை பரவுதலும் தேவைப் படுகின்றன. இத்தகைய நோக்கங்கள் எய்தப்படும் வகையில் நமது நாட்டிற்கான கல்வி அமைப்பும் கல்வி முறையும் அமைக்கப் படவேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட்ட கல்வி முறையின் மூலம்தான் நமது வளர்ச்சித் தேவைகளும் வாழ்க்கைக் குறிக்கோள் களும் நிறைவுபெறும்; நாட்டு வளர்ச்சியோடு தனிப்பட்டோரது தேவைகளும் நிறைவுறும். தேசியக் கல்விமுறை ஒன்றைத் தோற்று வித்து அதன் துணைகொண்டு நாம் சமாளிக்கவேண்டிய பிரச்சினைகள் கடினமானவை; சிக்கலானவை. எனினும், இத்தகைய கல்விமுறை நமது நாட்டின் இயற்கை வசதிகள் (natural resources), மனித சக்தி (man power) ஆகியவற்றைச் சிறந்த முறையில் வளர்த்துப் பயன்படுத்த உதவுவதன் வழியே இவற்றைத் தீர்க்க உதவும்.

நமது நாட்டிற்கான தேசிய கல்வி அமைப்பு ஒன்றினை உருவாக் குதலில் கருத்தில் கொள்ளப்படவேண்டிய கோட்பாடுகளைக் கொத் தாரிக் கல்விக்குழு தனது அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது. கல்விமுறை நமது மக்களின் வாழ்க்கை முறை, தேவைகள், குறிக் கோள்கள் ஆகியவற்றுடன் இணைக்கப்படவேண்டும். தற்காலக் கருத்துகள், கண்டுபிடிப்புகள், செயல்முறைகள் போன்றன நாட்டு மக்களிடையே பரவி, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் (productivity) உதவும் வகையில் விஞ்ஞானக் கல்வியும் (science education) விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவும் பள்ளிக் கல்வித் திட்டத்தில் நடுவிடம் பெறுத லோடு நாளடைவில் பல்கலைக் கழகக் கல்வியின் பல்வேறு துறைகளுக் கான பாடத்திட்டத்திலும் இடம் பெறுதல் இன்றியமையாத தாகும். தேசியக் கல்விக்கான திட்டத்தில் செய்முறைப் பயிற்சி, வேலை அனுபவங்கள், பல்தொழிற் பாடங்கள், தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வி ஆகியன யாவும் வலியுறுத்தப்படவேண்டும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி தொழில் சார்புடையதாக அமைக்கப் படுவது (vocationalization) உடனடித் தேவையாகும். தேசியக் கல்வித்திட்டம் கல்வித்தரம் மேலும் உயரும் வகையிலும், கல்வி வசதிகள் பெருகி நாட்டு மக்கள் யாவருக்கும் இவை பரவலாகக் கிடைக்கும் வகையிலும் உருவாக்கப்படவேண்டும். குறுகிய சாதி, சமய, மொழி, மாநில வேற்றுமைகளை அகற்றி நாட்டு மக்களது உள்ளங்களிலே ஒற்றுமையுணர்ச்சி வலுவடையும் வகையில் கல்வி முறை அமையவேண்டும். இதற்குதவும் வகையில் கல்வித் திட் டத்தில் சமூகப் பணிகள், நாட்டுப் பணிகள் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் இடம் பெறுதல் வேண்டும். கல்வி நாட்டின் சிறப்பு

மிக்க எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை மக்களிடையே தோற்றுவிக்கவேண்டும். நாட்டின் பல்வேறு பகுதிகளிடையே காணப்படக்கூடிய ஏற்றத் தாழ்வுகளை அகற்றலில் உதவுதல், பிரச்சினைகளை நாட்டின் முழுமையான பொதுநலனின் கோணத்தினின்றும் நாட்டுப் பற்றுடன் அணுகும் மனப்பான்மையை மக்களிடையே தோற்றுவித்தல், மக்களாட்சி நன்கு நடைபெற உதவுதல், நாட்டின் பிற பகுதியினரது வாழ்க்கை முறை, பண்பாடு ஆகியவற்றின்மீது ஒவ்வொருவருக்கும் மதிப்பு எழ உதவுதல் ஆகியன யாவும் தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கங்களுள் அடங்கும். நாட்டுப்பற்று உலகப் பற்றுக்கு முரணானதன்று. உலகப்பற்று எழுவதற்கான தொடக்கக் கட்டமாக இதனைக் கருதுதல் வேண்டும். நாட்டுப்பற்றின் எழுச்சிக்குக் கல்வி உதவுவதுடன், பிற நாடுகளைப்பற்றிய அறிவினையும், மனிதனது நாகரிக வளர்ச்சியின் வரலாற்றில் பல்வேறு நாடுகளது பங்கு பற்றிய அறிவினையும் மக்களுக்கு அளித்து, அவர்களிடையே அனைத்துலக மனப்பான்மையையும் (international outlook) வளரச் செய்ய வேண்டும். சமூகப் பிரச்சினைகளைச் சகிப்புத் தன்மையுடனும் அறிவியல் நோக்குடனும் ஆராயும் பண்பினை நம் மக்கள் கல்வி வழியே பெறவேண்டும். மக்களாட்சி அல்லது குடியாட்சி என்பதனை ஓர் அரசியல் முறையெனமட்டும் கருதாது அதனை வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனமுதிர்ச்சியை நாட்டு மக்களிடையே கல்வி வளர்க்கவேண்டும். கல்வி நாட்டு மக்களிடையே புதுக் கருத்துகளையும் செயல்முறைகளையும் பரவச் செய்து நாட்டினை நவீனமாக்குதலில் துணைபுரிய வேண்டும் என்னும்போது, பண்டைக் காலந்தொட்டே மனித வாழ்க்கையின் அடிப்படைக் குறிக்கோள்களாக இருந்து வந்துள்ள அறப் பண்புகள் ஆன்மிகப் பண்புகள் ஆகியன புறக்கணிக்கப்படவேண்டும் எனக் கருதலாகாது. இன்றைய அறிவியல் தொழில் நுட்ப உலகிலும் மன நிறைவும் முழுமையும் பெற்று வாழ்க்கை நடத்த நல்லொழுக்க ஆன்மிகப் பண்புகளின் வளர்ச்சி இன்றியமையாததாகும். எனவே, நாட்டின் கல்வித் திட்டங்களில் விஞ்ஞானக் கல்வியுடன் இணைந்த வகையில் சிறந்த நடத்தைப் பண்புகளையும் ஆன்மிகப் பண்புகளையும் மாணாக்கர்கள் பெற உதவக்கூடிய வாய்ப்புகளும் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்றும் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டது. இதன் அடிப்படையில் 1968ஆம் ஆண்டின் இறுதியில் மத்திபக் கல்வி அமைச்சகம் (Ministry of Education, Government of India), கல்விக்கான தேசியக் கொள்கை (National Policy on Education) ஒன்றை வெளியிட்டது.

**கல்வியமைப்பு**

தேசியக் கல்வி முறையினை உருவாக்கக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய கோட்பாடுகளையும், இக் கல்விமுறையின் நோக்கங்களையும் விளக்கிய பின்னர், கல்வி அமைப்பு (educational structure) எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதுபற்றி இக் கல்விக்குழு குறிப்பிட்டது.

கல்வித்தரம் கல்வி அமைப்போடு இணைந்தது என்று கொத்தாரிக் கல்விக் குழு சுட்டிக் காட்டியுள்ளது. கல்வி அமைப்பில் காணப் படும் பல்வேறு நிலைகள் (educational stages), இவற்றுக்கிடையே காணப்படும் தொடர்பின் தன்மை, இவை ஒவ்வொன்றின் கால அளவு, இவற்றின் ஆசிரியர்களது தரம், கல்வித் திட்டத்தின் தன்மை, கற்பித்தல் முறைகளின் இயல்பு, தேர்வு முறையின் அமைப்பு, கட்டடங்கள், கருவிகள் போன்றவற்றின் தன்மை ஆகியன யாவும் கல்வித்தரத்தினை பாதிப்பனவாகும். முக்கியமாக நமது நாட்டைப் பொறுத்தவரை நாம் பெற்றுள்ள வசதிகளை முழு அளவிலே பயன்படுத்துவதன் வழியே கல்வியின் தர உயர்வுக்கு முயலுவது முக்கியமானதாகும்.

கொத்தாரிக் கல்விக்குழு பின்வரும் கல்வி அமைப்பினைப் பரிந் துரை செய்துள்ளது.

(1) முன் தொடக்கக் கல்வி நிலை (pre-primary or pre-school stage) பள்ளிக் கல்விக்கு ஆயத்தமாக இந்நிலை அமையும். இது கட்டாயமில்லாவிடினும் இதற்கான வாய்ப்புகளையும் நிதியினையும் அரசு அளிக்கவேண்டும். இந்நிலை சுமார் 3 ஆண்டுகள் நீடிக்கலா மெனினும் 5 முதல் 6 வயது வரையில் ஓராண்டுக் காலமாகிலும் இருத்தல் விரும்பத்தக்கதாகும்.

(2) தொடக்கக் கல்வி நிலை (primary school stage) 6 வயதில் இந்நிலைக்கல்வி தொடங்கப் பெற்று ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் நீடிக்கலாம். இக் கல்விநிலை இரு பிரிவுகளைக் கொண்டதாகும். தொடக்க அல்லது கீழ்த் தொடக்க நிலை (lower primary) 4 அல்லது 5 ஆண்டுகள் நீடிக்கும். இதில் முதல் வகுப்பு முதல் 4/5 வகுப்புகள் வரை காணப்படும். உயர் தொடக்க நிலை (upper primary) 3 அல்லது 2 ஆண்டுகள் நீடிக்கும். இதில் 5/6 வகுப்புகள் முதல் 7/8 வகுப் புகள் வரை காணப்படும். இதன் பின்னர் கீழ் செகண்டரி நிலை (lower secondary stage) அமையும். இது 3 அல்லது 2 ஆண்டுகள் பொதுக்கல்விப் படிப்பாகவோ 1 முதல் 3 ஆண்டுகள் தொழிற் படிப்பாகவோ இருக்கலாம்.

(3) அடுத்து உயர் செகண்டரி கட்டம் (higher secondary stage) அமையும். இக்கட்டத்திலும் 2 ஆண்டு பொதுக்கல்வியோ 1 முதல் 3 ஆண்டுகள் நீடிக்கும் தொழிற் படிப்போ இருக்கலாம்.

(4) இறுதியாக மூன்றாண்டுகள் பட்டப்படிப்பு, அதற்குமேல் ஆராய்ச்சி படிப்புகள் போன்றவற்றைக் கொண்ட உயர் கல்விக் கட்டம் (higher education) அமையும்.

தொடக்கப்பள்ளி முதல் வகுப்பில் சேருவதற்கு 6 வயது குறைந்தபட்ச வயதாகும். உயர்நிலைப் பள்ளிகள் இருவகைகளாக இருக்கும். 10 ஆண்டுகள் படிப்பைக் கொண்ட உயர்நிலைப் பள்ளிகளும் 11 அல்லது 12 ஆண்டுகள் படிப்புக்கான உயர் செகண்டரி பள்ளிகளும் (higher secondary schools) இவ்விரு வகைகளாகும். பத்தாம் வகுப்புக்குப் பின்னர்தான் குறிப்பிட்ட ஒரு பாடத்தினைத் தேர்ந்தெடுத்து மாணுக்கர் அதில் ஆழ்ந்த சிறப்புப் பயிற்சி பெறுதலுக்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். முதல் புறப் பொதுத் தேர்வு (external public examination) 10 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் நடத்தப்படவேண்டும். பல்கலைக் கழக உயர் கல்வி நிலைக்கு முந்திய கல்வி நிலைகள் யாவும் ஒரு முழுமையாகக் கருதப்படவேண்டும். இம் முழுமையைப் பல்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்தாலும் (முன் தொடக்க நிலை, கீழ்த் தொடக்க நிலை, உயர் தொடக்க நிலை, கீழ் செகண்டரி நிலை, உயர் செகண்டரி நிலை போன்றன) இவற்றிடையே தொடர்பு உள்ளது என்பது மறக்கப்படலாகாது. கீழ்த் தொடக்க நிலை 6 முதல் 11 வயது வரையிலும் உயர் தொடக்க நிலை 11 வயது முதல் 14 வயது வரையும் அமையும். கீழ்த் தொடக்கநிலைக் கல்வி உடனடியாக இலவசமாக்கப்படவேண்டும் என்றும் உயர்தொடக்க நிலைக் கல்வி குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் இலவசமாகப்பட வேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. நமது தமிழ்நாடு ஏற்கெனவே இதனைச் செயலாக்கியுள்ளது. தொடக்க நிலைக்குப்பின் 20% மாணுக்கர்களுக்குத் தொழிற்கல்வி மூன்று ஆண்டுகளும் பிறர்க்குப் பொதுக்கல்வியும் அளிக்கப்படும். தொடக்கநிலை முதல் கீழ் செகண்டரி பள்ளியின் இறுதியாண்டுப் பொதுத் தேர்வுவரை 10 ஆண்டுகள் பொதுக்கல்வி அளிப்பது நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் இது 11 ஆண்டுகளாக இருத்தலும் இதனை மாற்றியமைக்க இப்போது ஆராயப்பட்டுவருவது பற்றியும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். பள்ளிக்கல்வியின் உயர் கட்டமான உயர் செகண்டரி நிலையின் இரண்டு ஆண்டுகளில் (16 முதல் 18 வயதுவரை) உயர் செகண்டரி

கல்வி 50% மாணாக்கர்களுக்கும் தொழிற்கல்வி 50% மாணாக்கர் களுக்கும் அளிக்கப்படும். நாட்டில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் உயர் செகண்டரி பள்ளிகளாக உயர்த்த வேண்டிய தில்லை. இவற்றுள் கால்பங்கு பள்ளிகள் மட்டும் இந்நிலைக்கு உயர்த்தப்படுதல் போதுமானது. கல்வியின் தரத்தை உயர்த்த, ஏற்கெனவே காணப்படும் வசதிகளை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றின் வேலை நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும், தேவையற்ற முக்கியமில்லாத விடுமுறை நாட்கள் குறைக்கப்பட வேண்டு மென்றும், கல்லூரிக் கல்விநிலையில் தாங்களே கற்பது ஊக்கு விக்கப்பட வேண்டுமென்றும் கொத்தாரி கல்விக்குழு கூறியுள்ளது. மேலும், விடுமுறை நாட்களையும் சமூகப்பணி, எழுத்தறிவுப் பணி போன்ற நாட்டின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வேலைகளில் செலவிடுதலை இது ஆதரித்துள்ளது.

### பல்வேறு கல்வி நிலைகளின் நோக்கங்களும் தன்மைகளும்

இனி பல்வேறு கல்வி நிலைகளுக்கான நோக்கங்களைக் கொத்தாரி கல்விக்குழு எவ்வாறு விளக்கியுள்ளது என்பதனை நோக்கலாம்.

முன் தொடக்கக் கல்விநிலை முறையான பள்ளிக் கல்விக்கு ஆயத்தமாக அமைகிறது. இதன் நோக்கம் குழந்தைகளிடம் நல்ல உடல் நலப் பழக்கங்கள், அடிப்படைத் திறன்கள், சமூகப் பண்புகள், அழகுணர்ச்சி ஆகியவற்றைத் தோற்றுவித்தலும் சூழ்நிலைபற்றி ஆராய்ந்து அறிவுபெற அவர்களது ஆராய்வூக்கத்தை (curiosity) தூண்டுதலும் ஆகும்; இக் கல்விநிலை குழந்தைகளிடம் நன்னம்பிக்கையை வளர்த்து பயனுள்ள கல்விக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் அவர்களை ஆயத்தப்படுத்துவதாகவமையும், முன் தொடக்கக் கல்விநிலைபற்றி சார்ஜென்ட் அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருப்பினும் இந்நிலைக்கான கல்வி நாட்டில் வளர்ச்சி யற்ற நிலையிலேயே பெரிதும் காணப்படுகிறது. இந்நிலைமை மாற்றப்பட வேண்டுமென்று கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தி யுள்ளது. 1985-86 ஆண்டுகளுக்குள் 3 முதல் 5 வயதுக் குழந்தை களில் 5% இத்தகைய பள்ளிகளில் கல்வியளிக்கப்பட வேண்டு மென்றும் இதே காலத்துக்குள் 5 முதல் 6 வயதுக் குழந்தைகளில் 50%-க்கு இக்கல்வி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இது கூறியுள்ளது. இக்குறி அளவினை எட்டுவதற்கு பணச் செலவு அதிகம் தேவைப்படுமாகையால் முன் தொடக்கப்பள்ளிகளின் வளர்ச்சிக்குத் தனியார் நிறுவனங்களது உதவி கோரப்பட வேண்டும், மாநில அரசுகள் மானியம் வழங்கலாம்; மற்றும் முன் தொடக்கப்பள்ளிக் கல்வியின் வளர்ச்சி மேலும் எவ்வாறு சிக்கன

மாகச் செய்யப்படலாம் என்பது பற்றிய ஆராய்ச்சிகள் தேவைப் படுவனவாகும். முன்தொடக்கக் கல்விபற்றிய பிரிவு ஒன்று மாநிலக் கல்விக் கழகத்தில் (State Institute of Education) ஏற்படுத்தப்படவேண்டும். மாவட்டங்களில் இதற்கான மையங் களும் ஏற்படுத்தப்படவேண்டும்.

இந்திய அரசியல் சாஸனம் 14 வயதுவரை எல்லாக் குழந்தை களுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அரசு அளிக்க வேண்டு-மென்றுள்ளது. இதனை 1960-ஆம் ஆண்டிற்குள் சாதிக்க வேண்டு மென்றும் அரசியல் சாஸனம் கூறியுள்ளது. ஆனால் பல்வேறு பொருளாதார—சமூகக் காரணங்களின் விளைவாக இதனை நம்மால் அடைய இயலவில்லை. எனினும் இவ் விலக்கை கட்டாயம் அடைந்தே தீரவேண்டும். இதற்கான திட்டங்களை மாவட்ட நிலையில் மாநில அரசுகள் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. இவ் வயதுக் குழந்தைகள் யாவருக்கும் தொடக்கப்பள்ளி வசதி ஏற்படுத்தித்தருவது, இவர்கள் எல்லோரையும் இப் பள்ளிகளில் சேர்ப்பது, சேர்த்தபின் பள்ளிக்கல்வி முடிவடையாததற்கு முன் பள்ளியைவிட்டு இவர்கள் நீங்கிவிடாமல் பார்த்துக்கொள்வது ஆகிய மூன்று கருத்துகளின் அடிப்படையில் இத்திட்டங்கள் வரையப்படவேண்டும். பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவ தற்கான அடிப்படையைத் தொடக்கக்கல்வி எல்லோருக்கும் அளிப்பதாகும். இந்நிலையில் அதிக அளவில் காணப்படும் கழிவு (wastage) தவிர்க்கப்பட்டு, தொடக்கப்பள்ளிகளில் சேரும் எல்லாப் பிள்ளைகளும் 5-ஆம் வகுப்பு வரையிலேனும் விடுபடாமல் கல்வி பயிலவும், இவர்களுள் 80% குழந்தைகள் ஏழாம் வகுப்பு வரை யிலேனும் தொடர்ந்து கல்வி கற்கவும் முன்னேற்பாடுகள் செய்யப் படுவது மிகவும் இன்றியமையாததாகும். பெண்களது கல்வியில் இந்நிலையில் மிகவும் அதிகக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

தொடக்கநிலைக் கல்வியில் தாய்மொழி, கணக்கு, சமூகப்பாடம், இயற்கைப்பாடம், உடல்நலக் கல்வி ஆகியன இடம்பெறும். உடற்பயிற்சியில் கூட்டு விளையாட்டுகளும் திறந்தவெளிப் பயிற்சி களும் இடம் பெறவேண்டும். மாணாக்கர்களது தாய்மொழி வட்டார அல்லது மாநில மொழியினின்றும் வேறாக இருக்குமானால் ஒரு வகுப்பில் சிறுபான்மைக் குழந்தைகள் 10 பேரோ அல்லது பள்ளியில் 40 பேர்களோ இருப்பின் இவர்களது தாய்மொழியில் முதல் வகுப்பினின்று இவர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இவர் 3-ஆம் வகுப்பில் வட்டார அல்லது மாநில மொழியினையும் கற்கத் தொடங்குவர். முதலிரண்டு வகுப்புகளுக்கு ஒன்றாகவும் மூன்று நான்கு வகுப்புகளுக்கு

ஒன்றுகவும் பள்ளித்தேர்வு நடத்துவது போதுமானதாகும். வேலை அனுபவங்கள் (work experiences) இந்நிலையிலிருந்தே கல்வியில் இடம் பெறவேண்டும். வகுப்பறை, பள்ளியிடம் ஆகியவற்றைத் தூய்மையாகவும் துப்புரவாகவும் வைத்துக்கொள்ளுதல், காகித வேலை, களிமண் வேலை, நூல் நூற்றல் போன்றனயாவும் இக்கல்விக் கட்டத்திற்கான வேலை அனுபவங்களாகும். ஆதாரக் கல்வி முறை எனத் தனித்து ஒரு தொடக்கநிலை அமைப்புத் தேவையில்லை யென்றும், ஆக்கவேலைகள், சூழ்நிலைக்கேற்ற செய்தொழில், பள்ளிச் சமுதாயத் தொடர்பு போன்ற ஆதாரக்கல்வியின் சிறப்புக் கருத்துகள் யாவும் கல்விநிலைகள் யாவற்றிலும் பரவிக் காணப்பட வேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டது.

உயர் தொடக்கநிலைக் கட்டத்தில் கல்வி ஏற்பாடு மேலும் சிறிது விரிவாக்கப்படும். தாய்மொழியுடன் இந்தி அல்லது ஆங்கிலம் கற்பிக்கப்படுவது இக் கட்டத்தில் தொடங்கும். விருப்பப்பட்டால் இரண்டையுமே கற்பிக்கலாம். கணக்குப்பாடம், அறிவியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களின் பல்வேறு பிரிவுகள் இந்நிலையில் தனிப்பாடங்களாகக் கற்பிக்கப்படும். ஒழுக்கக் கல்வியும் கலைகளும் கைப்பணியும் இந்நிலையில் இடம்பெறும்; உடற் கல்வி தொடர்ந்து காணப்படும். சமுதாயவளர்ச்சிப் பணிகள், பிரம்புவேலை, நெய்தல், தோட்டவேலை போன்றன இந்நிலையில் வேலை அனுபவச் செயல்களாக அமையும். மாணுக்கருள் ஓரளவு திறனுமிக்கோருக்குத் தரஉயர்வுள்ள பாடத்திட்டம் இக்கட்டத்தில் அமைக்கப்படலாம். பொருளியல் காரணிகளின் விளைவாக, பொதுக்கல்வி பெறுதலில் தொடர்ந்து ஈடுபட விருப்பமில்லா தோர்க்குப் பகுதிநேரத் தொழிற்பயிற்சியும் இந்நிலையில் அளிக்கப் படலாம். உயர்தொடக்கப்பள்ளிக் கல்வி நிலையிலும் அகத்தேர்வு மட்டுமே காணப்படும். எழுத்துத் தேர்வுடன் வாய்மொழித் தேர்வும் அளிக்கப்படவேண்டும். மாணுக்கர்களுக்கான திரள் பதிவுகள் (cumulative records) தொகுத்து வைக்கப்படவேண்டும். மாவட்டத்தின் கல்விநிலையை உயர்த்தவோ அல்லது அதன் நிலையை ஆராயவோ தேவை எழுந்தால் உயர்தொடக்கப்பள்ளிக் கல்வியின் இறுதி ஆண்டில் மாவட்டப் பொதுத்தேர்வு ஒன்று வைக்கப்படலாம். தொடக்கப்பள்ளிகள் குழந்தைகள் வீடுகளி லிருந்து எளிதில் வந்துபோகும் அண்மையில் இருக்கவேண்டும். தற்போது நாட்டில் உயர்தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை தொடக்கப்பள்ளிகளது எண்ணிக்கையைக் காட்டிலும் குறைந்து காணப்படுவதால் இப் பற்றுக்குறையை 1985–86க்குள் முழுமை யாக நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதனை கொத்தாரிக் கல்விக்குழு வற்புறுத்தியுள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி எனப்படும் செகண்டரி கல்வி நிலையின் நோக்கம் குடியாட்சிப் பண்புகள் நிறைந்த, நாட்டின் வருங்கால மக்களை உருவாக்குதலும் உயர் கல்விக்கோ, தொழில் நுட்பக் கல்விக்கோ அல்லது ஏதாகிலும் ஒரு தொழிலுக்கோ செல்லும் தகுதியினை மாணுக்கர்களிடையே தோற்றுவித்தலும் ஆகும். உயர் நிலைப்பள்ளிக் கல்வியின் விரிவாக்கம் திட்டமிடப்பட்ட முறையில் செயற்படுத்தப்படவேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் சிக்கன மானவையாகவும் திறமையுள்ளவையாகவும் அமைக்கப்பட வேண்டும். செகண்டரி கல்விக் கட்டத்தின் கீழ்நிலையில் 20% மாணுக்கர்களுக்கும் உயர்நிலையில் 50% மாணுக்கர்களுக்கும் தொழில் சார்ந்த கல்வி அளிக்கப்படவேண்டும். நாட்டிற்குத் தேவைப்படக்கூடிய பயிற்சிபெற்ற மனித சக்தியின் அடிப்படையில் செகண்டரி கல்வியின் வளர்ச்சிக்கு நாம் திட்டமிடவேண்டும். இக்கட்டத்தில் எல்லோர்க்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். இங்கும் பெண்களுக்கான வாய்ப்புகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

செகண்டரி கல்வி நிலையின் கீழ்வகுப்புகளில், தொடக்கப் பள்ளியில் பயின்ற பாடங்களை மாணுக்கர்கள் மேலும் ஆழமாகவும் அகலமாகவும் பயிலுவர். மூன்று மொழிகள், கணக்குப்பாடம், வரலாறு, புவியியல், அறிவியல் போன்றனவும் உடற்பயிற்சி, கலை, அறநெறிப்பயிற்சி ஆகியனவும் கட்டாயமாக இந்நிலையில் இடம் பெறும். சமூக வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாணுக்கனும் ஆண்டுக்கு 10 நாட்களேனும் அல்லது இக்கல்வி நிலையில் தொடர்ச்சியாக 30 நாட்களேனும் ஈடுபடல்வேண்டும். மரவேலை, உலோக வேலை, அச்சுத்தொழில், நெய்தல் போன்றன வேலை அனுபவங்களாகும். இவற்றுக்கான தொழிற்கூடங்கள் (workshops) பள்ளிகளில் இருத்தல்வேண்டும்; பள்ளிக்கு வெளியேயுள்ள தொழிற்கூடங்கள், விவசாயப் பண்ணைகள் ஆகியவற்றில் இக் கல்வி நிலை மாணுக்கர்கள் பயிற்சியும் அனுபவமும் பெறுவது விரும்பத் தக்கதாகும். ஏற்கெனவே குறிப்பிட்டபடி, கீழ் செகண்டரி கல்வி நிலையில் இருபது சதவிகித மாணுக்கர்கள் பொதுக் கல்விக்குப் பதில் தொழில சார்ந்த கல்வியினைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இவர்களுக்குத் தேவைப்படும் தொழிற்பயிற்சியை இதற்கான பள்ளிகளில (industrial training institutes and technical schools) அளிக்கலாம்.

உயர் செகண்டரி கல்விநிலை பொதுக் கல்வியைப் பொறுத்த வரை அறிவியலிலும் மனிதவியலிலும் மாணுக்கர்கள் பெற்றுள்ள அறிவினை உறுதிப்படுத்துவதாகவமையும். இந்நிலையில் இரு மொழி

களும் மூன்று விருப்பப் பாடங்களும் பயிலப்படும். மொத்த பள்ளிக்காலத்தில் பாதி விருப்பப்பாடங்களுக்கும் கால்பகுதி மொழிப்பாடங்களுக்கும் கால்பகுதி உடற்பயிற்சி போன்றவற்றுக்கும் செலவிடப்படும். உயர் செகண்டரி கல்விக்கூடங்களிலும் வேலை அனுபவப் பயிற்சியும், ஆண்டுக்கு 10 நாட்கள் சமூகப்பணி உடலுழைப்பு முகாம்களும் இருக்கும். பாடத்திட்டத்தில் சாதாரண மாணாக்கர் (ordinary) திறனுயுடையோர் (advanced) ஆகியோர்க்கான இரு பிரிவுகள் காணப்படும். உயர் செகண்டரி கல்வியின் இறுதிப் பொதுத் தேர்வில் மாணாக்கர் பெற்ற மதிப்பெண்கள் மட்டும் குறிக்கப்படும்; 'வெற்றி' அல்லது 'தோல்வி' எனக் குறிக்கப்படாது. உயர் செகண்டரி கல்விக்கான வாய்ப்புகள் நிதிவசதி, இக்கல்விக்கான தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்தப்படும். ஆனால் செகண்டரி கல்வியின் கீழ் நிலையை முடித்தவர்களுள் 50%-க்குத் தொழிற்கல்வி அளிக்கப்படும். எல்லோரும் உயர் செகண்டரிப் பள்ளிகளில் பொதுக் கல்வி பெறத் தேவையில்லை. தொழிற்கல்விக்கு பல்தொழில் நுட்பப் பள்ளிகளுடன் (poly technics) பகுதிநேரப் பயிற்சி (part time training) வாய்ப்புகளும் பயன்படுத்தப்படவேண்டும். தொழிற்கல்வியில் பொது சுகாதாரம், வாணிபம், தொழில் நிருவாகம் போன்ற புதுத்துறைகளில் பயிற்சியளிக்கப்படுதலும் இன்று தேவைப்படுவதாகும்.

பல்கலைக் கழகங்கள் தங்களது பணியினைச் சிறப்பாக ஆற்றி வந்தால் நாடும் மக்களும் எதுபற்றியும் கவலைகொள்ளத் தேவை எழாது என்று பண்டித நேரு குறிப்பிட்டுள்ளார். பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகள், சகிப்புத்தன்மை, சிந்தனைத்திறன், கருத்துலகில் துணிந்து செயலாற்றுதல், உண்மைகளைத் தேடிப் பெற முயலுதல் போன்றவற்றின் சின்னமாகும் என்றும் மனித இனம் தன்னை மேலும் உயர்த்திக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள் யாவற்றுக்கும் பல்கலைக் கழகங்களின் துணை இன்றியமையாததென்றும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சிறப்பாகக் கூறியுள்ளார். எனவே பல்கலைக் கழக உயர் கல்வியின் நோக்கம் உண்மையான அறிவினை வளர்த்துப் பரப்புதலாக அமைகிறது. நாட்டிற்கான சிறந்த தலைவர்கள், பல்வேறு துறைகளுக்கான வல்லுநர்கள் ஆகியோரைப் பல்கலைக் கழகங்களும் இவற்றோடு இணைந்த கல்லூரிகளும் உருவாக்கித் தரவேண்டும். நாட்டில் உயர் கல்விக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படுவதுடன் தரமும் உயர்த்தப்படவேண்டுவது முக்கியமாகும். பள்ளிக் கல்வியின் தரம் உயர்தலுக்கும் உயர் கல்வித்தர உயர்வு உதவுவதாகும். நாட்டின் பல்கலைக் கழகங்களில் சில, குறிப்பிட்ட சில பாடத்துறைகளில்

உயர் மையங்களாக (advanced centres) உயர்த்தப்படல்வேண்டும். உயர் கல்வியிலும் தாய்மொழி அல்லது வட்டார மொழி பயிற்று மொழியாக இருக்கவேண்டுமெனினும் பட்ட மேற்படிப்புக்கு (post graduate classes) ஆங்கிலம் பயிற்றுமொழியாக விருக்கலாம். கல்லூரிகளில் மாணுக்கர்களது உடல் நலம் பேணப் பல்வேறு வசதிகள் இருத்தலவேண்டும். கல்லூரிகளிடையேயும் பல்கலைக் கழகங்களுக்கிடையேயும் தொடர்பினை வலுப்படுத்தப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஆசிரிய-மாணவத் தொடர்பு நெருக்கமாக நல்ல முறையில் இருத்தல் வேண்டும். சமூகப்பணிகள், உடலுழைப்பு முகாம்கள், தேசிய மாணவர்படை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது.

## வேலை அனுபவங்கள்

கல்வியின் தொடக்கநிலை முதல் செகண்டரி நிலை வரையில் வேலை அனுபவங்கள் (work experiences) மாணுக்கர்களுக்கு அளிக்கப்படுதலை கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. கல்வியின் உடலுழைப்பு, செய்திறன்கள், உற்பத்தித்திறன் ஆகியன இடம் பெற வேலை அனுபவங்கள் உதவுகின்றன. பண்டைய கல்வி முறைகளில் வாழ்க்கைத் தொழிலனுபவங்களைப் பெறுதல் ஒரு பகுதியாகக் காணப்பட்டாலும் அண்மைக்காலத்தில் கல்வி பெருமளவு ஏட்டுப்படிப்பாக மாறியது. படிப்பு என்பது வேலையுடன் தொடர்பற்றது என்ற நிலைமை எழுந்தது. உடலுழைப்பு, உற்பத்தி ஆகியவற்றிற்குக் கல்வியில் போதிய இடம் அளிக்கப்படாததன் விளைவாக, இவைபற்றிய தவருன மனப்பான்மை கற்ருேரிடம் இயல்பாக எழுந்தது. உடலுழைப்பு உளச்செயலுக்குத் தாழ்மையானது என்றும் கருதப்பட்டது. காந்தியடிகளது ஆதாரக் கல்விமுறை இந்நிலைமையைப் போக்க முற்பட்டது. கொத்தாரிக் கல்விக்குழு காந்தியடிகளது கருத்தினை கல்வி நிலைகள் யாவற்றுக்கும் உரித்தான ஒன்று எனக்கருதி, வேலை அனுபவங்களை வலியுறுத்தியுள்ளது.

வேலை அனுபவங்கள் பள்ளியையும் வாழ்க்கையையும் இணைக்கின்றன. கல்வியையும் தொழிலையும் தொடர்புபடுத்துகின்றன. உள்ளத்தின் வளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் சேர்க்கின்றன, ஆக்கச் செயல், உற்பத்திச் செயல்கள் ஆகியன கல்வியில் இடம் பெற உதவுகின்றன. உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் முக்கிய குறைபாடு எனப்பட்ட 'வாழ்க்கைத் தொடர்பின்மையை' இவை அகற்ற உதவுகின்றன. பள்ளிகளில் வேலை அனுபவங்களை அளிக்கப் புகுத்தப்படும் செயல்கள் வேளாண்மை தொழில்நுட்பம் தொழில்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையனவாக இருத்தல்

வேண்டும். நாட்டின் இன்றைய நிலைமையில் இது மிகவும் முக்கிய மானது. ஆதாரக்கல்வித் திட்டத்தில் கைப்பணிச் செயல் பயனளிக்காமற் போனதுபோல் வேலை அனுபவங்கள் பயனளிக் காமல் போகாதிருக்க இக் கருத்து பின்பற்றப்படுவது இன்றி யமையாததாகும். செகண்டரி கல்வி 'தொழில் சார்புடையதாக' மாற்றப்படவேண்டும் எனப்படும் கருத்தைச் செயலாக்கவும் வேலை அனுபவங்கள் உதவும்.

### மாணுக்கர்களைச் சேர்ப்பதற்கான கோட்பாடுகள்

கல்வியின் பல்வேறு நிலைகளில் மாணுக்கர்களைச் சேர்ப்ப தற்கான கொள்கையினையும் (enrolment policy) கொத்தாரிக் கல்விக் குழு விளக்கியுள்ளது. இக்கொள்கை நாட்டின் மனித சக்திக்கான தேவையுடன் இணைக்கப்பட வேண்டுமென்று இது கருதுகிறது. முதல் ஏழு ஆண்டுகளுக்கான பொதுக்கல்வி எல்லோர்க்கும் இலவச மாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்படவேண்டும். கீழ் செகண்டரி கல்வியை எவ்வளவு துரிதமாகப் பரவலாக்க இயலுமோ அவ்வளவு துரிதமாக அது பரவலாக்கப்படவேண்டும். உயர் செகண்டரி, மற்றும் உயர் கல்விக்கு, இவற்றில் விருப்பமும் திறனுமுள்ளோர் மட்டும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது நாட்டின் பல்வேறு துறைகளின் எதிர்காலத் தேவைகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும். தொழிற்கல்வி, வாணிபம் ஆகியவற்றின் வள்ர்ச்சிக்குத் தேவைப்படும் பயிற்சிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படவேண்டும். எழுத்தறிவின்மையைப் போக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். எல்லோர்க்கும் சமமான கல்விவாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன் திறன்மிக்கோரது சிறப்பு வளர்ச்சிக்கான அதிக வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### கொத்தாரிக் கல்விக் குழுவின் முக்கிய பரிந்துரைகள்

இனி கொத்தாரிக் கல்விக்குழு பல்வேறு கல்விப் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை நோக்கலாம்.

1. கல்விக்கான சமவாய்ப்புகளை அளித்தல் (equalisation of educational opportunities). நாட்டில் எல்லோர்க்கும் கல்விக்கான சமவாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டுமென்பதனை கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. பிற்பட்ட வகுப்பினர், பழங்குடிமக்கள், பெண்கள் ஆகியோரது கல்வி உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்குதவக் கூடிய பல கருத்துகளையும் இது தெரிவித்துள்ளது. கல்விக்கான சமவாய்ப்புகளைப் பெறுதல் மக்களாட்சியின் குடிமக்கள் யாவருடைய உரிமையாகும்.

இவ்வாறு அளிக்கப்படுவது சமுதாய நீதியுமாகும். கல்வி வாய்ப்புகள் சமுதாயத்தில் யாவருக்கும் சமமாகக் கிட்டாமலிருத்தலுக்குப் பல காரணங்கள் உள்ளன. குறிப்பிட்ட பகுதியில் கல்லூரியோ பள்ளியோ இல்லாமலிருக்கக்கூடும். வறுமை நிலையின் காரணமாகப் பலர் கல்வி வாய்ப்பினை ஏற்றுப் பயனடையா நிலையில் இருக்கக்கூடும். கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் கல்வித் தரத்தில் காணப்படும் வேறுபாடும் சமத்துவமின்மையைத் தோற்றுவிக்கக்கூடும். மாணாக்கர்களது குடும்பச் சூழ்நிலையின் வேறுபாடு, அவர்களது கல்வியினைப் பாதித்து, அவர்களிடையே சமத்துவமின்மையை (inequality) உருவாக்கக்கூடும். கொத்தாரி கல்விக்குழு நமது நாட்டைப் பொறுத்தவரை முக்கியமாக இரு துறைகளில் கல்வியில் அதிக அளவு சமத்துவமின்மை காணப்படுகிறது என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இது நமது சமூகத்தில் மட்டும் காணப்படுவதாகும். இச் சமத்துவமின்மை சிறுவர் சிறுமியர் ஆகியோரது கல்வி வாய்ப்புகளுக்கிடையேயும், சமுதாயத்தின் உயர் மட்டத்தினர் அட்டவணை வகுப்பினர், அட்டவணைக் குடியினர் (scheduled castes and scheduled tribes) ஆகியோருக்குமிடையேயும் காணப்படுவதாகும். இது கல்வியின் எல்லா நிலைகளிலும் எல்லாவகைக் கல்வி அமைப்புகளிலும் காணப்படுகிறது. இது நாட்டு நலனுக்கு ஏற்றதாகாது என்பதுடன் அநீதியானது என்பதுமாகும். எனவே பெண்கள், அட்டவணை வகுப்பினர் ஆகியோர்களது கல்வி முன்னேற்றத்தில் பெருங் கவனம் செலுத்தப்பட்டு, பிறரைப் போன்று சமமான கல்வி வாய்ப்புகள் அவர்களும் பெற உதவ வேண்டுவதன் அவசியத்தை கொத்தாரி கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. மலைசாதியினரது கல்வியிலும் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

கல்விக்கான சமவாய்ப்புகளை யாவரும் பெறவேண்டும் என்பதன் உண்மைப் பொருளை நாம் உணர்தல் வேண்டும். சமவாய்ப்புகள் என்பது நாட்டில் உள்ளோர் அனைவரும் ஒரே வகையான கல்வி பெற வேண்டுமென்பதன்று. சாதி, சமயம், மொழி, வட்டாரம், பொருளாதார நிலை, பால்போன்ற வேற்றுமைகளினால் பாதிக்கப்படாமல், தமது கவர்ச்சிக்கும் திறனுக்கும் ஏற்ப வளர்ச்சிபெறத் தேவையான கல்வி வாய்ப்புகளை ஒவ்வொரு இந்தியக் குழந்தையும் பெறவேண்டுமென்பது இதன் உண்மைப் பொருளாகும். எல்லாக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும் நிலைமையை நோக்கி முன்னேறுவது நமது குறிக்கோளாகவிருத்தல் வேண்டும். இதற்கு இலவசத் தொடக்கக்கல்வி, அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் 7/8-ஆம் வகுப்புவரை இலவசக் கல்வி என்பது

நமது முதல் கட்டமாக அமையவேண்டும். [தமிழ்நாட்டில் புகுமுக வகுப்புவரை இன்று கல்வி இலவசம் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது]. பாடநூல்களும் பிற கல்விப் பொருள்களும் தொடக்கக் கல்வி மாணுக்கர்கள் யாவருக்கும் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். படிப்புதவிப் பணம் (scholarships) தருதல் பெருமளவில் விரிவாக்கப்படவேண்டும். இவ்வாறு பணம் அளிப்பது எந்நிலையிலிருந்து கல்வி இலவசமாக்கப்படவில்லையோ அந்நிலையிலிருந்தே தொடங்கப் பெறவேண்டும். இந்நிலைகளில் கல்வி பயிலும் மாணுக்கர்களுள் குறைந்தது 10 சதவிகிதத்தினராவது இதனைல் பயன்பெறவேண்டும். பட்ட மேற்படிப்பில் 20 சதவிகித மாணுக்கர்களுக்கும் தொழிற்கல்வியில் 50 சதவிகித மாணுக்கர்களுக்கும் இவ்வாறு படிப்புதவித் தொகை அளிக்கப்படுவதை இக் குழு ஆதரிக்கிறது. இவற்றுடன் கடனுக உதவிப்பணம் (loan scholarship) அளித்தலும் தேவை. தொடக்க நிலையில் இலவச பாடநூல்கள் அளிப்பதற்கு ஈடாக, உயர்நிலைப்பள்ளி, உயர்கல்விக் கட்டங்களில் விலை குறைந்த தரமான பாடநூல்கள் தயாரிக்கப்படுவதும், இக்கல்விக் கூடங்களில் 'பாடநூல் வங்கிகள்' (book banks) நிறுவப்படுவதும் விரும்பத்தக்கது. பொருளாதார அடிப்படையில் அளிக்கப்படும் படிப்புதவிப் பணத்துடன் தகுதி (merit) யின் அடிப்படையிலும் இவை அளிக்கப்படவேண்டும். தொழிற்கல்வி நிறுவனங்களிலும் இத்தகைய உதவிப்பணம் அளிக்கும் திட்டங்கள் தேவை. இப்போது வசதியுள்ள சிலர் தங்களது குழந்தைகளைச் சிறந்த சில பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். இதற்கு ஈடாக எல்லோர்க்கும் தரமான கல்வி அளிக்கும் பொதுப் பள்ளிகள் (common schools) நிறுவப்படுதலும் கல்வியில் சமவாய்ப்பினைத் தோற்றுவிக்க உதவும். பொதுப் பள்ளித் திட்டம் வெற்றியுடன் செயற்பட பல்வேறு பள்ளிகளின் ஆசிரியர்களிடையே ஊதிய ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாகாது. எல்லாப் பள்ளிகளது கல்வித்தரமும் சீராக ஒரே நிலைக்கு உயர்த்தப்படுதல் தேவை. எல்லாப் பள்ளிகளிலும் கல்வி இலவசமாக்கப்பட்டு, ஒரு பள்ளியைச் சுற்றிவாழும் குடும்பங்களின் குழந்தைகள் அப்பள்ளிக்கே அனுப்பப்படும் நிலைமை எழுவதும் அவசியமாகும். மற்றும், ஊனமுற்ற குழந்தைகள், பழங்குடி மக்களது குழந்தைகள், மலைசாதியினரது குழந்தைகள் போன்ருேர்க்குக் கல்விவாய்ப்புகள் பிறர்க்குச் சமமாக இருத்தல்வேண்டும். இத்தகையோர்க்கான பள்ளிகளது ஆசிரியர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல சலுகைகள் அளிக்கப்படுவது தேவையாகும்.

2. **தொடக்கக் கல்வியின் பிரச்சினைகள்:** தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துதலிலும் இந்நிலையில் பெருமளவு காணப்படும்

கழிவு, தேக்கம் ஆகியவற்றை நீக்குவதிலும் அதிகக் கவனம் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டுமென்பதனை கொத்தாரிக் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது; தொடக்க கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஏழு ஆண்டுகளையோ எட்டு ஆண்டுகளையோ முழுமையாக ஒரு மாணுக்கன் முடிக்கும் போதுதான் அக்கல்வியை அவன் பெற்றதாகும். ஆனால் நமது நாட்டில் தொடக்கக்கல்வியின் முதல் ஓரிரு ஆண்டுகளிலே கழிவு (wastage) பெரும் விகிதத்தில் ஏற்படுகிறது. இதற்குக் காரணங்கள் பலவாகும். தொடக்கப்பள்ளியின் முதல் வகுப்பு மாணுக்கர்கள் யாவரும் ஒரே வயதினராகவிருப்பதில்லை; ஒரே சமயத்திலும் இவர்கள் யாவரும் முதல் வகுப்பில் சேர்க்கப்படுவதும் இல்லை. கல்வியாண்டு முழுவதிலுமே தொடக்கப்பள்ளிகளில் முதல் வகுப்பில் மாணுக்கர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இப் பள்ளிகளில் பெரும்பான்மையினர் போதிய அல்லது குறைந்தபட்ச வசதிகளையும் கொண்டிருப்பதில்லை. தொடக்கப்பள்ளிக்கான பாடத்திட்டங்களும் கவர்ச்சியற்று காணப்படுகின்றன. கற்பதில் மாணுக்கர்களை ஊக்குவிக்கக்கூடிய, உளவியலின் அடிப்படையில் அமைந்த முறைகள் பயன்படுத்தப்படுவதில்லை. ஆசிரியர்கள் பலர் திறமைகுன்றிச் செயற்படுகின்றனர். இவற்றுடன் குடும்ப - பொருளாதாரக் காரணங்களும் இணைந்து, பள்ளிக்குக் குழந்தைகள் வருகைதருவது பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இப் பல்வேறு பொருளாதார, சமூக, கல்விக் காரணிகளை நீக்குதலுக்குதவக்கூடிய பலபரிந்துரைகளை கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது.

தொடக்கக் கல்விக்கு முன் இளங்குழந்தைகளுக்கான கல்விக்கு (pre-primary stage) ஓராண்டாகிலும் ஒதுக்கப்படல் வேண்டும்; தொடக்கப்பள்ளியின் முதல் இரண்டு அல்லது முதல் மூன்று வகுப்புகளை இக்கல்வி நிலையின் பகுக்கப்படாத முழுப்பகுதியாகக் கருதி, இவ்விரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு குழந்தையும் தனது திறனுக்கேற்ப கல்வியில் முன்னேற வாய்ப்பளிக்கலாம். ஒவ்வொரு வகுப்பு இறுதியிலும் வகுப்புத் தேர்வுக்கு அவசியமில்லை. இரண்டாவது அல்லது மூன்ருவது வகுப்பின் இறுதியில் இது நடத்தப்பட்டால் போதுமானது. தொடக்கப்பள்ளிக் கல்வி விளையாட்டு முறை, செயல் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குழந்தைகளுக்குக் கவர்ச்சியுள்ளதாக அமைக்கப்படவேண்டும். பள்ளியைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் பொருளாதார நிலை உயர்த்தப்பட்டால் 'கழிவு' குறைவுபடும். கிராமங்களில் நடத்தப்படும் தொடக்கப் பள்ளிகளது வேலை நேரம், விடுமுறைக் காலம் போன்றன இச்சிற்றூர்களின் தேவைகளுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். வேலையில் ஈடுபட்டிருக்கும்போதே கல்வி பயில உதவும்

பகுதிநேரக் கல்விமுறை இப்பள்ளிகளில் செயற்படுத்தப்படுவதும் நல்லது.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துதலில் முக்கியமான ஒன்று தொடக்கப்பள்ளி ஆசிரியர்களது நிலையினை உயர்த்துவதாகும். இந்நிலை ஆசிரியர்களது அடிப்படைப் பொதுப் படிப்பின் நிலையை உயர்த்துதல், அவர்களுக்கான ஆசிரியப் பயிற்சியின் தரத்தினை உயர்த்துதல், இவ்வாசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி (in service training) அளித்தல், தொடக்கப் பள்ளிகளிலும் ஒரு சில பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தல் போன்றன இதற்கு உதவும் என கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. நமது மாநிலத்தில் சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம், பள்ளி மருத்துவ வசதித் திட்டம், பள்ளிகளது இணைப்புத் திட்டம் (school complex), பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் (school improvement conferences) போன்றன கழிவு தேக்கம் ஆகியவற்றைக் குறைக்க உதவுவதுடன் கல்வியின் தரத்தினை உயர்த்தவும், பள்ளி - சமுதாயத் தொடர்பினை வலுப்படுத்தவும் உதவுவனவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

3. பல்நோக்குப் பள்ளிகள் (multipurpose schools) பற்றி கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள் முதலியார் கல்விக் குழுவின் கருத்துகளுக்கு மாறுபட்டவையாகும். முதலியார் கல்விக்குழு உயர்நிலைப் பள்ளியின் 10, 11-ஆம் வகுப்புகளில் பல்துறைப் பாடங்களுக்கு (diversified courses) வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிட்டது. இவ் வகுப்புகளில் தங்களது விருப்பப் பாடங்களின் அடிப்படையில் மாணுக்கர்கள் பல பகுதியினராகப் பிரிக்கப்பட்டனர். இப் பிரிவுகளின் அடிப்படையிலே அவர்களது கல்வியின் எதிர்காலம், பெருமளவு மாற்ற வியலாத முறையில் அமைந்தது. பல்துறைப் பாடங்கள் உயர்நிலைப்பள்ளிகளில் செயற்பட்டபோது சில குறைபாடுகள் எழுந்தன. பல்வேறு காரணங்களின் விளைவாகப் பெரும்பான்மையான மாணுக்கர்கள் கல்லூரிக் கல்வியை விரும்புகின்றனர். இதற்கான பாடங்களையே உயர்நிலைப் பள்ளிகளில் பயில முற்படுகின்றனர். எனவே பல்துறைப் பாடங்கள் பலரைக் கவராததுடன், திறனற்ற ஒருசில மாணுக்கர்கள் குவிந்திருக்கும் பகுதிகளாகப் பிறர் கருதக் கூடிய நிலை தோன்றியது. கல்விக்கென நிதிவசதி குறைந்த இன்று சிறுசிறு பிரிவினருக்காகப் பள்ளியில் பல்துறைப் பாட வகுப்புகளை நடத்துவது சிக்கனமற்றது. பல்நோக்குப் பள்ளிகள் எனப்பட்ட பெரும்பான்மையான பள்ளிகளிலும் ஓரிரு பாடப் பிரிவுகளுக்கு மட்டுமே வாய்ப்புகள் இருந்தன. இத்தகைய பள்ளிகள் பல்

துறைப் பாடங்கள் புகுத்தப்பட்ட நோக்கத்தினை மாணுக்கர்கள் எய்த உதவுவனவாகவில்லை. 9-வது வகுப்பு மாணுக்கர்கள் இவ்விள வயதில் தங்களது எதிர்காலம் பற்றிச் சிந்தித்து திட்டவட்டமான முடிவுகளை எடுத்து, இவற்றுக்கேற்ற பாடப் பிரிவைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் தவறு. இவ்வாறு இவர்கள் தேர்ந்தெடுத்தலுக்குதவும் வழிகாட்டுதல் (guidance) திட்டமும் பள்ளிகளில் செயற்படுத்தப்படவில்லை. எனவே கொத்தாரி கல்விக்குழு பொதுக் கல்வியினையே செகண்டரி கல்வியின் இறுதி ஆண்டுவரை வலியுறுத்தியது. பொதுக்கல்வி தேவைப்படாதோர்க்குத் தனியாகத் தொழிற்கல்வி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதனை இக் கல்விக்குழு ஆதரித்தது.

4. மொழிப் பிரச்சினை (language problem) இப் பிரச்சினை நம் நாட்டுக் கல்வி அமைப்பில் மட்டுமே காணப்படும் சிக்கலான ஒரு பிரச்சினையாக விளங்குகிறது. பிற நாட்டுக் கல்வியில் பொதுவாக இது ஒரு பிரச்சினையாகவிருப்பதில்லை. மெக்காலே பிரபுவின் கல்விக்குறிப்பின் விளைவாக ஆங்கிலம் முக்கிய பயிற்று மொழியாக வளர்ச்சி பெற்றது; ஆங்கில ஆட்சியினர் இதற்கு முழுமையான ஆதரவினை நல்கினர்; தாய்மொழிகளது வளர்ச்சியும் செல்வாக்கும் இதனல் பெரிதும் பாதிக்கப்பட்டது. நாடு விடுதலை பெற்றபின் நாட்டிற்குப் பொது இணைப்பு மொழியாக, பெரும்பான்மையினரால் பேசப்படுவதாகக் கூறப்படும் இந்தி மொழி வலியுறுத்தப்பட்டது; ஆங்கிலத்திற்குப் பதில் அலுவலக மொழியாக இதனைப் பயன்படுத்தவேண்டுமென்ற இயக்கம் நாட்டின் சில பகுதிகளில் தோன்றியது. இதேபோது தாய்மொழி இயக்கங்களும் வலுப்பெற்றன. மொழிப் பிரச்சினையுடன் அரசியலும் இணைந்து, கல்வித் துறையில் இதற்கு ஒரு தீர்வு காண மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவற்றிலும் குறுக்கிடலாயிற்று. சுதந்தரம் பெற்றபின் அமைக்கப்பட்ட கல்வி ஆய்வுக் குழுக்கள் யாவுமே மொழிப் பிரச்சினை பற்றி ஆராய்ந்துள்ளன. 1956-ஆம் ஆண்டில் நாட்டின் ஒருமைப்பாட்டினைக் கருத்தில்கொண்டு மையக்கல்வி ஆறிவுரை வாரியம் 'மும்மொழித் திட்டத்தினை' உருவாக்கியது. ஆனல் பல காரணங்களின் விளைவாக இது நாட்டின் எப்பகுதியினராலும் ஆர்வத்துடனும் ஊக்கத்தோடும் செயற்படுத்தப்படவில்லை.

கல்வியில் மொழிப் பிரச்சினையில் பல வினக்கள் அடங்கியுள்ளன. கல்வியின் பல்வேறு நிலைகளில் பயிற்று மொழியாக எம் மொழியைப் பயன்படுத்தவேண்டும்? மாணுக்கர்கள் எத்தனை மொழிகளைக் கற்கவேண்டும்? நாட்டின் நிருவாக மொழி எனப்படும் இந்தி, அனைத்துலக மொழி எனப்படும் ஆங்கிலம் ஆகிய

வற்றின் இடம் யாது? மாணவர்கள் கற்கவேண்டிய மொழிகள் எவ்வகுப்புகளில் தொடங்கப் பெறவேண்டும் போன்றன இவற்றுள் சிலவாம். இவற்றுக்கு எல்லோரும் ஏற்கக்கூடிய விடைகள் சீக்கிரம் குறிப்பிடப்படாவிட்டால் கல்வி வளர்ச்சி தடைப்படும். கல்வி அமைப்பில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும்போது ஐந்து பிரிவுகளிலான மொழிகளின் பங்குபற்றி முடிவெடுத்தல் வேண்டும். இவை தாய்மொழி, தாய்மொழியல்லாத வட்டார மொழி, மத்திய அரசின் நிருவாக மொழி, பண்பாட்டுச் சார்புள்ள பண்டைய மொழிகளான வடமொழி அரபு மொழி பாரசீக மொழி போன்றவை, ஆங்கிலம் போன்ற தற்கால அனைத்துலக மொழி ஆகியனவாம். மொழிப் பிரச்சினை பொதுவாக சிந்தனையின் அடிப்படையிலன்றி மனவெழுச்சியின் அடிப்படையிலேயே பெரும்பாலும் அணுகப்படுவதால் இதுபற்றி உணர்ச்சி வயப்படுதல் எளிது; இதன் விளைவாக இப்பிரச்சினை பற்றி தீவிரக் கருத்து வேறுபாடுகள் எழுவது இயல்பு.

கொத்தாரி கல்விக்குழுவும் மொழிப் பிரச்சினையினை ஆராய்ந்து இதுபற்றிய தனது கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளது. இவை பின் வருவனவாகும். நிருவாக அல்லது அலுவலக மொழி என்னும் முறையில் தாய்மொழிக்கடுத்தபடியான முக்கியத்துவத்தை இந்தி மொழி பெறுகிறது; இதேபோது ஆங்கிலத்தின் பயனைப் புறக்கணிக்கக்கூடாது. ஆங்கிலமொழி அறிவும் நாட்டுக்குத் தொடர்ந்து தேவைப்படுவதாகும். மாணாக்கன் மொழியில் அடையும் திறன் கற்பிக்கும் ஆசிரியரையும் கற்றலில் செலவிடப்படும் காலத்தையும் சார்ந்தமைவதாகும். மூன்று மொழிகளை மாணாக்கர் கற்க ஏற்ற நிலை கீழ் செகண்டரி நிலையாகும்; ஆனால் பிறமொழிகள் இரண்டையும் ஒரே வகுப்பில் கற்பிக்கத் தொடங்கக்கூடாது. பொதுவாக, மும்மொழித் திட்டத்தினைச் சில மாறுதல்களுடன் கொத்தாரி கல்விக்குழு ஏற்றுள்ளது. மாணாக்கன் தனது கல்விக் காலத்தில் தாய்மொழி அல்லது வட்டார மொழி, நிருவாக மொழி அல்லது இணைப்பு நிருவாக மொழி, மேலே குறிப்பிடப்பட்டவற்றுள் சேராத தற்கால இந்திய அல்லது ஐரோப்பிய மொழி ஆகியவற்றைக் கற்கவேண்டும். கீழ்த்தொடக்கநிலையில் மாணவர்கள் தாய்மொழி அல்லது வட்டார மொழியினைக் கற்பார்; உயர் தொடக்கநிலையில் தாய்மொழி அல்லது வட்டார மொழியுடன் நாட்டின் நிருவாக மொழி (இந்தி) அல்லது இணைப்பு நிருவாக மொழி (ஆங்கிலம்) ஆகியவற்றுள் ஒன்று தொடங்கப்பெறும்; விடுபட்டுள்ள மற்ற மொழி கீழ் செகண்டரி நிலையில் கற்கப்படும். இங்கு ஒன்று நினைவில் கொள்ளவேண்டும். பயிற்று மொழியைப் பொறுத்தவரை தாய்மொழி அல்லது வட்டாரமொழி உயர்கல்விக்

கட்டம்வரை பயிற்று மொழியாகவிருக்க வேண்டுமென்ற கருத்தை கொத்தாரிக் கல்விக்குழு ஏற்றுள்ளது. மேலே குறிப்பிடப் பட்டுள்ளது பயிற்றுமொழி பற்றியதன்று; பள்ளிக்காலத்தில் மாணுக்கன் கற்கவேண்டிய மொழிப்பாடம் பற்றியதாகும்.

கொத்தாரிக் கல்விக்குழு இதுபற்றி மேலும் சில பரிந்துரைகளையும் செய்துள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிட்ட சில பள்ளிகளில் ஆங்கிலம் தவிர ருஷியமொழி, ஜெர்மன்மொழி, பிரென்சுமொழி போன்ற பிற தற்கால நூலக மொழிகளை (library languages) கற்கவும் வாய்ப்புகள் இருக்கவேண்டும்; ஆங்கிலம் அல்லது இந்திக்குப்பதில் இவற்றில் ஒன்றினை மாணுக்கர் கற்கலாம். இதேபோல் இந்தி பேசப்படாத பகுதி மாணுக்கர்கள் தற்கால இந்திய மொழி எதனையும் கற்க வாய்ப்பிருக்கவேண்டும். இந்தி அல்லது ஆங்கிலம் கற்கும் மாணுக்கர்கள் இதில் மூன்றாண்டு அடைவு நிலையினையோ ஆறு ஆண்டு அடைவு நிலையினையோ எய்தலாம். உயர்கல்வியில் மொழிக்கல்வி கட்டாயமான ஒரு பகுதியாக இருக்கத் தேவையில்லை. இந்தி பரவ பல்வேறு ஆக்கமுறைப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் விருப்பமில்லாத பகுதிகளில் இந்திமொழி வற்புறுத்தித் திணிக்கப்படக்கூடாது. குழந்தை தாய்மொழியில் போதிய புலமை பெற்ற பின்னரே (சாதாரணமாக ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னரே) வேறு ஒரு மொழி கற்பிக்கப்படவேண்டும். வடமொழி போன்றவற்றை எட்டாம் வகுப்பிற்குப்பின் மாணுக்கர் விரும்பினுல் கற்கலாம்.

தமிழ் நாட்டினைப் பொறுத்தவரை பயிற்று மொழி தாய் மொழியாக உள்ளது. உயர்கல்வி நிலைவரை தமிழ் பயிற்று மொழியாகச் செயற்படுகிறது. இதேபோது ஆங்கிலம் புறக்கணிக்கப்படவில்லை. மொழிப்படிப்பைப் பொறுத்தவரை தமிழ்நாடு 'இருமொழிக் கொள்கை'யினைப் பின்பற்றி வருகிறது; நிருவாகம் பயிற்றுமொழி ஆகியவற்றுக்குத் தமிழும், பிறருடன் தொடர்புக்கு ஆங்கிலம் இவ்விரு மொழிகளாகும்.

## 5. ஆசிரியக் கல்வியும் ஆசிரியர்களது நிலையும்

கல்விக்கூடங்களின் சிறப்பு, அவற்றில் அளிக்கப்படும் கல்வியின் தரம், அக்கல்வியின் விளைவாக மாணுக்கர்கள் பெறும் பயன்கள் ஆகியன யாவும் இக் கல்விக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களது திறமையையும் மனப்பான்மையையும் சார்ந்து அமைவனவாம். சிறந்த கற்பித்தல் முறைகளது வெற்றியும் அவற்றைக் கையாளும் ஆசிரியர்களது ஆற்றலைச் சார்ந்தே அமைவதாகும். எனவே, கல்வித்தரத்தை உயர்த்த மேற்கொள்ளப்

படும் எம்முயற்சியிலும் ஆசிரியப்பயிற்சி (teacher training) முக்கிய மான பகுதியாக அமையுமென்றும், கல்வி வளர்ச்சியின் மையப் பகுதியாக இது கருதப்பட வேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக் குழு குறிப்பிட்டுள்ளது. ஆசிரியக்கல்வி சிறப்பாகச் செயற்பட வேண்டுமாயின் அது பல்கலைக்கழக கல்வியுடன் இணைந்த வகை யிலும், அதேபோது பள்ளி வாழ்க்கை கல்வி வளர்ச்சி ஆகியவற் றுடனும் தொடர்புகொண்டும் செயற்படவேண்டும். ஆனால் இன்று இந்நிலை காணப்படவில்லை. கல்வி அமைப்பின் பல்வேறு பிரிவுகளினின்றும் ஆசிரியக்கல்வி தனித்துத் தொடர்பின்றி (isolation) இயங்கிவருகிறது. ஆசிரியக் கல்வித்தரம் உயர, இவ்வாறு தனித்தியங்குவது தவிர்க்கப்படவேண்டும். இதற்கான பல கருத்துகளை கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. பல்கலைக்கழக பட்டப்படிப்பில் 'கல்வியியல்' (education) ஒரு விருப்பப்பாடமாக அமைக்கப்படவேண்டும். கல்வியியலில் உயர் பட்டப்படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றுக்கும் பல்கலைக் கழகங்களில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்குதவும் வகையில், குறிப்பிட்ட சில பல்கலைக் கழகங்களுடன் இணைந்த கல்வியியல் பள்ளிகள் (schools of education) ஏற்படுத்தப்படலாம். இவை ஆசிரியக்கல்வி பற்றியும் ஆராய்ந்து, அதன் வளர்ச்சிக்குதவக்கூடிய திட்டங்களையும் உருவாக்கும். பயிற்சிக் கல்லூரிகளில் விரிபயிற்சித் துறை (extension service department) அமைக்கப்படவேண்டும். இவை பயிற்சிக் கல்லூரிகளையும் இணைக்க உதவும். இத்துறையின் இணைப்பாளரும் (coardinator) பயிற்சிக் கல்லூரியின் பிற ஆசிரியர்களும் கருத்தரங்குகள், செயலரங்குகள் போன்ற விரி பயிற்சிக்கான செயல்களில் ஈடுபடுவதுடன் பள்ளிகளது பிரச்சினை களை ஆராய்ந்து அவற்றிற்கான பல்வேறு கருத்துகளைத் தந்துதவும் பணியிலும் ஈடுபடவேண்டும். பயிற்சிக் கல்லூரிகளது பழைய மாணாக்கர்கள், பிற ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட கூட்டங் களுககு அடிக்கடி பயிற்சிக் கல்லூரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். இக் கூட்டங்களில் பள்ளிகளது கற்பித்தல், நிருவாகம் போன்றவற்றுடன் தொடர்புடைய பல பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். பயிற்சிக் கல்லூரிகளையும் பள்ளிகளையும் இணைப்ப தற்கும், புதிய கல்விக் கருத்துகளைப் பயிற்சிக் கல்லூரி ஆசிரி யர்கள். பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிடையே பரப்புவதற்கும் மாநிலக் கல்விக் கழகங்கள் (State Institutes Education) அமைக்கப் படுதலும் தேவைப்படுவதாகும். எல்லா நிலை ஆசிரியப்பயிற்சி அமைப்புகளும், இப்போது தனித்தனியே இயங்குவது தவிர்க்கப் பட்டு, பல்கலைக்கழகங்களின் பொறுப்புக்குள் விடப்படவேண்டியது அவசியமாகும். ஒவ்வோர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலும் பல்வேறு நிலைகளுக்கான ஆசிரியப் பயிற்சிப் பிரிவுகள் யாவும்

இருத்தல் (comprehensive colleges of education) விரும்பத்தக்கது. இது இவற்றுக்கிடையே தேவைப்படும் தொடர்பினை உருவாக்க உதவும். பயிற்சிக்கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களும் சாதாரண உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் அவ்வப்போது இவற்றுக்கிடையே பணியாற்ற மாற்றப்படுதலும் நல்லது. இது ஆசிரியப் பயிற்சியின் தரத்தை உயர்த்த உதவுவதுடன், ஆசிரியப்பயிற்சி நிலையங்களைப் பிறகல்வி நிலையங்களுடன் இணைத்தலிலும் உதவும்.

ஆசிரியப் பயிற்சியின் தரத்தினை உயர்த்த உதவக்கூடிய வேறு பல கருத்துகளையும் கொத்தாரி கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. தொடக்கக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்காலம் இரண்டாண்டுகளாகவும் பட்டம் பெற்றோர்க்கான ஆசிரியப் பயிற்சிக்காலம் ஓராண்டாகவும் இருக்கலாம். ஆனால் பட்டம் பெற்றோர்க்கான ஆசிரியப் பயிற்சிக்காலத்தில் வேலை நாட்கள் குறைந்தது 230 நாட்களாகிலும் இருக்கவேண்டும். மாநிலங்களுக்கான 'ஆசிரியக் கல்வி வாரியம்' அவ்வப்போது ஆசிரியக் கல்விபற்றி ஆராய்ந்து இதில் தேவைப்படும் மாற்றங்கள்பற்றி அறிவுரை கூறுவது நல்லது. ஆசிரியக் கல்வியில் 'கற்பித்தல் பயிற்சி' (practice teaching) பள்ளிகளது ஒத்துழைப்புடன் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டும். கற்பிக்கப்போகும் பாடம் பற்றிய புதிய கருத்துகளை அறிமுகப்படுத்தல், பொதுக்கல்வி, ஆசிரியக்கல்வி ஆகிய இரண்டும் இணைந்த பட்டப் படிப்புக்கு ஏற்பாடு செய்தல், கல்விக் குறிக்கோள்களுக்கு ஏற்ப பயிற்சிக் கல்லூரிகள், பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றின் பாடத்திட்டத்தினை உருவாக்குதல், கோட்பாடுகளையும் செயல்களையும் இணைத்தல், ஆசிரிய - மாணாக்கனது முன்னேற்றத்தைக் கல்லூரி அல்லது பயிற்சிப்பள்ளி வாழ்க்கை முழுவதுமே தொடர்ந்து மதிப்பீடு செய்தல் போன்ற கருத்துகளையும் கொத்தாரி கல்விக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. மற்றும் பயிற்சிக்கல்லூரி ஆசிரியர்கள் உயர்பட்டமும் ஆராய்ச்சிப் பட்டமும்பெற வாய்ப்புகளை ஏற்படுத்துதல், சிறந்த பட்டதாரிகளை ஆசிரியப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்தல், மாதிரிப் பள்ளிகளைப் பயிற்சிக் கல்லூரிகளுடன் இணைத்தல், பணியிடைப் பயிற்சி வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றனவும் ஆசிரியக் கல்வித்தரம் உயரத்துணை செய்வனவாம். கல்லூரிகளில் பணிபுரியும் புதிய இளம் விரிவுரையாளர்களுக்கும் ஆசிரியப்பயிற்சி தேவைப்படுவதாகும் என்று கொத்தாரி கல்விக் குழு கருதியது. இதற்கான கல்லூரி ஆசிரியப்பயிற்சித் திட்டங்கள் தற்போது உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப் படுகின்றன. தொழில்நுட்பக் கல்விக்கூட ஆசிரியர்களுக்கென்று (technical

teachers) ஆசிரியப் பயிற்சிக்கூடங்களும் தற்போது ஏற்படுத்தப் பட்டுள்ளன.

ஆசிரியர்களது நிலை பற்றியும் கொத்தாரிக் கல்விகுழு ஆராய்ந்து, இதனை மேம்படுத்துவதற்கான பல பரிந்துரைகளைக் கூறியுள்ளது. ஆசிரியர்களது பொருளாதார, சமூக, தொழில் நிலையை உயர்த்தவும், திறமையும் ஆர்வமும் உள்ள இளைஞர்களை இப்பணியில் ஈடுபட ஊக்குவிக்கவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதனை இது வலியுறுத்தியுள்ளது. ஆசிரியர்களது ஊதியம் உயர்த்தப்படுவதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்றும் பல்வேறு நிலைகளது ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் அரசாங்கத்தினரால் நிர்ணயிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டுமென்றும் இக் கல்விக் குழு வலியுறுத்தியுள்ளது. இவ்வூதியம் எவ்வாறு அமையவேண்டும் என்பதுபற்றி ஒரு பட்டியலை கொத்தாரிக் கல்விக்குழு தனது அறிக்கையின் இறுதியில் இணைத்துள்ளது. இதில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், உயர்பட்டம் பெற்றுள்ள உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள், இணைப்புக் கல்லூரி களின் ஆசிரியர்கள், இவற்றின் முதல்வர்கள், மற்றும் பல்கலைக் கழகங்களின் பல்வேறு நிலைப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர்க்கான ஊதிப விவரங்கள் தரப்பட்டுள்ளன. ஒரே நிலையில் பணிபுரியும் பள்ளி ஆசிரியர்களுக்கு, இவர்கள் எத்தகைய நிருவாகங்களில் பணிபுரிவோராகவிருப்பினும், ஒரே அளவு ஊதியம் அளிக்கப்பட வேண்டும். உயர்பட்டம் பெற்றோர்க்கு அதிக ஊதியம் அளிக்கப் படவேண்டும். ஆசிரியர்களது ஊதிய அமைப்பு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையேனும் மறுபரிசீலிக்கப்பட்டு, அது வாழ்க்கைப் புள்ளி உயர்வுடன் இணைக்கப்பட்டு மாற்றியமைக்கப்படவேண்டும். பதவி உயர்வுக்கான சில குறிப்புகளையும் இக் கல்விக்குழு தந்துள்ளது; பதவி உயர்வில் தகுதி திறமை ஆகியன கவனிக்கப்படவேண்டுவதன் அவசியத்தையும் இது சுட்டிக்காட்டியுள்ளது. ஆசிரியர்களது நலனுக்கான அமைப்பு ஒன்று (welfare services) ஒவ்வொரு மாநிலத்திலும் நிறுவப்படவேண்டும். இதற்குத் தேவைப்படும் நிதிக்காக ஒவ்வோரீர் ஆசிரியரும் தனது ஊதியத்தில் $1\frac{1}{2}$% அளிக்கலாம்; இதே அளவினை அரசும் அளிக்கவேண்டும். ஆசிரியர் களுக்கான 'முப்பயன்' திட்டத்தினை (triple benefit scheme) கொத்தாரிக் கல்விக்குழு ஆதரித்தது. ஓய்வு ஊதியம் (pension) திட்டமிடப்பட்ட முறையில் செயற்படுத்தப்படுவது அவசியமாகும். ஆசிரியர்கள் பணிபுரிவதற்கேற்ற நல்ல சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு வீட்டு வசதியளிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டும். பெண்கள் ஆசிரியப் பணிக்கு வருதல்

ஊக்குவிக்கப்படுவதுடன் இவர்கள் நன்கு பணியாற்றத் தேவை யான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதும் இன்றியமையாததாகும். பழங்குடிமக்கள், மலைசாதியினர் ஆகியோர்க்கான கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு மேலும் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். ஆசிரியத் தொழிற் கழகங்களும், (teacher's professional organisations) ஆசிரியர் அரசு கல்வித்துறை கூட்டு அமைப்பு களும் சிறப்பாக இயங்குவது ஆசிரியர்களது நலன்களுக்கு உதவுவ தாகும். சிறந்த ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகள் அளிக்கும் திட்டம் மேலும் பரவலாக்கப்படுவதையும் கொத்தாரிக் கல்விக் குழு விரும்பியது.

6. கற்பித்தல் முறைகள்: பள்ளிக் கல்வியைப் பொறுத்த வரை தரக்குறைவு, உற்சாகமற்றும் கவர்ச்சியற்றும் இயங்கும் கற்பித்தல் முறைகள் ஆகியன பரவலாகக் காணப்படுவதனைக் கொத்தாரிக் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கான பல்வேறு காரணங்களுள் முக்கியமான ஒன்று சிறந்த கற்பித்தல் முறைகள் பற்றிய ஆராய்ச்சி குறைந்து காணப்படுவதும், இத்தகைய முறைகள்பற்றி சாதாரணமாக ஆசிரியர்கள் அறிந்தி ராமையும் ஆகும். கல்வி ஏற்பாட்டினை (curriculum) மாற்றி யமைத்தலோடு, கற்பித்தல் முறைகள் (teaching methods), மதிப்பீட்டு முறைகள் (methods of evaluation) ஆகியவற்றிலும் முன்னேற்றம் இருந்தால்தான் கல்விப்பயன் சிறப்பாக அமையும். கற்பித்தல் முறைகளைப் பொறுத்தவரை சிறந்த ஓர் கல்வி அமைப்பு இயங்கும் தன்மையும் நெகிழ்ச்சியும்பெற்று காணப்பட வேண்டும். பயனுள்ள முறைகள் என அனுபவத்தின் வாயிலாக ஏற்கெனவே உணரப்பட்ட முறைகள் பல பள்ளிகளில் தொடர்ந்து கையாளப்பட்டு வருதல் இப் பள்ளிகளுக்குக் காப்புணர்ச்சியை (security) அளிக்கும்; இதேபோது சிறந்த சில பள்ளிகள், புதிய கற்பித்தல் முறைகளைக் கையாளவும் சுதந்தரம் அளிக்கப்பட வேண்டும். இதற்கு, சிறந்த ஆசிரியர்கள் புதிய முறைகளை உருவாக்கிப் பயன்படுத்துதலில் ஊக்குவிக்கப்படல் அவசியமாகும். இதற்கான தலைமைப் பொறுப்பினைப் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்பதோடு, கற்பித்தலுக்கான புதிய கல்விப் பொருட்களை (teaching aids and materials) ஆக்கித்தருவதிலும் இவை ஈடுபட வேண்டும். புதிய கற்பித்தல் முறைகளைப்பற்றிய அறிவினை பள்ளி ஆசிரியர்களிடையே பரப்புவதும் இக் கல்லூரிகளின் பணியாகும். கற்பித்தல் பொருள்கள் எனப்படுவதுள் தரமான விலை குறைந்த பாடநூல்கள், கற்பித்தலுக்கு வழிகாட்டும் ஆசிரியர்க்கான நூல்கள் (teacher's guide books) போன்றனவும் அடங்கும். சிறந்த பாடநூல்களை உருவாக்க மத்திய அரசிலும் மாநில அரசு

களிலும் சுதந்தரமாகச் செயற்படக்கூடிய பாடநூல் அமைப்புகள், ஏற்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது 3 அல்லது 4 பாடநூல்கள் சிறந்த முறையிலே உடனடியாக உருவாக்கப்படவேண்டும். இவையும் தொடர்ந்து அவ்வப்போது மேலும் சிறப்பாக்கப்படவேண்டும். பாடநூல்கள் மாணுக்கர்களது கூட்டுறவுச் சங்கங்கள் வழியே அவர்களுக்கு விற்கப்படவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கும் தேவைப்படும் குறைந்தபட்ச காட்சிக் கேள்விக் கருவிகளின் பட்டியல் ஒன்று உருவாக்கப்படவேண்டும். இவற்றில் காணப் படுவன பள்ளிகளில் இருத்தல்வேண்டும். அகில இந்திய வாஞெலி நிலையங்கள் கல்வி ஒலிபரப்பினைத் தொடர்ந்து நடத்திவருகின்றன. இவற்றினின்றும் மேலும் சிறந்த பயன்களைப் பள்ளிகள் பெற, வாஞெலிப் பாடங்களுக்கான கற்பித்தல் துணைப் பொருட்கள் தயாரிக்கப்படவேண்டும். சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி, மிகக் குறைந்த செலவில் எளிய துணைக் கருவிகளைத் (improvised teaching aids) தயாரித்தலில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். பிற துணைக் கருவிகளும் பள்ளிகளுக்கு அளிக்கப்படவேண்டும். கற்பித்தல் நன்கு செயற்பட, ஒரு வகுப்பில் தொடக்கப்பள்ளிகளில் 50-க்கு அதிக மான எண்ணிக்கையிலும், உயர் தொடக்கப்பள்ளிகளில் 45-க்கு அதிகமாகவும், உயர் செகண்டரி பள்ளிகளில் 40-க்கு அதிகமாகவும் மாணுக்கர்கள் இருக்கக்கூடாது. பள்ளிக் கட்டடங்கள் விரை வாகவும் சிக்கனமாகவும் நாட்டு நிதி வசதிக்கேற்பவும் கட்டப்பட வேண்டும். இதற்குத் துணைசெய்யும் வகையில் பொதுப்பணித் துறையோடு இணைந்து செயற்படும் கல்வித்துறை கட்டடக்குழு மாநிலங்களில் அமைக்கப்படவேண்டும். கிராமப்புறங்களில் பள்ளிக்கட்டடம் கட்டும்பணியில் சமுதாயத்தினரது உதவி பெறப்படுவது நல்லது.

7. மதிப்பீடும் தேர்வுகளும் (Evaluation and Examinations) கல்வியமைப்பின் இன்றியமையாப் பகுதிகளாகும். இவற்றினைப் பயன்படுத்தி மாணுக்கர்களது கல்விச் சாதனையை அளவிட்டறி தலோடு, அதனை மேலும் உயர்த்துதவவும் இயலும். மாணுக்கர் களது படிப்புப் பழக்கங்கள், ஆசிரியர்களது கற்பித்தல் முறைகள் ஆகியவற்றினை நன்கு மாற்றியமைத்தலுக்கும் இவை உதவுவன வாம். இதற்கு, எழுத்துத் தேர்வுகள் மேலும் ஏற்புடைமை யுள்ளனவாகவும் (Valid) நம்பகமானவையாகவும் (Reliable) மாற்றியமைக்கப்பட வேண்டும். தொடக்க நிலையில் தேர்வினைப் பொறுத்தவரை முதல் நான்கு வகுப்புகளையும் பிரிக்கப்படாத ஒரு முழுமையாகக் கருதலாம். தேவைப்பட்டால் 1, 2-ஆம் வகுப்

புகள் ஒரு பிரிவாகவும், 3, 4-ஆம் வகுப்புகள் மற்ருென்ருகவும் பிரிக்கப்படலாம். இவற்றில் வேகமாகக் கற்போர் மெதுவாகக் கற்போர் ஆகியோர்க்கான இரு பிரிவுகள் இருத்தல் விரும்பத் தக்கது; உயர்த் தொடக்க நிலையில் எழுத்துத் தேர்வுடன் வாய் மொழித் தேர்வும் தேவைப்படும். பள்ளிகளில் அகத்தேர்வு (Internal Assessment) வலியுறுத்தப்பட வேண்டும்; மாணக்கர் களது கல்வி வளர்ச்சியினை மதிப்பிடுகையில் பாட அறிவோடு, கல்வியின் பிற கூறுகளின் வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்பட்டு இவையும் மதிப்பிடப்படுதல் தேவை. [தமிழ்நாட்டில் தற்போது மாணக்கனது வளர்ச்சியினை முழுமையாக மதிப்பிடுவதற்கான (Total Assessment) திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.] குறையறி சோதனைகளைப் பயன்படுத்தி (diagneatic tests) மாணக் கர்களது கல்வி வளர்ச்சியில் குறுக்கிடும் தடைகளை நீக்குவதும் வேண்டப்படுவதாகும். பள்ளிகளில் மாணக்கர்களது வளர்ச்சி யினைத் தொடர்ச்சியாகத் தொகுத்து வைத்தர்க்கான திரள் பதிவுகள் (cumulative records) வைக்கப்படுவது நல்லது. பள்ளி யின் அகத் தேர்வுகளின் நம்பகத்தை உயர்த்தவுதவும் பல முறை களை இக் கல்விக்குழு தெரிவித்துள்ளது. அகத் தேர்வுகள் புறத் தேர்வுகள் ஆகியவற்றில் மாணக்கர் பெற்ற மதிப்பெண்களைத் தனித்தனியே குறித்து வைக்கப்படுவது தேவைப்படுவதாகும். தொடக்கக் கல்வியின் இறுதியில் மாவட்டநிலையில் பொதுத்தேர்வு ஒன்று தேவைப்பட்டால் வைக்கப்படலாம்; உயர்நிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் ஒரு பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும். மற்றும், ஒரு சிலச் சிறப்பான பள்ளிகளுக்குத் (experimental schools) தங்களது மாணக்கர்களது தரத்தினைத் தாங்களே மதிப் பிட்டுச் சான்றிதழ் அளிக்கும் உரிமை அளிக்கப்படலாம் என்றும் கொத்தாரிக் கல்விக்குழு கூறியுள்ளது.

8. வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும் (guidance and counselling) கல்வியின் எல்லா நிலைகளிலும் தேவைப்படுகின்றன, கல்வி அமைப்பின் இன்றியமையாப் பகுதிகளாக இவை கருதப்பட வேண்டும். குறையறி சோதனைகளைப் பயன்படுத்துதல், தனியாள் வேற்றுமைகள் பற்றி உணர்தல் ஆகியன வழியே தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் வழிகாட்டலுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பல்வேறு தொழில்களைப் பற்றிய சிறு விளக்க நூல்களைத் தயாரித் தல், மேலும் எத்தகையக் கல்வியை நாடலாம் என்பது பற்றி மாணக்கர்களுக்கும் பெற்றேர்களுக்கும் உதவுதல் போன்றனவும் இந் நிலைக்கான வழிகாட்டுதல் திட்டத்தில் இடம் பெறும். உயர் நிலைப்பள்ளி நிலையில், ஒவ்வொரு மாணக்கனது ஆற்றல்களையும், கவர்ச்சிகளையும் கண்டுபிடிப்பதிலும் இவற்றை வளர்ப்பதிலும் வழி

காட்டுதல் துணை புரியவேண்டும். மீத்திற மாணுக்கர்களைக் (gifted) கண்டுபிடித்து அவர்களுக்கேற்ற கல்வியையளிப்பதும் பிற் பட்ட மாணுக்கர்களது குறைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, அவர்களது முன்னேற்றத்துக்கு உதவுவதும் வழிகாட்டலின் தொடர்ந்த பொறுப்புகளாக அமையும். பள்ளிகளில் அறிவுரை பகர்தல் வழிகாட்டுதல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை அதிகரித் தலோடு, ஆசிரியர்களும் இவற்றுக்கான பயிற்சியினைப் பெறுவது விரும்பத்தக்கது.

9. அறிவியற் கல்வி (science education) தம்நாட்டின் உற்பத் தித்திறன் பெருக்கத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அறிவி யல், மற்றும் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சி இன்றியமையாத தாகும். ஆனுல், வளர்ச்சியடைந்துள்ள பல மேற்கத்திய நாடுகள், ஆசிய நாடுகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது அறிவியற்கல்வியின் தரம் சிறிது குறைந்துதான் காணப்படுகிறது என்பதனைக் கொத்தாரிக் கல்விக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. இந் நிலைமை துரிதமாக மாற்றப்படவேண்டும். ஆராய்ச்சித் திறன் மிக்க மாணுக்கர்கள் அறிவியல் துறைகளுக்கான கல்விக்குத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும்; அறிவியல் ஆராய்ச்சிகளும் நமது நாட் டின் தேவைகளுக்கேற்ப முன்னுரிமைப்படி வரிசைப்படுத்திக்கொள் ளப்படுவது விரும்பத்தக்கது. பள்ளிப் படிப்புக் கட்டத்திலும் அறி வியல் பாடம் முக்கியமான ஒன்ருக இருத்தலோடு, இப்பாடத்தின் துணைகொண்டு மாணுக்கர்களிடையே அறிவியல் மனப்பான்மை (scientific attitude) வளர்க்கப்படுதலும் இன்றியமையாதது. கணக்கு, அறிவியல் ஆகியவற்றின் பாடத்திட்டங்கள் உயரும் வகை யில் இவை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆய்வுக்கூடங்களும், செயற்கூடங்களும் (laboratories and workshops) போதிய அள வில் இருத்தல் இன்றியமையாதது. கணக்கு, அறிவியல் ஆகியவற் றில் ஆராய்ச்சிகளுக்கான வாய்ப்புகள் பெருக்கப்படவேண்டும். இதற்குப் பல்கலைக் கழகங்கள் பெரும் பொறுப்பு மேற்கொள்வது தேவைப்படும். அடிப்படை ஆராய்ச்சிகள் (pure or basic research), நடைமுறைப் பயனுள்ள ஆராய்ச்சிகள் (applied research) ஆகிய இரண்டும் இணைந்த ஆராய்ச்சி வகைகளேயாகும்; ஆதலின் இவ்விரண்டிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். பல்வேறு அறிவியல் துறைகளுக்கான உயர் ஆராய்ச்சி மையங்கள் (centres for advanced studies) நாட்டில் நிறுவப்படுதல் தேவைப் படுவதாகும். நாட்டிற்கென்று ஓர் அறிவியற் கொள்கை (National Science Policy) உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப் படுதலை கொத் தாரிக் கல்விக்குழு விரும்பியது.

**10.** பெண் கல்வி ஆங்கில ஆட்சிக் காலத்தில் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுக் காணப்பட்டது. ஆனல் நாட்டின் முன்னேற்றத்துக்கு பெண்கல்வி இன்றியமையாததாகும். சுதந்தரம் பெற்ற பின் நமது நாட்டில் பெண்கள் கல்வியின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டுள்ளது. குடும்ப வாழ்க்கையை வளமாக்கவும், குழந்தைகளது கல்வி வளர்ச்சியினை ஊக்குவிக்கவும், நாட்டின் மக்களது எழுத்தறிவின்மையைப் போக்கவும், பல்வேறு சமுதாய வளர்ச்சித் திட்டங்களை வெற்றியுடன் செயற்படுத்தவும் பெண்கள் கல்வி வளர்ச்சி பெறுதல் அடிப்படையாகும். இதனைக் கருதியே கொத்தாரிக் கல்விக்குழு வெகு துரிதமாக, முழுமுயற்சி மேற்கொள்ளப் பட்டு ஆண்களது கல்வி வாய்ப்புகளுக்கும் பெண்களுக்கான கல்வி வாய்ப்புகளுக்குமிடையே தற்போது காணப்படும் சமத்துவமின்மை நீக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது. இதற்கென சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு இவற்றுக்கு முன்னுரிமையும் இவற்றைச் செயற்படுத்தப் போதிய நிதி வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். மத்திய அரசிலும், மாநில அரசுகளிலும் பெண் கல்விக்கென தனி கல்வி நிருவாகப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பெண்களுக்கான வேலை வாய்ப்புகளில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். பெண்கள் கல்வி முக்கியமான ஒரு தேசீயப் பிரச்சினையாகக் கருதப்பட்டு, தீர்க்கப்படுவது உடனடித் தேவையாகும்.

**11.** தொழில் நுட்பக் கல்வியும் தொழிற் கல்வியும் (Technical and Vocational Education) நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானவையாகும். இதனைக் கருதியே கொத்தாரிக் கல்விக்குழு தனது அறிக்கையில் 1980-ஆம் ஆண்டிற்குள் உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணக்கர்களில் 30 முதல் 40 சத விகிதத்தினராவது பகுதிநேர அல்லது முழுநேரத் தொழிற்கல்விப் பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் அரசினல் ஏற்படுத்தித் தரப்பட வேண்டுமென கருத்துத் தெரிவித்துள்ளது. இப்பயிற்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் திறம் பெற்று அதனையே வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்ளுவதற்கேற்ற செயல்தரத்தினை மாணக்கர்களுக்கு அளிப்பதாக அமையவேண்டும். இதேபோது தொழிற் கல்விப் பயிற்சி பெற்றுள்ள ஒரு சில ஆர்வம் மிக்க மாணக்கர்கள் தொடர்ந்து பொதுக்கல்விப் படிப்பை மேற்கொள்ள விரும்பினல் இதற்கான வாய்ப்புகளும் கல்வி அமைப்பில் இருக்கவேண்டும். பல்தொழிற் நுட்பப் பள்ளிகளும் (polytechnics) தொழிற் பயிற்சி நிலையங்களும் (industrial training centres) மேலும் அதிக எண்ணிக்கையில தொடங்கப்பெற வேண்டுமென்பதனை கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டது. இவை பொதுவாக, தொழிற்சாலைகள்

நிரப்பிய பகுதிகளிலே தொடங்கப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில் நிறுவப்படும் தொழிற் பள்ளிகளில் வேளாண்மையுடன் (Agriculture) இணைந்த தொழிற் பாடங்களுக்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இப் பள்ளிகள் யாவற்றிலும் செயல்களும் (activities) செயல் திட்டங்களும் (Projects) முக்கிய இடம் பெறவேண்டும். தமது பயிற்சிக் காலத்திலேயே ஓரளவு தொழிலனுபவம் பெறக்கூடிய வாய்ப்புகள் மாணாக்கர்களுக்குத் தரப்படுவது தேவை என்பதனை இக் கல்விக்குழு சுட்டிக் காட்டியது.

பல்தொழில் நுட்பப் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் தொழில் துறைகளினின்றும் குறிப்பிட்ட அளவு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது கொத்தாரிக் கல்விக்குழுவின் கருத்தாகும். தொழில் நுட்பப் பள்ளிகள் பொறியியற் கல்லூரிகள் ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கும் ஆசிரியப் பயிற்சி தேவைப்படுவதாகும். தொழில் நுட்பக் கல்வியில் கற்பித்தல் - தொழிற்பயிற்சி ஆகிய இரண்டும் இணைந்த படிப்பு முறையை (sandwich course) பயன்படுத்துவது நல்லது. பொறியியற் கல்லூரிகளில் திறனும் நாட்டமும் மிக்க மாணாக்கர்கள் சேர்க்கப்படவேண்டும். இவற்றுக்கான கல்வி ஏற்பாடு புதுப்பிக்கப்பட்டு, பல புதிய கருத்துகளும் பாடங்களும் செயல்முறைகளும் இதில் இடம் பெறவேண்டும். மறுபயிற்சிக்கும் (retraining) புதுப்பிக்கும் பயிற்சிக்கும் (refresher courses) முக்கிய இடம் அளிக்கப்படுவதும் இன்றியமையாததாகும். தொழிற்கல்வி, பொறியியற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் திட்டமிடும்போது நாட்டின் இன்றைய, எதிர்காலத் தேவைகள் கருத்தில் கொள்ளப்படுவதன் அவசியத்தை கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. கொத்தாரிக் கல்விக்குழுவின் பல பரிந்துரைகளை தொழில்நுட்பக் கல்விக்கான அனைத்திந்தியக் கழகம் (All India Council for Technical Education) ஏற்று, இவற்றை நடைமுறையில் செயலாக்கப் பல திட்டங்களைத் தற்போது வகுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

12. உயர்கல்வி (higher education) யின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் கொத்தாரிக் கல்விக்குழு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது; இதன் பொறுப்புகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. புதிய உண்மைகளையும் அறிவினையும் தொடர்ந்து அடைய முயலுதல், திறமையும் நேர்மையும் உள்ள தலைமையை உருவாக்குதல், சமுதாயத்திற்குத் தொண்டாற்ற இளைஞர்களைப் பயிற்றுவித்தல், வேளாண்மை, கலைகள், மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளுக்கான வல்லுநர்களைத் தோற்றுவித்தல், மாணாக்கர்கள் ஆசிரியர்கள் ஆகியோரிடம்

உயர்ந்த வாழ்க்கை மதிப்புகளை வளர்த்து அவர்களின் வழியே இவை சமுதாயத்தினர் யாவரிடையேயும் பரவ வழிசெய்தல் போன்றன உயர்கல்வியின் சிறப்பு நோக்கங்களாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. இந் நோக்கங்கள் எய்தப்படும் வகையில், பல்கலைக் கழக உயர்கல்வியின் அமைப்பும் தரமும் உயர்த்தப்படவேண்டும்; நாட்டின் வளர்ச்சிக்கான மனித சக்தித் தேவைகளுக்கேற்ப உயர் கல்வியின் விரிவாக்கம் கட்டுப்படுத்தப்படவேண்டும். நாட்டில் ஒரு சில பல்கலைக்கழகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலைசிறந்த பல்கலைக்கழகங்களாக (major universities) உயர்த்தப்பட வேண்டு மென்றும் இவற்றின் கல்வித்தரமும், ஆராய்ச்சிகளது தரமும் உலகின் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களின் தரங்களுக்கு ஒரு சிறிதும் குறையாத முறையில் உருவாக்கப்பட வேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இச் சிறந்த பல்கலைக்கழகங்களில் வேளாண்மைப் பல்கலைக்கழகம், தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஆகியனவும் இடம் பெறவேண்டும். இப் பணியினை பல்கலைக்கழக மானியக்குழு ஏற்கவேண்டும். இச்சிறந்த பல்கலைக்கழகங்களுக்கான திறனுள்ள மாணுக்கர்களும் சிறந்த ஆசிரியர்களும் நாட்டின் எல்லாப் பகுதிகளினின்றும் தேர்ந்தெடுக்கப்படுவர். இவற்றைத்தவிர பிற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் தர உயர்வுக்கும் கொத்தாரிக் கல்விக் குழு பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. சிறந்த ஆசிரியர்களையும் மாணுக்கர்களையும் தேர்ந்தெடுப்பது, ஆசிரியர்களது ஊதியத்தை அதிகரிப்பது, கற்பித்தல் ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான வாய்ப்பு களை மேலும் அதிகப்படுத்துவது, பல்கலைக்கழகங்களும் கல்லூரி களும் மேலும் இணைந்த முறையில் செயற்படுவது, மிகச் சிறந்த கல்லூரிகளுக்குச் சுதந்தரமாகச் செயற்படும் (autonomonus) தனித்தகுதியை அளிப்பது போன்றவற்றை இக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. கல்லூரிகளில் விரிவுரைகள் குறைக்கப்பட்டு, இவற்றின் தரமும் உயர்த்தப்படவேண்டும். தாங்களாகச் சுயமாகப் படித்து, சிந்தித்து முடிவெடுக்க உதவும் பயிற்சியும் வாய்ப்புகளும் கல்லூரிகளில் பரவலாக்கப்படவேண்டும்; ஆசிரியர்கள் ஆராய்ச்சி மேற்கொள்வது ஊக்குவிக்கப்பட வேண்டும். மாணுக்கரது கல்வி முன்னேற்றத்தை மதிப்பிடுகையில் அகத்தேர்வுச் (internal assessment) சாதனைகளும் புறத்தேர்வு மதிப்பெண்களுடன் இணைந்து கவனிக்கப்படவேண்டும். தேர்வு முறையினையும மதிப்பிட்டு முறைகளையும் மேலும் நம்பகமானவை களாக மாற்றத் தொடர்ந்து பல்கலைக்கழக மானியக்குழு முயல வேண்டும். உயர்கல்வி நிலையில் படிப்படியாக வட்டார மொழிகள் (regional languages) பயிற்று மொழிகளாக்கப்படவேண்டும். ஆனல் பட்ட மேற்படிப்பு நிலையில் ஆங்கிலம் பெருமளவு பயன்

படுத்தப்படுவது இன்றியமையாதது. நாளடைவில் இங்கும் வட்டார மொழிகளில் கல்வி அளிக்கப்படலாம்.

கல்லூரிமாணுக்கர்களது பல்வேறு பிரச்சினைகளை கொத்தாரிக் கல்விக்குழு பரிவுடன் ஆராய்ந்துள்ளது. மாணுக்கர்களது நலனுக்கு உதவும் பல்வேறு பணி அமைப்புகள் (student services) கல்வியின் இன்றியமையாப் பகுதிகளாகும் என்று இக் குழு குறிப்பிட்டுள்ளது. புதிய மாணுக்கர்களைக் கல்லூரிப் படிப்பு முறைக்கு அறிமுகப் படுத்துவது, மருத்துவ வசதிகள், மாணவரில்ல வசதிகள், மாணவர் மன்றங்கள், வழிகாட்டுதல், அறிவுரைபகர்தல் ஆகியவற்றுக்கான வசதிகள் போன்றனயாவும் இத்தகைய பணி அமைப்புகளின் பிரிவுகளாகும். இவை வலுப்படுத்தப்பட்டுப் பரவலாக்கப்படுவது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்; இது அவர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் வளர்த்தலிலும் துணைபுரியும். பல்கலைக்கழகங்களது நிருவாகம் பற்றியும் பல கருத்துகளை கொத்தாரிக் கல்விக்குழு தந்துள்ளது. பொதுவாக, உயர்கல்வி விரிவாக்கப்படும்போது நாட்டின் மனித சக்திக்கான தேவைகளும் (man power needs), வேலைகளுக்கான எதிர்கால வாய்ப்புகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். ஆனால் மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகிய துறைகளில் உயர் கல்வி வாய்ப்புகள் உடனடியாகப் பெருக்கப்படுவதற்கான தேவை இருத்தலை இக் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. ஒரு சில புதிய பல்கலைக்கழகங்கள் நாட்டில் ஏற்படுத்தப்படுவது தடுக்க வியலாததாகும். பல்கலைக்கழகங்களுக்கிடையே தொடர்பு எல்லாச் செயல்களில் இருத்தல் மிகவும் அவசியமாகும். பல்கலைக் கழகங்கள் மனிதவியற் பாடங்களைப் (humanities) படிப்பதனை ஊக்குவிக்க வேண்டுமென்றும், கல்வி ஆராய்ச்சியையும் ஊக்குவிக்க வேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக்குழு கருதியது; நாட்டின் உயர்கல்வியைப் பொறுத்தவரை பல்கலைக்கழக மானியக்குழு மிக முக்கியமான அமைப்பாதலின் இதனைச் சீர்திருத்துவதற் கான பரிந்துரைகளையும் கொத்தாரிக் கல்விக்குழு தந்துள்ளது;

13. முதியோர் கல்வி: வளரும் நிலையிலுள்ள நம் நாட்டிற் கான கல்வித் திட்டங்களில் முதியோர் கல்விக்கு (adult education) ஒரு முக்கிய இடத்தினை அளிப்பது இன்றியமையாததாகும் என்னும் கருத்து கொத்தாரிக் கல்விக்குழுவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்வி என்பது பள்ளிக்காலத்துடன் முடிவடைவதன்று. பள்ளிக் கல்வியை ஓரளவு பெற்றவர்களும் சிக்கலான அமைப்பைக் கொண்ட இன்றைய உலகில் சிறப்பாக வாழ்க்கை நடத்தத் தொடர்ந்து கற்றுவருவது தேவைப்படுகிறது. எனவே முதியோர்

கல்வி எனப்படுவது வெறும் எழுத்தறிவளிப்பது (literacy) மட்டும் அன்று. சிறிதளவு கல்வி கற்றவர்க்கும் தொடர்ந்து அறிவளிக்கும் முயற்சியும் இதில் அடங்கும். இன்று இதனல்தான் முதியோர் கல்வி 'சமூகக் கல்வி' (social education) எனப்படுகிறது. நாட்டிற்கான முதியோர் கல்விபற்றிய திட்டம் ஒன்றினை உருவாக்க ஒரு தேசியக்குழு நியமிக்கப்பட வேண்டுமென கொத்தாரிக் கல்விக் குழு கூறியுள்ளது. முதியோர்க்கான கல்வித் திட்டங்களை வரைவதில் மத்திய மாநில அரசுகளுக்கு அறிவுரைகளைக் கூறுதல், முதியோர் கல்விக்கான ஆசிரியப் பயிற்சியினை அமைத்தல், இவர்களுக்கான பல்வேறு கற்பித்தல் பொருள்களைத் தயாரித்தல், முதியோர் கல்வித்துறையில் பயனுள்ள ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், இத்துறையில் பணிபுரியும் மத்திய, மாநில, தனியார் நிறுவனங்களிடையே தொடர்பினை ஏற்படுத்துதல், மற்றும் முதியோர் கல்வி வளர்ச்சியின் அளவினையும் நிலையையும் அவ்வப்போது மதிப்பிடுதல் போன்றன இத் தேசியக் குழுவின் பணிகளாகும். முதியோர் கல்வித்திட்டத்தின் முக்கிய கூறுகளையும் கொத்தாரிக் கல்விக்குழு தெளிவாக்கியுள்ளது. எழுத்தறிவின்மையை நீக்குதல் இதன் முதற்பணியாகும். இதனை சீக்கிரம் நிறைவேற்ற வேண்டும். கட்டாயத் தொடக்கக்கல்வி நாட்டில் பரவத் தொடங்குவதன் விளைவாக எழுத்தறிவின்மைப் பிரச்சினை மேலும் தீவிரமாவது தடைப்படும். பள்ளிக்காலம் முடியுமுன்னர் பள்ளியை விட்டு நீங்கும் 11 முதல் 14 வயதுக்குழந்தைகளுக்கான பகுதி நேரக் கல்வித்திட்டமும் (part time education), ஓரளவு வயதில் முதியவர்களுக்கான 15 முதல் 30 வயதுவரையுள்ளோர்கள் பகுதிநேரப் பொதுக்கல்வி, தொழிற்கல்வி, ஆகியவற்றுக்கான வாய்ப்புகளும் அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவேண்டும்.

நாட்டில் காணப்படும் எழுத்தறிவின்மையைப் போக்க இரு முனைகளைக் கொண்ட ஒரு திட்டத்தைக் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. பெரிய வர்த்தக, தொழில், அல்லது விவசாய நிறுவனங்களில் பணி புரிவோரிடையே காணப்படும் எழுத்தறிவின்மையை (Illiteracy) மூன்று ஆண்டுகளுக்குள் போக்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது இவற்றின் தலைமை அலுவலர்களது பொறுப்பு என அறிவிக்கப்பட வேண்டும். (Selective approach). இதனுடன் எழுத்தறிவின்மை நிலையை அகற்ற மாபெரும் முயற்சியொன்றும் (Mass approach) மேற்கொள்ளப்பட வேண்டும். கல்வி அறிவு பெற்றுள்ள ஒவ்வொருவரும் இப் பணியில் பங்கு பெற வேண்டும். இப் பணியில் ஆசிரியர்கள் மாணாக்கர்கள் ஆகியோரது பங்கு மகத்தானதாக அமையவேண்டும். ஒவ்வொரு பள்ளியும் தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் இப் பணியைத் தொடங்கலாம்.

முதியோர் கல்வியில் திரைப்படங்கள், வானொலி போன்றன சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இவை கற்றலுக்கு உதவுவதுடன் இதற்கான சூழ்நிலையினையும் கவர்ச்சியுள்ளதாக ஆக்கவல்லன. எழுத்தறிவு பெற்ற முதியோர்களுக்கான பலபடிப்பு நூல்கள் (reading material) புதியனவாக வெளியிடப்பட வேண்டும். நூல் நிலையங்கள் முதியோர் கல்வி வளர்ச்சியில் சிறந்த வகையில் பணியாற்ற முடியும். இயங்கும் நூலகங்கள் (mobile libraries), சமூகக் கல்விப்பணிப் பிரச்சார ஊர்தி (social education propaganda van) போன்றன முதியோர் கல்வியில் நல்ல முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். பகுதிநேரக் கல்வியோடு அஞ்சல் வழியே கல்வியும் (correspondence courses) முதியோர் கல்வி வளர்ச்சிக்கு உதவும். முதியோர்—சமூகக் கல்வி வளர்ச்சியில் பல்கலைக் கழகங்களும், தொழிற் சங்கங்களும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

## மதிப்பீடு

இதுவரை கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகளையும் பல்வேறு கல்வித் துறைகள் பற்றிய முக்கிய பரிந்துரைகளையும் கவனித்தோம். இனி இதன் அறிக்கையின் சிறப்பினை மதிப்பிடுதல் பொருத்தமாகும். கல்விக் குழுக்கள் பலவற்றின் அறிக்கைகளில் மிகவும் விரிவானது கொத்தாரிக் கல்விக் குழுவின் அறிக்கையேயாகும். இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. கல்வியை நாட்டின் தேவைகளுடன் இணைத்து, கல்வியின் வழியே உற்பத்தித் திறனைப் பெருக்கவும், இதேபோது நமது சிறப்பு மிக்க பண்டைய மதிப்புகள் புறக்கணிக்கப்படாமல் காக்கவும் கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள் உதவுவனவாக அமைந்துள்ளன. கல்வியின் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து நாட்டின் கல்வி அமைப்பு பற்றிய ஒருங்கிணைந்த முழுமையான கருத்தினை இதன் அறிக்கை தந்துள்ளது. கல்வியின் எந்த ஒருகூறும் இதன் ஆராய்ச்சியினின்றும் விடப்படவில்லை; கல்வி தொடர்ச்சியான ஓர் அமைப்பைப் பெற்றது என்ற கருத்து இதன் கருத்துகள் பரிந்துரைகள் ஆகிய யாவற்றிலும் அமைந்து காணப்படுகிறது. கல்விப் பிரச்சினைகளை நாட்டின் உண்மை நிலைமையுடன் இணைத்து பிரத்யட்ச நோக்குடன் அவற்றை கொத்தாரிக் கல்விக்குழு ஆராய்ந்துள்ளது எனலாம். நமது தேவைகளையும், கிடைக்கக்கூடிய வசதிகளையும் உணர்ந்து, இவற்றுக்கேற்பப் பல்வேறு கல்வித் திட்டங்களுக்கு முன்னுரிமை (priorities) நிர்ணயித்திருப்பது கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின் மற்றொரு சிறப்புப் பண்பாகும்.

குறிப்பாகக் கூறப்போனல் கொத்தாரிக் கல்விக்குழுவின் பரிந்துரைகளில் மேலும் பல நல்லியல்புகளைச் சுட்டிக் காட்டுதல் இயலும். கீழ்த் தொடக்கக் கல்வி வகுப்புகளை ஒரு முழுமையாகக் கருதுதல், தொடக்கக் கல்விக்கும் ஆதாரக் கல்விக்குமிடையே இருந்துவந்த போட்டி நிலைமையை அகற்றுதல், வேலை அனுபவங்களின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துதல், கல்வி வாய்ப்புகளில் ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வழிகளைக் குறிப்பிட்டிருத்தல், விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருத்தல், உயர்நிலைப் பள்ளிக் கல்வியை வேலை சார் கல்வியாக மாற்றுதலை வலியுறுத்தியிருத்தல் ஆகியன இவற்றுள் ஒரு சிலவேயாம்.

இதேபோது, கொத்தாரிக் கல்விக்குழு செயற்படுத்த இயலாத பெரும் கல்விச் சீர்த்திருத்தத்தை எடுத்துக் கூறியுள்ளதென்றும், கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு கூறிலும் மிகச்சிறந்த மாற்றங்களைக் குறிப்பிட்டதன் விளைவாக (too idealistic) இவை நடைமுறையில் இயலுமா என்னும் ஐயப்பாட்டைத் தோற்றுவித்துள்ளதென்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். இதன் விளைவாக கொத்தாரிக் கல்விக் குழுவின் அறிக்கை படித்துப் பாராட்டப்படுமே தவிர பின்பற்றப்படாது என்றும் இவர்கள் கூறுவதில் ஓரளவு உண்மையுண்டு. மொழிகள் பற்றிய இக் கல்விக் குழுவின் பரிந்துரைகளும் குறை கூறப்படுகின்றன. இந்தியின் முக்கியத்துவத்தைக் குறைத்து ஆங்கிலம் தொடர்ந்து கல்வி அமைப்பில் ஆதிக்கம் பெற்று இருக்க இது துணைசெய்யும் எனப்படுகிறது. ஒரு சில பல்கலைக்கழகங்கள் சிறப்பாக உயர்த்தப்பட வேண்டுமென்பது பிறவற்றை ஓரளவு புறக்கணிப்பதாகவிருக்கும் என்றும் கூறப்படுகிறது. இக் குன்றபாடுகள் ஒரு சிலவேயாம். கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டால் நாடு முன்னேற்றமடைதலில் கல்வியின் பங்கு மிகச் சிறப்பானதாக விளங்கும் எனலாம். ஐந்தாண்டுத் திட்டங்களில் இதற்கான முயற்சிகள் ஓரளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வினாக்கள்

1. கல்விக்கான தேசியக் குறிக்கோள்களும், நோக்கங்களும் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றி கொத்தாரிக் கல்விக்குழு கூறியுள்ளதை சுருக்கி வரைக.

2. கொத்தாரிக் கல்விக்குழுவின் கீழ்க்காணும் இருபொருள்கள் பற்றிய பரிந்துரைகளை ஆராய்க.

   (அ) கல்வி அமைப்பு (ஆ) கற்பித்தல் முறைகள்

   (இ) மதிப்பீடு.

3. 1968-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நமது நாட்டிற்கான தேசியக் கல்விக் கொள்கை பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

4. (அ) தொடக்கக் கல்வி, (ஆ) உயர்நிலைப்பள்ளிக் கல்வி, (இ) உயர்கல்வி ஆகியவற்றுக்கான கல்வி நோக்கங்கள் பற்றிய கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகளை விவரிக்க.

5. 'வேலை அனுபவம்' எனப்படுவதன் கல்விப் பயன்களைக் குறிப்பிட்டு, கல்வியின் பல்வேறு நிலைகளில் இதற்கான வாய்ப்புகளை எவ்வாறு அமைக்கலாம் என்பதனையும் விவரிக்க.

6. 'கல்விக்கான சம வாய்ப்புகளை எல்லோர்க்கும் அளித்தல்' என்பதனைச் செயற்படுத்த கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்ட கருத்துகள் யாவை ?

7. தொடக்கக் கல்வியின் தரஉயர்வுக்குக் கொத்தாரிக் கல்விக்குழு என்ன பரிந்துரைகளைத் தந்துள்ளது ?

8. பல்நோக்குப் பள்ளிகள் பற்றி கொத்தாரிக் கல்விக்குழுவின் கருத்தினை செகண்டரி கல்விக்குழுவின் கருத்தோடு ஒப்பிடுக.

9. மொழிப் பிரச்சினை ஏன் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினை எனப்படுகிறது ? இதுபற்றி கொத்தாரிக் கல்விக் குழு என்ன கருத்துகளைத் தெரிவித்துள்ளது ?

10. 'பல்கலைக்கழகக் கல்வியுடனும் பள்ளிகளுடனும் தொடர்பின்றி ஆசிரியப்பயிற்சி காணப்படுகிறது' என்னும் கருத்தினை ஆராய்ந்து இந்நிலையை மாற்ற உதவக்கூடிய வழிகளைக் குறிப்பிடுக.

11. ஆசிரியப்பயிற்சியின் தர உயர்வு, ஆசிரியர்களது நிலையினை மேம்படுத்தல் ஆகியனபற்றி கொத்தாரிக் கல்விக்குழு தந்துள்ள பரிந்துரைகளைத் தொகுத்துக் கூறுக.

12. 'தேர்வுமுறை சீர்த்திருத்தம்' பற்றிச் சிறு குறிப்பு ஒன்று வரைக.

13. 'வழிகாட்டுதல்' 'அறிவுரை பகர்தல்' ஆகியன கல்வியில் ஏன் இடம் பெறவேண்டும்? இவற்றுக்கான வாய்ப்புகள் யாவை?

14. நமது நாட்டின் இன்றைய நிலைமையில் அறிவியற்கல்வி ஏன் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது? இதன் வளர்ச்சிக்கு எவ் வழிகள் உதவும்?

15. தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்கு கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ள கருத்துகள் யாவை?

16. சிறு குறிப்பு வரைக.
(அ) உயர்கல்வியின் நோக்கங்களும் தர உயர்வும்
(ஆ) மாணாக்கர் நல அமைப்புகள் (student services)
(இ) அகமதிப்பீடு (internal assessment)

17. எழுத்தறிவின்மையைப் போக்கவும் சமூகக் கல்வியின் வளர்ச்சிக்குதவவும் நாம் கையாளத்தக்க முறைகளை விவரிக்க.

18. கொத்தாரிக் கல்விக்குழுவின் அறிக்கையில் காணப்படும் சிறப்பியல்புகளையும் அதில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளையும் குறிப்பிட்டு, இந்தியக் கல்வி வரலாற்றில் அதன் பங்கினை மதிப்பிடுக.

# 17. ஐந்தாண்டுத் திட்டங்களும் கல்வி வளர்ச்சியும்

## திட்டமிடுதலின் தேவை

வளரும் நாடுகளது முன்னேற்றத்திற்கு திட்டமிடுதல் (planning) இன்றியமையாதது. நம்மால் வரையறை செய்யப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்குகளை, குறிப்பிட்ட நிரலின் (programme) அடிப்படையில் அடைய முற்படுதல் திட்டமிடுத லாகும். திட்டமிடுதலில் தொடக்கத்தில் வசதிகள் (resources) ஆராயப்படவேண்டும். அடுத்து பல்வேறு துறைகளில் வளர்ச்சிக் கான நமது தேவைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். இவை இவற்றின் முன்னுரிமையின் (priorities) அடிப்படையில் வரிசைப் படுத்தப்படவேண்டும். பின்னர் இவற்றுள் குறிப்பிட்ட காலத் திற்குள் (ஐந்து ஆண்டுகளோ, பத்து ஆண்டுகளோ) இவற்றுள் எவற்றை எந்த அளவுக்கு எட்ட இயலும் என்பதனை உறுதிப் படுத்திக்கொண்டு, அக் காலத்துக்குள் இவ்விலக்குகளை அடைய முற்படவேண்டும். திட்டமிடுதல் வசதிகளும் காலமும் வீணுதலைத் தடுத்து, நமது முயற்சிகளினின்றும் முழுப்பயன் பெற உதவு கின்றன. திட்டமிடுதல் வழியேதான் இசைவான வளர்ச்சி தோன்றும்; திட்ட இலக்குகள் நமது முயற்சிகளுக்கு நோக்கத்தை அளித்து, செயலாற்ற நம்மை ஊக்குவிப்பனவாக அமைகின்றன. விடுதலை பெற்றபின் நமது வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டங்களைத் (five year plans) தீட்டி இவற்றைச் செயற்படுத்த இந்திய அரசு முயன்று வந்துள்ளது. நாட்டுவளர்ச்சி கல்வி வளர்ச்சியின்றி ஏற்படாதாகையால், இவ் வைந்தாண்டுத் திட்டங்களில் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் இடம் பெற்றுவந்துள்ளன.

### முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கல்வி இலக்குகள்

*1938*-ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்களது தலைமையில் 'தேசிய திட்டக்குழு' ஒன்றினை அமைத்தது. இதில் கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்

கென இரு உட்குழுக்கள் அமைக்கப்பட்டன. விடுதலைப் போராட்டம் அப்போது தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததன் விளைவாக இத் திட்டக்குழு முழுக்கவனத்துடன் தனது பணிகளில் ஈடுபட முடியவில்லை. 1944-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சார்ஜென்ட் திட்டம் கல்வி வளர்ச்சிக்கான ஒரு திட்டமேயெனினும் அது மக்களது தேசிய உணர்வினைப் பிரதிபலிப்பதாக அமையவில்லை. நாடு விடுதலை பெற்ற பின்னர் 'திட்டமிட்ட வளர்ச்சி' என்னும் கருத்தில் பெருங்கவனம் செலுத்தப்பட்டது. 1951-ஆம் ஆண்டில் அன்றைய பாரதப் பிரதமர் பண்டித நேருவின் தலைமையில் திட்டக்குழு (planning commission) அமைக்கப் பட்டது. இன்றுவரை 4 ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப் பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளன. 5-வது ஐந்தாண்டுத் திட்டத் திற்கான வழிவகைகளும் இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்தியக் கல்வியின் வரலாற்றிலே இறுதியாக, இத்திட்ட காலத்தில் ஏற்பட்டுள்ள கல்வி வளர்ச்சிபற்றி ஆராய்தல் பொறுத்தமாகும். இவ் வத்தியாயத்தில் கல்வி வளர்ச்சி பற்றிய பொது விவரங்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. புள்ளிவிவரங்கள் கல்வி வரலாறு பற்றிய நூலில் தேவையற்றவை என விடப்பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத்திட்டம் 1951-52-ஆம் ஆண்டிலிருந்து 1955-56 வரை நீடித்தது. இத் திட்டத்தில் கல்விக்கான பகுதி களும் இடம் பெற்றன. 151·66 கோடி ரூபாய்கள் கல்விக்காக மைய, மாநில அரசுகளுக்கு இத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டன. கல்வி நிலைகளின் சீர்த்திருத்தம், இவற்றிடையே இணைப்பினைத் தோற்றுவித்தல், கல்வி வசதிகளை விரிவாக்கல், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள வளர்ச்சியை நிலைப்படுத்தல், பெண்கள் கல்வியில் கவனம் அதிகம் செலுத்தல் போன்றன இத் திட்டத்தின் கல்வி இலக்குகளாகக் குறிப்பிடப்பட்டன. இவை ஒவ்வொன்றுக்கும் இவ்வைந்தாண்டுத் திட்டகாலத்தின் இறுதியில் எட்டப்பட வேண்டிய குறியளவுகளும் (plan targets) நிர்ணயிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, இத்திட்டத்தின் இறுதியாண்டிற்குள் நாட்டில் 6 முதல் 11 வயதிலான குழந்தைகளில் 60 சதவிகிதத்தினர்க்குப் பள்ளி வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், உயர்நிலைப்பள்ளி நிலையில் இந்நிலைக்கான சிறுவர், சிறுமியருள் 15 சதவிகிதத்தினர் இக் கல்விபெற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956-57-ஆம் ஆண்டு முதல் 1960-61 வரை நீடித்தது. இத் திட்டத் திற்கான கல்வி இலக்குகளை நிர்ணயிக்குமுன் அதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆராயப்பட்டது. இரண்டாவது திட்டகாலத்தில் தொடக்கக் கல்வியினை விரிவுபடுத்தல், உயர்நிலைப்

பள்ளி நிலையில் பல்தொழிற் பாடங்களுக்கு வாய்ப்பளித்தல், உயர் கல்வித்தர உயர்வு, தொழில்நுட்பக் கல்வி வாய்ப்புகளைப் பெருக்குதல் போன்றவற்றுக்கு முன்னுரிமை தரப்பட்டது. இத் திட்டத்தில் கல்விக்கென 307 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1961-62 ஆம் ஆண்டிலிருந்து 1965-'66 ஆம் ஆண்டுவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. கல்விக்கென இதில் சுமார் 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத் திட்டத்தில் தொடக்கக்கல்வியினைப் பரப்புதல், விஞ்ஞானப் பாடம் கற்பித்தலைச் சிறப்பாக்குதல், தொழிற்கல்வி வசதிகளைப் பெருக்குதல், ஆசிரியப்பயிற்சி, பெண்கள் கல்வி போன்றன வலியுறுத்தப்பட்டன. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் கல்வி வசதிகளின் விரிவாக்கத்திற்கு அதிக இடம் அளிக்கப்பட்டது. இதேபோது கல்வித்தர உயர்வில் எதிர்பார்க்கப்பட்ட அளவு வெற்றி கிட்டாததால், நான்காம் ஐந்தாண்டுத் திட்டகாலத்திலிருந்து இப் பிரச்சினையில் பெருங்கவனம் செலுத்தப்படுகிறது. இதனை நோக்குமுன் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில் எழுந்த கல்வி வளர்ச்சிபற்றி அறியலாம்.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக எல்லாக் கல்வி நிலைகளிலும் வசதிகள் பெருமளவு அதிகரித்துள்ளன; இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு கல்வி பயிலும் மாணாக்கர்களது எண்ணிக்கையும் சிறப்பாக அதிகரித்துள்ளது; இவர்களுள் பின்தங்கிய வகுப்பினர், பெண்கள் ஆகியோரது விகிதம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. உயர்கல்வி நிலையிலும் இவ் வளர்ச்சி காணப்படுகிறது. பல புதிய பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நேரடியாகவோ மறைமுகமாகவோ கல்விக்கென மத்திய அரசினாலும், மாநில அரசுகளினாலும் செலவிடப்படும் தொகை தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. பொதுக்கல்வி மட்டுமன்றி, தொழில்நுட்ப-பொறியியல் கல்வி, வேளாண்மைக் கல்வி, மருத்துவக் கல்வி போன்றனவும் முதல்மூன்று திட்டங்களின் காலத்தில் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. கல்வி பரப்புவதற்கான அடிப்படை ஆய்வுகள் (educational surveys) மேற்கொள்ளப்பட்டு இவற்றின் முடிவுகளின் அடிப்படையில் எங்கெங்கு புதிய கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களின்றியும் கல்வியில் வளர்ச்சி காலப்போக்கில் ஓரளவு ஏற்பட்டிருக்குமென்றாலும் நமது தேவைகளுக்கேற்பவும், இந்த அளவிலும் அது ஏற்பட்டிருக்காது என்பது தெளிவு. எனினும் முதியோர் எழுத்தறிவு பெறுதலிலும் பெண்கள் கல்வியிலும் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் எழவில்லை என்பது புள்ளிவிவரங்கள் வழியே புலப்படுகிறது.

கல்வித் திட்டங்களில் கவனிக்கப்பட்ட பல பிரச்சினைகளுள் தொடக்கக் கல்வி நிலையில் பெருமளவில் காணப்படும் 'கழிவு' (wastage) பற்றியது ஒன்றாகும். இதோடு இணைந்து 'தேக்கம்' (stagnation) பற்றிய பிரச்சினையும் உள்ளது. இதற்கான காரணங்கள் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டன. இப் பிரச்சினையைத் தீர்க்க முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; எனினும் இன்னமும் இது முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. இம்மாதிரி எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகள் அளித்தலிலும் இன்னமும் செய்யவேண்டியவை உள்ளன. இன்றும் சிறுவர் சிறுமியரது கல்வி வாய்ப்புகள் சரிசமமாக வளர்ந்துள்ளன எனக் கூறவியலாது. சிறுபான்மை வகுப்பினர், பழங்குடி மக்கள், மலைசாதியினர் போன்றோர் பிறரைப் போன்று கல்வி வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர் எனவும் கூறவியலாது. எனினும் இத் துறையில் திட்ட காலத்தில் சம வாய்ப்பளிக்க உதவும் பல வழிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இவைபற்றிய சிறு குறிப்பு இவ் வத்தியாயத்தின் பிறிதொரு பகுதியில் தரப்பட்டுள்ளது. உயர்கல்வி பற்றிய ஒரு பிரச்சினைக்கும் இன்று விடை காணவேண்டியுள்ளது. இதனை விரும்புபவர் யாவர்க்கும் உயர் கல்வி அளிக்கப்பட வேண்டுமா, அல்லது இதனால் பயன்படத்தக்கவர் என்போர்க்கு மட்டும் இது அளிக்கப்பட வேண்டுமா என்பது இதுவாகும்.

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் கல்வி வளர்ச்சியும்**

இவைபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்கவும், வசதி விரிவாக்கத்துடன் கல்வித் தரத்தின் உயர்வில் கவனம் செலுத்த உதவும் வகையிலும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கல்வி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. இது 1969–'70ஆம் ஆண்டு முதல் 1973–'74 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டது. கல்விக்காக இவ் வைந்தாண்டுக் காலத்திற்கு 418 கோடி ஒதுக்கப்பட்டது. இத் திட்டத்தில் கல்வியில் பின்தங்கிய பிரிவினரிடையே தொடக்கக் கல்வியினைப் பரவலாக்குதல், அறிவியல் கல்வித்தரத்தினை உயர்த்துதல், ஆராய்ச்சித் தரத்தினை உயர்த்துதல், தொழில்நுட்ப–பொறியியல் கல்வியினைத் தொழில்துறை வளர்ச்சியுடன் இணைத்தல், மாணாக்கர் நல்வாழ்க்கைக்கான கல்விவசதிகளை அதிகரித்தல் ஆகியன முக்கிய இடத்தினைப் பெற்றன. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, கல்வித் தர உயர்வுக்கு உதவவல்ல கல்வி ஏற்பாட்டுச் சீர்திருத்தம், தரமான பாட நூல்கள் தயாரிப்பு, ஆசிரியர்களுக்கான பணியிடைப்பயிற்சி வாய்ப்புகள் அதிகரிப்பு போன்றன இத் திட்டத்தில் நடுவிடம் பெற்றன.

**ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கல்வி முன்னேற்றம்**

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் தொடங்கப்பெற்ற கல்வித்திட்டங்கள் தொடர்ந்து நான்காவது திட்ட காலத்திலும் செயற்படுத்தப்பட்டன. இவை யாவற்றின் விளைவாகக் கல்வி வசதிகள் விரிவாக்கப்பட்டதுடன் தர உயர்வுக்காகப் பின்வரும் வழிகளும், முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடக்கக் கல்விநிலையிலே விஞ்ஞானக் கல்வி புகட்டுவதற்கான பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் கைப்பணிகளின் (craft) முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. கற்பித்தல் திறம் உயர, பல்வேறு புதிய கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. கற்பித்தலுக்குதவக்கூடிய பல்வேறு பாட இணைப்பொருள்கள் தயாரிக்கப்பட்டு, தொடக்கப்பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிரத் தொடக்கக் கல்வியின் மையப் பிரச்சினையான 'கழிவு' 'தேக்கம்' ஆகியன குறைதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டாயத் தொடக்கக் கல்வியினை அமல் செய்தல், ஆசிரியர்களது தரஉயர்வு, கற்பித்தல் முறைகளைக் கவர்ச்சியுள்ளனவாக ஆக்குதல் ஆகியவற்றோடு சமுதாயத் தொடர்பு பற்றிய அறிவும் தேவை என்பது உணரப்பட்டது. இதற்குத் துணைசெய்யும் வகையில் பள்ளி நிருவாகம், மேற்பார்வை போன்றன நல்ல முறையில் இயங்குதற்கான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பெண் கல்வி வளர்ச்சிக்குதவ மேலும் ஆசிரியைகளுக்குப் பயிற்சியளிக்க வாய்ப்புகள், கிராமப்புறங்களில் இவர்களுக்கு வீட்டு வசதியளித்தல், திருமணமான பெண்கள் பகுதிநேர ஆசிரியைகளாகப் பணியாற்ற வாய்ப்புகள் போன்றவை செயற்படுத்தப்படுகின்றன.

இம் மாதிரியே உயர்நிலைப் பள்ளிக் கல்வி மட்டத்திலும் திட்ட காலத்தில் சிறப்பான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய பொதுக்கல்விக்கான உயர்நிலைப் பள்ளிகளோடு பல்தொழில் நுட்பப் பள்ளிகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர்நிலைப் பள்ளிகளில் பலதுறைப் பாடங்களுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படுகின்றன. மையப் பள்ளிகள் (Central Schools) பல்வேறு மாநிலங்களில் தொடங்கப் பெற்றுள்ளன. பள்ளிகளில் ஆய்வக வசதிகளைப் பெருக்கவும் புதிய விஞ்ஞானக் கருவிகளை வாங்கவும் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. அறிவுரை பகர்தலுக்கும் வழிகாட்டுதலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, இச் செயல் முறையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான நிலையங்கள் தில்லியிலும், மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன (Central and State Bureaus of Educational and Vocational Guidance). கல்வி

ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றிற்கான தேசிய நிறுவனமான என். சி. இ. ஆர். டி. எனப்படுவதன் பணிகள் விரிவாக்கப் பட்டிருத்தலோடு இதனோடு இணைந்த அறிவியற் கல்வித்துறை (Department of Science Education) ஒன்றும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மாணாக்கர்களிடையே விஞ்ஞானத்திறன் (science talent) கண்டுபிடிப்புக்கான திட்டம் செயற்படுத்தப்படுகிறது. கல்வி ஏற்பாடு, கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள், பாடநூல்கள், காட்சிக் கேள்வித் துணைக் கருவிகள் போன்றவற்றின் தர உயர்வுக்கு, ஆராய்ந்து அறிவுரை கூறப் பல மைய நிலையங்கள் (Department of Curriculum Development, National Institute of Audio Visual Education, Central Evaluation Unit) நிறுவப்பட்டு நல்ல முறையில் தொண்டாற்றி வருகின்றன. நாட்டின் பல பகுதிகளினின்றும் இத் துறைகளில் ஆசிரியர்களுக்கு இவை பயிற்சியும் அளிக்கின்றன. நல்ல பாடநூல்களை வெளியிடவும் ஓர் அமைப்புத் தொடங்கப்பெற்று, பல பாடநூல்களை ஆக்கித் தந்துள்ளது. பயிற்சி பெறாத பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆசிரியப் பயிற்சியளித்தல் மையக் கல்விக் கழகத்திலும் (Central Institute of Education) நான்கு பிராந்தியக் கல்விக் கல்லூரிகளிலும் (Regional Colleges of Education) கோடைவகுப்புக்களுடன் இணைந்த அஞ்சல் வழிப்பயிற்சி வகுப்புகள் (Correspondence-cum-Summer School Courses) நடத்தப்பெறுவதன் வழியே மேற்கொள்ளப்பட்டன; இதனால் பெரும் எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் பயனடைந் துள்ளதோடு, பயிற்சிபெறாத ஆசிரியர்கள் பிரச்சினையினைச் சிக்கன மாகவும் விரைவிலும் ஓரளவு தீர்க்கவும் முடிந்துள்ளது. ஆசிரியர் களது பொருளறிவைப் பெருக்க உதவக்கூடிய கோடைப் பள்ளிகள் பலவும் (Summer Schools) ஆங்காங்கு நடத்தப்படுகின்றன. பயிற்சிக்கல்லூரிகளின் விரிபயிற்சி த்துறைகளும் (Extension Services Department) ஆசிரியர்களது தர உயர்வுக்குத் துணைபுரிகின்றன.

உயர்நிலைப்பள்ளிக் கல்விபற்றிய திட்டகாலப் பணிகளுக்கு ஆராய்ந்து அறிவுரைகூற, 1964 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் நிறுவப்பட்ட தேசியக்கழகம் (N.C.E.R.T.) பொறுப்பேற்றுள்ளது. புதிய கற்பித்தல் முறைகளைக் கையாளும் பள்ளிகளை ஊக்குவித்து இவற்றுக்கு உதவுதல், ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி (In service training) வாய்ப்புகளைப் பெருமளவில் ஏற்படுத்துதல், புதிய கல்விக் கருத்துகள், கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் போன்றனபற்றி ஆராயவும் இவைபற்றிய அறிவினை ஆசிரியர்களிடையே பரப்பவும் உதவக்கூடிய கருத்தரங்குகள், செயலரங்குகள் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்தல், கல்விக்கான புதிய சோதனைமுறையிலான செயல்திட்டங்களை (Experimental

Projects) மதிப்பிடுதல் போன்ற பல பணிகளில் இத் தேசியக் கழகம் ஈடுபட்டுள்ளது; உயர்நிலைப்பள்ளிகளது கல்வித்தரத்தினை உயர்த்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் இக் கழகத்தின் பங்கு சிறப்பான தாகும்.

உயர்கல்வியும் தொழில்நுட்பக் கல்வியும் திட்டகாலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது. கல்லூரிகளில் பயிலு மாணுக்கர்களது எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துள்ளது. இதனுல் எழுந்துள்ள தரப் பாதிப்பினைச் சீராக்க, பல்கலைக்கழக மானியக்குழு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது; இவற்றுள் மூன்றுண்டுகாலப் பட்டப்படிப்பினைச் செயற்படுத்து தல், கல்லூரிகளில் விரிவுரை முறையினைக் குறைத்துக் கருத்தரங்கு கள் 'டியுட்டோரியல்' முறைபோன்றவற்றை அதிக அளவில் பயன் படுத்துதல், கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் கட்டட, நூலக, ஆய்வக, மாணவரில்ல வசதிகளைப் பெருக்குதல், திறனுள்ள மாணுக்கர்களுக்காகப் படிப்புதவிப் பணம் அளிப்பதனை அதிகரித் தல் ஆசிரியர்களது ஊதியம் அதிகரிப்பு ஆகியன அடங்கும். உயர் கல்வியில் ஆராய்ச்சிக்கான வசதிகளும் விரிவாக்கப்பட்டுள்ளன. இம் மாதிரியே தொழில்நுட்பக் கல்வியிலும் பெருமளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கராக்பூரில் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (I.I.T.) ஒன்று தொடங்கப்பெற்றுள்ளது. ஏற்கெனவே செயற் பட்டுவரும் இந்திய அறிவியல் கழகம் போன்றவற்றின் பணிகள் விரிவாக்கப்பட்டுள்ளன; புதுப்புது பாடப் பிரிவுகளும் புகுத்தப் பட்டுள்ளன. தொழில்நுட்பக் கல்விக்கான பல பள்ளிகளும் பயிற்சி நிலையங்களும் நாட்டில் ஆங்காங்கு நிறுவப்பட்டன. சமூக- முதியோர் கல்வியிலும் ஓரளவு வளர்ச்சி எழுந்துள்ளது; ஆனுல் இது போதுமானதன்று.

திட்டங்களின் வழியே விளையும் பயன்களை மேலும் சிறப்பாக்க, 'பள்ளிகளின் மட்டத்தினின்று திட்டமிடுதல்' (Institutional Planning) என்ற கருத்துத் தற்போது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு பள்ளியும் தனது வசதிகள், உடனடித் தேவைகள், நீண்டநாள் தேவைகள் ஆகிய யாவற்றையும் கருத்தில் கொண்டு தனக்கான திட்டம் ஒன்றை வரையவேண்டும். பள்ளித் திட்டங்கள் ஆராயப்பட்டு மாவட்டத்திற்கான திட்டத்தில் இணைக்கப்படும். பின்னர் இவை மாநிலத் திட்டத்தில் சேர்க்கப்படும்.

### எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகள்

எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகள் அளித்தல் (equalisation of educational opportunities) என்பதில் முழுமை

யான வெற்றி இன்னமும் கிட்டவில்லை எனினும் இதில் சிறப்பான முன்னேற்றம் காணப்படுகிறது. இதுபற்றி ஓரளவேனும் நாம் பெருமை கொள்ளலாம். ஐந்தாண்டுத் திட்டங்கள் அமலாக்கப் பட்ட பின்னர்தான் அட்டவணை வகுப்பினர், பழங்குடி மக்கள், மலைசாதியினர், பின்தங்கிய வகுப்பினர் போன்றோர்க்குக் கல்வி வசதிகள் அதிகரித்துள்ளன. இத்தகையோரது குழந்தைகள் பிற பிரிவினரைப் போன்று கல்விப்பயன் பெற இவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இலவசக்கல்வி, படிப்புதவித் தொகை பெருமளவு அளிக்கப்படுதல், மொத்தமாகப் பணஉதவி, குறிப்பிட்ட சதவிகித இடங்கள் உயர்கல்விக்கூடங்களில் இத்தகை யோர்க்காக ஒதுக்கப்படுதல் போன்றன இவற்றில் சிலவாம். மதிய உணவு, இலவசச் சீருடை போன்றனவும் பல பின்தங்கிய பிரிவுக் குழந்தைகள் கல்விபெற உதவியுள்ளன. பழங்குடி மக்கள், மலை சாதியினர் ஆகியோர்க்கான பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்கு ஊக்க ஊதியம் அளிக்கப்படுகிறது. திறமைமிக்க ஏழை மாணாக்கர்களுக்கும் படிப்புதவித்தொகையளிக்கும் திட்டம் அமல் படுத்தப்பட்டுள்ளது. மற்றும், தேசியமானியப் படிப்புதவித் திட்டம் (National Grant Scholarship), தேசியக் கடன் படிப்புதவித் திட்டம் (National Loan Scholarship) போன்றனவும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. திறமை, வசதி ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு (merit cum means) அளிக்கப்படும் படிப்புதவித் தொகைத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழக மானியக்குழு, மாநில அரசு, பிற்பட்டோர் நலத்துறை போன்றனவாயிலாக இத்தகைய படிப்புதவித்தொகை மாணாக்கர் களுக்கு அளிக்கப்படுகின்றது. மற்றும் உடல் ஊனமுற்ற குழந் தைகள், புலன் குறைபாடுள்ள குழந்தைகள், நுண்ணறிவிற் பிற் பட்ட குழந்தைகள் போன்றோர்க்கான சிறப்புப் பள்ளிகள் ஒரு சிலவும் நாட்டில் இன்று நிறுவப்பட்டுள்ளன.

**கல்வி வளர்ச்சிக்குதவும் அமைப்புகள்**

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாட்டில் கல்வி வளர்ச்சிக்கு உதவும் அமைப்புகள் (institutions) பல ஏற்படுத்தப்பட்டன. கல் விக்கான பல்வேறு முயற்சிகளை இணைத்தல், கல்வித்தரங்களை நிர்ண யித்தல், அறிவியல் - தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் போன்ற பணிகளில் மத்தியஅரசின் கல்வி அமைச்சகம் நேரடியாகக் கவனம் செலுத்தி வருகிறது. நாட்டில் தொழில்நுட்பக் கல்விக்கும் இது பொறுப்பேற்றுள்ளது. இம்மாதிரியே, மத்தியஅரசின் உணவு- வேளாண்மைத்துறை வேளாண்மைக் கல்விக்கும், சுகாதாரத்துறை மருத்துவக் கல்விக்கும் பொறுப்பேற்கிறது. மற்றக் கல்விநிலைகள் பெருமளவு மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ளன. பொது

வாக, கல்வி வளர்ச்சிக்கும் சிறப்பாக உயர்நிலைப்பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கும் பாடுபடும் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றுக்கான தேசிய நிறுவனம் (N. C. E. R. T.) பற்றி ஏற்கெனவே குறிப்பிடப் பட்டது. இதில் ஆசிரியர் பயிற்சிக்கான பிரிவு (N. I. E.), மையக் கல்வி நிலையம் (C. I. E.) போன்றனவும் உளவியல் ஆராய்ச்சிக் கான பிரிவு ஒன்றும் உள்ளன. இதன் பிற பிரிவுகள் முன்னரே குறிப்பிடப்பட்டன.

கல்வி வளர்ச்சிக்கான பிரச்சினைகளை ஆராய்ந்து பரிந்துரை களைத் தர, 'மையக் கல்வி அறிவுரை வாரியம்' ஒன்று செயற்பட்டு வருகிறது. இதில் எல்லா மாநிலங்களினின்றும் உறுப்பினர்கள் உள்ளனர். 1956ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானி யக் குழு (U. G. C.) பற்றியும் முன்னர்க் குறிப்பிடப்பட்டது. இதன் பல்வேறு பொறுப்புகளுடன் ஆசிரியக்கல்வி பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து இதனை உயர்த்தும் பொறுப்பினையும் இது இன்று பெரு மளவு மேற்கொண்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக் கென்ற ஓர் அகில இந்தியக் குழுவும் (All India Council for Technical Education) மாநிலங்களில் மாநிலத் தொழில்நுட்பக் கல்விக்கான வாரியங்களும் அமைக்கப்பட்டு, தொழில்நுட்ப-பொறியியல் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்துகின்றன. மருத்துவத்துறை, விவசா யத்துறை ஆகியவற்றில் ஆராய்ச்சிக்கென்று தனித்தனியே இரு அனைத்திந்திய அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. மாநிலங் களது மட்டத்திலும் இத்தகைய அமைப்புகள் உள்ளன. பொதுக் கல்வியின் பொறுப்பு மாநிலங்களது ஆதலின் பொதுக்கல்வியின் பல் வேறு நிலைகளுக்கான மாநில வாரியங்கள் செயற்பட்டு வருகின் றன. ஆங்கில மொழி வளர்ச்சிக்கும் இம் மொழியினைக் கற்பித்தல் முறைகளைச் சிறப்பாக்குவதற்கும் உதவச் சில அமைப்புகளும் எழுந் துள்ளன. மாநிலக் கல்விக் கழகம், மாநில விஞ்ஞானக் கழகம், மாநில மதிப்பீட்டு அமைப்பு போன்றனவும் இன்று நிறுவப்பட்டுள்ளன, நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் எழுந்துள்ள அமைப்பு, பரப்பு, தரம் ஆகியவற்றின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு அடுத்துச் செயற்படுத்தப்படப்போகும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற் கான கல்வி இலக்குகள் தற்போது நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன.

## ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கல்வி இலக்குகள்

நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப்பின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான முன்னேற்பாடுகள் தற்போது செய்யப் பட்டு வருகின்றன. இத் திட்டத்திலும் திரட்டக்கூடிய வசதிகளைக் கருத்தில்கொண்டு கல்விக்கு ஒரு முக்கிய இடம் தரப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நமது நாட்டின் கல்வி

வளர்ச்சிக்கு உதவ நான்கு முனைப்பட்ட செயல்திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. நமது கல்வி அமைப்பினைச் சீரமைப்பதில் பெருங்கவனமும் முயற்சியும் செலுத்திச் செயற்படுகையில் இத் திட்டகாலத்தில் நான்கு முக்கிய நோக்கங்கள் கருத்தில் கொள்ளப்படும். (i) நாட்டுமக்கள் யாவர்க்கும், சமுதாய நீதி என்பதன் அடிப்படையில், சமமான கல்வி வாய்ப்புகள் கிட்டும்படி செய்தல் ஒரு நோக்கமாக அமையும்; (ii) நாட்டின் வளர்ச்சித் தேவைகள், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றுக்கும் கல்வி அமைப்புக்கும் நெருங்கிய தொடர்பு உருவாக்கப்படுதல் மற்றொரு நோக்கமாகும்; (iii) கல்வியின் தரத்தினை உயர்த்துதலிலும் மேலும் கவனம் செலுத்தப்படும்; (iv) மற்றும், நாட்டின் சமூக, பொருளியல் முன்னேற்றத்திற்குதவக்கூடிய பல்வேறு செயல்களிலும் பணிகளிலும் ஆசிரியர்கள், மாணுக்கர்கள், கல்வித்துறையின் பிற உறுப்பினர்கள் போன்றோரை ஈடுபடுத்துதலிலும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஐந்தாவது திட்டகாலத்தில் தொடக்கக்கல்விக்கு முதலிடம் அளிக்கத் திட்டக்குழு முடிவு செய்துள்ளது. நான்காவது திட்ட காலத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு 239 கோடியாகவிருந்தது; இது அடுத்த ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 743 கோடியாக உயரும். தொடக்கக்கல்வியினைப் பொறுத்தவரை சில புரட்சிகரமான யுத்திகளை மேற்கொள்ளத் திட்டக்குழு முடிவெடுத்துள்ளது. தொடக்கக் கல்விக்கான வாய்ப்புகள் எல்லாக் குழந்தைகளுக்கும் பரவலாக விஸ்தரிக்கப்படும்; தொடக்கப்பள்ளியின் முதல்வகுப்பில் பயிலச்சேரும் குழந்தைகள் ஓரளவு சம ஆற்றலுள்ளோராக இருத்தற்கான (homogeneous) முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; இக் கல்விநிலையின் பெரும் பிரச்சினையான கழிவு, தேக்கம் ஆகியவற்றின் அளவினைக் குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; தொடக்கப்பள்ளி வகுப்புகளில் ஒவ்வொரு குழந்தையும் முதல் வகுப்பில் சேர்ந்து படிப்படியாகத்தான் முன்னேறவேண்டும் என்பதின்றி, தனது வயது, திறன் ஆகியவற்றிற்கேற்ப, பல்வேறு வகுப்புக்களில் சேர (multiple point entry) வாய்ப்புத் தரப்படும்; இக் கல்விநிலையிலும் பகுதிநேரக் கல்விக்கான (Part time education) திட்டம் விரிவாக்கப்படும். சமுதாயத்தின் வலுக்குறைந்த பிரிவினரான அட்டவணை வகுப்பினர் போன்றோரது குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்து கல்வி அறிவு பெறுதற்கான வழிவகைகள் பலவும் கையாளப்படும். மற்றும் தொடக்கக் கல்வியின் தர உயர்வும் இத் திட்டகால முயற்சிகளின் ஒரு பகுதியாகவிருக்கும்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வி எனப்படும் செகண்டரி கல்வி நிலையில், உயர்நிலைப்பள்ளிகளை நன்கு திட்டமிட்டு. தேவையுள்ள இடங்களில் அமைத்தலில் கருத்துச் செலுத்தப்படும்; இந்நிலைக் கல்வி தொழில் சார்புடையதாக (vocationalization) அமைவதில் கவனம் செலுத்தப்படும்; நாடு முழுவதற்கும் பொதுவாக 10+2+3 ஆண்டுகள் என்ற கல்விக்கான காலப்பகுப்பு செயற் படுத்தப்படும். மற்றும் உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் தர உயர் வுக்குப் பாடுபடுவதுடன் இக் கல்விக் கட்டத்தின் எல்லா நிலை களிலும் வேலை அனுபவங்கள் முக்கியப் பங்குபெறும் வகையில் கல்வி ஏற்பாடு அமைக்கப்படும்.

உயர்கல்வியைப் பொறுத்தவரை, இன்று சமுதாயத்தில் அதற்கு ஒரு மதிப்பு உள்ளது; இன்றைய புதிய இளம் சந்ததியினர் உயர்கல்வி பெறுதலில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். உயர் கல்வி வாய்ப்புகள் பெருக்கப்படுவதில் இவை கருத்தில் கொள்ளப்படும். இதேபோது, தேவையற்ற முறையில் உயர் கல்விக்கான வாய்ப்புகளும் வசதிகளும் பெருக்கப்படுவதோ, இதன் விளைவாகக் கல்வித்தரம் குறைவதோ தவிர்க்கப்படும். பல்கலைக்கழகப் பட்டம்பெற்றுச் சமுதாயத்தில் நுழைவோர் ஆக்க முறையில் அதன் வளர்ச்சிக்குதவும் திறனுடையோராகத் திகழும் வகையில் பல்கலைக்கழகப் படிப்புமுறை திருத்தி அமைக்கப்படும். பட்ட மேற்படிப்பு வசதிகளைப் பெருக்குதல், ஆராய்ச்சி, இளைஞர் நலத்திட்டங்கள் (Youth Welfare Schemes), உடற்கல்வி, விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் தனிக்கவனம் செலுத்தப்படும். இளைஞர் செயல் மையங்கள் (Youth Centres for Youth Activities) பலவும் நிறுவப்படும். தேசிய சேவைத் திட்டங் களும் செயற்படுத்தப்படும்.

முக்கியமாக, ஐந்தாவது திட்டகாலத்தில் திறனுள்ள மாணுக்கர்களை ஊக்குவிக்கவும் சமுதாயத்தில் பிற்பட்ட நிலையிலுள் ளோரது சூழ்நிலைக் குறைபாடுகளை நீக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பல்வேறு கல்வித்துறைகளில் படிப்புதவிப் பணம் அளிக்கப்படும். பெண்கள் கல்வியில் பெருங்கவனம் செலுத்தப்படும். தொழில்நுட்பக் கல்வித்தரம் உயரவும் இது வரை இத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் திடப் படுத்தவும் பல திட்டங்கள் செயற்படுத்தப்படும். தொழில் நுட்பத்துறையில் மையநிலைப் பணியாளர்களின் (middle level workers) தேவை தற்போது நாட்டில் அதிகரித்துள்ளதால் இத்தகையோரைப் பயிற்றுவிப்பதில் அதிகக் கவனம் செலுத்தப் படும். மற்றும் உயர் அடிப்படை ஆராய்ச்சி (Basic and Funda-

mental Research) நடைமுறைப் பயனுள்ள (applied) ஆராய்ச்சி ஆகியனவும் ஊக்குவிக்கப்படும்.

கல்வித்தர உயர்வுக்குதவும் பல்வேறு ஆதாரக் கூறுகளில் (academic inputs) தனிக்கவனம் செலுத்தப்படும். கல்வி ஏற்பாட்டினை மாற்றிப் புதுப்பித்தல், புதிய கற்பித்தல் முறைகளை மேற்கொள்ளல், தேர்வு முறையினைச் சீர்திருத்துதல், பாடநூல்களைச் சிறப்பாக எழுதி வெளியிடல், ஆசிரியப்பயிற்சி, பணியிடைப்பயிற்சி ஆகியவற்றின் தரத்தினை உயர்த்துதல், புதிய முறைகள், கல்விச் சோதனைகள், கல்வித் தொழில்நுட்பக் கருத்துகள் போன்றவற்றினை ஊக்குவித்தல், கல்வியினைப் பரப்புவதற்கு இன்றைய பெருஞ் சாதனங்களான வானொலி, திரைப்படங்கள், தொலைக்காட்சிக் கருவி போன்றவற்றைப் பயன்படுத்துதல், பள்ளி ஆய்வின் (inspection and supervision) தரத்தினை மேம்படுத்துதல், பள்ளிக்கும் சமுதாயத்துக்குமிடையேயுள்ள தொடர்பினை மேலும் நெருக்கமானதாக ஆக்குதல் போன்றன இக் கூறுகளுள் முக்கியமான சிலவாகும்.

முறைப்பட்ட கல்வியின் வளர்ச்சியுடன் வேறு சில இணைந்த செயல்திட்டங்களும் அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. முதியோர் கல்விக்கான திட்டங்களில் இப்போது அதிகக் கவனம் செலுத்தப்படும்; எழுத்தறிவின்மையினை ஒழிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதுடன் முதியோர் கல்வித் திட்டங்கள் வேலைவாய்ப்புக்கான திட்டங்களுடன் இணைத்துச் செயற்படுத்தப்படும். 15 முதல் 25 வயது வரையிலான சமுதாய உறுப்பினர்களது நலன்களைப் பேணவும் சில செயலமைப்புகள் (Welfare Services) நிறுவப்படும். கல்வியின் பல்வேறு கட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒருசில கல்வி நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவற்றின் தரம் சிறப்பாக உயர முயற்சி மேற்கொள்ளப்படும். இவை பிற கல்வி நிலையங்களுக்கு முன்மாதிரிகளாக விளங்கும். மற்றும், நாட்டின் பழம்பெரும் மொழிகளது வளர்ச்சிக்கும் ஆவன செய்யப்படும்.

**கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிக் கல்விக்கான தேசிய ஆராய்ச்சிக் குழுவின் கருத்துகள்**

நாட்டின் மையக் கல்வி அமைப்பில் செயற்பட்டு வரும் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றிற்கான தேசிய நிறுவனம் (N. C. E. R. T.) பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நிறுவனம் இன்று மையஅரசின் கல்வி அமைச்சகத்துடன் மேலும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது; தனது உதவியினையும் ஆலோசனைகளையும் கல்வி அமைச்சகத்துக்கு அளித்தலோடு கல்வித்துறையில், முக்கிய

மாக பள்ளிக் கல்விப் பிரிவில், உருவாக்கப்படும் கொள்கைகளையும் திட்டங்களையும் செயற்படுத்துவதில் இந் நிறுவனம் இனிப் பெரும் பங்கு கொள்ளும். அண்மையில் இந் நிறுவனம் ஒரு வல்லுநர் குழு வினை ஏற்படுத்தி, நாட்டின் இன்றைய முக்கியக் கல்விச் சீர்திருத் தங்கள் பற்றிய சில கருத்துகளைத் தெரிவித்துள்ளது. இவை அடுத்துச் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

உயர்நிலைப்பள்ளிக் காலம் முழுவதிலும் தொடர்ந்து 'வேலை அனுபவங்கள்' இடம் பெறவேண்டும். மையக் கல்வி அறிவுரை வாரியம் பரிந்துரை செய்துள்ள 10+2+3 ஆண்டுகள் கல்வி முறை யின் முதல் இரண்டு கட்டங்களுக்கான கல்வி ஏற்பாட்டினை (curriculum) இவ் வாராய்ச்சிக்குழு உருவாக்கியுள்ளது, ஐந்தாவது 5 ஆண்டுத் திட்ட இறுதிக்குள் இக் கல்வி முறை நாடு முழுவதும் செயற்படுத்தப்பட வேண்டுமென்று மையக்கல்வி அறிவுரை வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. கல்வி ஆய்வுக்குழுவின் கல்விபற்றிய பொதுக் கருத்துகளை இவ் வாராய்ச்சிக்குழு ஆமோதித்துள்ளது. மக்களது வாழ்க்கை, தேவைகள், இலட்சியங்கள் ஆகியவற்றுடன் கல்விமுறை இணையும் வகையிலும் சமூக மாற்றங்களுக்குக் கருவி யாக அமையும்வகையிலும் நமது கல்விமுறையினை மாற்றியமைக்க வேண்டும். இதற்குதவும் வகையில் கல்வி ஏற்பாடு (curriculum) உற்பத்தி, சமூகநீதி, நாட்டு ஒருமைப்பாடு, சமுதாயத்தினை நவீன மாக்குதல், அறநெறி ஆன்மீகப் பண்புகளின் வளர்ச்சி ஆகியவற்று டன் தொடர்புபடுத்தப்பட வேண்டும். 10 வகுப்பு இறுதிவரை அறிவியலும், கணிதமும் கல்வி ஏற்பாட்டில் கட்டாயம் இடம்பெற வேண்டும். இவற்றைக் கற்பிக்கும் முறைகளும் சிறப்பாக்கப்பட வேண்டும். இவற்றுக்கான பாடத்திட்டங்கள் அடிக்கடி புதுப்பிக் கப்பட வேண்டும். தற்கால அறிவினைப் புகட்டுதல், ஆராய்வூக்கத் தைத் (curiosity) தூண்டுதல், விஞ்ஞான ஆராய்ச்சி மனப்பான் மையைத் தோற்றுவித்தல் போன்றனவற்றின் வழியே அறிவியல்-கணிதப் படிப்பு விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் விளைவாகத் துரிதமாக மாறிவரும் சமுதாயத்துடன் பொருந்தி வாழத் தேவையான பயிற்சியை இளைஞர்களுக்கு அளிக்கவேண்டும். வேலை அனுபவப் பயிற்சியும், தொழில்நுட்பம், தொழில், வேளாண்மை ஆகியவற்றைச் சார்ந்து இருத்தல் வேண்டும். பள்ளி யின் நிருவாக அமைப்பு நெகிழ்ச்சியுடன் இயங்கினால்தான் பள்ளிக் கும் சமுதாயத்துக்குமிடையே உள்ள தொடர்பு வலுப்பெறும்; அப்போதுதான் கற்றலுக்கும், பணிகளுக்கும் உள்ள தொடர்பு மாணக்கர்களுக்குத் தெளிவாகும். பொதுவாக, கற்பித்தல் முறை கள் சீர்திருத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட வேண்டும். மாணக்கர்கள் சுயமுயற்சியின் வழியே அறிவைக் கண்டெடுத்துப் பெறும்வகையில்

இவை சீராக்கப்படவேண்டும். மொழிக்கல்வி மாணாக்கர்களது மனப்பான்மையினை விரிவுபடுத்துவதாகவும் நாட்டின் பொதுப்பண்பாட்டின் மதிப்புகளை உணர்த்தக் கூடியதாகவும் அமையவேண்டும். இதற்கு மும்மொழித் திட்டம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உண்மையான முயற்சியுடன் செயற்படுத்தப்படல் நல்லது என என். சி. இ. ஆர். டி. யின் ஆராய்ச்சிக் குழு விருப்பம் தெரிவித்துள்ளது.

முக்கியமாகத் தொடக்கக்கல்வி நிலையில் தேவைக்கு மிகுந்த பாடநூல்கள், அதிக அளவு பாட விவரங்கள் போன்றன குழந்தைகளின்மீது திணிக்கப்படக்கூடாது. பாடநூல்களை நெட்டுருச் செய்வது, பாடவிவரங்களைச் செயலற்ற நிலையில் பிறர் கூறச் செவிமடுப்பது போன்றன மாறி, தங்களது பலதிறப்பட்ட கவர்ச்சிகளின் அடிப்படையில் குழந்தைகள் செயலாற்றித் தாமாகவே பலவற்றைக் கற்கக்கூடிய நிலை எழுமாகில் கல்விச் செலவுகள் பெருமளவு குறைவதற்கு வாய்ப்புண்டு என்று இவ் வாராய்ச்சிக் குழு குறிப்பிட்டுள்ளது. தற்போது ஒரு வகுப்பிற்கான படிப்பின் காலம் எல்லோர்க்கும் முழுமையாக ஓராண்டாக உள்ளது. இதனைச் சிறுசிறு காலப்பகுதிகளாக (smaller units) பகுத்தமைக்கலாம். இவை வரிசைக்கிரமமாக அமைக்கப்படவேண்டும். இவை யாவும் முடிந்தபின் இவற்றின் இறுதியில் அவ் வகுப்புக்கான அப்பாடம் முழுமைபெறும். ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும் அதில் கற்ற பாடப்பகுதியில் மட்டும் பள்ளிகளில் தேர்வு வைக்கலாம். ஆண்டிறுதியில் தற்போது தேர்வுக்கான மாணாக்கர்களது பாடச்சுமையை இது குறைக்க உதவும். பாடப் பொருளை நன்குணராமல் இறுதித் தேர்வுக்கு நெட்டுருச் செய்தலையும் இது தடுக்கும். பள்ளி வகுப்புக்களுக்கான பாடநூல்களின் எண்ணிக்கையைக் குறைப்பது மிக அவசியமாகும். ஒரு வகுப்பின் பல்வேறு பாடங்களுக்கான தலைப்புகளையும் பாட அலகுகளையும் ஒன்றாகச்சேர்த்து ஒரு பாடநூலாக அவ் வகுப்பிற்கு அளிக்கப்படுவதை இக் குழு ஆதரிக்கிறது. இதேபோது பலதிறப்பட்ட துணை நூல்களைப் படிக்க, பள்ளி மாணாக்கர்களுக்கு வசதிகள் அளிக்கப்படல் வேண்டும். எழிலுணர்ச்சியும், அழகினை உணர்ந்து அதனைத் தன் ஆளுமையுடன் இணைத்தலும், கவின் கலை அனுபவங்களைப் பெறுதலும் கல்வி அமைப்பின் இணைந்த பகுதிகளாகும். இவற்றுக்கான பல வாய்ப்புகள் தொடர்ந்து மாணாக்கர்களுக்கு அளிக்கப்படவேண்டுவது அவசியமாகும். இம்மாதிரியே தனது ஆக்கத்திறன்கள் (creative abilities), புதியன புனையும் ஆற்றல் (originality) ஆகியன நன்கு வளர்ச்சிபெற்று வெளிப்பட பல வாய்ப்புகளும் (channels of expression) பள்ளிக்கல்வியில் பெரும்

மளவில் இருத்தல்வேண்டும். மாணுக்கர்களது உடல் வளர்ச்சி, உடல்நலம் பேணுதல், உடலின் நுண் செய்திறன்களது வளர்ச்சி ஆகியன பள்ளிக்கல்வியின் அடிப்படைகளாகும். இறுதியாக, நல்லொழுக்க வளர்ச்சி பள்ளிக்கல்வி ஏற்பாட்டில் மையமான இடம் பெறவேண்டியதனையும் இக் குழு வலியுறுத்தியுள்ளது.

## தமிழ்நாட்டின் கல்வித்திட்டம்

பாரதம் முழுவதற்குமான வளர்ச்சிக்குத் திட்டமிடுதலுடன் இணைந்தவகையிலும் இதேபோது நமது மாநிலத்தின் தனித்தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு ஒன்று தற்போது இயங்கிவருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் இக் குழுவின் தலைவர் ஆவார். நமது மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிட, மாநிலத் திட்டக்குழுவின் கல்விக்கான செயற்குழு (Task Force) முற்பட்டு, அடுத்த 12 ஆண்டுகளுக்கான கல்வித்திட்டம் ஒன்றை உருவாக்கித் தந்துள்ளது. இத் திட்டத்தின் முக்கியக் கருத்துகளும், பரிந்துரைகளும் அடுத்துச் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் குறிப்பிடத்தக்க கணிசமான பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. கல்வியின் இலட்சியங்களாகப் பின்வருவன அமையவேண்டும். குழந்தைகளது அறிவாற்றலை வளர்ப்பது, இவர்களுக்கு நமது மாநிலம், நாடு, உலகம் ஆகியவற்றின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை உணர்த்துவது, அறநெறிகள் நன்னடத்தை முறைகள் ஆகியவற்றைப் பெறச்செய்வது, விஞ்ஞான, தொழில்நுட்ப, தொழில் திறன்களை இவர்களிடையே வளர்க்க உதவுவது ஆகியவற்றுக்கு நமது மாநிலக் கல்வி முறை துணைபுரிவதாக அமைதல் வேண்டும்; நமது அறிவின் எல்லைகள் மேலும் விரிவாதற்குத் துணையாகும் பல்வேறு ஆராய்ச்சிகளை ஊக்குவித்தலும் கல்வியின் வழியே நம் மாநிலமும் நாடும் எதிர்நோக்குகின்ற வளர்ச்சிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலும் கல்வியின் நோக்கங்களுள் அடங்கும். மற்றும் நம் மாநில மக்களில் பெரும் பகுதியினரான ஏழை மக்களின் நிலையினை உயர்த்தவல்ல சமூக வசதிகளைப் பெருக்குதலும் இவை நன்கு பயன்படுத்தப்பட உதவுதலும் கல்வியின் நோக்கங்களாகும்.

பத்தாண்டுகால உயர்நிலைக்கல்வி நமது மாநிலத்திலும் செயற்படுத்தப்படுதலை மாநில கல்வித் திட்டக்குழு ஆதரிக்கிறது. இதன்படி தொடக்கக்கல்வி 4 ஆண்டுகளும் நடுநிலைக்கல்வி 3 ஆண்டுகளும் உயர்நிலைப் பள்ளிக்கல்வி 3 ஆண்டுகளும் நீடிக்கும். பட்ட முன் படிப்பு 2 ஆண்டுகளாகவும் பட்டப்படிப்பு 3 ஆண்டுகளாகவும் இருத்தலை இது விரும்புகிறது. தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி

யைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட நூற்றுக்கு நூறு குழந்தைகள் கல்வி பெறுகின்றனர். நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளி களிலும் கல்வி பெறுவோரது சதவிகிதத்தை அதிகரிக்க எல்லா முயற்சிகளும் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இக்குழு குறிப்பிட்டுள்ளது. 14 வயதுவரை அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியளித்தல், பெண்களைப் பெருமளவு பள்ளிகளில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளுதல், பள்ளிக் கல்வியை முழுவ தும் பயின்று முடிக்காமல் இடையில் பள்ளிகளைவிட்டு நீங்குவோர் களது எண்ணிக்கையை இயன்றவரை குறைக்க முயலுதல், பொதுக் கல்வித் தர உயர்வு, விஞ்ஞானக் கல்வித் தர உயர்வு ஆகியவற்றுக் கான பல்வேறு வழிகளை மேற்கொள்ளுதல், வேலை கருதிப் படிப்பினை இடையிலே விட்டவர்கள் மீண்டும் தொடர்ந்து படிக்க வசதிகளை ஏற்படுத்துதல், சமுதாயத்தின் கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு அவர் களது நிலையை உயர்த்தத் தேவைப்படும் கல்வி வாய்ப்புகளை ஏற் படுத்தித் தருதல் போன்றவற்றுக்கு தமிழ்நாட்டின் 12 ஆண்டுக் கல் வித் திட்டத்தில் முக்கிய இடம் அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமொன்று தொடங்கப்பட வேண்டுமென்றும் சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் பட்ட மேல்படிப்பு ஆராய்ச்சி ஆகியவற்றைக் கொண்ட உயர் தனி நிலையங்களாக ஆக்கப்படவேண்டுமென்றும் கல்விக்கான திட்டச் செயற்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. உயர் கல்வியில் அகமதிப்பீடு, செமெஸ்டர் (Semester system) முறை போன்றன தகுந்த முன்னேற்பாடுகளுடன் படிப்படியாகப் புகுத்தப்படுவதை இது பரிந்துரை செய்துள்ளது. கல்வி நிருவாகத் தைத் திருத்தியமைத்து அதிகாரங்களை மேலும் பரவலாக்க உதவக்கூடிய பல்வேறு கருத்துகளையும் தந்துள்ளது. எனவே, திட்டமிடப்பட்ட வளர்ச்சியின் விளைவாக நமது மாநிலமும் நாடும் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. இத் திட்டங்களை ஆர்வத்துடன் நன்கு செயற்படுத்தி நாட்டின் முன்னேற்றத்தில் தங்களது பொறுப்பினையும் பங்கினையும் நேர்மை யுடன் நிறைவேற்ற ஆசிரியர்கள் யாவரும் முன்வருதல் வேண்டும்.

### முடிவுரை

பொதுவாக, நம் நாட்டின் கல்விமுறையில் உடனடியாகத் தேவைப்படும் சீர்திருத்தங்களைப்பற்றி எண்ணிப் பார்க்கும் போது, அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் குறிப்பிட்டுள்ளது கவனித் தற்குரியது. மக்களது எழுத்தறிவின்மையைப் போக்குவது நமது முதன் முயற்சியாக இருக்கவேண்டியதன் அவசியத்தை அவர்

வலியுறுத்தியுள்ளார். நமது மாநிலத்தில் சுமார் 60 சதவிகிதம் மக்கள் இன்னமும் எழுத்தறிவு பெறாதநிலையில் தொடர்ந்து காணப்படுகின்றனர். இத்தகையோரால் தமது குழந்தைகளிடம் படிப்பதில் கவர்ச்சியோ ஊக்கமோ எழுமாறு செய்தல் இயலாது. பள்ளிகளிற் பல, குறைந்தபட்ச வசதிகளும் இன்றிக் காணப்படுவதால் இவற்றில் குழந்தைகளைக் கவர்ந்து அவர்களது ஆர்வத்தைக் கற்றலில் திசை திருப்பிவிடக்கூடிய சூழ்நிலை காணப்படுவதில்லை. இக் குழந்தைகளது தனித்திறன் வெளிப்பாட்டிற்கும் இவை வாய்ப்புகளைத் தருவதில்லை. இதன் விளைவாகப் பள்ளிக்கல்வி நிலையில் மாணாக்கர்கள் கல்வியினை முடிக்காமல் இடையிலே விலகும் பிரச்சினை தீவிரமாகியுள்ளது. இந் நிலையை மாற்றுவது நமது முதல் பொறுப்பு. முதியோர்க்கான எழுத்தறிவு வகுப்புகளை பெருமளவில் தொடங்கவேண்டும். 80 மணி நேரம் வகுப்பு மட்டும் முதியோர்க்கு எழுத்தறிவு அளிப்பதற்கும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான 400 சொற்களைக் கற்பிப்பதற்கும் போதுமானதாகுமென்றும், இவ் வகுப்புகள் பள்ளிக்கட்டடங்களில் நடத்தப்படலாமென்றும், ஓய்வுபெற்றோரது பணி முதியோர்கல்வியில் பயன்படுத்தப்படலாமென்றும் துணை வேந்தர் குறிப்பிட்டுள்ளார். உயர்நிப்பள்ளிக் கல்வியில் 'வேலை அனுபவங்கள்', 'வேலைப்பயிற்சி' ஆகியன வலியுறுத்தப்பட வேண்டிய அவசியத்தினையும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு மாணாக்கனது கல்வியானது முழுமை பெற இவை உதவுவதுடன் இவை வாழ்க்கைப்பயனும் உள்ளவையாகும். சோவியத் யூனியனில் உயர்நிலைப்பள்ளிகளின் உயர் வகுப்பு மாணாக்கர்கள் தங்களது கல்விக் காலத்தில் மூன்றில் ஒரு பங்கினைப் பண்ணைகளிலும் தொழிற்கூடங்களிலும் பணி செய்து கழிப்பதனை இவர் குறிப்பிட்டுள்ளார். ஆதாரக் கல்வித் திட்டத்திலும் இக் கருத்து அடங்கியுள்ளதாகும். எனவே, உயர்நிலைப்பள்ளிக் கல்வி இக் கருத்தின் அடிப்படையில் உடனடியாக மாற்றி அமைக்கப்படுவது நமது அடுத்த முக்கியப் பொறுப்பாகும் என்று இவர் குறிப்பிட்டுள்ளார். முக்கியமாக, முதியோர் கல்வியினைப் பொறுத்தவரை துணை வேந்தரது அறிவுரையை ஆசிரியர்களும் ஆசிரிய மாணாக்கர்களும் எளிதில் செயற்படுத்தலாம். இவ்வாறு செயற்படுத்த முற்படுவது சமுதாயத்திற்கு அவர்களது கடமையாகும்.

## வினாக்கள்

1. கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் ஏன் தேவைப்படுவதாகும்?

2. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒவ்வொன்றின் கல்வி இலக்குகள், நோக்கங்கள் ஆகியவற்றினை விவரிக்க.

3. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கல்வி வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக.

4. எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துதலில் ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொகுத்துக் கூறுக.

5. நமது நாட்டில் கல்வி வளர்ச்சிக்குதவ ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளுள் ஒன்றின் பணிகளை விளக்குக.

6. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கல்வி நோக்கங்கள் யாவை?

7. கல்விச் சீர்திருத்தம் பற்றி, கல்விக்கான தேசிய ஆராய்ச்சிக் குழுவின் கருத்துகளை விவரிக்க.

8. தமிழ்நாட்டின் கல்விக்கான திட்டம் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

9. தொடக்கக் கல்வியில் காணப்படும் 'கழிவு' எனப்படும் பிரச்சினைக்கு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எவ்வாறு முடிவு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன?

# பின்னிணைப்பு

## மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய சில பாடநூல்களும் மேற்கோள் நூல்களும்

AGGARWAL, J. C., 'The Progress of Education in India Recent Developments in Indian Education.'

ALTEKAR, A. S., 'Education in Ancient India.'

ARUNACHALAM, M., 'Education in Ancient Tamil Nadu.'

AUROBINDO, Sri, 'A System of National Education.'

AVINASHILINGAM, T. S., 'Educational Philosophy of Swami Vivekananda.'

AVINASHILINGAM, T. S. and SWAMINATHAN, K, (Compilers), 'World Teachers on Education.'

BASU, A. N., 'University Education in India.'
— —, 'Education in Modern India.'

BHATIA, H. R., 'What Basic Education Means.'

BISWAS, A. and J. C. AGGARWAL, 'Seven Indian Educationists'

CHAUBE, S. P., 'A History of Education in India.'
— —, 'Recent Educational Philosophies in India.'

DIKSHIT, S. S., 'Current Problems in Indian Education.'

GAIND, D. N., and R. P. SHARMA, 'Educational Theories and Modern Trends.'

GANDHI, Mahatma, 'Basic Education.'

HUMAYUN KABIR, 'Education in New India.'

JAYA KOTHAI PILLAI 'Educational System of the Ancient Tamils.'

KEAY, F. E. 'Education in India and Pakistan.'

KRIPALANI, J. B., The Latest Fad; 'Basic Education.'

KUMARASWAMI PILLAI, K., 'Philosophical and Sociological Foundations of Education.'

MANI, R.S., 'Educational Ideas and Ideals of Gandhi and Tagore.'

MENON, T. K. N. (Editor), A Symposium on 'Post-war Education in India'

MINISTRY OF EDUCATION, Government of India -

(i) Progress of Education in India, 1937-47

(ii) The Report of the University Education Commission (Radhakrishnan)

(iii) Education in 18 years of Freedom

(iv) Report of the Secondary Education Commission (Dr. Mudaliar)

(v) Report of the Education Commission (D. S. Kothari) (Education and National Development)

(vi) Better Teacher Education

MUKHERJEE, R. K., 'Ancient Education in India'

MUKHERJEE, S. N., 'History of Education in India'

NAIK, J. P., A Review of Modern Education in India (1813 - 1942)

— —, Educational Planning in India

PREM KIRPAL, 'A Decade of Education in India'

RADHAKRISHNAN, S., The Philosophy of Rabindranath Tagore

RAWAT, P. L., 'History of Indian Education'

சந்தானம், எஸ்., 'கல்விக்கோட்பாடுகளும் தத்துவங்களும்'

சந்தானம், எஸ்., ஏ. எஸ். துரைசிங், 'பள்ளி நிருவாக அமைப்பு'

SARGENT, J., Society, 'Schools and Progress in India'

SARMA, D. S., 'Studies in the Renaissance of Hinduism'

SEN, A. N. 'Educational Reorganisation in India'

SEN, J. M., 'History of Elementary Education in India'

SIQWEIRA, T. N., The 'Education of India,'

——, Modern Indian Education.

STATE PLANNING COMMISSION, TAMIL NADU, Report on Educational Development

SYED NURULLAH and J. P. NAIK, 'A History of Education in India (During the British Period)'

VAKIL and S. NATARAJAN, 'Education in India.'

VYAS, K. C., 'The Social Renaissance in India.''